# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூலை 2024

www.tnpscthervupettagam.com
























SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள்....................10**

**தமிழ்நாடு செய்திகள்....................24**

சென்னைப் பெருநகர நீர் வழங்கீடு மற்றும் கழிவுநீரகற்றல் சட்டம் – 1978....................24
தமிழ்நாடு சிறப்புப் புத்தொழில் நிதி....................24
பல்வேறு புதிய மசோதாக்கள் மற்றும் திருத்தங்கள்....................25
நான்கு புதிய மாநகராட்சிகள்....................26
நான் முதல்வன் திட்டத்தின் தாக்கம் 2024....................26
மாநிலத்தின் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் - தமிழ்நாடு....................27
நீர்நிலைகளில் இருந்து சரளைக் கற்களை அகற்றுதல்....................27
இரண்டாம் காலாண்டில் (2024-25) தமிழ்நாடு மாநில அரசின் கடன்கள்....................28
சிரெடோல்பிஸ் எருபெசென்ஸ்....................29
தமிழ்நாடு விண்வெளி சார் தொழில் துறை கொள்கை, 2024 - வரைவு அறிக்கை....................29
தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை, 2024 - வரைவு அறிக்கை....................30
தமிழி பொறிக்கப்பட்ட பானை ஓடு – கீழடி....................31
மேயர்களின் இராஜினாமா....................31
3 சோதனை மையங்கள்....................32
செயற்கை நுண்ணறிவு கற்பித்தல் உதவியாளர் – வித்யா....................32
தமிழ்நாட்டின் பணப்புழக்க நிலை....................33
அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் குறித்த அறிவுறுத்தல்....................33
K.சத்திய நாராயணன் குழு....................34
2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி....................34
SDG இந்தியா குறியீடு 2023-2024....................35
இந்திய ரிசர்வ் வங்கி குறை தீர்ப்பாளர் முன்பு வழக்குப் பிரதிநிதித்துவம்....................36
2017 ஆம் ஆண்டு சதுப்பு நில விதிகளின் கீழ் ஊட்டி ஏரி....................37
தமிழ்நாட்டின் மொழி சார் வரைபடம் 2011....................37
TANGEDCO நிறுவனத்தின் பெயர் மாற்றம்....................38
காலை உணவுத் திட்ட விரிவாக்கம் 2024....................39
தமிழ்நாட்டில் உள்ள கழுகுகள் குறித்த ஆய்வு 2024....................40
'சண்டாளர்கள்' என்ற சொல்லின் பயன்பாடு குறித்த எச்சரிக்கை....................41
தமிழ்நாடு கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்கள் விருதுகள் 2024....................41
நிலையான மேம்பாட்டு இலக்குக் குறியீட்டில் தமிழ்நாட்டின் செயல்திறன் 2023-24....................42
புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-2027....................43
தமிழ்நாடு தினம் 2024....................44
TN-RISE முன்னெடுப்பு 2024....................44
முதலாவது முழுமையான இராம சேது வரைபடம்....................45

பெரியார் கொள்கை OTT ..... 45
தமிழகப் பள்ளிகளில் உணவுப் பாதுகாப்பு ..... 46
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 2024 ..... 47
தமிழ்ப் புதல்வன் திட்டம் ..... 47
"ஒரே சுகாதாரம்" குழு – தமிழ்நாடு ..... 47
தேசியச் செய்திகள் ..... 48
FATF அமைப்பின் 'வழக்கமான கண்காணிப்பு நிலையில் உள்ள நாடுகள்' பட்டியல் ..... 48
நதி நீரோட்டங்களின் சுற்றுச்சூழல் சார் கண்காணிப்பு அமைப்பு ..... 49
புவன் பஞ்சாயத்து புவிசார் இணைய தளம் 4.0 ..... 50
இந்தியாவின் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் ..... 50
சீர்மிகு நகரத் திட்டத்தின் விரிவாக்கம் ..... 51
இந்தியாவின் ஹைட்ரஜன் திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவி ..... 52
இந்தியாவின் முதல் நிலக்கரி வாயுவாக்க ஆலை ..... 53
புலம்பெயர்வு மற்றும் மேம்பாடு குறித்த விரிவான அறிக்கை 2024 ..... 53
16வது நிதிக் குழுவிற்கான உத்தேச திட்டம் ..... 54
சம்பூர்ணதா அபியான் ..... 55
தேசிய வயிற்றுப் போக்குத் தடுப்புப் பிரச்சாரம் 2024 ..... 56
கங்கை நீர் ஒப்பந்தம் குறித்த மறுபேச்சுவார்த்தை ..... 56
அமைச்சரவைக் குழுக்களின் மறுசீரமைப்பு ..... 57
இந்தியாவின் பாதுகாப்புத் துறை உற்பத்தி 2023-24 ..... 57
மத்திய இரயில்வே நிர்வாகத்தின் மிதக்கும் சூரியசக்தி உற்பத்தி ஆலை ..... 58
இந்தியாவின் விலங்கினங்கள் சரிபார்ப்பு பட்டியல் தளம் ..... 58
புதிய ஆயுத அமைப்புகள் பயிற்சிப் பள்ளி ..... 59
மிகவும் சக்தி வாய்ந்த அணு சக்தி சாராத வெடிகுண்டு - SEBEX 2 ..... 59
SBI - MSME சஹாஜ் ..... 60
வீர தீர விருதுகள் 2024 ..... 60
இந்தியா-பிரான்ஸ் கல்லீரல் மற்றும் வளர்சிதை மாற்ற நோய் வலையமைப்பு ..... 61
சஃபாய் அப்னாவ் பிமாரி பகாவோ முன்னெடுப்பு ..... 61
eSankhyiki இணைய தளம் ..... 61
NQAS மதிப்பீடு ..... 62
வரலாற்று சாட்விக் வீடு ..... 63
இந்தியா மற்றும் ரஷ்யாவின் 22வது வருடாந்திர உச்சி மாநாடு ..... 63
உள்நாட்டிலேயே இலகுரக பீரங்கி 'ஜோரவர்' ..... 64
ஹஜ் குழு ..... 64
NIRMAN இணையதளம் ..... 65
CAMPCOPTER S-100 ..... 65
செம்மொழியாக அறிவிக்கப் படுவதற்கான நிபந்தனைகளில் மாற்றம் 2024 ..... 66
உணவுப் பொட்டலங்களுக்கான புதிய விதிகள் 2024 ..... 67
Agri SURE நிதி ..... 67

நிலையான மேம்பாட்டு இலக்குக் குறியீடு 2024 – இந்தியா ....... 68
16வது நிதி ஆணையத்தின் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு ....... 69
‘ஓர் அறிவியலாளர், ஒரு தயாரிப்பு’ திட்டம் ....... 69
போதைப் பொருள் குற்றங்கள் குறித்த புகாருக்கான கட்டணமில்லாத தொலை பேசி உதவி எண் - 1933....... 70
WHO-UNICEF அறிக்கை 2024 ....... 70
அகில இந்தியப் பணிகள் (நடத்தை) விதிகள், 1968....... 71
முஸ்லீம் பெண்களின் பராமரிப்பு உரிமை 2024 ....... 72
நிதி ஆயோக் அமைப்பின் மறுசீரமைப்பு 2024....... 73
பல்கலைக்கழக மானியக் குழுவின் ASMITA திட்டம்....... 74
இந்தியாவின் 5வது உள்நாட்டுமயமாக்கல் பட்டியல் ....... 74
எண்ணிம பாரத் நிதி ....... 75
PARI திட்டம் ....... 76
ஒருங்கிணைக்கப்படாத நிறுவனங்களின் வருடாந்திர கணக்கெடுப்பு 2022-23....... 77
நான்ஹே ஃபரிஷ்டே நடவடிக்கை ....... 78
அலுவல் ஆலோசனைக் குழு 2024....... 78
இயற்கை முறையில் உற்பத்திப் பொருட்களுக்கான ஒரு பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் ....... 79
4வது ICCPR மனித உரிமைகள் மதிப்பாய்வு....... 79
பொருளாதார ஆய்வறிக்கை 2023-24....... 80
தேசிய நிலச்சரிவு முன்னறிவிப்பு மையம் ....... 81
2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள் ....... 82
நிதிநிலை அறிக்கையின் ஒன்பது முன்னுரிமை பகுதிகள்....... 83
பொருளாதார ஆய்வறிக்கையில் மனநலப் பாதுகாப்பு....... 84
புதிய ஓய்வூதியத் திட்டம் ‘VATSALYA’....... 85
U-WIN இணைய தளம் ....... 85
KIRTI திட்டம் ....... 86
போஷான் டிராக்கர் செயலியின் 2024 ஜூன் மாதத் தரவு ....... 87
PM ஜன்ஜாதிய உன்னத் கிராம அபியான்....... 88
மின்சார வாகனங்கள் ஊக்குவிப்புத் திட்டம் - 2024 ....... 89
புதிய வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை....... 89
NCB வருடாந்திர அறிக்கை 2023 ....... 90
ஷிக்சா சப்தா 2024 ....... 91
நிதி ஆயோக் அமைப்பின் 9வது ஆளுகைக் குழுக் கூட்டம்....... 91
கனிம வளங்கள் நிறைந்த நிலங்களுக்கு வரி விதிக்கும் உரிமை ....... 92
இந்தியாவின் அணுசக்தி திறன் 2031-32....... 93
சர்வதேசச் செய்திகள் ....... 94
உலகில் முதல் முறையாக வாயுக்களை வெளியிடும் மாடுகள் மீது கார்பன் வரி....... 94
விண்வெளி MAITRI திட்டம் - ஆஸ்திரேலியா ....... 94
சர்வதேச விண்வெளி நிலையத்தினை அழிப்பதற்கு ஒப்பந்தம் ....... 95

சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் 'ஐந்து கோட்பாடுகள்' - 70 ஆண்டுகள் ........ 95
INSTC - முதல் ஏற்றுமதி ........ 96
முப்பரிமான உருவம் கொண்ட ரூபாய் தாள்கள் ........ 97
ஸ்பெயின் நாட்டின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி ........ 97
GenAI காப்புரிமைகள் ........ 98
பிரிட்டனின் புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ........ 98
24வது SCO உச்சி மாநாடு ........ 99
RIMPAC கடற்படைப் பயிற்சி ........ 99
இயங்கலையில் பரவும் தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதற்கான கட்டமைப்பு ........ 100
நேட்டோ உச்சி மாநாடு 2024 ........ 100
ரைசோடோப் திட்டம் ........ 101
ஈரானின் அடுத்த அதிபர் ........ 101
ரஷ்ய விண்வெளி நிலையம் ........ 102
பிட்ச் பிளாக் நடவடிக்கை ........ 102
கொழும்பு பாதுகாப்பு மாநாடு அமைப்பு 2024 ........ 103
MeDevIS தரவுத் தளம் ........ 104
இந்தியாவில் அந்நியத் தொகுப்பு முதலீடுகள் மேற்கொள்வதற்கான விருப்ப மிகு நாடுகள் ........ 104
உயர் செயல்திறன் திறன் கொண்ட மலேரியா தடுப்பூசி – ஆப்பிரிக்கா ........ 105
புதிய நுண் கண்டம் கண்டுபிடிப்பு ........ 105
MV Sea Change பயணியர் படகு ........ 106
நேட்டோ அமைப்பின் கிழக்குப் பிரிவு இயக்கம் ........ 106
ஐக்கிய நாடுகள் சபையின் நீர் உடன்படிக்கை 2024 ........ 106
திட்டம் 2025 ........ 107
கார்பன் இழைகளால் ஆன உலகின் முதல் அதிவேக இரயில் ........ 108
அப்பல்லோ 11 ஆண்டு நிறைவு விழா 2024 ........ 108
UNAIDS உலகளாவிய எய்ட்ஸ் பாதிப்பு குறித்த தகவல் புதுப்பிப்பு 2024 ........ 109
கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலம் ........ 110
KHAAN QUEST 2024 பயிற்சி ........ 111
பொருளாதாரச் செய்திகள் ........ 111
இந்தியாவின் குறுகிய காலக் கடன்களின் பங்கு ........ 111
2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் பண வரவு ........ 112
SAARC நாடுகளின் பண மதிப்பு மாற்றுக் கட்டமைப்பு 2024-2027 ........ 113
மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கான நிதி வழங்கீடு ........ 114
இந்தியாவில் ஊதிய அறிக்கை: ஒரு வேலை வாய்ப்புக் கண்ணோட்டம் ........ 115
இந்திய ரிசர்வ் வங்கியின் 29வது நிதி நிலைத்தன்மை அறிக்கை ........ 115
இந்திய ரிசர்வ் வங்கியின் நெக்சஸ் திட்டம் ........ 116
2023-24 ஆம் நிதியாண்டில் வேலை வாய்ப்பு உருவாக்கம் ........ 117
நிதி உள்ளடக்கக் குறியீடு 2024 ........ 117
தாராளமயமாக்கப்பட்ட பணம் அனுப்புதல் திட்டம் - RBI ........ 118

இந்திய ரூபாயில் ரஷ்யாவுடனான வர்த்தகம் ..... 119
இந்தியாவின் மின்னணு உற்பத்தி இலக்கு 2030 ..... 120
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 121
NOAA வானிலை செயற்கைக் கோள் ..... 121
ஸ்னோபிளைண்ட் தீநிரல் ..... 121
வலிப்பு நோய்க் கட்டுப்பாட்டுக்கான உலகின் முதல் மூளை உள்வைப்பு கூறு ..... 122
CAR-T புற்றுநோய் சிகிச்சை ..... 122
ஒலிம்பஸ் மோன்ஸ் ..... 123
டிஎன்ஏ-வின் பயனற்ற பகுதிகள் ..... 124
முதலாவது வணிக ரீதியான விண்வெளிப் பயணம் ..... 124
இஸ்ரோவின் ஆதித்யா-L1 ஆய்வுக் கலம் 2024 ..... 125
வேல்மென்னி நிறுவனத்தின் Li-Fi தொழில்நுட்பம் ..... 125
தெளிவற்ற நுண்ணலை கவசத்தினை உருவாக்கும் வகையிலான நுண் உலோக இழைகளைக் கொண்ட ஏவுகணை ..... 126
சின்ட்ரிச்சியா கேனினெர்விஸ் ..... 127
வசிக்கத்தக்க உலகத்திற்கான ஆய்வகம் ..... 127
பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் திறன் கொண்ட துணியிழை ..... 128
அசாதாரணமான அயனிமண்டல வடிவங்கள் ..... 128
நீரேற்றம் பெற்ற முப்பரிமாண களிமம் - IISc ..... 129
ஐரோப்பாவின் ஏரியன் 6 ஏவுகலம் ..... 130
நாசாவின் CHAPEA ஆய்வுத் திட்டம் ..... 130
ஒமேகா சென்டாரியில் உள்ள மாபெரும் கருந்துளை ..... 130
வலுவான சூரிய துகள் வெளியீட்டு நிகழ்வு ..... 131
திய வகை "டைம் கிரிஸ்டல்" ..... 132
சூரியனைச் சுற்றும் பூமியின் சுழற்சி ..... 132
குவாசரின் 'ஐன்ஸ்டீன் வளையம்' ..... 133
வோல்பேசியா பாக்டீரியா ..... 134
முப்பது மீட்டர் தொலைநோக்கிக்கான பொதுப் பயன்பாட்டுக் கருவி ..... 134
ஹைட்ரஜன் பெராக்சைடு நுண் திவலையாக்க மருந்து தெளிப்பு முறை ..... 135
ஈருலோக NiFe அமைப்புகள் ..... 136
குறைந்த அதிர்வெண் தொகுப்பு ..... 136
அறிவியல்பூர்வ ஆய்விற்கான ஆழ்துளையிடல் திட்டம் ..... 137
எடை இழப்பு மருந்து – டிர்செபடைடு ..... 138
OJ 287 மற்றும் இணை கருந்துளைகள் ..... 138
நிலவில் குகை ..... 139
Blue Screen of Death ..... 140
ஆறு புதிய புறக்கோள்கள் ..... 140
கனிம நுண் துகள்கள் ..... 141
புதிய NOva தரவு ..... 142

தல்வார் ரகப் போர் கப்பல் ........ 143
இரண்டாம் கட்ட உந்துவிசை ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு 2024 ........ 143
**சுற்றுச்சூழல் செய்திகள் ........ 144**
ஓவிய அழகி வண்ணத்துப்பூச்சி ........ 144
ஒற்றை மெயின்லேண்ட் செரோவ் ........ 145
டிடிமோகார்பஸ் ஜானகியே ........ 146
கோம்ஃபோன்மாய்டு டயட்டம் ........ 146
புதிய கொம்பு தவளை இனங்கள் ........ 147
சென்னா ஸ்பெக்டபிலிஸ் ........ 147
வாகிடா - கடல் வாழ் பாலூட்டி ........ 148
தேசிய அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட பல்லுயிர் குறித்த ஒப்பந்தம் – இந்தியா ........ 148
11 புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள் ........ 149
IUCN செந்நிறப் பட்டியல் புதுப்பிப்பு 2024 ........ 150
யூரோபெல்டிஸ் காடோமாகுலேட்டா ........ 150
பருவநிலை மாற்ற நெகிழ் திறனில் துத்தநாகத்தின் பங்கு ........ 151
சால்வினியா மொலஸ்டா ........ 152
ஸ்குவாலஸ் ஹிமா ........ 152
உலக மக்கள்தொகை வளங்கள் 2024 ........ 153
மெக்கென்சி நதியில் வரலாறு காணாத அளவிற்கு நீர்மட்ட வீழ்ச்சி ........ 154
Planet on the move: Reimagining conservation அறிக்கை ........ 154
செம்மரம் பற்றிய CITES அமைப்பின் அறிக்கை ........ 155
உலகளாவிய வனப் பகுதியில் பதிவாகியுள்ள உயர்வு ........ 156
இந்தியாவில் புதிய பூ வண்டு இனம் ........ 157
உலகளவில் முன் எப்போதும் பதிவாகாத வெப்பமான நாள் ........ 158
Ecozen – ஆசியாவின் முதலாவது குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட பசுமை துத்த நாகம் தயாரிப்பு ........ 158
குடிநீரில் யுரேனியம் இருப்பு ........ 159
இந்தியாவிற்கான ஆண்டிடை காற்றுத் தர மதிப்பீடு ........ 159
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 160**
செயற்கை நுண்ணறிவுத் தயார்நிலைக் குறியீடு 2024 ........ 160
உலக வாயு எரிப்பு கண்காணிப்பு அறிக்கை 2023 ........ 161
உலகின் வாழ்வதற்கு உகந்த நகரக் குறியீடு 2024 ........ 162
வருடாந்திர உலகப் போதைப்பொருள் அறிக்கை 2024 ........ 162
புதிய உலக மண் சுகாதார குறியீடு ........ 163
அதிக செலவினம் மிக்க நகரங்கள் 2024 ........ 164
புலம்பெயர்ந்தோருக்கான உலகின் செலவு குறைந்த நாடுகள் ........ 164
எண்ணிமப் பொருளாதார அறிக்கை 2024 – UNCTAD (UN வர்த்தகம் மற்றும் மேம்பாடு மீதான அமைப்பு) ........ 165
காந்தர் நிறுவனத்தின் தயாரிப்பு நிறுவன உள்ளடக்கக் குறியீடு 2024 ........ 167

UNEP தொலைநோக்கு அறிக்கை 2024 ........ 167
உலகின் சக்தி வாய்ந்த கடவுச் சீட்டுகள் 2024 ........ 168
உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை 2024 ........ 169
மாநிலச் செய்திகள் ........ 170
ULLAS திட்டத்தின் கீழ் முழு பயன்நிலைக் கல்வியறிவு ........ 170
ஷியோக் நதி ........ 171
ஸ்ரீசைலம் புலிகள் வளங்காப்பகத்தில் இந்தியக் காட்டெருது ........ 171
பர்பதி-காலிசிந்த்-சம்பல் நதிகள் இணைப்பு திட்டம் ........ 172
2023-24 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தின் அந்நிய நேரடி முதலீடு ........ 172
உத்தரப் பிரதேசத்தில் உயிர்ம நெகிழிப் பூங்கா ........ 173
காட்டுத் தீயைக் கண்டறிவதற்கான செயற்கை நுண்ணறிவு அமைப்பு ........ 173
மக்களின் பல்லுயிர்ப்பெருக்கப் பதிவேடு – தழகரை ........ 174
கர்நாடக சமூகப் பாதுகாப்பு மற்றும் நல மசோதா ........ 174
விழிஞ்சம் துறைமுகம் ........ 175
மேல் மட்ட சியாங் நதி நீர்மின் ஆற்றல் உற்பத்தி நிலையம் ........ 176
மஞ்சீரா வனவிலங்கு சரணாலயம் - தெலுங்கானா ........ 176
ரத்ன பந்தர் – ஒடிஸா ........ 177
குழந்தை தொழிலாளர் முறை இல்லாத மைக்கா சுரங்கம் ........ 177
சண்டிபுரா வைரஸ் ........ 177
டிசு மற்றும் சுங்கி நதி – நாகாலாந்து ........ 178
ஹரேலா திருவிழா – உத்தரகாண்ட் ........ 179
மகாராஷ்டிரா சிறப்புப் பொதுப் பாதுகாப்பு (MSPS) சட்டம், 2024 ........ 179
கோண்டுவானா மீப்பெருக் கண்டத்துடனான புவியியல் தொடர்புகள் ........ 180
ஒடிசாவில் நிழல் அமைச்சரவை ........ 181
தெலுங்கானா பயிர்க் கடன் தள்ளுபடி திட்டம் 2024 ........ 181
லட்கா பாஹு யோஜனா – மகாராஷ்டிரா ........ 182
பஞ்சமசாலி லிங்காயத்துகள் ........ 183
பில் பிரதேசம் ........ 183
கர்ச்சி பூஜை – திரிபுரா ........ 184
சுற்றுச்சூழலுக்கான GEP குறியீடு – உத்தரகாண்ட் ........ 184
சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டம் – பானி புல்வெளிகள் ........ 185
லித்தியம் வளங்களின் கண்டுபிடிப்பு – கர்நாடகா ........ 186
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 187
வெங்கையா நாயுடு அவர்களின் வாழ்க்கைப் பயணம் மீதான புத்தகம் ........ 187
ப்ளூ பிளானட் பரிசு 2024 ........ 187
சர்வதேசப் பொம்மைகள் கண்காட்சி 2024 ........ 188
தேசிய இலக்கிய விருது 2024 ........ 188
ஃபிராங்க் டக்வொர்த் ........ 189
தேசிய காசநோய் திட்டத்திற்கான முதன்மை ஆலோசகர் ........ 189

9வது IASRM வருடாந்திர உலக காங்கிரஸ் ..... 190
எஃகு உருக்குக் கசட்டினைப் பயன்படுத்திச் சாலையமைக்கும் தொழில்நுட்பம் குறித்த முதலாவது சர்வதேச மாநாடு ..... 191
மிஸ்ஸி எலியட்டின் "The Rain" பாடல் ..... 191
SVANidhi திட்ட விருதுகள் 2024 ..... 192
UPSC தலைவர் ராஜினாமா – மனோஜ் சோனி ..... 192
சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டி 2024 ..... 193
இராஜ்பாஷா கௌரவ் சம்மான் 2023-24 விருது ..... 193
10வது தேசியச் சமூக வானொலி விருதுகள் ..... 193

**விளையாட்டுச் செய்திகள் ..... 194**

வில்வித்தை உலகக் கோப்பை போட்டி 2024 ..... 194
ரோஹித் சர்மா மற்றும் விராட் கோலி ஓய்வு ..... 195
ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டி 2024 ..... 196
2024 ஆம் ஆண்டு விம்பிள்டன் டென்னிஸ் போட்டி ..... 196
ஒலிம்பிக் போட்டிகள் 2024 ..... 197
2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பாலினச் சமத்துவம் ..... 198

**முக்கிய தினங்கள் ..... 199**

உலக ஒவ்வாமை வாரம் 2024 - ஜூன் 23 முதல் 29 வரை ..... 199
தேசிய மருத்துவர் தினம் - ஜூலை 01 ..... 199
தேசியப் பட்டயக் கணக்காளர் தினம் - ஜூலை 01 ..... 200
சரக்கு மற்றும் சேவை வரி தினம் 2024 - ஜூலை 01 ..... 200
உலக அடையாளம் காண இயலாத பறக்கும் பொருட்கள் தினம் - ஜூலை 02 ..... 201
உலக விளையாட்டுத் துறைப் பத்திரிகையாளர்கள் தினம் - ஜூலை 02 ..... 201
ஹல் திவாஸ் - ஜூன் 30 ..... 201
புதுச்சேரி உருவாக்க தினம் - ஜூலை 01 ..... 202
சர்வதேச நெகிழிப் பை பயன்பாடு இல்லாத தினம் - ஜூலை 03 ..... 203
சர்வதேச கூட்டுறவு தினம் - ஜூலை 06 ..... 203
உலக விலங்கு வழிப் பரவும் நோய்கள் தினம் - ஜூலை 06 ..... 204
உலக கிஸ்வாஹிலி மொழி தினம் - ஜூலை 07 ..... 204
தேசிய மீன் பண்ணையாளர்கள் தினம் - ஜூலை 10 ..... 205
முதலாவது ஸ்ரெப்ரெனிகாவின் 1995 ஆம் ஆண்டு இனப்படுகொலையின் சர்வதேசப் பிரதிபலிப்பு மற்றும் நினைவு தினம் - ஜூலை 11 ..... 205
உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11 ..... 206
உலகளாவிய ஆற்றலுக்கான சாரா நிலை தினம் - ஜூலை 10 ..... 206
மணல் மற்றும் தூசிப் புயல்களை எதிர்கொள்வதற்கான சர்வதேச தினம் - ஜூலை 12 ..... 206
மலாலா தினம் - ஜூலை 12 ..... 207
பாஸ்டில் தினம் - ஜூலை 14 ..... 207
உலக இளையோர் திறன்கள் தினம் - ஜூலை 15 ..... 208
ICAR ஸ்தாபன மற்றும் தொழில்நுட்பத் தினம் - ஜூலை 16 ..... 208

சர்வதேச நீதிக்கான உலக தினம் - ஜூலை 17 ........ 209
சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் - ஜூலை 18 ........ 209
CSIR - CRRI ஸ்தாபன தினம் - ஜூலை 16 ........ 210
சர்வதேச நிலவு தினம் - ஜூலை 20 ........ 210
சர்வதேச சதுரங்க தினம் - ஜூலை 20 ........ 211
தேசியக் கொடி தினம் - ஜூலை 22 ........ 211
தேசிய மாம்பழ தினம் - ஜூலை 22 ........ 212
பை மதிப்பின் தோராய மதிப்பு தினம் - ஜூலை 22 ........ 212
உலக மூளை தினம் - ஜூலை 22 ........ 212
தேசிய ஒலிபரப்பு தினம் - ஜூலை 23 ........ 213
தேசிய வருமான வரி தினம் - ஜூலை 24 ........ 214
உலக நீரில் மூழ்கி உயிரிழப்பதனைத் தடுக்கும் தினம் - ஜூலை 25 ........ 214
உலக கருவியலாளர் தினம் - ஜூலை 25 ........ 215
கார்கில் விஜய் திவாஸ் - ஜூலை 26 ........ 215
உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் - ஜூலை 28 ........ 216
சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் வளங்காப்பிற்கான சர்வதேச தினம் - ஜூலை 26 ........ 217
மத்திய சேமக் காவல் படை ஸ்தாபன தினம் - ஜூலை 27 ........ 217
சர்வதேச புலிகள் தினம் - ஜூலை 29 ........ 218
உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் - ஜூலை 28 ........ 218
ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம் - ஜூலை 30 ........ 219
உலக வனச்சரகர் தினம் - ஜூலை 31 ........ 220
**இதரச் செய்திகள் ........ 220**
41,000 ஆண்டுகள் பழமையான நெருப்புக் கோழி கூடு ........ 220
சத்ரபதி சிவாஜியின் முடிசூட்டு விழாவின் 350வது ஆண்டு விழா ........ 221
உலகின் பழமையான குகை ஓவியம் ........ 222
பேய்சியன் பிணைய ஒருங்கிணைப்பு வலையமைப்பு ........ 222
மூளையை உண்ணும் அமீபா தொற்று ........ 223
மூளை மின்னலை வரைவு நுட்பத்தின் 100 ஆண்டுகள் நிறைவு (EEG) ........ 223
மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் – இந்தியா ........ 224
போஜ்ஷாலா-கமல் மௌலா மசூதி வளாகம் – மத்தியப் பிரதேசம் ........ 225
பெரு - மாஷ்கோ பைரோ பழங்குடியினர் ........ 225
தேசிய கடல்சார் கள விழிப்புணர்வு மையம் ........ 226
களரிப் பயிற்று கூட்டமைப்பு ........ 227
எண்ணிம முறையிலான அஞ்சல் குறியீட்டு எண் ........ 227
சிவிங்கிப் புலிகளின் பராமரிப்பு குறித்த தகவல் அறியும் உரிமைச் சட்ட கோரிக்கை ........ 228

# TNPSC துளிகள்

- கலைஞர் விளையாட்டுக் கருவிகள் தொகுப்பு வழங்கீட்டுத் திட்டத்தினை நகரப் பஞ்சாயத்துகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு விரிவுபடுத்துவதாகவும், 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளது.
    - முன்னதாக, இத்திட்டம் ஊராட்சிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்தது.
- தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்விற்கு (நீட்) எதிராக தமிழக சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதை ரத்து செய்ய மத்திய அரசினை அது வலியுறுத்தியது.
    - நீட் தேர்விற்கு முன்னதாக, 12 ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட மருத்துவச் சேர்க்கையை மாநில அரசுகள் அனுமதிக்க வேண்டும் என இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- உலகக் கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கபில் தேவ், இந்தியாவின் தொழில்முறை கோல்ஃப் சுற்றுப்பயணத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- பீகார் துணை முதல்வர் சாம்ராட் சௌத்ரி சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தினை சீரமைப்பதற்கான அமைச்சர்கள் குழுவின் (GoM) ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மத்திய அரசு ஆனது, மஷகான் கப்பல் கட்டும் நிறுவனத்திற்கு 'நவரத்னா' அந்தஸ்து வழங்கியுள்ளது.
- இந்தியாவில் ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் இந்திய நிர்வாகங்களுக்கு இடையே தபால் துறையில் உறவுகளை வலுப்படுத்துவதற்காக ‘இந்தியா ஆப்பிரிக்கா தபால் துறை தலைவர்கள் சந்திப்பு’ ஆனது ஏற்பாடு செய்யப்பட்டது.
    - இது சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தின் ‘தெற்கு தெற்கு முத்தரப்பு ஒத்துழைப்பு’ என்ற முயற்சியின் கீழ் மேற்கொள்ளப் பட்டது.
- உலகளாவிய நிதி சார் குற்றக் கண்காணிப்புக் குழுவான நிதியியல் நடவடிக்கைக் குழுவானது (FATF), சிறப்பு ஆய்வு தேவைப்படும் நாடுகளின் "சாம்பல் நிறப் பட்டியலில்" இருந்து துருக்கியை நீக்கியுள்ளது.
- வெப்பமண்டல அன்னாசிப்பழ வகையினையும், நம் வாழ்வில் அதன் பல பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் ஜூன் 27 ஆம் தேதியன்று சர்வதேச அன்னாசி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- நமது நிதி எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் காப்பீடு துறை வகிக்கும் முக்கியப் பங்கை நினைவூட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 28 ஆம் தேதியன்று தேசியக் காப்பீட்டு விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய கிரிக்கெட் அணியானது, 2007 ஆம் ஆண்டில் வென்ற முதல் சாம்பியன்ஷிப் கோப்பைக்குப் பிறகு 2024 ஆம் ஆண்டில் தனது இரண்டாவது T20 கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- சுஸ்லான் நிறுவனத்தின் துணைத் தலைவர் கிரிஷ் தந்தி, உலக காற்று ஆற்றல் சபை - இந்தியா அமைப்பின் (GWEC India) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் சபையானது, 'ABHYAS' எனப்படும் அதி வேக விரைவுபடுத்தக் கூடிய வான்வழி இலக்கு (HEAT) அமைப்பின் சுமார் ஆறு தொடர் மேம்பாட்டுச் சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- டாடா குழுமம் ஆனது, 28.6 பில்லியன் டாலர் நிறுவன மதிப்புடன், இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம் என்ற பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இந்திய எழுத்தாளர் சஞ்சனா தாகூர் தனது "ஐஸ்வர்யா ராய்" என்ற கதைக்காக 2024 ஆம் ஆண்டு காமன்வெல்த் சிறுகதை பரிசை வென்றுள்ளார்.
- தேசிய துணைப் பாதுகாப்பு ஆலோசகர் (NSA) விக்ரம் மிஸ்ரி அடுத்த வெளியுறவுத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- K-pop குழுவான SEVENTEEN, பாரீஸ் நகரில் நடைபெற்ற ஒரு விழாவில் யுனெஸ்கோ அமைப்பின் பூர்வாங்க (முதலாவதும் கூட) இளையோர்களுக்கான நல்லெண்ணத் தூதராக நியமிக்கப் பட்டுள்ளது.
- ஐரோப்பாவின் ஐபீரிய சிவிங்கிப் பூனை இனம் ஆனது, IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் உயிரினங்கள் என்ற நிலையிலிருந்து எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம் என்ற நிலைக்கு மேம்பட்டுள்ளது.
- மூன்று பெரிய ஐரோப்பிய விண்வெளித் துறை நிறுவனங்கள் ஆனது, விண்வெளிப் பொருட்களின் குப்பைகள் இல்லாத நிலை என்ற தரநிலைகளுக்கு இணங்க பெரிய புவித் தாழ்மட்ட சுற்றுப்பாதை (LEO) செயற்கைக்கோள் தளங்களை உருவாக்கச் செய்வதற்காக ஐரோப்பிய விண்வெளி முகமையுடன் (ESA) பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- நேட்டோ அமைப்பானது நெதர்லாந்து நாட்டின் பிரதமர் மார்க் ரூட்டே அவர்களை தனது அடுத்தப் பொதுச் செயலாளராக நியமித்துள்ளது.
- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான அடல் ஓய்வூதிய திட்ட வருடாந்திர விருதினைப் பாங்க் ஆஃப் இந்தியா வங்கி பெற்றுள்ளது.
- டாக்டர் உஷா தாக்கூர் இந்தி இலக்கிய மேம்பாட்டில் ஆற்றியப் பங்களிப்பிற்காக என்று 12வது விஸ்வ இந்தி சம்மான் விருதினைப் பெற்றுள்ளார்.
- அமெரிக்கா ஜப்பான் மற்றும் தென் கொரியாவுடன் இணைந்து கிழக்கு சீனக் கடலில் ஃபிரீடம் எட்ஜ் எனப்படும் தனது முதல் முத்தரப்பு பல் துறை பயிற்சியை நடத்தியது.
- போர்னியா யானை அல்லது எலிபாஸ் மாக்சிமஸ் போர்னென்சிஸ் இனமானது, IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் கீழ் 'அருகி வரும்' இனமாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது.
- உலகளாவியச் சுற்றுச்சூழல் மைய (GEF) சபையின் 67வது கூட்டம் ஆனது வாஷிங்டன் DC நகரில் நடைபெற்றது.
- ஜெனரல் உபேந்திர திவேதி 30வது இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுள்ளார்.
- ஏர் இந்தியா நிறுவனம் ஆனது, தெற்காசியாவின் மிகப்பெரிய விமானப் பயிற்சி நிறுவனத்தினை மகாராஷ்டிராவின் அமராவதி எனுமிடத்தில் தொடங்க உள்ளது.
- அதானி பாதுகாப்பு & வான்வழி ஆயுதங்கள் உற்பத்தி நிறுவனம் ஆனது, இந்தியாவின் தாக்குதல் ரக ஹெலிகாப்டர்களுக்கான 70 மி.மீ. ஏவுகணைகளை உருவாக்க, தேல்ஸ் குழுமத்துடன் கூட்டுறவு மேற்கொண்டுள்ளது.

- நார்வேயில் நடைபெற்ற இந்திய-நார்வே சர்வதேச கல்வி உச்சி மாநாட்டில் டூன் ஸ்கூல் ஸ்ரீநகர் "மாறுதல் மிக்க கல்வியில் சிறந்து விளங்குவதற்கான விருதினை" பெற்று உள்ளது.
- அருந்ததி ராய் தனது துணிச்சலான மற்றும் நெறி தவறாதப் படைப்புகளுக்காக 2024 ஆம் ஆண்டு PEN Pinter இலக்கியப் பரிசிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்தியா 64வது சர்வதேச சர்க்கரை அமைப்பின் (ISO) சபைக் கூட்டத்தினைப் புது டெல்லியில் நடத்தியது.
- ஐரோப்பிய சபையின் அடுத்தத் தலைவராகப் போர்த்துகீசிய நாட்டின் முன்னாள் பிரதமர் அன்டோனியோ கோஸ்டா அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- டெல்லி இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஒரு திட்டம் ஆனது இரண்டாவது டிரினிட்டி சேலஞ்ச் போட்டியில், நுண்ணுயிர் எதிர்ப்பாற்றலின் (AMR) அதிகரித்து வரும் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான பிரிவில் இரண்டாவது பரிசை கூட்டாக வென்று உள்ளது.
- அமெரிக்கா மற்றும் சீனாவுக்குப் பிறகு உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாக இந்தியா மாறியுள்ளது.
- குஜராத்தில் உள்ள ஸ்மிருதிவன் நிலநடுக்க நினைவு அருங்காட்சியகம் ஆனது, 2024 ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ பிரிக்ஸ் வெர்செய்ல்ஸ் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- தென்னாப்பிரிக்க வருவாய்ப் பணித் (SARS) தலைவர் எட்வர்ட் கீஸ்வெட்டர் உலக சுங்க அமைப்பு (WCO) சபையின் தலைவர் பொறுப்பிற்கு இரண்டாவது முறையாக ஒரு வருட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் 10வது முறையாக லியோன் மாஸ்டர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றிப் பெற்றுள்ளார்.
- ஆப்கானிஸ்தான் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது மாநாடு ஆனது கத்தாரின் தோஹா நகரில் முதல் முறையாக தலிபான் பங்கேற்புடன் நடந்தது.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவில் உத்தரப் பிரதேசம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது என்பதோடு இது நாட்டின் அழுத்தப்பட்ட உயிரி வாயுவில் (CBG) 24 சதவீதத்தை உருவாக்கும் திறன் கொண்டுள்ளது.
- சமத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும் பாரம்பரிய பாலினப் பாத்திரங்கள் மற்றும் மாறா மரபுமுறைகளுக்கு சவால் விடும் வகையில் பள்ளிப் பாடப்புத்தகங்களில் கணவர்கள் மற்றும் தந்தைகளும் சமையலறையில் வேலை செய்வது போன்ற பாலின-நடுநிலைப் படங்களை கேரளா அறிமுகப்படுத்தியுள்ளது,
- பிரான்சின் செயிண்ட்-ட்ரோபஸ் நகரில் நடைபெற்ற 43வது உலக மருத்துவ மற்றும் சுகாதார விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் நான்கு ஆயுதப்படை மருத்துவச் சேவை (AFMS) அதிகாரிகள் 32 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.
- மருத்துவச் சிகிச்சைக்காக இந்தியா வரும் வங்கதேச நாட்டவர்களுக்காக மின்னணு கடவுச் சீட்டு வழங்கும் வசதியை இந்தியா தொடங்கவுள்ளது.
- இந்தியாவானது பிரேசில் மற்றும் இந்தோனேசியாவை விஞ்சி மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாக மாறியுள்ளது.
- திருச்சூரில் உள்ள கல்லிங்கல் தோட்டத்தைச் சேர்ந்த சொப்னா கல்லிங்கல் என்பவர் ICAR-இந்திய இந்திய மசாலா பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஸ்பைஸ் விருதை 2024 பெற்றார்.

- தாய்லாந்தின் தக் மாகாணத்தில் இந்தியா-தாய்லாந்து 13வது கூட்டு ராணுவப் பயிற்சியான மைத்ரியில் (MAITREE) இந்திய ராணுவம் பங்கேற்கிறது.
  - இந்தப் பயிற்சியின் கடைசிப் பதிப்பானது மேகாலயாவின் உம்ரோயில் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது.
- துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (என்எஸ்ஏ) ராஜிந்தர் கண்ணா கூடுதல் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகவும், புலனாய்வுப் பிரிவின் சிறப்பு இயக்குநர் டிவி ரவிச்சந்திரன் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வு ஆனது, புது டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இந்தியாவினால் நடத்தப்பட உள்ளது.
- நொமாடிக் எலேஃபான்ட் 2024 (நாடோடி யானை) எனப்படும் இந்தியா-மங்கோலியா இடையிலான 16 வது கூட்டு இராணுவப் பயிற்சி மேகாலயாவின் உம்ரோயில் உள்ள வெளிநாட்டுப் பயிற்சி முனையில் தொடங்கியது.
- அஸ்வின் இராமசுவாமி, ஜார்ஜியா மாகாண மேலவைத் தொகுதிக்கு மாவட்டம் 48 என்ற பகுதியில் போட்டியிடும் Z தலைமுறையினைச் சேர்ந்த முதல் (1995-2012 ஆம் காலக் கட்டத்தில் பிறந்தவர்) இந்திய-அமெரிக்க வேட்பாளர் ஆவார்.
- மூத்த இந்தியத் தகவல் பணி அதிகாரி திரேந்திர K. ஓஜா மத்திய அரசின் முதன்மை செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM) தலைவர் ஹேமந்த் சோரன் மூன்றாவது முறையாக ஜார்க்கண்ட் மாநில முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.
- உத்தரப் பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் நிகழ்ந்த சத்சங்கத்தின் போது (இந்து மதப் பண்டிகை) ஏற்பட்ட நெரிசலில் சுமார் 120 பேர் கொல்லப்பட்டனர்.
- உலக கைவினைக் கழகத்தினால் (WCC) ‘உலக கைவினை நகரம்’ என அங்கீகரிக்கப் பட்ட நான்காவது இந்திய நகரமாக ஸ்ரீநகர் மாறியுள்ளது.
  - ஜெய்ப்பூர், மலப்புரம் மற்றும் மைசூர் ஆகிய மூன்று இந்திய நகரங்கள் முன்னதாக உலக கைவினை நகரங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- எழுத்தாளர், விமர்சகர் மற்றும் பெண்ணிய ஆர்வலர் P. கீதாவிற்கு முதலாவது K. சரஸ்வதி அம்மா விருது வழங்கப்பட்டுள்ளது.
  - இது பெண்ணிய ஆய்வுகளுக்காக கேரளாவில் உள்ள WINGS (விளையாட்டுத் துறை மூலமான பெண்கள் ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சி) அமைப்பால் நிறுவப் பட்டது.
- AK-203 தாக்குதல் துப்பாக்கிகளைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்ட இந்தியா -ரஷ்யா கூட்டுத் துணிகர முதலீட்டு முன்னெடுப்பானது இந்திய இராணுவத்திற்கு 35,000 ஆயுதத் தொகுப்புகளை வழங்கியதன் மூலம் அதன் முதல் கட்டத் தயாரிப்பினை நிறைவு செய்துள்ளது.
- மாற்றுத் திறனாளி தொழில்முனைவோர்களின் படைப்பாற்றல் மற்றும் திறமையின் தனித்துவமான ஒரு சங்கமமான திவ்ய கலா சக்தி மற்றும் திவ்ய கலா மேளா, புவனேஸ்வரில் உள்ள KIIT பல்கலைக்கழகத்தில் தொடங்க உள்ளது.
- பெங்களூரில் சிக்னல்ட்ரான் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட இந்தியாவில் உருவாக்கப் பட்ட முதல் 4G கைபேசி இணைய சேவைக் கட்டுப்பாட்டுத் தளத்தினை இந்திய இராணுவம் சமீபத்தில் பெற்றுள்ளது.

- அசாமில் உள்ள நரங்கி இராணுவ நிலையத்தினைத் தொடர்ந்து, நெகிழிக் கழிவுகளால் ஆன சாலையைக் கொண்ட நாட்டின் இரண்டாவது இராணுவ நிலையமாக ஜெய்ப்பூர் இராணுவ நிலையம் மாறியுள்ளது.
- இங்கிலாந்து வங்கியின் முன்னாள் பொருளாதார நிபுணர் ரேச்சல் ரீவ்ஸ் பிரிட்டனின் முதல் பெண் நிதியமைச்சர் ஆனார்.
- இந்திய விமானப்படையானது ரஃபேல் போர் விமானங்களுடன் எகிப்தில் நடைபெற்ற HOPEX எனப்படும் 4வது கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது.
- இந்திய அரசானது புது டெல்லியில் உலகளாவிய இந்தியாAI என்ற உச்சி மாநாட்டினை' நடத்தியது.
- வரவிருக்கும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான 28 பேர் கொண்ட இந்திய தடகள வீரர்கள் அணிக்கு ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தலைமை தாங்க உள்ளார்.
- சர்வதேச பால் பொருட்கள் தொழில்துறை கூட்டமைப்பின் முதலாவது 2024 ஆம் ஆண்டு ஆசிய பசிபிக் பிராந்திய பால் பொருட்கள் தொழில்துறை மாநாடு ஆனது கொச்சியில் நடைபெற்றது.
- பஜாஜ் ஆட்டோ நிறுவனம் ஆனது உலகிலேயே முதல் முறையாக CNG எரிபொருளில் இயங்கும், இரட்டை எரிபொருள் நிரப்புக் கல அமைப்புடன் கூடிய (பெட்ரோல் மற்றும் CNG எரிபொருள்) ஃப்ரீடம் 125 எனப்படும் இரு சக்கர வாகனத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- JM Financial நிறுவனத்தின் எண்ணிம வழி பங்குச் சந்தை தரகுப் பிரிவான BlinkX, செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காகவும் வாடிக்கையாளர்களின் பங்குச் சந்தை அனுபவங்களை நன்கு மேம்படுத்துவதற்காகவும் மும்பையில் BlinkX Gen AI ஆய்வகத்தினை அமைத்துள்ளது.
- பெங்களூரில் உள்ள டாக்டர் ஷ்யாமா நரங் அறக்கட்டளையானது, நிம்ஹான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, மோட்டார் நியூரான் நோய் (தசையூட்டமற்ற பக்க மரப்பு நோய்) குறித்த மூன்றாம் ஆண்டு மாநாட்டினை நடத்துகிறது.
  - இந்த நிகழ்வின் கருத்துரு, "MND/ALS பற்றிய விழிப்புணர்வு, மருத்துவ நலன் மற்றும் மேலாண்மை" என்பதாகும்.
- இந்து பிரசுரக் குழுமமானது, 'Samayapuram - The Sacred Seat of Shakti' என்ற விளக்கப் படப் புத்தகத்தினை (காபி மேசை புத்தகம் ) வெளியிட்டுள்ளது.
- சமையலறைப் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக எஃகு மற்றும் அலுமினியப் பாத்திரங்களுக்கு BIS தரத்தினை நன்கு இணங்கும் வகையில் தயாரிக்க வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.
- டாடா குழுமத்திற்குச் சொந்தமான ஏர் இந்தியா நிறுவனம் ஆனது, ஏர்பஸ் A320 நியோ எனப்படும் முதல் மிகவும் குறுகலான கட்டமைப்பு கொண்ட விமானத்தினை தனது நிறுவனத்தில் இணைத்துள்ளது.
- நெகிழிப் பொருட்கள் மறுசுழற்சி மற்றும் நிலைத்தன்மை (GCPRS) பற்றிய உலகளாவிய மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது.
- விண்வெளி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (SERA) மற்றும் ப்ளூ ஆரிஜின் ஆகியவை விண்வெளிக்கு ஒரு சில அல்லது எந்தவொரு விண்வெளி வீரர்களையும் அனுப்பாத நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்கான மனித விண்வெளிப் பயணத் திட்டத்தில் இந்தியாவை ஒரு பங்குதார நாடாக அறிவித்துள்ளன.

- தென் கொரியாவில் பணியமர்த்தப்பட்ட ஒரு எந்திர மனிதப் பணியாளர் சமீபத்தில் எந்தவித செயல்பாடும் இல்லாத நிலையை எட்டியதால், இது முதல்முதலான ரோபோ தற்கொலை என்று அழைக்கப்படுகிறது.
  - அது படிக்கட்டுகளில் இருந்து தானே கீழே விழுந்ததாக கூறப் படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில் சென்னை மண்டலக் கடவுச் சீட்டு அலுவலகம் (RPO) வழங்கிய மொத்தக் கடவுச் சீட்டுகளின் எண்ணிக்கை 5,19,682 ஆகும்.
  - இது 2022 ஆம் ஆண்டில் 4,74,472 ஆகவும், 2019 ஆம் ஆண்டில் 4,72,274 ஆகவும் இருந்தது.
- 'Folk Deities of Tamil Nadu: Worship, Tradition and Custom' மற்றும் 'Forts of Tamil Nadu: A Walk-Through' என்ற தலைப்பிலான இரண்டு விளக்கப் படப் புத்தகங்களை (காபி மேசை புத்தகம் ) தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.
- 15வது வேளாண்மையில் தலைமைத்துவத்திற்கான விருதுகள் குழுவினால் 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த வேளாண்மைக்கான மாநில விருதினை மகாராஷ்டிரா பெற்று உள்ளது.
- HCL டெக் நிறுவனத்தின் தலைவரான ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா, பிரான்ஸ் நாட்டின் "செவாலியர் டி லா லெஜியன் டி'ஹானர்" (நைட் ஆஃப் தி லெஜியன் ஆஃப் ஹானர்) விருதைப் பெற்றுள்ளார்.
- இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் தாம் ஆற்றிய சிறப்பானப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ரஷ்ய அதிபர் அவர்களால் அதிகாரப்பூர்வமாக 'ஆர்டர் ஆஃப் செயின்ட் ஆண்ட்ரூ தி அப்போஸ்தலர்' விருது வழங்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் சர்வதேச ஆலோசனை அமைப்பான ICOMOS ஆனது (International Council on Monuments and Sites – நினைவுச் சின்னங்களுக்கும் களங்களுக்குமான அனைத்துலக அவை) அசாமின் சாரெய்டியோ மாவட்டத்தில் உள்ள அஹோம் சகாப்தத்தினைச் சேர்ந்த 'மொய்டாம்ஸ்' இடத்தினை உலகப் பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்துள்ளது.
- ராகுல் டிராவிட்டிற்கு அடுத்தபடியாக இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான இரண்டு ஆண்டு காலத்திற்கு மெக்சிகோவின் எலிசா டி அண்டா மட்ராஸோ நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழுவின் (FATF) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- அடுத்த 10 ஆண்டுகளுக்கு சாலைப் பாதுகாப்பிற்கான செயல் திட்டத்தை ஏற்ற நாட்டின் முதல் மாநிலமாக ராஜஸ்தான் மாற உள்ளது.
  - 2030 ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் சாலை விபத்துகளை 50% அளவு குறைக்கும் நோக்கில் இந்தச் செயல் திட்டம் அமல்படுத்தப்படும்.
- சிறார் நீதி வாரியத்திற்கான (JJB) சமூக சேவகர் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மற்றும் குழந்தைகள் நலக் குழுவின் (CWC) தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவும் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி K.P.K. வாசுகி தலைமையில் தமிழக அரசானது ஒரு தேர்வுக் குழுவை அமைத்து உள்ளது.
- கார்டன் ரீச் கப்பல் கட்டும் தளம் & பொறியியல் (GSRE) லிமிடெட் நிறுவனத்திற்கு, 2024 ஆம் ஆண்டு கிரகத்தின் நிலைத்தன்மைக் குறித்த கண்ணோட்டம் மீதான உச்சி மாநாடு மற்றும் விருதுகள் "நிலையான ஆளுகை வாகையர் விருது" வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.

- OpenAI நிறுவனம் வலுவூட்டப்பட்ட கற்றலின் போது மனித கருத்துரைப்புகளிலிருந்து பெறப்பட்ட தவறுகளைக் கண்டறிய மனிதப் பயிற்சியாளர்களுக்கு உதவுவதற்காக, ChatGPT பதிலுரைப்புகளின் விமர்சனங்களை எழுதுவதற்காக வேண்டி சமீபத்தில் GPT4 அடிப்படையிலான CriticGPT எனப்படும் புதிய மாதிரியினை அறிவித்துள்ளது.
- அதானி குழுமம் ஆனது, 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்காக பாரீஸ் நகர் செல்லும் இந்திய அணிக்கு நிதியுதவி செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் இறகுப் பந்தாட்ட வீராங்கனை P.V. சிந்து இந்தியக் கொடி ஏந்தி இந்திய அணியினை வழி நடத்தும் வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- உக்ரைனைச் சேர்ந்த யாரோஸ்லாவா மஹுசிக் என்ற பெண் உயரம் தாண்டுதலில் அதிக உயரம் பாய்ந்து (2.10 மீ) உலக சாதனை படைத்துள்ளார்.
  - இதற்கு முந்தைய சாதனை (2.09 மீ) ஆனது 1987 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்டது.
- காட்சி ஊடகங்கள் (கட்புலத் தொடர்பாடல்) மற்றும் திரைப்படங்களில் மாற்றுத் திறனாளிகள் குறித்த பழமைவாதக் கருத்துக்களைத் திணிப்பது போல் சித்தரித்தல் பாகுபாட்டை நிலை நிறுத்துவதாகவும், படைப்பாளிகள் அந்தக் குறைபாடுகளை கேலி செய்வது அல்லது கற்பனை ரீதியிலான பிரதிபலிப்பு செய்வதற்குப் பதிலாக அவர்கள் குறித்த துல்லியமான ஒரு பிரதிபலிப்பினை வழங்க வேண்டும் என்றும் இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- அஜர்பைஜான் இராணுவம் மற்றும் கஜகஸ்தான் ஆகியவை கஜகஸ்தான் நாட்டில் மேற் கொள்ளப்படும் "பிர்லெஸ்டிக்-2024" எனப்படும் நடவடிக்கை சார்ந்த ஒரு உத்தி சார் கட்டுப்பாட்டுப் படைப்பிரிவு வீரர்கள் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- பீகாரின் கிழக்கு சம்பாரண் மாவட்டத்தில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'உலகின் மிகப்பெரிய இராமாயணக் கோவில்' கட்டும் பணி தொடங்கியது.
  - இது கம்போடியாவில் உள்ள 12 ஆம் நூற்றாண்டின் அங்கோர் வாட் கோவில் வளாகத்தை விட உயரமாக இருக்கும்.
- இந்தியக் குடிமைப் பணி வரலாற்றில் முதன்முறையாக, ஐதராபாத்தைச் சேர்ந்த மூத்த இந்திய வருவாய்ப் பணி அதிகாரி (IRS) ஒருவர் தனது பெயரையும் பாலினத்தையும் மாற்றக் கோரிய முறையீட்டிற்கு மத்திய நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
  - அவரது பெயரை M. அனுகதிர் சூர்யா என்றும், தனது பாலினத்தினைப் பெண்ணிலிருந்து ஆணாக மாற்றவும் அவர் கோரியிருந்தார்.
- கள்ளச்சாராய உற்பத்தி, விற்பனை மற்றும் வைத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்கான அபராதங்களை அதிகரிப்பதற்காக என்று 1937 ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாடு மாநில அரசின் திருத்தங்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- டாடா பரஸ்பர நிதியம் ஆனது, டாடா நிஃப்டி இந்தியா சுற்றுலாக் குறியீடு நிதியினைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
  - இது இந்தியாவின் இம்மாதிரியான முதல் வகையாகும்.
- 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற ககன் நரங், மேரி கோமிற்குப் பதிலாக 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் அணிப் பொறுப்பாளராக (செஃப்-டி-மிஷன்) நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகளின் பேச்சுவார்த்தையின் மூலமாக உருவாக்கப் பட்ட "இழப்பு மற்றும் சேதம்" நிதியத்தின் குழுவினை நடத்துவதற்கு பிலிப்பைன்ஸ் நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - இது புவி வெப்பமடைதலின் தாக்கத்திலிருந்து மீண்டு, மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள உதவும் வகையில் நாடுகளுக்கு நிதியுதவி வழங்குகிறது.
- ஓய்வு பெற்ற பேராசிரியர் K. சொக்கலிங்கம், பல்வேறு குற்றங்களால் பாதிக்கப் பட்டவர்களின் மன நிலை குறித்த ஆய்வியல் துறைக்கு அவர் ஆற்றிய மிகப்பெரும் பங்களிப்பிற்காகப் பெரு மதிப்புமிக்க ஹான்ஸ் வான் ஹென்டிக் என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.
- கடந்த ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாத காலக் கட்டத்தில் 32,909 மில்லியன் அலகுகளாக இருந்த தமிழகத்தின் மின் நுகர்வு 2024 ஆம் ஆண்டின் அதே காலக் கட்டத்தில் 7% அதிகரித்து 35,385 மில்லியன் அலகுகளாக அதிகரித்துள்ளது.
- சமீபத்தில், உத்தரப் பிரதேசத்தின் அவாத் நகரில் மூன்று நாட்கள் அளவிலான மாம்பழத் திருவிழாவானது நடைபெற்றது.
- X தளத்தில் நரேந்திர மோடி அவர்களின் சமூக ஊடகப் பக்கத்தினைப் பின் தொடரச் செய்பவர்களின் எண்ணிக்கை 100 மில்லியனைத் தாண்டியதையடுத்து, இவர் மிக அதிகமாக பின் தொடரப்படும் உலகத் தலைவர் ஆக விளங்குகிறார்.
- செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (ரஷ்யா) நகரில் நடைபெற்ற சர்வதேச மணல் சிற்ப சாம்பியன் ஷிப் போட்டியில் இந்திய மணல் சிற்பக் கலைஞரான சுதர்சன் பட்நாயக் தங்கப் பதக்கத்துடன் கூடிய தங்க மணல் சிற்ப ஆசான் (மாஸ்டர்) விருதினை வென்று உள்ளார்.
- நீதிபதி ஆலியா நீலும் லாகூர் உயர் நீதிமன்றத்தில் பாகிஸ்தானின் முதல் பெண் தலைமை நீதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.
- மத்திய அரசானது, தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு 100 ரூபாய் நினைவு நாணயத்தினை வெளியிட்டுள்ளது.
- ஜெர்மனியின் பெர்லினில் உள்ள ஒலிம்பியாஸ்டேடியன் என்ற அரங்கில் நடைபெற்ற ஐரோப்பிய டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஸ்பெயின் நாட்டு அணியானது இங்கிலாந்து அணியினை வீழ்த்தி தனது நான்காவது கோப்பையை வென்றது.
- அமெரிக்காவின் புளோரிடாவில் நடைபெற்ற கோபா அமெரிக்கா கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் கொலம்பியா அணியினை வீழ்த்தி அர்ஜென்டினா அணி தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் மற்றும் தனது 16வது கோப்பையினை வென்றுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆந்திரப் பிரதேச சமூக மேலாண்மையின் கீழான இயற்கை வேளாண்மை (APCNF) முன்னெடுப்பானது, 2024 ஆம் ஆண்டின் மனித நேயத்திற்கான குல்பென்கியன் விருதை வென்றுள்ளது.
- இங்கிலாந்தின் பர்மிங்காமில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு உலக சாம்பியன்ஷிப் ஆஃப் லெஜண்ட்ஸ் இறுதிப் போட்டியில் இந்திய சாம்பியன்கள் கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சாம்பியன்கள் அணியினை வென்றது.
- 1975 ஆம் ஆண்டு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்ட ஜூன் 25 ஆம் தேதியானது, இனி சம்விதான் ஹத்யா திவாஸாக அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்து உள்ளது.
- நேபாளத்தின் மிகப்பெரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான KP சர்மா ஒலி என்பவர் நான்காவது முறையாக நேபாளத்தின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ தாராளமயமாக்கப்பட்ட பணம் அனுப்புதல் திட்டத்தின் (LRS) கீழ் குஜராத்தில் உள்ள GIFT நகரில் உள்ள சர்வதேச நிதிச் சேவை மையங்களில் (IFSCs) இந்தியாவில் வசிப்பவர்களும் வெளிநாட்டு நாணயக் கணக்கை (FCA) துவக்க இந்திய ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டு மதிப்புமிக்க வேளாண்மைக்கான தலைமைத்துவ விருது விழாவில் தோட்டக் கலைத் துறையில் மிகவும் சிறந்து விளங்கும் மாநிலமாக நாகாலாந்து தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- ❖ இந்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் ஆனது, இங்கிலாந்தின் இலண்டன் நகரில் உள்ள சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) 132வது அமர்வில் பங்கேற்றது.
- ❖ அடுத்த ஐந்தாண்டுகளில் ஹூவாவே மற்றும் ZTE ஆகிய சீன நிறுவனங்கள் தயாரித்த கூறுகளை ஜெர்மனி தனது 5G கம்பியில்லாத இணையச் சேவை வலையமைப்பில் இருந்து அகற்ற உள்ளது.
- ❖ இந்திய அரசானது, பொது விமானப் போக்குவரத்து தொடர்பான இரண்டாவது ஆசிய-பசிபிக் அமைச்சர்கள் மாநாட்டினை செப்டம்பர் மாதம் நடத்தவுள்ளது.
- ❖ தென் கொரிய நாடானது முதன்முறையாக, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகளாவிய விண்வெளி ஆராய்ச்சி மாநாட்டினை பூசன் நகரில் நடத்த உள்ளது.
- ❖ துபாயின் சாலைகள் மற்றும் போக்குவரத்து ஆணையம் (RTA) ஆனது முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உலகின் முதல் மின்சாரப் படகின் சோதனை நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- ❖ உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த நிதிஷ் சிங், 19 மணி நேரத்தில் மலேசியாவின் கினாபாலு மலையில் ஏறி மாபெரும் சாதனையினைப் படைத்துள்ளார்.
- ❖ கிழக்கு இந்தியாவில் முதல் முறையாக மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான ஒரு பிரத்தியேக பல்கலைக் கழகத்தினை ராஞ்சியில் நிறுவ ஜார்க்கண்ட் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் (BIMSTEC) 2வது வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டம் புது டெல்லியில் நடைபெற்றது.
- ❖ ICICI புருடென்ஷியல் பரஸ்பர நிதியம் ஆனது, எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் ICICI புருடென்ஷியல் நிஃப்டி எண்ணெய் & எரிவாயு ETF எனப்படும் இந்தியாவின் முதல் வகை பரிவர்த்தனை வர்த்தக நிதியினை (ETF) அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இந்தூரில் 24 மணி நேரத்திற்குள் ஏறக்குறைய 12 லட்சம் மரங்களை நட்டு மத்தியப் பிரதேச அரசு உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.
- ❖ நீதிபதி கோடீஸ்வர் சிங் மணிப்பூரைச் சேர்ந்த முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ❖ 35வது சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் (IBO) போட்டியில் (2024) பங்கேற்ற இந்திய அணி ஒரு தங்கப் பதக்கத்தையும் மூன்று வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளது.
- ❖ ஆசியாவின் முதல் சுகாதார ஆராய்ச்சி “மருத்துவத்திற்கு முந்தைய நிலைகள் சார்ந்த செயல்பாடுகளின் வலையமைப்பு மையமானது” ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் தொடங்கப்பட்டது.

- உத்தரகாண்ட் மாநில வனத்துறையானது உத்தரகாண்டின் முதல் பறவைக் காட்சியகத்தினை டேராடூனில் நிறுவியுள்ளது.
- விசாகப்பட்டினத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் 'கப்பற்படை விருது விழா-2024' என்ற நிகழ்ச்சியில் கிழக்கு கடற்படையின் சிறந்த கப்பலாக ஐஎன்எஸ் டெல்லி தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- மால்டா நாட்டு அரசியல்வாதி ராபர்ட்டா மெட்சோலா 2027 ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சமீபத்தில் நீதிபதிகள் N. கோடீஸ்வர் சிங் மற்றும் R. மகாதேவன் ஆகியோரின் நியமனம் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையானது முழு வரம்பினை (34) எட்டியுள்ளது.
- உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு வரலாற்று புனைக் கதைப் புதினமான 'The Prisoner of Bhopal' என்ற தலைப்பிலான தனது இரண்டாவது புத்தகத்தினை டிம் வாக்கர் வெளியிட்டுள்ளார்.
- எழுதுபொருள் விற்பனை நிறுவனமான கேம்லின்-இன் நிறுவனர் சுபாஷ் தண்டேகர் சமீபத்தில் காலமானார்.
- வடகிழக்குப் பிராந்தியத்தில் வேளாண் இணைப்பினை மேம்படுத்தும் வகையில் விவசாயிகள் மற்றும் விற்பனையாளர்களை ஒருங்கிணைக்கும் வகையில் வடகிழக்கு பிராந்திய வேளாண் பொருட்களுக்கான இணைய இணைப்பு (NERACE) இணைய தளம் மற்றும் கைபேசி செயலி தொடங்கப்பட்டது.
- வணிக நிலக்கரித் தொகுதி இணைய முறையிலான ஏலத்தின் கீழ் ஒடிசாவின் அங்குல் மாவட்டத்தில் உள்ள மச்சகட்டா (திருத்தியமைக்கப்பட்ட) நிலக்கரித் தொகுதிக்கான வெற்றிகரமான ஏலதாரராக NLCIL உருவெடுத்துள்ளது.
- பொறுப்பு மிக்க செயற்கை நுண்ணறிவு (RAI) பற்றிய அதன் வெளியீட்டின் தொடரில், நிதி ஆயோக் அமைப்பானது, "அனைவருக்குமான பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு: கட்டமைப்பினை ஏற்றுக் கொள்ளுதல் - முக அடையாள அங்கீகார தொழில் நுட்பத்தில் ஒரு பயன்பாட்டு அணுகுமுறை" என்ற தலைப்பிலான மூன்றாவது அறிக்கையினை வெளியிடுகிறது.
- திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளின்படி, தமிழக சட்டப் பேரவை கூட்டத்தொடர் ஆனது இனி காலை 10 மணிக்குப் பதிலாக 9.30 மணிக்குத் தொடங்கும்.
  - சபாநாயகரின் ஒப்புதலுடன் அவை நடவடிக்கைகள் அவையின் அதிகாரப்பூர்வ அலுவல் நேரத்திற்குப் பின்னரும் நீட்டிக்கப்படலாம்.
- டாக்டர். R.பாலசுப்ரமணியம் எழுதிய "Power Within": A Landmark Book on Leadership" என்ற புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.
- BTS இசைக்குழுவின் உறுப்பினர் ஜின் பாரீஸ் நகரம் வழியாக 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஜோதியினை முதல் நபராக ஏந்திச் சென்றார்.
- ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) ஆனது இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் ஆற்றல் அணுகலை விரிவுபடுத்துவதற்காக வேண்டி இந்தியாவில் மேற்கூரை சூரிய அமைப்புகளை நிறுவுவதற்கு நிதியளிப்பதற்காக 240.5 மில்லியன் டாலர் மதிப்பிலான கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய வானியற்பியல் அறிவியலாளர் பிரஹலாத் சந்திர அகர்வாலுக்கு தென் கொரியாவின் பூசான் நகரில் நடைபெற்ற 45வது COSPAR அறிவியல் பேரவையில் 2024 ஆம் ஆண்டிற்கான COSPAR ஹாரி மெஷ்ஷே விருது வழங்கப்பட்டது.

- பாலக்காட்டைச் சேர்ந்த ஸ்ரீ குரும்பா கல்வி மற்றும் அறக்கட்டளை நிறுவனம் ஆனது, 2024 ஆம் ஆண்டின் சிறந்த குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டு முயற்சிகள் என்ற விருதினைப் பெற்றுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு இந்தியக் கைபேசி மாநாட்டின் (IMC) கருத்துருவாக "The Future is Now" என்பதை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்திய ஆடவர் தேசியக் கால்பந்து அணியானது சமீபத்தில் வெளியிடப்பட்ட FIFA தரவரிசையில் 124 வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உர்சுலா வான் டெர் லேயன் மேலும் ஐந்து ஆண்டுகள் அந்தப் பதவியில் இருப்பார்.
- ருவாண்டாவின் அதிபர் பால் ககாமே 99 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளுடன் நான்காவது முறையாக மீண்டும் அந்த நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்காவில் "6G இணைப்பிற்கான மரபார்ந்த மற்றும் குவாண்டம் (துளிம) தகவல் தொடர்பு" என்ற சிறப்பு மையம் திறக்கப்பட்டுள்ளது.
- கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த ஆறாவது கிழக்காசிய உச்சி மாநாடு (EAS) ஆனது மும்பையில் நடைபெற்றது.
- மராட்டியப் பேரரசர் சத்ரபதி சிவாஜி அவர்கள், தளபதி அப்சல் கானைக் கொல்லப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் புலி நகம் என்ற ஆயுதமானது, இலண்டனில் இருந்து 350 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மகாராஷ்டிராவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
- இந்தியாவின் முதல் வெளிநாட்டு ஜன் ஔஷதி கேந்திரா மொரீஷியஸ் நாட்டில் திறக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) குஜராத்தின் ராஜ்கோட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைக்கான சர்வதேச மையத்தினை (iCAL) திறந்து வைத்துள்ளார்.
    - இந்தியாவில் இத்தகைய மையம் நிறுவப்படுவது இதுவே முதல் முறையாகும். என்பதோடு இது உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளின் மீதான தணிக்கைக்கான உலகளாவிய தரநிலைகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2,500 சதுர அடிகள் வரையிலான பகுதிகள் மற்றும் 3,500 சதுர அடிகள் வரையிலான கட்டமைக்கப் பட்ட பகுதி ஆகியவற்றிற்கு சுய சான்றிதழ் அளிப்பின் அடிப்படையில் அனுமதி பெறுவதற்கான ஒற்றைச் சாளரத் தளத்தைத் தமிழக முதல்வர் அறிமுகப் படுத்தினார்.
- வேலூரில் உள்ள எராயங்காடு கிராமத்தில் கோதார் மற்றும் பாலாறு ஆகிய ஆறுகள் சங்கமிக்கும் இடத்தில் முதலாவது அணை கட்டும் பணி சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- கேப்டன் C.T.சுப்ரீதா, சியாச்சின் பனிப் பாறையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பப் பட்ட இராணுவ வான்வழிப் பாதுகாப்புப் படையின் முதல் பெண் அதிகாரி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ரிகோபெர்டா மென்ச் டம் ‘காந்தி மண்டேலா பவுண்டேசன்’ என்ற அறக்கட்டளையால் 2020 ஆம் ஆண்டிற்கான காந்தி மண்டேலா விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.

- அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் ஜோ பிடன் அறிவித்து, ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளராக கமலா ஹாரிசை உறுதி செய்துள்ளார்.
- சென்னையின் இரண்டாவது விமான நிலையத்தினை உருவாக்குவதற்காக பரந்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) தளத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் முன்னாள் பேராசிரியருமான T. குரியன் சமீபத்தில் காலமானார்.
- ஒலிம்பிக் போட்டிகளின் செயல்பாடுகளுக்கு அபினவ் பிந்த்ரா ஆற்றிய பல சிறந்த சேவைகளுக்காக சர்வதேச ஒலிம்பிக் குழுவானது (IOC) அவருக்கு ஒலிம்பிக் ஆர்டர் விருதினை வழங்கியுள்ளது.
- கலாச்சாரப் பிரிவில் வட கிழக்கு இந்தியாவின் முதல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப் படுவதற்கு அசாமின் சாரெய்டியோ மைடம் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- பத்மஸ்ரீ விருது பெற்ற (2019) ஒடிசாவின் புகழ்பெற்ற இயற்கை விவசாயி கமலா பூஜாரி சமீபத்தில் காலமானார்.
  - இவர் 2002 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் எனுமிடத்தில் நடைபெற்ற விருது விழாவில் 'Equator Initiative விருதையும்' வென்றுள்ளார்.
- இந்தியாவின் மிகவும் நீளமான (11.8 கி.மீ) நகர்ப்புறச் சுரங்கப் பாதையான தானே போரிவாலி இரட்டை சுரங்கப் பாதையானது சமீபத்தில் திறக்கப் பட்டது.
  - இது தானே மற்றும் போரிவாலி இடையேயான பயண தூரத்தினை 12 கி.மீ அளவு தூரத்தைக் குறைப்பதன் மூலம், மொத்தப் பயண நேரத்தினை 12 நிமிடங்களாகக் குறைக்கும்.
- வெப்பப் பொறியியல் துறையில் உள்ள நபர்களின் பெரும் கடின உழைப்பு மற்றும் ஈடுபாட்டினை அங்கீகரிப்பதற்காக, அமெரிக்க நாடானது ஜூலை 24 ஆம் தேதியைத் தேசிய வெப்பப் பொறியாளர் தினமாக அனுசரிக்கிறது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் (IOC) இந்தியா சார்பான உறுப்பினராக நிதா அம்பானி ஒருமனதாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மிசோரம் மாநிலத் தலைநகரான ஐஸ்வால், அடுத்த ஆண்டிற்குள் நேரடி இரயில் இணைப்பை கொண்ட வடகிழக்கு இந்தியாவின் நான்காவது மாநிலத் தலைநகரமாக மாற உள்ளது.
- பெருந்தொற்றிற்கான தயார்நிலை கண்டுபிடிப்புகளின் (CEPI) கூட்டணியின் கீழ் ஆசியாவின் முதல் சுகாதார ஆராய்ச்சி தொடர்பான "மருத்துவத்திற்கு முந்தைய நிலைகள் சார்ந்த செயல்பாடுகளின் வலையமைப்பு மையமானது" ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலமானது, விண்வெளி ஆராய்ச்சியில் குறிப்பிடத் தக்கப் பங்களிப்புகளுக்காக மதிப்புமிக்க உலக விண்வெளி விருதை வென்றுள்ளது.
  - சர்வதேச விண்வெளிக் கூட்டமைப்பு (IAF) ஆனது இந்த விருதினை வழங்கியுள்ளது.
- இந்திய டென்னிஸ் நட்சத்திர வீரர்களான லியாண்டர் பயஸ் மற்றும் விஜய் அமிர்தராஜ் ஆகியோர் சர்வதேச டென்னிஸ் போட்டிகளுக்கான புகழ் மன்றத்தில் 265வது மற்றும் 267வது உறுப்பினர்களாக முறைப்படி சேர்க்கப்பட்டுள்ளனர்.

- இதனால், சர்வதேசப் புகழ் மன்றத்தில் சேர்க்கப்பட்ட முதல் இரு ஆசியர்கள் என்ற பெருமையினை அவர்கள் இருவரும் பெற்றுள்ளனர்.

❖ மேகாலயாவின் நிகழ்ச்சிகளை உருவாக்குபவர்கள் மற்றும் இசைக்கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக மேகாலயா அரசாங்கம் ஆனது ஹலோ மேகாலயா எனப்படும் இணைய ஒலிபரப்பு சேவை (OTT) தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- கேரளாவிற்கு அடுத்தபடியாக இதுபோன்ற ரீதியிலான முயற்சியைத் தொடங்கும் இந்தியாவின் இரண்டாவது மாநிலம் இதுவாகும்.

❖ தமிழக முதல்வர் அவர்கள், புது டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் (வைகை இல்லம்) புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார்.

❖ இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், இராஷ்டிரபதி பவனில் உள்ள - 'தர்பார் ஹால்' மற்றும் 'அசோக் ஹால்' ஆகிய இரண்டு அரங்குகளுக்கு முறையே 'கணதந்திர மண்டபம்' மற்றும் 'அசோக மண்டபம்' என பெயர் மாற்றம் செய்வதாக அறிவித்து உள்ளார்.

❖ மத்திய நிலக்கரி மற்றும் சுரங்க அமைச்சகம் ஆனது, நாடு முழுவதும் உள்ள மாவட்டக் கனிம அறக்கட்டளைகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க தேசிய மாவட்டக் கனிம அறக்கட்டளை (DMF) இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.

❖ டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் மற்றும் ஏர்பஸ் ஹெலிகாப்டர்கள் நிறுவனமானது, இந்தியாவில் H125 ஹெலிகாப்டருக்கான முதல் ஒருங்கிணைப்பு மையத்தினை நிறுவ உள்ளது.

❖ ஊட்டியின் அன்பிற்குரிய நூலகர் டாப்னே சாம்சன் சமீபத்தில் தனது 100வது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

❖ 2024 ஆம் ஆண்டு உலகத் தலைவர்கள் உச்சி மாநாடு ஆனது, ஐக்கியப் பேரரசின் நாடாளுமன்றத்தில் உள்ள பிரபுக்கள் சபையில் நடைபெற்றது.

❖ R.கோபாலகிருஷ்ணன் மற்றும் ஹரிஷ் பட் ஆகியோர் "Jamsetji Tata: Powerful Learnings for Corporate Success" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளனர்.

- இந்தக் கதைச் சுருக்கமானது, 'Tata: a leader of leaders' என்ற ஒரு தலைப்பில் இருந்து எடுக்கப் பட்டது.

❖ பிரான்சு நாட்டு அரசானது தெற்காசியப் புகைப்படக் கலை மற்றும் இந்திய-பிரான்சு கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதற்காக வேண்டி ரஹாப் அல்லானா ஆற்றியப் பணிக்காக, அவரை Officer of the Order of Arts and Letters எனும் விருது அளித்து கௌரவித்துள்ளது.

❖ பிரெஞ்சு ஆல்ப்ஸ் பகுதியில் ஒலிம்பிக் XXVI மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (2030) நடத்தப்பட உள்ளன.

❖ அமெரிக்காவின் உட்டா மாகாணத்தின் தலைநகரான சால்ட் லேக் சிட்டி நகரில் ஒலிம்பிக் XXVII மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (2034) நடத்தப்பட உள்ளன.

❖ சுவிட்சர்லாந்தின் லோகார்னோ திரைப்பட விருது விழாவில் ஷாருக்கானுக்கு மதிப்பு மிக்க பர்டோ அல்லா கேரியரா விருது வழங்கப்பட உள்ளது.

- சமீபத்தில், பாரிஸின் கிரெவின் அருங்காட்சியகம் அவரின் உருவம் பொறித்தத் தங்க நாணயங்களை வெளியிட்டு கௌரவித்தது.

- சர்வதேச நண்பர்கள் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 30 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
  - ஆனால், இந்தியா, வங்காளதேசம், மலேசியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமை தினத்தினை நட்பு தினமாக அனுசரிக்கின்றன.
- கன்னியாகுமரியைச் சேர்ந்த சந்தியா தேவிக்கு 2024ஆம் ஆண்டுக்கான சமூக நலத் துறையின் சிறந்த திருநங்கை விருதைத் தமிழக முதல்வர் வழங்கினார்.
  - கோவிட்-19, வரதட்சணை கொடுமைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் 1000க்கும் மேற்பட்ட வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.
- நாட்டிலுள்ள 61 விமான நிலையங்களில் 2024 ஜனவரி முதல் ஜூன் வரையிலான வாடிக்கையாளர் சேவை கணக்கெடுப்பில் ஆந்திராவில் உள்ள ராஜமுந்திரி விமான நிலையம் முதலிடத்தில் உள்ளது.
  - அதைத் தொடர்ந்து காங்க்ரா விமான நிலையம் (இரண்டாவது), லே (மூன்றாவது), மதுரை (நான்காவது) இடத்தில் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டு விருக்சரோபன் அபியான் நிகழ்ச்சியானது, "ஏக் பெட் மா கே நாம்" திட்டத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டதோடு இது நிலக்கரி மற்றும் லிக்னைட் கனிமங்கள் நிறைந்த 11 மாநிலங்களில் உள்ள 47 மாவட்டங்களில் 300 இடங்களில் நடைபெற்றது.
- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத் துறைத் தலைவர் ராஜேந்திர சிங் ஆசியப் பேரிடர் தயார்நிலை மையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த வேளாண் ஏற்றுமதி மையமானது, மும்பையில் ஜவஹர்லால் நேரு துறைமுகத்தில் அமைக்கப்பட உள்ளது.
- இந்திய இணையவெளிக் குற்றங்கள் ஒருங்கிணைப்பு மையம் (I4C) ஆனது ஜூலை 01 ஆம் தேதி முதல் உள்துறை அமைச்சகத்துடன் ஒரு "இணைக்கப்பட்ட அலுவலகமாக" மாற்றப் பட்டுள்ளது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவானது (IOC), ஒலிம்பிக் இணைய வழி ரீதியில் விளையாட்டுப் போட்டிகளை உருவாக்க முடிவு செய்துள்ளது.
  - இதன் முதல் போட்டியானது 2025 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவில் நடைபெற உள்ளது.
- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது, இரு நாடுகளின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சொத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
  - கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த சொத்துக்களின் மீதான சட்ட விரோதமான வர்த்தகத்தினைத் தடுப்பதையும், கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் திருடப்பட்ட பழங்காலப் பொருட்களை அவற்றின் சொந்த நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வருவதற்கான செயல்முறையை எளிதாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## சென்னைப் பெருநகர நீர் வழங்கீடு மற்றும் கழிவுநீரகற்றல் சட்டம் – 1978

- 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர நீர் வழங்கீடு மற்றும் கழிவுநீர்ச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 28, 1978) திருத்தியமைப்பதற்கான மசோதாவை தமிழ்நாடு சட்ட மன்றம் நிறைவேற்றியுள்ளது.
- வழிகாட்டுதலுக்கான தமிழ்நாடு முகமை என்ற அமைப்பு பரிந்துரைத்தபடி, சிறு குற்றங்களை குற்றமற்றதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கீடு மற்றும் கழிவுநீர் வாரியத்தின் சாக்கடை 30 மீட்டருக்குள் இருக்கும் நிலையில் உள்ள ஒரு தனியார் தெருவில் அமைந்துள்ள ஒரு வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சாக்கடை இணைப்பு பெறுவதை இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது.
- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் ஆனது, மக்கள் தொகை மூன்று லட்சத்துக்குக் குறையாமலும், ஆண்டு வருமானம் "முப்பது கோடி ரூபாய்க்குக் குறையாமலும்" இருக்கும் எந்தப் பகுதியும் மாநகராட்சியாக அமைக்கப் படலாம் என்று கூறுகிறது.

## தமிழ்நாடு சிறப்புப் புத்தொழில் நிதி




- மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநர் ஆகியோரால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்காக வேண்டி தமிழ்நாடு அரசு சிறப்புப் புத்தொழில் நிதியை அறிமுகப்படுத்த உள்ளது.
- புதிய கால தொழில்முனைவோர் மேம்பாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய வகையிலான வளர்ச்சியை அடைய அவர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு மானியம் வடிவிலான ஒரு சிறப்பு நிதி அறிமுகப்படுத்தப்படும், என்பதோடு இந்தத் திட்டத்திற்கு 50 லட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட உள்ளது.

- ❖ தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கத் திட்டம் (StartupTN) இதற்கான பயனாளிகளை அடையாளம் காணும்.
- ❖ கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் 1.5 கோடி ரூபாய் செலவில் புதிய பிராந்தியப் புத்தொழில் நிறுவன மையங்கள் நிறுவப்படும்.
- ❖ கடந்த இரண்டு ஆண்டுகளில் மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, சேலம், ஓசூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் பிராந்திய புத்தொழில் நிறுவன மையங்கள் நிறுவப் பட்டுள்ளன.

## பல்வேறு புதிய மசோதாக்கள் மற்றும் திருத்தங்கள்




- ❖ பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு தமிழ்நாடு சட்டமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
  - ○ இந்த மசோதாவானது, அந்த ஆணையத்தின் தலைவரின் வயது வரம்பை 70 வயதிலிருந்து 75 ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ பாலினச் சமத்துவத்தை மேம்படுத்தச் செய்வதற்காக நிலச் சீர்திருத்தங்கள் (நில வைத்திருப்பிற்கான உச்சவரம்பு நிர்ணயம்) சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான ஒரு மசோதாவினை சட்ட சபை நிறைவேற்றியுள்ளது.
  - ○ திருமணமாகாத ஆண்களுக்கு இணையாக திருமணமாகாதப் பெண்களுக்கும் இந்தத் திருத்தம் உரிமைகளை வழங்குகிறது.
- ❖ 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் அரசு திருத்தம் கொண்டு வந்து உள்ளது.
  - ○ சாராயம் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களுக்கு அதிக பட்சமாக 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் 5 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.
  - ○ சட்டவிரோதமான முறையில் விற்கப்படும் மதுவினை அருந்துவதால் மரணம் ஏற்பட்டால், அவற்றினை விற்பவர்களுக்கு ஆயுள் கால சிறைத் தண்டனை மற்றும் 10 லட்சம் ரூபாய்க்கு குறையாத அபராதம் விதிக்கப்படும்.

- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கொள்முதல் ஒப்பந்த வெளிப்படைத் தன்மை சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோதாவினை சட்டசபை நிறைவேற்றியுள்ளது.
    - இது தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழக லிமிடெட் ஆகியவற்றை இச்சட்டத்தின் 16வது பிரிவின் (j) உட்பிரிவின் வரம்பிலிருந்து நீக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## நான்கு புதிய மாநகராட்சிகள்




- காரைக்குடி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் ஆகிய நான்கு நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான சட்ட மசோதா தமிழக சட்ட சபையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஒரு உள்ளாட்சி அமைப்பை மாநகராட்சிக் கழகமாக அறிவிப்பதற்கு நிர்ணயிக்கப் பட்ட மக்கள் தொகை மற்றும் வருமான அளவுருக்களை இந்த மசோதா திருத்தி அமைத்துள்ளது.
- தற்போது, மூன்று லட்சத்துக்குக் குறையாத மக்கள்தொகை மற்றும் 30 கோடி ரூபாய்க்கு குறையாத வருடாந்திர வருமானம் கொண்ட உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாக அறிவிக்கலாம்.
- ஆனால் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக கொண்டு வரப்பட்ட மசோதாவின்படி, இரண்டு லட்சம் மக்கள்தொகை மற்றும் 20 கோடி ரூபாய் வருமானம் உள்ள எந்த உள்ளாட்சி அமைப்பும் மாநகராட்சியாக அறிவிக்கப்படலாம்.
- மேலும், இந்தச் சட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த சில புதிய விதிகளைச் சேர்க்கும் வகையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கான மற்றொரு மசோதாவையும் அரசு அறிமுகப் படுத்தியுள்ளது.

## நான் முதல்வன் திட்டத்தின் தாக்கம் 2024

- மாநில அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள பல் துறைப் பயிற்சி வழங்கீட்டு (பாலிடெக்னிக்) கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 25,888 மாணவர்கள் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் பயன் மிக்க வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு அரசாங்கம் உதவுகிறது.

- இதுவரை 252 கல்லூரிகள் இந்த வேலை வாய்ப்பு இயக்கத்தில் பங்கேற்றுள்ளன.
- சுமார் 58,000 மாணவர்கள் தங்கள் கல்விப் படிப்பின் இறுதி ஆண்டில் உள்ளனர்.

STUDENTS WHO WERE PLACED IN VARIOUS SECTORS

| Sectors | Students placed | Sectors | Students placed |
|---|---|---|---|
| Agriculture | 157 | Iron and Steel | 597 |
| Apparel | 177 | IT-ITeS | 632 |
| Automotive | 16,619 | Leather | 73 |
| Beauty and Wellness | 44 | Logistics | 112 |
| BFSI | 27 | Media & Entertainment | 112 |
| Capital Goods | 377 | Mining | 13 |
| Construction | 882 | Plumbing | 141 |
| Electronics & Hardware | 3,509 | Power | 453 |
| Food Processing | 88 | Retail | 86 |
| Gems and Jewellery | 18 | Rubber | 129 |
| Green Jobs | 66 | Telecom | 358 |
| Healthcare | 140 | Textiles & Handlooms | 187 |
| Infrastructure Equipment | 193 | Tourism & Hospitality | 6 |
| Instrumentation | 692 | **Grand Total** | **25,888** |

- About 252 colleges have participated in the job drive so far. Officials say placements are still under way, and around 58,000 students are in the final year of their course

PAY SCALE

| Salary range | No. of students |
|---|---|
| < 2 Lakh | 18,250 |
| 2 to 3 Lakh | 7,259 |
| 2 to 4 Lakh | 88 |
| 3 to 4 Lakh | 229 |
| 4 to 5 Lakh | 42 |
| 5 to 6 Lakh | 8 |
| 6 to 8 Lakh | 12 |
| **Grand Total** | **25,888** |

## மாநிலத்தின் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் - தமிழ்நாடு

mids Madras Institute of Development Studies

- மாநில அரசானது தொகுதி மேம்பாட்டில் கவனம் செலுத்தும் திட்டத்திற்கான தகவல் அளிப்புப் பங்குதாரராக சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தை அறிவித்து உள்ளது.
- மாநில அரசானது, தனது 2023-24 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தொகுதி மேம்பாட்டில் கவனம் செலுத்தும் திட்டத்தினைத் தொடங்குவதாக அறிவித்தது.
- இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தில் மிகவும் பின்தங்கிய 50 தொகுதிகளில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.


## நீர்நிலைகளில் இருந்து சரளைக் கற்களை அகற்றுதல்

- குயவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நீர்நிலைகளின் படுகைகளில் இருந்து சரளைக் கற்களை இலவசமாக அகற்ற அனுமதிக்க முடியாது என தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

- அவர்கள் ஒரு திருத்தப்பட்ட நடைமுறையின் கீழ் மட்டுமே, இலவசமாக "களிமண் மற்றும் வண்டல்களை" தோண்டி எடுக்க முடியும்.
- முன்னதாக, தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகள், 1959 ஆனது, மாநிலம் முழுவதும் உள்ள குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் படுகைகளில் இருந்து இலவசமாக "களிமண், வண்டல் மற்றும் சரளைக் கற்களை" தோண்டி எடுக்க அனுமதி அளித்தது.
- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957 ஆனது, சரளைக் கற்களை "சிறு கனிமம் – சிறு பயன்பாட்டுக் கனிமம்" என்று குறிப்பிடுகிறது.
- மாநில அரசானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், சவுடு என்ற சொல்லிற்குப் பதிலாக "சாதாரண மண் பொருள்" என்று மாற்றுவதற்காக என்று 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளைத் திருத்தியமைத்தது.

(b) Any person engaged in the making of pots or any registered Pottery Labourers Co-operative Society registered under the Tamil Nadu Co-operative Societies Act, 1983 (Tamil Nadu Act 30 of 1983) for making pots, the public for bonafide domestic purpose and the farmers for agriculture purpose be allowed to quarry clay, silt, savudu and gravel, on free of charges from the beds of tanks, channels and reservoirs under the control of the Public Works Department or Rural Development and Panchayat Raj Department which are notified by the District Collector in the District Gazette under this rule [1][after obtaining permission from the District Collector concerned]2 for quarrying:

## இரண்டாம் காலாண்டில் (2024-25) தமிழ்நாடு மாநில அரசின் கடன்கள்




- 2024-2025 ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் 24,000 கோடி ரூபாய் கடன் வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- நிதிப் பற்றாக்குறையை ஈடு கட்டுவதற்காக, மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் மாநில அரசுச் சந்தையில் இருந்து கடன் வாங்குகிறது.
- மாநில அரசுகள் கடன் வாங்குவதற்கான உச்ச வரம்பை மத்திய அரசு நிர்ணயித்து உள்ளது.

- தமிழக அரசானது, மாநில நிதிநிலை அறிக்கையின் படி 2024-25 ஆம் நிதியாண்டில் மொத்தமாக 1,55,584.48 கோடி ரூபாய் கடன் பெற்று, 49,638.82 கோடி ரூபாயினைத் திருப்பிச் செலுத்த திட்டமிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்றைய நிலவரப் படி, நிலுவையில் உள்ள கடன் மதிப்பு ஆனது 8,33,361.80 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்ற நிலையில் இது 2024-25 ஆம் நிதியாண்டில் மொத்த உள்மாநில உற்பத்தியில் 26.41% ஆகும்.
- இது நிதி ஆணையங்கள் வகுத்துள்ள அளவுகளுக்குள் உள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில், தமிழக அரசானது 20,000 கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளது.

## சிரெடோல்பிஸ் எருபெசென்ஸ்

- மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அரிய வகை அந்துப்பூச்சியானது சுமார் 132 ஆண்டுகளுக்குப் பிறகு நீலகிரியில் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது.
- இது 1891 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பூச்சியியல் வல்லுநர் ஜார்ஜ் பிரான்சிஸ் ஹாம்ப்டன் என்பவரால் முதன்முதலில் பதிவு செய்யப்பட்டது.
- இந்தப் பூச்சிகளானது, பொதுவாக ஈரநிலப் பகுதிகளில் காணப்படும் பல்வண்ணத் தோட்ட மலர்ச் செடி வகைகளை சார்ந்துள்ளது.



## தமிழ்நாடு விண்வெளி சார் தொழில் துறை கொள்கை, 2024 - வரைவு அறிக்கை



- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு விண்வெளித் தொழில்துறைக் கொள்கையின் வரைவை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- இது 10 ஆண்டுகளில் சுமார் 10,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் துறையில் உள்ள நபர்களுக்கு ஏராளமான சலுகைகளையும் வழங்க உள்ளதாக இது உறுதியளித்தது.
- விண்வெளித் துறை தொடர்பான உற்பத்தி மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.
- மாநில அரசானது, திருச்சியில் TREAT எனப்படும் பொது மையத்தினை நிறுவுவதற்காக ஏற்கனவே தனியார் தொழில் நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- இது விண்வெளித் துறையின் கனரகப் பொறியியல் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் திறன்களைக் கொண்டுள்ளது.


## தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை, 2024 - வரைவு அறிக்கை




- 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கைக்கு (NEP) எதிராக தமிழகத்தில் மாநிலக் கல்விக் கொள்கையின் வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.
- நீதிபதி முருகேசன் தலைமையிலான குழு இந்த வரைவு அறிக்கையினை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.
- தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றினை பயிற்று மொழியாக கொண்ட இரு மொழிக் கொள்கையை தொடர்வதோடு, 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை ரத்து செய்வதற்கும், தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- அனைத்து உயர்கல்விப் படிப்புகளுக்குமானச் சேர்க்கைக்கு எந்தவிதமான நுழைவுத் தேர்வையும் நடத்துவதற்கு எதிராக அக்குழு பரிந்துரைத்துள்ளது.
- அனைத்து உயர்கல்விப் படிப்புகளுக்குமான சேர்க்கைக்கு பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு வாரியத் தேர்வுகள் இரண்டிலும் இருந்து பெறப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண்கள் தான் அடிப்படையாக இருக்க வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளை அரசுப் பள்ளிகளுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும்.

- தமிழ்நாட்டில் பல்வேறு தனிநபர்கள் / பெரு நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிகள் / கல்லூரிகளுக்கு இணையாக இயங்கும் பயிற்சி மையங்களை அமைப்பு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் "தடை" செய்ய அக்குழுவானது பரிந்துரைத்துள்ளது.
- பயிற்சி மையங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க உரிய அதிகாரங்களைக் கொண்ட ஒழுங்குமுறை ஆணையத்தினை உருவாக்கி அரசு செயல்படுத்த வேண்டும்.
- அனைத்துத் தனியார் உயர்கல்வி நிறுவனங்களையும் வேறுபாடின்றி ஒரே சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டிய அவசியம் உள்ளது.
- தனியார் நிர்வாகத்தினால் நடத்தப்படும் கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்கான கட்டண வசூலை முறைப்படுத்த 1976 ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் அக்குழு கோரியுள்ளது.

## தமிழி பொறிக்கப்பட்ட பானை ஓடு – கீழடி



- சிவகங்கை மாவட்டம் கீழடியில் இருந்து 'த' என்ற தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு ஒன்றைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது மதுரையில் வைகை ஆற்றின் கரையில் சங்க காலத்தினைச் சேர்ந்த ஒரு நகர்ப்புறக் குடியிருப்புப் பகுதியாகும்.
- 10வது பருவத் தொல்பொருள் ஆய்வில் தமிழி (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டறியப்படுவது இது முதல் முறையாகும்.
- மதுரைக்கு தென்கிழக்கே 12 கி.மீ தொலைவில் உள்ள கீழடியில் 2014 ஆம் ஆண்டில் அகழ்வாராய்ச்சிகள் முதன்முதலில் தொடங்கப் பட்டன.
- இந்தத் தளம் ஆனது, ஒரு நகர்ப்புறத் தொழில்மயமான குடியேற்றம் இருந்ததைக் குறிப்பதற்குப் போதுமான பல்வேறு ஆதாரங்களைக் கொண்டுள்ளது என்பதோடு இந்தத் தளத்தில் இருந்து எடுக்கப்பட்ட சில கலைப்பொருட்களின் கதிரியக்க கரிமக் காலக் கணிப்பு ஆனது, அதன் காலத்தினை 2,600 ஆண்டுகள் என குறிப்பிட்டுள்ளது.

## மேயர்களின் இராஜினாமா

- கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மேயர்கள் சமீபத்தில் தங்கள் மேயர் பதவியை ராஜினாமா செய்தனர்.
- கோயம்புத்தூர் மேயர் கல்பனா ஆனந்தகுமார் தனது ராஜினாமா கடிதத்தை அதன் மாநகராட்சி ஆணையரிடம் சமர்ப்பித்தார்.

- திருநெல்வேலி மேயர் P.M. சரவணன், தனது இராஜினாமா கடிதத்தினை அம்மாநகராட்சியின் ஆணையரிடம் சமர்ப்பித்தார்.
- 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சிக் கழக சட்டத்தின் 37வது பிரிவின் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் மூலம் மேயரின் ராஜினாமாவினை அங்கீகரிக்க சிறப்பு சபைக் கூட்டம் நடத்தப்படும்.
- மேயரின் இராஜினாமா ஆனது, கோயம்புத்தூரில் இரண்டாவது முறையாக தனது பதவிக் காலத்தின் நடுவில் ஒருவர் ராஜினாமா செய்ததைக் குறிக்கிறது.
- முதன்முதலாக 2014 ஆம் ஆண்டு S.M. வேலுசாமி, மேயர் பதவியில் இருந்து விலகினார்.




## 3 சோதனை மையங்கள்

- பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆனது சென்னையில் மூன்று அதிநவீன சோதனை மையங்களை நிறுவவுள்ளது.
- ஆளில்லா வான்வழி அமைப்பு (UAS), மின்னணு போர்க் கருவிகள் (EW) மற்றும் மின்னணு ஒளியியியல் அமைப்புகளின் (EO) சோதனை மையங்கள் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை பகுதியின் கீழ் வருகிறது.
- தமிழகத்தில் நான்கு மற்றும் உத்தரப் பிரதேசத்தில் மூன்று என மொத்தம் ஏழு சோதனை மையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## செயற்கை நுண்ணறிவு கற்பித்தல் உதவியாளர் – வித்யா

- கும்பகோணத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கணினி அறிவியல் ஆசிரியர் ஈஸ்வரி ஜெயராமன் “வித்யா” என்ற செயற்கை நுண்ணறிவு கற்பித்தல் உதவியாளரினை வடிவமைத்துள்ளார்.
- இது செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயக்கப்படும் ஒரு கல்வி கற்பிக்கும் எந்திர மனிதன் ஆகும்.
- இது எதிர்காலத்தில் வரும் ஆண்டுகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான வகுப்பறை அனுபவத்தினை மாற்றியமைக்கும்.
- கும்பகோணத்தில் உள்ள தேசிய வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் இது அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் பணப்புழக்க நிலை




**High-Quality Liquid Assets (HQLA) Categories**

| CATEGORY | INCLUSIONS |
|---|---|
| Level 1 | Cash, Central Bank Reserves, and Marketable Securities |
| Level 2A | Securities Issued by Government-Sponsored Enterprises<br>Securities Issued/ Guaranteed by Certain Multilateral Development Banks or Sovereign Entities |
| Level 2B | Investment-Grade Corporate Debt Securities From Non-financial Sector Corporations<br>Publicly Traded Common Stock |

- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது, சமீபத்தில் தமிழ்நாட்டிற்கான வழிவகைக்கான முன்பண (WMA) வரம்பினை சுமார் 3,601 கோடி ரூபாயிலிருந்து 4,582 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- சமீபத்திய ஆண்டுகளில், குறுகிய கால கடன் வாங்கும் வசதியை தமிழ்நாடு மிகவும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.
- இது மாநிலத்தில் போதுமான பணப்புழக்கம் உள்ளதற்கான அறிகுறியாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது WMA என்ற வடிவில் மாநிலங்களுக்கு குறுகிய கால நிதி உதவியை வழங்குகிறது.
- இது மாநில அரசுகளுக்கு அவற்றின் வரவுகள் மற்றும் கொடுப்பணவுகளின் பணப் புழக்கத்தில் நிலவும் தற்காலிகச் சமமின்மைகளைச் சமாளிக்க உதவுகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியின் முடிவில், தமிழக மாநில அரசின் கருவூல பத்திரங்களின் ஏலத்தில் 3,964 கோடி ரூபாய் முதலீடு இருந்தது.

## அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் குறித்த அறிவுறுத்தல்




- தமிழ்நாட்டின் பொது சுகாதார இயக்குனர் அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் என்பது குறித்த ஆலோசனைகளை வெளியிட்டுள்ளார்.
- தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவப் பயிற்சியாளர்களும் இந்நோயின் பின்னணி மற்றும் அறிகுறிகளின் அடிப்படையில் அமீபிக் மூளைக்காய்ச்சல் நோயின் பல்வேறு சந்தேகத்திற்கிடமான பாதிப்புகளைக் கண்டறியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
- குளங்கள், ஏரிகள், நீச்சல் குளங்கள் போன்ற தேங்கி நிற்கும் நீர்நிலைகளை சுற்றிலும் உள்ள சுற்றுப்புற சுகாதாரத்தைப் பராமரிக்க வேண்டும் என மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அத்துறை அறிவுறுத்தியுள்ளது.

## K.சத்திய நாராயணன் குழு

- ஒய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி K.சத்தியநாராயணன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழுவை நியமிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- இது மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை ஆய்வு செய்து மாநில அரசுகளுக்கு ஏற்ப அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைப் பரிந்துரைக்கும்.
- இந்தக் குழு, மாநில அளவில் புதிய சட்டங்களின் "பெயரிடலில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றம்" குறித்து ஆய்வு செய்து, அதன் பரிந்துரைகளை மாநில அரசிடம் சமர்ப்பிக்கும்.
- இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் சாட்சியச் சட்டம் ஆகியவற்றுக்குப் பதிலாக புதிய குற்றவியல் சட்டங்களானது பாராளுமன்றத்தினால் இயற்றப் பட்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.


## 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி




- தனது மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியானது 50% சதவீதத்தினை தாண்டியுள்ளது என்ற வகையில் இது ஏப்ரல் மாதத்தில் மிகவும் அதிகபட்சமாக 52% ஆக இருந்தது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என்பது காற்று, சூரிய ஒளி, நீர் மற்றும் இணை மின்னாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

- மே 02 ஆம் தேதியன்று 20,830 மெகா வாட் என்ற அதிக எரிசக்தி தேவை பதிவாகி உள்ளது, என்பதோடு மின் நுகர்வானது அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 454 மில்லியன் அலகுகள் (MUs) பதிவாகியுள்ளது.
- நம் மாநிலத்தின் மின்சார உற்பத்தி அலகுகள் ஆனது, மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் 24,530 மில்லியன் அலகுகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியைக் கொண்டிருந்தன.
- நம் மாநிலத்தின் மொத்த உற்பத்தி 48,835 மில்லியன் அலகுகள் ஆகும் என்ற நிலையில் இது சராசரியாக 50% தூய்மையான ஆற்றல் கலவையைக் குறிக்கிறது.
- மாநிலத்தின் மொத்த மின் உற்பத்தி திறன் 34,700 மெகாவாட் ஆகும்.
- நீர் மின்னாற்றல் (2,300 மெகாவாட்), காற்று ஆற்றல் (8,750 மெகாவாட்), சூரிய மின்னாற்றல் (6,550 மெகாவாட்) மற்றும் இணை மின்னாக்கம் (700 மெகாவாட்) உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறன் 18,300 மெகாவாட் ஆகும்.
- ஏப்ரல் 30 ஆம் தேதியன்று சென்னையில் 4,380 மெகாவாட் ஆற்றல் தேவை என்பது பதிவானதையடுத்து, நம் மாநிலத்தில் ஆற்றல் தேவை 20,500 மெகாவாட்டைத் தாண்டி 20,700 மெகாவாட்டைத் தொட்டது.
- அதே மாதத்தில், சுமார் 12,960 மில்லியன் அலகுகள் என்ற மொத்த உற்பத்தியில் அதிக பட்சமாக 6,900 மில்லியன் அலகுகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி பதிவு செய்யப் பட்டது.

## SDG இந்தியா குறியீடு 2023-2024




- நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்ட சமீபத்திய 2023-2024 ஆம் ஆண்டு இந்திய அளவிலான SDG (நிலையான மேம்பாட்டு இலக்குகள்) பூர்த்திக் குறியீட்டில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் 66 ஆக இருந்த தமிழக மாநிலத்தின் கூட்டு மதிப்பெண்ணானது சமீபத்தியக் குறியீட்டில் 78 ஆக உயர்ந்துள்ளதையடுத்து, இந்தக் குறியீட்டில் தமிழக மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

- 2023-2024 ஆம் ஆண்டில் மருத்துவமனையில் பிரசவிக்கும் குழந்தைகள் விகிதம் ஆனது 97.18% என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.
- மாநிலத்தின் புவியியல் பகுதியில் சுமார் 25% பகுதிகளைக் காடுகளாக மாற்றியதை அடுத்து தமிழக மாநிலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு முன்னுரிமை அளித்து உள்ளது.
- ஆயுஷ்மான் பாரத்-PMJAY திட்டத்தின் மூலமாக, சுமார் 300 மில்லியனுக்கும் அதிகமான பயனாளிகளுக்கு சுகாதாரக் காப்பீட்டு பலன்களை தமிழ்நாடு வழங்கியுள்ளது.
- ஸ்வச் பாரத் அபியான் திட்டத்தின் கீழ், 11 மில்லியன் கழிப்பறைகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

## இந்திய ரிசர்வ் வங்கி குறை தீர்ப்பாளர் முன்பு வழக்குப் பிரதிநிதித்துவம்





- இந்திய ரிசர்வ் வங்கியின் 2021 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குறை தீர்ப்புத் திட்டத்தின் அரசியலமைப்புச் செல்லுபடித் தன்மையினை மதராஸ் உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- இது புகார்தாரர்கள் தங்கள் வழக்குகளைக் குறை தீர்ப்பாளர் முன் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு வழக்கறிஞர்களை ஈடுபடுத்துவதைத் தடுக்கிறது.
- RBI-IOS 2021 திட்டத்தின் 3(1)(c) மற்றும் 10(2(f) விதிகள் அரசியலமைப்பிற்கு முரணானது என அறிவிக்க நீதிமன்றம் மறுத்து விட்டது.
- வழக்கறிஞர்கள் சட்ட ரீதியான உரிமையை மட்டுமே கொண்டுள்ளதாகவும், நீதித் துறை மற்றும் பகுதியளவு நீதித்துறை நடவடிக்கை சார்ந்த மன்றங்களில் அவை ஆஜர் ஆவதற்கான அடிப்படை உரிமையினைக் கொண்டிருக்கவில்லை என்றும் நீதி மன்றம் கூறியுள்ளது.
- இத்திட்டம் புகார்தாரர்கள் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்டப் பிரதிநிதிகள் மூலமாகவோ குறை தீர்ப்பாளரை அணுக அனுமதிக்கிறது.

- ஆனால் அந்தப் பிரதிநிதிகள் ஒரு வழக்கறிஞராக இருக்கக் கூடாது என்பதையும் நீதி மன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

## 2017 ஆம் ஆண்டு சதுப்பு நில விதிகளின் கீழ் ஊட்டி ஏரி

- தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையமானது, 2017 ஆம் ஆண்டு சதுப்பு நிலங்கள் (வளங் காப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் கீழ் ஊட்டி ஏரி பாதுகாக்கப்பட வேண்டும் என்று தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) தெற்கு அமர்விடம் தெரிவித்துள்ளது.
- நீலகிரி மாவட்ட நிர்வாகம், இந்த ஏரி மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்டது என்றும், அதனை ஒரு சதுப்பு நிலமாகக் கருத முடியாது என்றும் அமர்வு முன்னதாக வாதிட்டது.
- 2.25 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட இந்த ஏரியானது, 2011 ஆம் ஆண்டு தேசிய ஈர நிலப் பதிவேடு மற்றும் மதிப்பீட்டு அறிக்கையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.
- இதன் விளைவாக, உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் படி 2017 ஆம் ஆண்டு விதிகளின் 4வது விதியின் கீழ் இந்த ஏரி பாதுகாக்கப்பட வேண்டும்.




## தமிழ்நாட்டின் மொழி சார் வரைபடம் 2011

- இது இந்தியத் தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையத்தினால் வெளியிடப்பட்டது.
- இந்த வரைபடப் பதிவிற்கானப் பகுப்பாய்விற்கு 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவுகள் பயன்படுத்தப் பட்டுள்ளதால், மாநிலத்தின் மக்கள் தொகை எண்ணிக்கை 7,21,47,030 எனக் கணக்கில் கொள்ளப் பட்டுள்ளது.

- மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 96.20% பேர் தமிழ் மொழியையும்; 8.05% பேர் தெலுங்கு மொழியையும்; 2.59% பேர் கன்னட மொழியையும்; மற்றும் 1.40% பேர் மலையாள மொழியையும் அவர்களின் தாய் மொழியாகவோ அல்லது அவர்களின் முதல் அல்லது இரண்டாவது துணை மொழியாகவோ கொண்டுள்ளனர்.
- தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 18.49% பேர் ஆங்கிலம் மொழி பேசக் கூடியவர்கள் ஆவர்.
- இந்த மாநிலத்தில் உள்ள ஒட்டு மொத்த மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பின்வரும் ஐந்து முக்கிய மொழிகள் வகைப்படுத்தப் பட்டுள்ளன - அவை தமிழ் (6,37,53,997), தெலுங்கு (42,34,302), கன்னடம் (12,86,175), உருது (12,64,537) ), மலையாளம் (7,26,096).
- இது தவிர, பிற மொழிகளைப் பேசுபவர்கள் 8,81,923 பேர் ஆவர்.
- இம்மாநிலத்தில் 24 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மூன்று மொழிகளைப் பேசக் கூடியவர்களாக உள்ளனர்.
- மும்மொழி பேசுபவர்களைத் தவிர்த்து, இந்த மாநிலத்தில் 1.79 கோடிக்கும் அதிகமான மக்கள் இரு மொழிகளைப் பேசக்கூடியவர்களாக உள்ளனர்.
- 17 திராவிட மொழிகளில், 14 திராவிட மொழிகளைப் பேசுபவர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர் என்ற அதே சமயத்தில் ஜடாபு, கோலாமி மற்றும் கோயா ஆகிய மொழிகள் தமிழகத்தில் பேசப் படவில்லை.
- முக்கியமாக தென்னிந்தியாவில் 60 மில்லியன் மக்களும், உலகளவில் 68 மில்லியன் மக்களும் தமிழ் மொழி பேசுபவர்களாக உள்ளனர்.
- 1991 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தரவுகளைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்ட, இந்தியாவின் முதலாவது மொழி சார் வரைபடமானது 2004 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

A delve into the distribution of monolingual, bilingual and trilingual speakers in the State in 2011

| Major languages | Speakers (mother tongue) | Monolinguals | Bilinguals (excluding trilinguals) | Trilinguals |
|---|---|---|---|---|
| Tamil | 6,37,53,997 | 4,96,87,022 | 1,30,47,336 | 10,19,639 |
| Telugu | 42,34,302 | 9,56,866 | 26,60,016 | 6,17,420 |
| Kannada | 12,86,175 | 2,80,564 | 7,84,735 | 2,20,876 |
| Urdu | 12,64,537 | 3,40,243 | 7,15,784 | 2,08,510 |
| Malayalam | 7,26,096 | 1,99,740 | 3,34,020 | 1,92,336 |
| Hindi | 3,93,380 | 1,63,375 | 1,68,116 | 61,889 |
| Gujarati | 2,75,023 | 48,129 | 1,68,116 | 65,633 |
| Marathi | 85,454 | 17,741 | 42,237 | 25,476 |
| English | 24,495 | 8,516 | 12,927 | 3,052 |
| Tulu | 2,636 | 348 | 987 | 1,301 |
| Others | 1,00,935 | 28,216 | 41,688 | 31,031 |
| TOTAL | 7,21,47,030 | 5,17,30,760 | 1,79,69,107 | 24,47,163 |



As per the T.N. Language Atlas, **96.2% of the total population in T.N. could speak Tamil,** 8.05%, Telugu; 2.59%, Kannada; and 1.40%, Malayalam – either as their mother tongue or as their first or second subsidiary language

## TANGEDCO நிறுவனத்தின் பெயர் மாற்றம்

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் (TANGEDCO) ஆனது தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் லிமிடெட் (TNPDCL) என மறுபெயரிடப்பட்டுள்ளது.

- இதன் பல்வேறு பிரிவுகளில் சுமார் 3.37 கோடி நுகர்வோர் உள்ளனர்.
- 2023-24 ஆம் ஆண்டில் 8.11 லட்சம் புதிய மின் சேவை இணைப்புகள் வழங்கப் பட்டு உள்ளன.
- சமீபத்தில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA) ஆனது TNGECL கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக லிமிடெட் (TNPGCL) ஆனது, புதைபடிவ எரிபொருள் தொடர்பான (நிலக்கரி, நாப்தா - இரசக் கற்பூரம் மற்றும் எரிவாயு) உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளின் நிர்வாகத்தினை மேற்கொள்ளும்.
- தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் (TNGECL) ஆனது நீர், காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தி நடவடிக்கைகளின் நிர்வாகத்தினை மேற்கொள்ளும்.

## காலை உணவுத் திட்ட விரிவாக்கம் 2024





- தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டத்தினை அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தும் திட்டத்தினைத் தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள புனித அன்னாள் பள்ளியில் இந்தத் திட்டத்தினை முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த நடவடிக்கையினால் இந்த மாநிலம் முழுவதும் உள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் உள்ள 2,23,536 குழந்தைகள் பயனடைவார்கள்.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்று காலை உணவுத் திட்டத்தினை முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 1.14 லட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

- 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று, இந்த மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரிவாக்கப் பட்டதுடன், 30,992 அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் சுமார் 18.50 லட்சம் மாணவர்கள் இந்த முன்னெடுப்பின் கீழ் பயனடைந்தனர்.

## தமிழ்நாட்டில் உள்ள கழுகுகள் குறித்த ஆய்வு 2024

- முதுமலை (MTR) மற்றும் சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகங்களில் (STR) உயிரினங்களின் முக்கிய வாழ்விடங்களில் கழுகு வளங்காப்பு குறித்த விழிப்புணர்வு மீதான ஆய்வு சமீபத்தில் நடத்தப்பட்டது.
- இந்தப் பகுதியில் வாழும் சமூகங்கள் கால்நடைகளை வளர்ப்பதில் "கழுகுக்கு பாதகம் விளைவிக்காத" நடைமுறைகள் குறித்தும் இந்தப் பகுதியில் இந்தப் பறவைகள் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினையும் இன்னும் முழுமையாக உணரவில்லை.
- மொத்தமுள்ள நான்கு கழுகு இனங்களில் – வெண்முதுகுக் கழுகு, நீண்ட அலகு கொண்ட கழுகு மற்றும் ஆசிய ராசாளிக் கழுகு ஆகிய மூன்று கழுகு இனங்கள் இந்தப் பகுதியில் காணப் படுகின்றன என்பதோடு இந்த இரண்டு வளங்காப்பகங்களுக்குள் அவை கூடு கட்டி இனப்பெருக்கம் செய்யும் இனங்களாகும்.
- எகிப்தியக் கழுகு ஒரு வலசை போகும் கழுகு இனம் என்று நம்பப் படுகிறது.
- ஸ்டீராய்டு சாராத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் (NSAID) கிடைக்கப் பெறுவது என்பது கழுகுகளுக்கு தீங்கு விளைவிப்பதாக உள்ளது.
- கீட்டோபுரோஃபென், அசெக்ளோஃபெனாக் மற்றும் நைம்சுலைடு போன்ற கழுகுகளுக்கு தீங்கு விளைவிக்கும் பிற NSAID மருந்துகள் கால்நடை மருந்தகங்களில் இன்னும் கிடைக்கப் பெறுகின்றன.



## 'சண்டாளர்கள்' என்ற சொல்லின் பயன்பாடு குறித்த எச்சரிக்கை




- தமிழ்நாடு மாநிலப் பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினருக்கான ஆணையமானது ''சண்டாளர்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு மாநில அரசிற்கு ஓர் ஆலோசனை அறிக்கையினை வழங்கியுள்ளது.
- மற்றவர்களை இழிவுபடுத்துவதற்காகவோ அல்லது நகைச்சுவையாகவோ அல்லது அரசியல் மேடைகளில் 'சண்டாளர்' என்ற சொல்லினைப் பயன்படுத்தக் கூடாது என்று அந்த ஆணையம் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தச் சொல்லினைப் பயன்படுத்துபவர்கள் மீது 1989 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் பட்டியலிடப்பட்டச் சாதியினர் பட்டியலில் ''சண்டாளர்' 48வது குறியீட்டு எண் என்ற வரிசையில் பட்டியலிடப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்கள் விருதுகள் 2024

- அந்தந்தத் துறைகளில் சிறந்து விளங்கும் கைவினைக் கலைஞர்கள் மற்றும் கலைஞர்களுக்குப் பல்வேறு விருதுகளை முதலமைச்சர் வழங்கினார்.
- எட்டு சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருதுகளையும், 10 சிறந்த கைவினைக் கலைஞர்களுக்குப் பூம்புகார் மாநில விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.
- N.பாலகிருஷ்ணன், K.P. உமாபதி, S.இராஜகோபால், N.மணி ஆச்சாரி, C.முத்துசாமி ஆச்சாரி, S.கோவிந்தராஜ், B.சுலைகான் பீவி, S.தங்கஜோதி ஆகியோர் 2022-23 ஆம் ஆண்டிற்கான 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருதுகளைப் பெற்றனர்.
- இந்த விருதானது 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறந்த கைவினைஞர்களை விருது வழங்கி கௌரவிக்கிறது.

- 2022-23 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகள் ஆனது C.ரவி, S.நாகலட்சுமி, M.இராஜப்பா, M.முருகேசன், R.லோகநாதன், N.பூவம்மாள், P.வரதன், M.இராஜரத்தினம், R.சக்திவேல் மற்றும் S.லில்லி மேரி ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன.
- இந்த விருதுகள் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டின் கைவினை மேம்பாட்டிற்குப் பங்களித்த துறையில் சிறந்த 10 கைவினைக் கலைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

## நிலையான மேம்பாட்டு இலக்குக் குறியீட்டில் தமிழ்நாட்டின் செயல்திறன் 2023-24

Status report

Tamil Nadu's score in eleven sustainable development goals, according to a NITI Aayog report (2023-24), has been higher than the national average. For two of the goals, the State's indicators have been on a par with the national average

| Goal No. | Sustainable Development Goals | Tamil Nadu (out of 100) | National Average (out of 100) |
|---|---|---|---|
| 1 | No poverty | 92 | 72 |
| 2 | Zero hunger | 75 | 52 |
| 3 | Good health and well being | 77 | 77 |
| 4 | Quality education | 76 | 61 |
| 5 | Gender equality | 53 | 49 |
| 6 | Clean water and sanitation | 90 | 89 |
| 7 | Affordable and clean energy | 100 | 96 |
| 8 | Decent work and economic growth | 81 | 68 |

| Goal No. | Sustainable Development Goals | Tamil Nadu (out of 100) | National Average (out of 100) |
|---|---|---|---|
| 9 | Industry, Innovation and Infrastructure | 67 | 61 |
| 10 | Reduced Inequalities | 76 | 65 |
| 11 | Sustainable cities and communities | 81 | 83 |
| 12 | Responsible consumption and production | 78 | 78 |
| 13 | Climate action | 81 | 67 |
| 14 | Life below water | 61 | * |
| 15 | Life on land | 72 | 75 |
| 16 | Peace justice, and strong institutions | 78 | 74 |

- 2023-24 ஆம் ஆண்டு இந்தியாவின் நிலையான மேம்பாட்டு இலக்கு நிவர்த்திக் குறியீடானது 70 இலக்குகள் மற்றும் 113 குறிகாட்டிகளின் அடிப்படையில் இலக்குகளை அடைவதில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் நிர்வாகச் செயல்திறனை பகுப்பாய்வு செய்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது 78 என்ற கூட்டு மதிப்பெண்களுடன், 71 என்ற தேசிய சராசரியினை விஞ்சி மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் 13 நிலையான மேம்பாட்டு இலக்குகளில் (SDGs) தமிழ்நாடு 'முன்னணி மாநிலமாக' வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது மாநிலங்களின் மதிப்பெண்களின் அடிப்படையில் அவற்றின் செயல்திறன்களை 'இலட்சியமிகு மாநிலம்' (0-49), 'நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாநிலம்' (50-64), 'முன்னணியில் உள்ள மாநிலம்' (65-99) மற்றும் 'சாதனை மாநிலம்' (100) என வகைப்படுத்துகிறது.
- தமிழ்நாடு மாநில அரசானது தனது முன்னணி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முந்தைய அறிக்கையில் தமிழகத்தின் கூட்டு மதிப்பெண் 74 ஆக இருந்தது.
- மற்ற மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில், வறுமை ஒழிப்பு இலக்கில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

- பல்பரிமாண வறுமைக் குறியீட்டின்படி, 14.96% என்ற தேசிய சராசரிக்கு எதிராக நமது மாநிலத்தின் செயல்திறன் 2.2% ஆக உள்ளது.
- மாநிலத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 22% மற்றும் 25% பேர் முறையே எடை குறைவாகவும் வளர்ச்சி குன்றியவர்களாகவும் இருப்பதாக அறிக்கை கூறுகிறது.
- ஒரு லட்சம் பிறப்புகளுக்கான பேறு காலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் 1,000 பிறப்புகளுக்கான ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆகியவை முறையே 54 மற்றும் 13 ஆக உள்ளது.
- சாலை விபத்துகளில் உயிரிழப்பவர்களின் விகிதம் ஆனது ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 23.31 ஆக உள்ளது என்ற நிலையில் இது நாட்டிலேயே மிக அதிகமாகும்.
- உயர்நிலை மற்றும் உயர்கல்வியில் மாணவர்களின் மொத்தச் சேர்க்கை விகிதமானது முறையே 81.5% மற்றும் 47% ஆக உள்ளது.
- இதன் தேசிய சராசரி 57.6% மற்றும் 28.4% ஆகும்.
- மேலும், தமிழ்நாட்டில் உள்ள 81.87% கிராமப்புறக் குடும்பங்கள் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் குழாய் இணைப்பு வசதியினைப் பெற்றுள்ளன.
- நமது மாநிலத்தில் 15-59 வயதிற்குட்பட்டோர் மத்தியில் நிலவும் வேலைவாய்ப்பின்மை விகிதம் மற்றும் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் ஆகியவை முறையே 4.8% மற்றும் 62.3% ஆக உள்ளது.
- சுமார் 92.8% குடும்பங்கள் குறைந்தபட்சம் ஒரு கைபேசியாவது வைத்திருக்கிறார்கள்.
- ஆதார் மூலம் உள்ளடக்கப்பட்ட மக்கள் தொகையின் சதவீதம் 97.94 ஆகும்.
- 7.2% ஆக இருந்த இந்த மாநிலத்தின் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 4.8% ஆக குறைந்துள்ளது.

## புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-2027




- தமிழகம் முழுவதும் 15 வயதிற்கு மேற்பட்ட கல்வியறிவற்ற 6 லட்சம் பேரை பள்ளிக் கல்வித்துறை அடையாளம் கண்டுள்ளது.
- பள்ளிக் கல்வித்துறையானது, இந்த ஆண்டு அவர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்குவதற்காக புதிய இந்தியா இலக்கியத் திட்டம் (NILP) அல்லது புதிய பாரத எழுத்துத் திட்டம் 2022-2027 என்ற திட்டத்தின் கீழ் வகுப்புகளைத் தொடங்கியுள்ளது.

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகபட்சமாக சுமார் 61,622 கல்வியறிவு இல்லாதவர்கள் உள்ளனர்.
- 90 சதவீதத்திற்கு மேல் கல்வியறிவு பதிவாகியுள்ள மாவட்டங்களை 100% கல்வியறிவு பெற்ற மாவட்டங்களாக விரைவில் அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை அத்துறை திட்டமிட்டுள்ளது.
- தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் ஒன்பது மாவட்டங்களின் கல்வியறிவு விகிதம் சுமார் 94-98% ஆகும்.

## தமிழ்நாடு தினம் 2024

- 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, மதராஸ் மாகாணம் ஆனது மதராஸ் மாநிலமாக மாறியது.
- 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டத்தின் விளைவாக மாநிலத்தின் எல்லைகள் மொழிவாரியாக மறுசீரமைக்கப்பட்டன.
- தமிழ்நாடு மாநிலமானது 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மதராஸ் மாநிலம் என்ற பெயரில் உருவாக்கப் பட்டது.
- 1967 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று, அப்போதைய மதராஸ் மாகாணத்தின் பெயரை தமிழ்நாடு என மாற்றுவதற்காக வேண்டி முன்னாள் முதல்வர் C.N. அண்ணா துரை அவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் மாநிலச் சட்டமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## TN-RISE முன்னெடுப்பு 2024




- தமிழ்நாடு கிராமப்புற தொழில் காப்பு மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் செயலாக்க (TN-RISE) முன்னெடுப்பின் கீழ் சுமார் 130 நிறுவனங்கள் வழிகாட்டுதல்களைப் பெறும்.
- இதில் தமிழகம் முழுவதிலும் உள்ள பெண் தொழில்முனைவோர்களால் வழி நடத்தப் படுகின்ற புத்தொழில் நிறுவனங்களும் அடங்கும்.
- ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை, 31 மாவட்ட துவக்க முகாம்கள் நடத்தப்பட்டன என்ற நிலையில் இது சுமார் 2,500 நிறுவனங்களை ஈர்த்தது.
- TN-RISE முன்னெடுப்பானது, தமிழ்நாடு ஊரக மாற்றத் திட்டத்தின் (TNRTP) கீழ் ஒரு சிறப்பு நோக்க வசதியாக செயல்படுகிறது.

- TN-RISE ஆனது:
    - கிராமப்புற பெண் தொழில் முனைவோர்களை அரசு மற்றும் அதன் திட்டங்களை அணுகுதலை எளிதாக்குதல்;
    - தொழில் முனைவோர் மற்றும் பெருநிறுவனச் சமூகத்திற்கான அணுகல்; ஆதரவு வழங்கும் சமூகத்திற்கான அணுகல்; மற்றும்
    - இம்மாநிலத்தின் தொழில் முனைவோர் சூழல் அமைப்பின் ஒரு பெரும் பகுதியாக இருப்பதற்கான அணுகல் ஆகியவற்றினைச் செயலாக்கும்.

## முதலாவது முழுமையான இராம சேது வரைபடம்



- இஸ்ரோ அறிவியலாளர்கள் நாசாவின் ICESat-2 செயற்கைக்கோளின் தகவலுடன் ஆடம்ஸ் பாலம் என்றும் அழைக்கப்படும் கடல் நீரில் மூழ்கியுள்ள இராமர் சேது என்ற பாலத்தின் விரிவான வரைபடத்தினை வெற்றிகரமாக வரைபடமாக்கியுள்ளனர்.
- முழு பாலத்தையும் 10 மீட்டர் வரை தெளிவுத் திறன் கொண்ட வரைபடம் மூலம் காண இயலும்.
- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான 6 ஆண்டுகளில் இதற்கான தரவு சேகரிக்கப் பட்டது.
- இது 29 மீட்டர் நீளமும், கடலுக்கு அடியில் இருந்து 8 மீட்டர் உயரமும் கொண்ட, கடலுக்கு அடியில் உள்ள அமைப்பின் முதல் வரைபடமாகும்.
- இந்தப் பழமையான பாலம் ஆனது, இந்தியாவின் தனுஷ்கோடியை இலங்கையில் உள்ள தலைமன்னார் தீவுடன் இணைக்கிறது.
- இராமேஸ்வரத்தில் உள்ள கோயில்களில் உள்ள பதிவுகளின் படி, 1480 ஆம் ஆண்டில் புயலால் சேதமாகும் வரை இந்தப் பாலம் ஆனது கடல் மட்டத்திற்கு மேல் இருந்தது.

## பெரியார் கொள்கை OTT

- திராவிடர் கழகமானது பெரியார் கொள்கை எனப்படும் இணைய வழி ஒளிபரப்பு சேவை (OTT) தளத்தினை தொடங்கியுள்ளது.
- இது சமூக நீதிக்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட உலகின் முதல் OTT தளம் ஆகும்.

- இந்த OTT தளமானது சமயத்துடன் தொடர்புடைய பல்வேறு மூடநம்பிக்கைகள், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுடனான நேர்காணல்கள், பகுத்தறிவு, திரைப் படங்கள், குறும்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் பற்றிய பல்வேறு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது.
- இது பெரியாரின் சுயமரியாதை மற்றும் சமூக நீதிக்கான சித்தாந்தத்தை மேலும் அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்களிடம் பரப்பச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தமிழகப் பள்ளிகளில் உணவுப் பாதுகாப்பு




- இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, சமீபத்தில் IS 6541: 2024 தர நிலையினை திருத்தியமைத்துள்ளது என்பதோடு இது பள்ளிகளில் உணவு தயாரிக்க செய்வதற்குத் தேவையான சுகாதாரமான தர நிலைகளையும் பரிந்துரைக்கிறது.
- BIS ஆனது திருத்தியமைக்கப்பட்ட குறியீட்டினைப் பற்றி விவாதிக்கவும், தமிழகத்தில் தரநிலையைச் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பை கோருவதற்காகவும் மிக விரைவில் மாநில அரசை அணுக உள்ளது.
- சமையல் அறைகள் மற்றும் உணவுப் போக்குவரத்து வாகனங்களில் சுகாதாரமான நிலைமைகளைப் பேணுவதற்கான அடிப்படைத் தரத்தினைப் பரிந்துரைப்பதற்காக 1972 ஆம் ஆண்டில் குறியீடு வெளியிடப்பட்டது என்பதோடு மதிய உணவு வழங்கலை மட்டுமே இது உள்ளடக்கியதாகும்.
- புதிய குறியீடானது குழந்தைகள் காப்பகங்கள் உள்ளிட்ட பள்ளிகளின் பல்வேறு நிலைகளில் மிகவும் நன்கு பேண வேண்டிய உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளின் பரந்த வரையறைகளை உள்ளடக்கியது.
- தற்போது 22 மாதங்கள் வரையிலான வயதுடைய குழந்தைகளுக்கான மையங்கள் விலக்கப் பட்டுள்ளன.

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 2024

- தமிழ்நாடு மாநில அரசானது அருட்தந்தை ஜோ அருண் என்பவரைத் தமிழக மாநிலச் சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமித்து அந்த ஆணையத்தினை மறுசீரமைத்துள்ளது.
- தமிழக மாநில அரசானது M.M. அப்துல் குத்தூஸ் என்ற இறையன்பன் குத்தூஸ் என்பவரை அதன் துணைத் தலைவராக நியமித்துள்ளது.
- ஹாமில்டன் வெல்சன், A. சொர்ணராஜ், நாகூர் A.H. நஜிமுதீன், பிரவீன் குமார் தத்தியா, ராஜேந்திர பிரசாத், ரமீத் கபூர், J. முகமது ரஃபி மற்றும் S.வசந்த் ஆகியோரையும் அதன் உறுப்பினர்களாக நியமித்துள்ளது.
- தமிழக மாநில அரசானது, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக C.பெர்னாண்டாஸ் ரத்தின ராஜாவினை நியமித்துள்ளது.

## தமிழ்ப் புதல்வன் திட்டம்




- தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் நோக்கத்தைத் தமிழக அரசு விரிவுபடுத்தி உள்ளது.
- தற்போது, மாநிலம் முழுவதும் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவர்களும் இத்திட்டம் மூலம் பயனடைவர்.
- தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கு 360 கோடி ரூபாய் வழங்க அரசு நிதி ஒப்புதல் அளித்து உள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் 3.28 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தத் திட்டமானது, மாநில அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்து, உயர்கல்வி செல்லும் ஒவ்வொரு பெண்களுக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தினை ஒன்றியுள்ளது.

## “ஒரே சுகாதாரம்” குழு – தமிழ்நாடு

- தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ‘ஒரே சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான உத்திசார் குழுவை’ மாநில அரசு அமைத்துள்ளது.

- 23 பேர் கொண்ட இந்தக் குழுவானது, பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பொது சுகாதாரச் சவால்களுக்கு விரிவான பல எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்வதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சௌமியா சுவாமிநாதன், G.சுந்தர்ராஜன், கல்பனா பாலகிருஷ்ணன் மற்றும் WASH நிபுணர் அனன்யா கோஷல் உள்ளிட்ட நிபுணர்கள் பலர் இக்குழுவில் இடம் பெற்று உள்ளனர்.
- நிலப் பயன்பாடு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களுடன் கூடிய பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் ஆனது, மனிதர்களையும் விலங்குகளையும் பாதிக்கும் பல்வேறு நோய்களின் தோற்றத்திற்கு வழி வகுக்கும்.




# தேசியச் செய்திகள்


## FATF அமைப்பின் 'வழக்கமான கண்காணிப்பு நிலையில் உள்ள நாடுகள்' பட்டியல்

- 2023-24 ஆம் ஆண்டில் நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு (FATF) நடத்திய பரஸ்பர மதிப்பீட்டில் இந்தியா சிறப்பான மதிப்பினைப் பெற்றுள்ளது.
- இது இந்தியாவினை 'வழக்கமான கண்காணிப்பு நிலையில் உள்ள நாடுகள்' பிரிவில் வைக்கிறது என்ற நிலையில் நான்கு G20 நாடுகள் மட்டுமே இந்த அந்தஸ்தினைப் பகிர்ந்து கொள்கின்றன.
- இந்தியா ஏற்கனவே FATF வழிகாட்டுதல் குழுவில் உறுப்பினராக உள்ளது.
- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு (FATF) என்பது 1989 ஆம் ஆண்டில் ஒரு சர்வதேச கண்காணிப்பு அமைப்பாக நிறுவப்பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது பணமோசடி, பயங்கரவாத நிதியுதவி மற்றும் சர்வதேச நிதி அமைப்பின் நேர்மைக்கு தொடர்புடைய பிற அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா 2010 ஆம் ஆண்டில் FATF அமைப்பில் உறுப்பினராக மாறியது.





## நதி நீரோட்டங்களின் சுற்றுச்சூழல் சார் கண்காணிப்பு அமைப்பு

- ❖ மத்திய ஜல் சக்தி அமைச்சகம் ஆனது நதிகளின் நிகழ்நேரத் தரக் கண்காணிப்பிற்கு வழி வகுக்கும் நதி நீரோட்டங்களின் சுற்றுச்சூழல் சார் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது பல்வேறு நதிநீர் திட்டங்களின் திட்டமிடல் மற்றும் நதி நீரின் தரம் மற்றும் பிற முக்கிய அளவுருக்களின் கண்காணிப்பிற்கு உதவும்.
- ❖ இது கங்கை, யமுனை மற்றும் அவற்றின் துணை நதிகளின் நீரின் தரம் பற்றிய நிகழ்நேரப் பகுப்பாய்வை வழங்குகிறது.
- ❖ மத்திய அளவில் நமாமி கங்கைத் திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் இது வழிவகுக்கிறது.
- ❖ கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களின் (STPs) செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் அவற்றின் மதிப்பிடப்பட்ட திறனில் அவை செயல்படுவதை உறுதி செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.
- ❖ பல்வேறு இடங்களில் நதி நீரின் தரமும் கண்காணிக்கப்படுகிறது.



## புவன் பஞ்சாயத்து புவிசார் இணைய தளம் 4.0





- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) உருவாக்கிய பின்வரும் இரண்டு புவிசார் இணையதளங்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
  - ‘புவன் பஞ்சாயத்து (Ver. 4.0)” கிராமப்புற நிலப் பதிவுக்கான இணைய தளம் மற்றும்
  - "அவசரநிலை மேலாண்மைக்கான தேசிய தரவுத் தளம் (NDEM ver. 5.0)"
- இந்த சமீபத்தியப் புவியிடங்காட்டி சார்ந்த கருவிகள் காட்சிப்படுத்தல் மற்றும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு இடங்களுக்கு 1:10K அளவிலான உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ‘புவன் பஞ்சாயத்து புவிசார் இணைய தளம்’ என்ற தளமானது, “பரவலாக்கப்பட்டத் திட்டமிடலுக்கான (SISDP) விண்வெளி சார்ந்த தகவல் ஆதரவினை” வழங்குகிறது மற்றும் பஞ்சாயத்துகளில் அடிமட்டத்தில் உள்ள குடிமக்களுக்கு அதிகாரத்தினை அளிக்கிறது.

## இந்தியாவின் 3 புதிய குற்றவியல் சட்டங்கள்

- ஜூலை 01 ஆம் தேதி முதல் மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்ததையடுத்து, இந்தியா தனது குற்றவியல் நீதி முறையை முற்றிலுமாக மாற்றி அமைத்துள்ளது.
- இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு (IPC) மாற்றாக பாரதீய நியாய சன்ஹிதா (BNS) கொண்டு வரப்பட்டுள்ளது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு (CrPC) மாற்றாக பாரதீய நாக்ரிக் சுரக்சா சன்ஹிதா (BNSS) கொண்டு வரப்பட்டுள்ளது.
- இந்தியச் சாட்சியச் சட்டத்திற்கு மாற்றாக பாரதீய சாக்சய ஆதினியம் (BSA) கொண்டு வரப்பட்டுள்ளது.
- மூன்று சட்டங்களும் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டன.

- இந்த மூன்று புதிய சட்டங்கள் ஆனது, தண்டனை வழங்குவதை விட நீதி வழங்குவதன் மீது கவனம் செலுத்துகின்றன மற்றும் விரைவான நீதியை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இது "அனைவருக்கும் நீதி கிடைக்கப் பெறுதல்" என்பதை வலியுறுத்தும் வகையில் நீதித்துறை மற்றும் நீதிமன்ற நிர்வாக அமைப்பை வலுப்படுத்துகிறது.
- இந்தப் புதிய சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படும் முதல் வழக்கு மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள நிஷாத்புரா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.




## சீர்மிகு நகரத் திட்டத்தின் விரிவாக்கம்

- மத்திய அரசானது, சீர்மிகு நகரத் திட்டத்தினை 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டித்துள்ளது.
- ஜூன் மாத இறுதிக்குள் சீர்மிகு நகரத் திட்டப் பணியை நிறைவு செய்வதற்கு மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2015 ஆம் ஆண்டு சீர்மிகு நகரத் திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்தியக் குடிமக்களுக்குத் தேவையான முக்கிய உள்கட்டமைப்பு மற்றும் நாகரீகமான வாழ்க்கைத் தரத்தை வழங்கும் நகரங்களை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.





## இந்தியாவின் ஹைட்ரஜன் திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவி




- இந்தியா அதன் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட ஆற்றல் மேம்பாட்டினை நிறைவேற்ற உதவுவதற்காக இரண்டாவது சுற்று நிதியளிப்பில் 1.5 பில்லியன் டாலர் கடன் வழங்குவதற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.
- பசுமை ஹைட்ரஜனுக்கான சந்தையை மேம்படுத்தவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகரிக்கவும், குறைவான கார்பன் உமிழ்வு கொண்ட ஆற்றல் முதலீடுகளுக்கான நிதியை அதிகரிக்கவும் இந்த நிதி உதவும்.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், உலக வங்கியானது முதலாவது குறைவான கார்பன் உமிழ்வு கொண்ட ஆற்றல் திட்ட மேம்பாட்டுக் கொள்கை நடவடிக்கைக்கான முதல் சுற்று நிதியளிப்பில் 1.5 பில்லியன் டாலர் நிதி வழங்க ஒப்புதல் அளித்தது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இருந்து ஆண்டிற்குக் குறைந்தது 450,000 மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் மற்றும் 1.5 ஜிகாவாட் மின்னாற்பகுப்புக் கருவிகள் உற்பத்தி செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவின் முதல் நிலக்கரி வாயுவாக்க ஆலை





- ஜார்க்கண்டின் ஜம்தாரா மாவட்டத்தில் உள்ள கஸ்தா நிலக்கரித் தொகுதியில் நிலத்தடி நிலக்கரி வாயுவாக்கத்திற்கான (UCG) இந்தியாவின் முதல் ஆலை நிறுவப்பட உள்ளது.
- நிலக்கரி வணிகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காக நிலக்கரியை கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், ஹைட்ரஜன் மற்றும் கார்பன் மோனாக்சைடு உள்ளிட்ட பயனுள்ள வாயுக்களாக மாற்றுவதற்காக வேண்டி அது உள்-நிலை வாயுவாக்கத்தைப் பயன்படுத்த உள்ளது.
- இந்த வாயுக்கள் செயற்கையான இயற்கை வாயுவின் உருவாக்கம் மற்றும் வெடி பொருட்கள், உரங்கள் மற்றும் எரிபொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயன மூலப்பொருட்களின் வேதியியல் கூறு போன்ற பல தொழில்துறை செயல் முறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.
- இந்தியாவின் புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாடு ஆனது 2023 ஆம் ஆண்டில் 8% அதிகரித்துள்ளது என்ற நிலையில் இது தேவையின் வளர்ச்சிக்கும் ஒரு காரணமாக உள்ளது.
- மொத்த நுகர்வில் அதன் பங்கு 89% ஆகும்.

## புலம்பெயர்வு மற்றும் மேம்பாடு குறித்த விரிவான அறிக்கை 2024


- 2023 ஆம் ஆண்டில் 7.5 சதவீதத்தில் இருந்த இந்தியாவின் பண வரவு ஆனது, 2024 ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாக பாதியாக குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள வலுவான தொழிலாளர் சந்தைகளினால் 120 பில்லியன் டாலர் மதிப்பிலான பண வரவினை இந்தியா பெற்றது.
- உலக வங்கியின் கூற்றுப்படி, பண வரவு ஆனது 2024 ஆம் ஆண்டில் 124 பில்லியன் டாலராகவும், 2025 ஆம் ஆண்டில் 129 பில்லியன் டாலராகவும் பெறப் படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- அதிகப் பண வரவினைப் பெறும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து மெக்சிகோ (66 பில்லியன் டாலர்), சீனா (50 பில்லியன் டாலர்), பிலிப்பைன்ஸ் (39 பில்லியன் டாலர்), பாகிஸ்தான் (27 பில்லியன் டாலர்) ஆகியவை உள்ளன.
- புலம்பெயர்ந்தோர்களின் தாயகமாக முதலிடத்தில் இந்தியாவும் (18.7 மில்லியன்), அதைத் தொடர்ந்து உக்ரைன் (11.9 மில்லியன்), சீனா (11.1 மில்லியன்), மெக்சிகோ (11 மில்லியன்), மற்றும் வெனிசுலா (8.9 மில்லியன்) ஆகிய நாடுகளும் உள்ளன.




## 16வது நிதிக் குழுவிற்கான உத்தேச திட்டம்


- 16வது நிதி ஆணையம் தனது பணியைத் தொடங்கியுள்ளது என்பதோடு இது முதன்மையாக ஒன்றிய தொகுப்பு நிதியைப் பகிர்ந்தளிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறது.
- இது இந்திய அரசியலமைப்பின் 280வது சரத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- 2021 மக்கள்தொகை கணக்கெடுப்புத் தரவுகள் இல்லாத நிலையில், 2011 ஆம் ஆண்டின் தரவுகளை முதன்மையாக நம்பியிருப்பது ஆதார அடிப்படையிலான ஒரு நிதிப் பகிர்வுக்குப் போதுமானதாக இல்லை.
- இந்தியாவில் தோராயமாக 4,000 சட்டப்பூர்வ நகரங்கள் மற்றும் அதற்குச் சமமான எண்ணிக்கையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலான நகரங்களும் தோராயமாக 23,000 கிராமங்களும் உள்ளன என்பதோடு இவை அனைத்தும் திறம்பட்ட நகர்ப்புறமாக உள்ளன.
- 2 ஆம் மற்றும் 3 ஆம் அடுக்கு நகரங்களுக்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க இடம்பெயர்வு உட்பட இந்தப் புள்ளிவிவரங்கள் 16வது நிதிக் குழுவால் பரிசீலிக்கப்பட வேண்டும்.
- இந்தியாவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (ULBs) அரசுகளுக்கும் இடையேயான நிதி பரிமாற்றங்கள் (IGTs) ஜிடிபியில் 0.5% மட்டுமே ஆகும்.
- இது மற்ற வளரும் நாடுகளில் உள்ள வழக்கமான 2-5% ஐ விட மிகக் குறைவு.
- உதாரணமாக, தென்னாப்பிரிக்கா (2.6%), மெக்சிகோ (1.6%), பிலிப்பைன்ஸ் (2.5%) மற்றும் பிரேசில் (5.1%) ஆகிய நாடுகள் அதன் குறிப்பிட்ட நிதியை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தங்கள் நகரங்களுக்கு ஒதுக்குகின்றன.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு குறிப்பிட்டச் சதவீதமாக IGTகளின் அளவை அதிகரிப்பது அவசியம்.




## சம்பூர்ணதா அபியான்

- நிதி ஆயோக் அமைப்பு நாடு முழுவதும் சம்பூர்ணதா அபியான் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- 500 இலட்சியமிகுத் தொகுதிகள் மற்றும் 112 இலட்சியமிகு மாவட்டங்களில் 12 முக்கிய சமூகத் துறை குறிகாட்டிகளில் ஒரு செறிவு நிலையை அடைவதில் இது கவனம் செலுத்துகிறது.
- இந்த விரிவான மூன்று மாதப் பிரச்சாரம் சுகாதாரம், ஊட்டச்சத்து, விவசாயம், சமூக மேம்பாடு மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்துகிறது.

## தேசிய வயிற்றுப் போக்குத் தடுப்புப் பிரச்சாரம் 2024




- இரண்டு மாத கால தேசிய வயிற்றுப் போக்குத் தடுப்புப் பிரச்சாரம் 2024 என்ற ஒன்றை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- வயிற்றுப் போக்கினால் ஏற்படும் 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்புகளைக் குறைப்பதே இந்தப் பிரச்சாரத்தின் நோக்கமாகும்.
- 2024 ஆம் ஆண்டு பிரச்சாரத்தின் முழக்கம், “Diarrhea ki Roktham, Safai aur ORS se rakhen apna dhyaan” என்பதாகும்.
- வாய்வழி நீரிழப்புத் தீர்வு உப்பு (ORS) பாக்கெட்டுகள் மற்றும் துத்தநாக மாத்திரைகள் குழந்தைகளுக்கு வழங்கப்படும்.

## கங்கை நீர் ஒப்பந்தம் குறித்த மறுபேச்சுவார்த்தை

- இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகியவை இணைந்து 1996 ஆம் ஆண்டில் கங்கை நீர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தம் ஆனது முதன்மையாக கங்கை நதி நீரினை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்வது குறித்த பல்வேறு விதிமுறைகளில் கவனம் செலுத்துகிறது என்ற னியாளியில் இது 2026 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட வேண்டும்.
- தீவிர வானிலை, மாறிவரும் மழைப் பொழிவுப் போக்குகள் மற்றும் பனிப்பாறைகள் உருகுவதால் நதி நீர் இருப்பு மாறுகிறது.
- இந்த ஒப்பந்தம் குறித்த மறுபேச்சுவார்த்தையில் இது ஒரு முக்கியப் பிரச்சினையாக விவாதிக்கப்பட உள்ளது.





## அமைச்சரவைக் குழுக்களின் மறுசீரமைப்பு

- மத்திய அரசானது எட்டு அமைச்சரவைக் குழுக்களை மறுசீரமைத்துள்ளது.
- பொருளாதார விவகாரங்களுக்கான அனைத்து முக்கிய அமைச்சரவைக் குழு (CCEA) மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCPA) ஆகியவற்றில் கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு இது இடம் அளிக்கிறது.
- இலாகாக்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது புதிய அமைச்சர்களை நீக்குதல் அல்லது சேர்த்தல் போன்றவற்றை உள்ளடக்குவதற்காக அமைச்சரவை குழுக்கள் அவ்வப்போது மறுசீரமைக்கப் படுகின்றன.
- முன்னதாக 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று மறுசீரமைக்கப் பட்டது.

## இந்தியாவின் பாதுகாப்புத் துறை உற்பத்தி 2023-24

- இந்திய நாடானது, 2023-24 ஆம் நிதியாண்டில் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை உற்பத்தியின் மதிப்பில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிக வளர்ச்சி பதிவாகியுள்ளது என்ற நிலையில் இதன் மதிப்பு சுமார் 1.27 லட்சம் கோடி ரூபாயினை எட்டியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் உற்பத்தியின் மொத்த மதிப்பில், சுமார் 79.2% ஆனது பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்களின் பங்காகும்.
- மீதமுள்ள 20.8% ஆனது தனியார் துறையின் பங்காகும்.
- பாதுகாப்பு உற்பத்தியின் மதிப்பு இந்த நிதியாண்டில் முந்தைய நிதியாண்டை விட சுமார் 17% அதிகம் ஆகும்.




## மத்திய இரயில்வே நிர்வாகத்தின் மிதக்கும் சூரியசக்தி உற்பத்தி ஆலை



- ❖ மத்திய இரயில்வே (CR) நிர்வாகமானது மகாராஷ்டிராவின் இகத்புரி ஏரியில் மிதக்கும் சூரியசக்தி உற்பத்தி தகடுகளை நிறுவ உள்ளது என்ற நிலையில் இது இந்திய இரயில்வே நிர்வாம் மேற்கொள்ளும் முதல் வகையான முன்னெடுப்பாகும்.
- ❖ இந்த முன்னெடுப்பானது மின்சாரத்தை உற்பத்தி செய்வது மட்டுமின்றி பெருமளவில் தண்ணீரையும் சேமிக்கும்.
- ❖ இகத்புரியில் உள்ள இரயில்வே நிர்வாக நீர்த்தேக்கம் ஆனது 2.8 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் 1,206 மில்லியன் லிட்டர் தண்ணீரை சேமிக்கும் திறன் கொண்டது.
- ❖ இந்த மிதக்கும் சூரியசக்தி உற்பத்தி ஆலை ஆனது 10 மெகாவாட் திறன் கொண்டதாக இருக்கும்.

## இந்தியாவின் விலங்கினங்கள் சரிபார்ப்பு பட்டியல் தளம்

- ❖ 104,561 இனங்களை உள்ளடக்கிய தனது முழு விலங்கினங்களின் சரிபார்ப்புப் பட்டியலைத் தயாரித்த உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- ❖ இது உள்நாட்டு இனம், அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனம் மற்றும் பட்டியலிடப்பட்ட இனங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய சுமார் 36 தொகுதிகளில் (ஃபைலா) உள்ள அனைத்து அறியப் பட்ட வகைப் பாட்டியலின் 121 சரிபார்ப்புப் பட்டியல்களைக் கொண்டுள்ளது.

- இது 1750 ஆம் ஆண்டுகளில் இருந்து இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட அனைத்து விலங்கினங்களின் தொகுப்பாகும் என்பதோடு இதில் உள்நாட்டு இனம், அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனம் மற்றும் பட்டியலிடப்பட்ட இனங்கள் ஆகியவையும் அடங்கும்.
- 2023 ஆம் ஆண்டு இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் அறிக்கையின்படி, உலகின் 17 பெரும் பல்வகைமை நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும் என்ற நிலையில் இந்தியா உலகின் ஆவணப்படுத்தப்பட்ட உயிரினங்களில் 7% முதல் 8% இனங்களைக் கொண்டு உள்ளது.

## புதிய ஆயுத அமைப்புகள் பயிற்சிப் பள்ளி

- இந்திய விமானப் படையானது ஹைதராபாத்தில் உள்ள பேகம்பேட் விமானப்படை தளத்தில் புதிதாக நிறுவப்பட்ட ஆயுத அமைப்புகளின் பயிற்சிப் பள்ளியை (WSS) திறந்து வைத்துள்ளது.
- இந்தப் புதிய கிளை பின்வரும் நான்கு பிரிவுகளைக் கொண்டிருக்கும்:
    - சுகோய்-30 MKI மற்றும் C-130J போன்ற வான்வழித் தளங்களில் ஆயுதங்கள் மற்றும் ஆயுத அமைப்புகளை இயக்குவதற்கான பறக்கும் படைப்பிரிவு,
    - தொலை தூரத்தில் இருந்து இயக்கும் வகையிலான விமானங்களை இயக்கச் செய்வதற்கான தொலைதூர இயக்க படைப்பிரிவு,
    - நிலம் விட்டு வான் நோக்கிப் பாயும் மற்றும் நிலம் விட்டு நிலம் நோக்கிப் பாயும் ஆயுத அமைப்புகளுக்கான இயக்கக் கட்டுப்பாட்டு பிரிவினர் மற்றும் அதனை இயக்குபவர்கள் மற்றும்
    - விண்வெளி சார்ந்த பல்வேறு தகவல்கள் மற்றும் படத்தொகுப்பைக் கையாளும் நுண்ணறிவு படைப் பிரிவு.

## மிகவும் சக்தி வாய்ந்த அணு சக்தி சாராத வெடிகுண்டு - SEBEX 2




- இந்தியக் கடற்படையானது தனது வழக்கமான TNT (ட்ரைநைட்ரோடொலுவீன்) என்ற வெடிகுண்டினை விட இரண்டு மடங்கு அதிகமான ஆபத்தான புதிய வெடிபொருளை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- SEBEX 2 என்ற இந்தப் புதிய வெடிபொருளை நாக்பூரைச் சேர்ந்த சோலார் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

- இது தற்போது மிகவும் சக்திவாய்ந்த அணுசக்தி சாராத வெடிபொருட்களில் ஒன்று ஆகும்.
- SEBEX 2 என்பது தற்போது கிடைக்கக்கூடிய எந்தவொரு திடமான வெடிபொருளையும் விட மிகவும் சக்திவாய்ந்த வெடிப்பு விளைவை கொண்ட ஒரு புதிய வெடி மருந்து உருவாக்கம் ஆகும்.
- இந்தியக் கடற்படையானது EEL நிறுவனத்தின் SITBEX 1 என்ற வெடி மருந்தினை முதல் தெர்மோபரிக் (தீப்பற்றுதலினால் வெளிப்புறத்திலிருந்து ஆக்சிஜனை உள்ளிழுத்து மாபெரும் தீப்பிழம்பினை உருவாக்கும்) வெடிமருந்து என சான்றளித்துள்ளது.
- கடுமையான வெப்பத்துடன் கூடிய மிகவும் நீண்ட நேர வெடிப்பு விளைவினை உருவாக்குகின்ற SITBEX 1 ஆனது எதிரி நாட்டுப் படை வீரர்களின் பதுங்கு குழிகள், சுரங்கங்கள் மற்றும் பிற கவசமிடப்பட்ட இடங்களைக் குறி வைத்து தாக்க ஏற்றது.

## SBI - MSME சஹாஜ்

**MSME–Sahaj by SBI**

SBI has launched "MSME-Sahaj", a solution enabling customers to avail loan against their GST-registered sales invoices of up to ₹1 lakh. The app runs based on a Machine Learning (ML) model to validate the authenticity of the loan application.

- பாரத் ஸ்டேட் வங்கி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்காக MSME சஹாஜ் என்ற இயங்கலை வழி வணிகக் கடன் தீர்வை அறிவித்துள்ளது.
- இது அவற்றின் சரக்கு மற்றும் சேவை வரி பதிவு செய்யப்பட்ட விற்பனை விலைப் பட்டியல்களின் அடிப்படையில் 1 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்குகிறது.
- இந்தப் புதிய தீர்வு ஆனது எந்தவித நேரடித் தலையீடும் இல்லாமல் முழு செயல்பாட்டிற்கும் 15 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தையும் கொண்டிருக்கும்.

## வீர தீர விருதுகள் 2024

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் ஆயுதப் படைகள், மத்திய ஆயுதக் காவல் படைகள் மற்றும் மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச காவல்துறையின் பணியாளர்களுக்கு 36 வீர தீர விருதுகளை வழங்கினார்.
- புது டெல்லியில் உள்ள இராஷ்டிரபதி பவனில் நடந்த பாதுகாப்புத் துறை விருது வழங்கீட்டு விழாவின் போது (கட்டம்-1) இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்த வீரதீர விருதுகளில் பத்து கீர்த்தி சக்ராக்கள் மற்றும் 26 சௌர்ய சக்ரா விருதுகளும் அடங்கும்.

- ஏழு வீரர்களுக்கு மரணத்திற்குப் பின்னதான கீர்த்தி சக்ராகளும் மற்றும் ஏழு பேருக்கு மரணத்திற்குப் பின்னதான சௌரிய சக்ரா விருதுகளும் வழங்கப்பட்டன.
- முனைப்பு மிக்க துணிச்சல், தளர்வுறாத தைரியம், கடமையில் அதீத ஈடுபாடு ஆகியவற்றை வெளிப்படுத்தியப் படை வீரர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

## இந்தியா-பிரான்ஸ் கல்லீரல் மற்றும் வளர்சிதை மாற்ற நோய் வலையமைப்பு

- இந்திய அரசானது, புது டெல்லியில் இந்தியா-பிரான்ஸ் கல்லீரல் மற்றும் வளர்சிதை மாற்ற நோய் வலையமைப்பினை (InFLiMeN) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது வளர்சிதை மாற்றம் சார்ந்த கல்லீரல் நோய்களை தடுக்கும் என்பதோடு இதனைக் குணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மெய்நிகர் முனையாகும்.
- இந்தியரில் ஒவ்வொரு மூன்றாவது நபருக்கும் அதிகொழுப்பு படிவு கல்லீரல் நோய் பாதிப்பு உள்ளது என்பதோடு இது இரண்டாம் வகை நீரிழிவு நோய் மற்றும் பிற வளர் சிதை மாற்றக் கோளாறுகளுக்கு முந்தைய நிலையாகும்.
- மதுப் பழக்கம் சாராத அதி கொழுப்புப் படிவு கல்லீரல் நோய் (NAFLD) பாதிப்பானது சிரோசிஸ் மற்றும் முதன்மை கல்லீரல் புற்றுநோயாக மாறக் கூடும்.

## சஃபாய் அப்னாவ் பிமாரி பகாவோ முன்னெடுப்பு

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஆனது, ஜூலை 01 முதல் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை சுவச் பாரத் திட்டம்-நகர்ப்புறம் 2.0 திட்டத்தின் கீழ் சஃபாய் அப்னாவ், பிமாரி பகாவோ முன்னெடுப்பினை தொடங்க உள்ளது.
- அதிக மழைப்பொழிவு மற்றும் அதிகரித்துள்ள சுகாதார நலம் சார்ந்த அபாயங்களால் ஏற்படும் சவால்களை நன்கு கையாள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தயார் நிலையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தூய்மை, போராடுதல் மற்றும் பல்வேறு துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல விரிவான திட்டங்கள் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளாலும் செயல்படுத்தப்பட வேண்டும்.
- இது சுகாதாரத் துறை அமைச்சகத்தின் 'வயிற்றுப்போக்குப் பாதிப்பினை ஒழித்தல் பிரச்சாரத்துடன்' ஒத்துப் போகிறது.


## eSankhyiki இணைய தளம்

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் ஆனது eSankhyiki இணைய தளத்தினை (https://esankhyiki.mospi.gov.in) உருவாக்கியுள்ளது.
- திட்டமிடுபவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிகழ்நேரத் தரவுகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த இணையதளத்தின் நோக்கம், நாட்டில் அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரங்களை எளிதாகப் பரப்புவதற்கு ஒரு விரிவான தரவு மேலாண்மை மற்றும் பகிர்வு அமைப்பை நிறுவுவதாகும்.




## NQAS மதிப்பீடு

- ❖ மத்திய அரசானது, ஆயுஷ்மான் ஆரோக்யா மந்திர் (AAM) துணை மையங்களுக்கு மெய்நிகர் NQAS மதிப்பாய்வினை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.
- ❖ இது நேரம் மற்றும் செலவினச் சேமிப்புக்கு ஏற்ற ஒரு நடவடிக்கையாக பொது சுகாதார மையங்களுக்கான தர உத்தரவாதக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத் தக்க புதுமையைப் பிரதிபலிக்கும்.
- ❖ இந்த அமைப்பின் மூலம், மெய்நிகர் வழியில் மதிப்பிடப்பட்டச் சுகாதார AAM-SC மையங்களுக்கு NQAS (தேசிய தர உத்திரவாத தரநிலைகள்) சான்றிதழ் வழங்கப்படும்.
- ❖ இந்தியப் பொது சுகாதாரத் தரநிலைகள் (IPHS) வழிகாட்டுதல்கள் ஆனது 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதோடு, இது 2022 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப் பட்ட புதுப்பித்தலுடன் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகிறது.
- ❖ இது ஆரம்ப நிலை முதல் இரண்டாம் நிலை வரையிலான பொது சுகாதார மையங்களுக்கான தர அளவுருக்களை நிர்ணயித்துள்ளது.



## வரலாற்று சாட்விக் வீடு




- 164 ஆண்டுகளுக்குப் பிறகு, சிம்லாவில் உள்ள சாட்விக் மாளிகையில் தலைமைக் கணக்குத் தணிக்கையகமானது தனது முதல் அருங்காட்சியகத்தினைப் பெற்றுள்ளது.
- 1946 ஆம் ஆண்டு இந்தியாவிற்கான அமைச்சரவைத் தூதுக் குழுவின் வருகையின் போது M.K. காந்தி சாட்விக் மாளிகையில் தங்கியிருந்தார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, 1950 ஆம் ஆண்டில், இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குச் பணிக்கான தகுதிகாண் பயிற்சியாளர்களுக்கான முதல் பயிற்சிப் பள்ளி இங்கு தொடங்கப் பட்டது.

## இந்தியா மற்றும் ரஷ்யாவின் 22வது வருடாந்திர உச்சி மாநாடு




- இந்தியா மற்றும் ரஷ்யாவின் 22வது வருடாந்திர உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமரும் ரஷ்ய அதிபரும் ரஷ்யாவில் கலந்து கொண்டனர்.
- இந்தியாவும் ரஷ்யாவும் 2030 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலர்களாக உயர்த்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்தியாவும் ரஷ்யாவும் பருவநிலை மாற்றம், துருவ ஆராய்ச்சி, சட்ட ரீதியிலான நடுவண் விவகாரங்கள் மற்றும் மருந்துகளுக்கான சான்றிதழ் அளிப்பு மற்றும் பிற பிரச்சினைகள் குறித்த நிறுவனங்களுக்கு இடையேயான பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

## உள்நாட்டிலேயே இலகுரக பீரங்கி 'ஜோராவர்'




- ஜோராவர் எனப்படும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகு ரக பீரங்கியின் முன்மாதிரி சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது லார்சன் & டூப்ரோ (L&T) நிறுவனத்துடன் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) இணைந்து உருவாக்கியுள்ளது.
- இது இந்தியாவின் வடக்கு எல்லையில் உள்ள உயரமான பகுதியில் மிக குறைந்தபட்ச தளவாட இருப்புகளுடன் அதி தீவிரமான வானிலை மற்றும் மிக அதிகமான உயரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது.

## ஹஜ் குழு




- வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கு (MEA) பதிலாக சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் ஆனது ஹஜ் குழுவிற்கான ஒருங்கிணைப்பு அமைச்சகமாக தேர்வு செய்யப் பட்டு உள்ளது.
- முன்னதாக, 2002 ஆம் ஆண்டு ஹஜ் குழுச் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் நிர்வாகம் உட்பட, ஹஜ் யாத்திரை மேலாண்மை தொடர்பானப் பணிகள் வெளியுறவு அமைச்சகத்தினால் கையாளப்பட்டது.
- இந்த விதிகளை ஹஜ் குழு (திருத்தம்) விதிகள், 2024 என்று அழைக்கலாம்.
- 2002 ஆம் ஆண்டு ஹஜ் குழு விதிகளில், 'வெளியுறவு அமைச்சகம்' என்ற சொல்லிற்குப் பதிலாக, 'சிறுபான்மை விவகார அமைச்சகம்' என்ற சொற்கள் மாற்றப்படும்."

## NIRMAN இணையதளம்




- மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் அவர்கள் கர்மயோகி திட்டத்தின் ஒரு பகுதியாக NIRMAN இணைய தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- NIRMAN என்பது "தேசிய குடிமைப்பணி தேர்வின் முதன்மை தேர்வாளர்களுக்கு வெகுமதி அளிக்கும் ஒரு உன்னத முயற்சி" என்பதாகும்.
- இந்த இணைய தளம் ஆனது, 8 இலட்சம் ரூபாய்க்கும் குறைவான குடும்ப வருமானம் கொண்ட பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சமூகத்தினைச் சேர்ந்த பெண் அல்லது மூன்றாம் பாலினத்தவர்கள் மத்தியக் குடிமைப் பணித் தேர்வின் முதல்நிலைத் தேர்வில் தகுதிப் பெற்றவர்களுக்கு ஆதரவு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம் செயல்படும் 39 மாவட்டங்களின் நிரந்தர வசிப்பாளர்களில் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் 1 லட்சம் ரூபாய் பெறுவார்கள்.

## CAMPCOPTER S-100

- இந்திய அரசானது தனது கடற்படைச் செயல் திறன்களை மேம்படுத்துவதற்காக என்று ஆஸ்திரேலியாவின் CAMPCOPTER S-100 ஆளில்லா வான்வழி விமானத்தினை வாங்கச் செய்வதற்காக (UAS) ஷீபெல் எனப்படும் ஒரு ஆஸ்திரிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இந்த விமானமானது, பல்வேறு தீவிர தட்பவெப்ப நிலைகளில் செயல்படக் கூடியது மற்றும் அதிகத் தாங்குந் திறன் கொண்டது என்பதால் இது இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு ஏற்றதாக அமைகிறது.

- இதனை ஏவுவதற்கும் அதனை திரும்பப் பெறுவதற்கும் குறைந்தபட்ச இடம் தேவைப் படும் என்பதால், இது பல்வேறு கடற்படைக் கப்பல்களில் இருந்து அனுப்புவதற்கு மிக ஏற்றதாக அமைகிறது.



## செம்மொழியாக அறிவிக்கப் படுவதற்கான நிபந்தனைகளில் மாற்றம் 2024

- இந்தச் சிறப்பு அந்தஸ்தினை வழங்குவதற்கான சில நிபந்தனைகளை மாற்றுவதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தியாவில் தற்போது ஆறு செம்மொழிகள் உள்ளன – அவை தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா ஆகியனவாகும்.
- இந்திய அரசானது, கடைசியாக 2014 ஆம் ஆண்டில்தான் இந்தச் சிறப்பு அந்தஸ்தினை (ஒடியா) வழங்கியது.
- மராத்தி, வங்காளம், அசாமி மற்றும் மைதிலி போன்ற மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்க வேண்டும் என்று தற்போது சில மாநிலங்கள் மற்றும் இலக்கிய வட்டாரங்களில் இருந்து கோரிக்கைகள் எழுந்துள்ளன.
- இவற்றில் மராத்தி மொழிக்கான செம்மொழி அந்தஸ்து கோரிக்கை என்பது கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.



## உணவுப் பொட்டலங்களுக்கான புதிய விதிகள் 2024





- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது 2020 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (முத்திரையிடல் மற்றும் விளம்பரப் படுத்துதல்) விதிமுறைகளில் திருத்தம் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன்படி, ஊட்டச்சத்து விவரங்கள் தடிமனான எழுத்துக்களிலும், முன்பை விட சற்று பெரிய எழுத்துரு அளவிலும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.
- இது உணவுப் பொருட்களை வாங்கும் போது மக்கள் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும்.
- பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்களின் முத்திரைகளில், உணவில் உள்ள மொத்த சர்க்கரை, உப்பு மற்றும் நிறைவுற்ற கொழுப்பு போன்றவற்றின் அளவு குறித்த சில விவரங்கள் ஆனது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது.

## Agri SURE நிதி

- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியானது, 750 கோடி ஆரம்பத் தொகையுடன் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கிராமப்புறத் தொழில் துறைகளுக்கான (Agri-SURE) வேளாண் நிதியை உருவாக்க உள்ளதாக அறிவித்தது.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி மற்றும் வேளாண் அமைச்சகம் ஆகியவை தலா 250 கோடி ரூபாயும், பிற அமைப்புகள் மீதமுள்ள 250 கோடி ரூபாயையும் தனது பங்காக வழங்குகின்றன.
- இந்த நிதியானது ஒவ்வொன்றிற்கும் 25 கோடி ரூபாய் வரையிலான முதலீடுகளுடன் சுமார் 85 வேளாண் சார் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிக்கும் வகையில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இந்த நிதியானது துறை சார்ந்த, குறிப்பிட்ட துறை சாராத மற்றும் கடன் மாற்று முதலீட்டு நிதிகள் (AIF) ஆகியவற்றில் முதலீடு செய்தல் மூலமாகவும், நேரடிச் சமபங்கு நிதி மூலமாகவும் புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும்.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியானது AgriSURE கிரீனத்தான் 2024 என்ற நிகழ்வினையும் தொடங்கியுள்ளது.

- இந்த ஹேக்கத்தான் நிகழ்வானது, மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களின் அதிகப் படியான விலை, வேளாண் கழிவுகளை இலாபகரமானப் பொருட்களாக மாற்றுதல் மற்றும் மீளுருவாக்கம் மிக்க வேளாண்மையினைப் பொருளாதார ரீதியில் இலாப கரமானதாக மாற்றுதல் போன்றவற்றில் உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும்.

## நிலையான மேம்பாட்டு இலக்குக் குறியீடு 2024 – இந்தியா





- நிதி ஆயோக் அமைப்பின் 2023-24 ஆம் ஆண்டு இந்தியாவின் நிலையான மேம்பாட்டு இலக்கு நிவர்த்திக் குறியீட்டில் உத்தரகாண்ட் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் முதல் இடத்தைப் பெற்றுள்ளன.
- ஒட்டு மொத்தமாக 2020-21 ஆம் ஆண்டில் 66 ஆக இருந்த இந்தியாவின் SDG நிவர்த்திக் குறியீட்டு மதிப்பெண் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 71 புள்ளிகளாக உயர்ந்தது.
- SDG நிவர்த்திக் குறியீட்டில் 57 புள்ளிகளுடன் பீகார் பின்தங்கிய நிலையில் உள்ளது என்ற நிலையில் 62 புள்ளிகளுடன் ஜார்க்கண்ட் அடுத்த இடத்தில் உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டின் மதிப்பெண்களுடன் ஒப்பிடும்போது பஞ்சாப், மணிப்பூர், மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகியவற்றின் புள்ளிகள் அதிகபட்சமாக சுமார் 8 புள்ளிகள் அதிகரித்து முறையே 76, 72, 70 மற்றும் 65 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளன.
- இந்திய மாநிலங்களில் நிலையான மேம்பாட்டு இலக்குகளில், "வறுமை ஒழிப்பு", "கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார மேம்பாடு" மற்றும் "புவியின் உயிரினங்கள்" ஆகியவற்றின் 2020-21 ஆம் ஆண்டு மதிப்பெண்களில் இருந்து அதிக பட்ச அதிகரிப்பானது பதிவாகியுள்ளது.
- "பாலினச் சமத்துவம்" மற்றும் "அமைதி, நீதி மற்றும் வலுவான அரசு அமைப்புகள்" போன்ற இலக்குகளுக்கானப் புள்ளிகளில் சிறிய அளவிலான அதிகரிப்புகள் மட்டுமே பதிவாகி உள்ளன.
- மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், “ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்” என்ற ஒரே ஒரு குறிக்கோளின் புள்ளிகள் மட்டும் 2020-21 ஆம் ஆண்டில் இருந்த 67-இல் இருந்து 2022-23 ஆம் ஆண்டில் 65 ஆகக் குறைந்துள்ளது.

## 16வது நிதி ஆணையத்தின் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு




- அரவிந்த் பனகாரியா தலைமையிலான பதினாறாவது நிதிக் குழுவானது, ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவினை அமைத்துள்ளது.
- இது அந்த ஆணையத்தின் பணி நோக்கத்தினை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- தற்போது தேசியப் பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சி மன்றத்தின் (NCAER) தலைமை இயக்குனராகப் பணியாற்றி வரும் பூனம் குப்தா என்பவர் இந்தக் குழுவின் தலைவராகச் செயலாற்றுவார்.
- இதன் மற்ற உறுப்பினர்கள் பின்வருமாறு:
    - T.K. ஸ்ரீவஸ்தவா
    - நீலகாந்த் மிஸ்ரா
    - பிரஞ்சுல் பண்டாரி
    - இராகுல் பஜோரியா

## ‘ஓர் அறிவியலாளர், ஒரு தயாரிப்பு’ திட்டம்



- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையானது அதன் 'ஓர் அறிவியலாளர்-ஒரு தயாரிப்பு' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புத் துறையில் ஆராய்ச்சியை நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ICAR நிறுவனத்தின் கீழ் உள்ள அனைத்து 5,521 அறிவியலாளர்களுக்கும் ஒரு தயாரிப்பு, ஒரு தொழில்நுட்பம், ஒரு மாதிரி, ஒரு கருத்தாக்கம் அல்லது ஒரு சரியான ஆய்வு முடிவைக் கொண்டு வர இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலும், அறிவியலாளர் அல்லது அறிவியலாளர்கள் குழு ஒரு தயாரிப்பை அடையாளம் காண வேண்டும், அதன் பிறகு ICAR நிறுவனமானது அறிவியலாளர்கள் அல்லது குழுவின் படைப்பினை ஆய்வு செய்யும்.

## போதைப் பொருள் குற்றங்கள் குறித்த புகாருக்கான கட்டணமில்லாத தொலை பேசி உதவி எண் - 1933


- முதன்முறையாக மின்னஞ்சலுடன் இணைக்கப்பட்ட தேசிய கட்டணமில்லாத தொலை பேசி உதவி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- MANAS (தேசிய போதைப் பொருள் உதவிச் சேவைக்கான) கட்டணமில்லா உதவி எண் 1933 மற்றும் மின்னஞ்சல் முகவரி info.ncbmanas@gov.in ஆகும்.
- போதைப் பொருள் குற்றங்கள் மற்றும் அது தொடர்பானப் பிரச்சினைகள் குறித்து போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்திற்குத் தகவல் தெரிவிக்க இது உதவும்.
- MANAS என்பது 'மதக் பதார்த் நிசேத் அசுச்னா கேந்திரா' அல்லது போதைப் பொருள் தடுப்பு தகவலளிப்பு மையம் என்பதைக் குறிக்கிறது.




## WHO-UNICEF அறிக்கை 2024

- 2023 ஆம் ஆண்டில் எந்தவொரு தடுப்பூசியினையும் போடப் பெறாத குழந்தைகளின் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2.1 மில்லியன் அளவில் "எந்தவொரு தடுப்பூசியும் பெறாத குழந்தைகள்" எண்ணிக்கை கொண்ட நைஜீரியாவிற்கு அடுத்தபடியாக 1.6 மில்லியன் எண்ணிக்கையுடன் இந்தியா இடம் பெற்றுள்ளது.


- முற்றிலும் தடுப்பூசி போடப்படாத குழந்தைகளின் எண்ணிக்கை ஆனது ("ஜீரோ-டோஸ்") கடந்த ஆண்டை விட சற்று அதிகரித்துள்ளது (13.9 மில்லியனாக இருந்த இதன் எண்ணிக்கை 600,000 உயர்ந்து 14.5 மில்லியனாக அதிகரித்துள்ளது).
- இந்த எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 1.7 மில்லியன் அதிகமாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் தடுப்பூசி போடப்படாத மற்றும் குறைவான எண்ணிக்கையிலான தடுப்பூசிகளைப் பெற்ற குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 21 மில்லியனாக உள்ளது என்ற நிலையில் இது அடிப்படை மதிப்பை விட 2.7 மில்லியன் அதிகமாகும்.
- இந்தியா 1.6 மில்லியன் என்ற எண்ணிக்கையில் மூன்றாவது அதிக எண்ணிக்கையில் "தட்டம்மை தடுப்பூசி பெறாத குழந்தைகள்" உள்ள நாடாக உள்ளது.
- சுமார் 2.8 மில்லியன் குழந்தைகளுடன் நைஜீரியாவும், 2 மில்லியன் குழந்தைகளுடன் காங்கோ ஜனநாயகக் குடியரசும் முன்னணி இடங்களைப் பிடித்துள்ளன.
- உலகளவில் தட்டம்மைத் தடுப்பூசிகள் பெறாத 55% குழந்தைகளைக் கொண்ட பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.




## அகில இந்தியப் பணிகள் (நடத்தை) விதிகள், 1968

- மத்திய அரசானது பயிற்சி இந்திய ஆட்சிப் பணி அதிகாரி (பூஜா கேட்கர்) சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும் பகுப்பாய்வு செய்வதற்குப் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் (DoPT) கீழ் ஒற்றை உறுப்பினர் கொண்ட ஒரு குழுவினை அமைத்துள்ளது.
- இந்த அதிகாரியின் நியமனம் குறித்து சமீபத்தில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.
- அரசு ஊழியர்கள் முதன்மையாக இரண்டு நிர்வாக விதிகளின் மூலம் நிர்வகிக்கப் படுகின்றனர்:
  - அகில இந்தியப் பணிகள் (நடத்தை) விதிகள், 1968, மற்றும்
  - இந்திய ஆட்சிப் பணி (தகுதிகாண்) விதிகள், 1954.

- அதிகாரிகளின் தகுதிகாண் காலத்தின் போது அவர்களின் நடத்தையை நிர்வகிக்கும் கூடுதல் விதிகள் உள்ளன என்பதோடு இது அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட பிறகு குறைந்தது இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கும்.
- விதி 12 ஆனது, தகுதிகாண் அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்வதற்கான பல்வேறு சூழ்நிலைகளை வழங்குகிறது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான (PH) இட ஒதுக்கீடு ஆனது 2006 ஆம் ஆண்டு பணி நியமனத்தின் போது அறிமுகப்படுத்தப் பட்டது என்பதோடு ஒவ்வொரு பிரிவிலும் (பொது, இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலிடப்பட்ட சாதியினர், மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) 3 சதவிகித இடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப் பட்டுள்ளன.




## முஸ்லீம் பெண்களின் பராமரிப்பு உரிமை 2024

- 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) 125வது சட்டப் பிரிவின் கீழ் விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களின் பராமரிப்பு உரிமையினை உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு உறுதி செய்துள்ளது.
- இந்த வழக்கு ஆனது முகமது அப்துல் சமத் மற்றும் தெலுங்கானா மாநில அரசு இடையிலான வழக்கு என்று அழைக்கப்படுகிறது.
- முஸ்லீம் பெண்கள் (விவாகரத்து உரிமைகள் பாதுகாப்பு) சட்டமானது (MWA) 1986 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.
- இந்தச் சட்டம் ஆனது, விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லீம் பெண்கள் இத்தாத் காலத்தின் போது பராமரிப்பு வசதியினைக் கோருவதற்கான ஒரு புதிய உரிமையை உருவாக்கியதோடு, எதிர்காலத்திற்கான ஒரு நியாயமான மற்றும் தக்கப் பராமரிப்பு வசதியினைப் பெறுவதற்கான வாய்ப்பினையும் உருவாக்கியது.
- ஆனால், இந்த விதியானது 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125 பிரிவுடன் முரண்படுகிறது.




## நிதி ஆயோக் அமைப்பின் மறுசீரமைப்பு 2024




- மத்திய அரசானது நிதி ஆயோக் அமைப்பை, நான்கு முழுநேர உறுப்பினர்கள் மற்றும் 15 மத்திய அமைச்சர்களை, பதவி வழி உறுப்பினர்கள் அல்லது சிறப்பு அழைப்பாளர்களாகக் கொண்டு மறுசீரமைத்துள்ளது.
- பிரதமர் அதன் தலைவராகவும், பொருளாதார நிபுணர் சுமன் K. பெரி துணைத் தலைவராகவும் தொடர்ந்து பதவி வகிப்பர்.
- அறிவியலாளர் V.K. சரஸ்வத், வேளாண் பொருளாதார நிபுணர் ரமேஷ் சந்த், குழந்தைகள் நல மருத்துவர் V.K. பால் மற்றும் பொருளாதார நிபுணர் அரவிந்த் விர்மானி ஆகியோரும் தொடர்ந்து முழு நேர உறுப்பினர்களாகப் பதவி வகிப்பர்.

- நான்கு பதவி வழி உறுப்பினர்களாக மத்தியப் பாதுகாப்பு, உள்துறை, வேளாண்மை மற்றும் நிதி அமைச்சர்கள் பதவி வகிப்பர்.
- இந்தியாவை மாற்றியமைப்பதற்கான தேசிய அமைப்பு எனும் 'நிதி ஆயோக்' அமைப்பு 2015 ஆம் ஆண்டில் 65 ஆண்டுகள் பழமையான திட்டக் குழுவிற்குப் பதிலாக உருவாக்கப் பட்டது.

## பல்கலைக்கழக மானியக் குழுவின் ASMITA திட்டம்


- கல்வி அமைச்சகமும் பல்கலைக்கழக மானியக் குழுவும் இணைந்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்திய மொழிகளில் 22,000 புத்தகங்களை உருவாக்குவதற்காக திட்டம் 16 என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- ASMITA (மொழிப்பெயர்ப்பு மற்றும் கல்வி சார் எழுத்து மூலம் இந்திய மொழிகளில் கல்வி பயன்பாட்டு வசதிகளைப் பெருக்குதல்) என்ற தலைப்பிடப்பட்டுள்ளது.
- ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு மொழியிலும் புத்தகம் எழுதும் செயல்முறைக்குப் பல்கலைக் கழக மானியக் குழு ஒரு சீர்தர இயக்கச் செயல்முறையினை (SOP) உருவாக்கியுள்ளது.




## இந்தியாவின் 5வது உள்நாட்டுமயமாக்கல் பட்டியல்

- பாதுகாப்பு அமைச்சகம் (MoD) ஆனது, 346 பாதுகாப்புப் பொருட்களை உள்ளடக்கிய ஐந்தாவது சாதகமான உள்நாட்டு தயாரிப்புகளின் கொள்முதல் பட்டியலை (PIL) அறிவித்துள்ளது.
- இது பாதுகாப்புத் துறை உற்பத்தியில் ஆத்ம நிர்பர்தா (தன்னிறைவு) நிலையினை மேம்படுத்துவதனையும், பாதுகாப்புத் துறை சார் பொதுத்துறை நிறுவனங்கள் (DPSU) மேற்கொள்ளும் இறக்குமதியைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது 2020 ஆம் ஆண்டில் ஸ்ரீஜன் என்ற இணைய தளத்தினை அறிமுகப் படுத்தியது.


- தனியார் தொழிற்சாலைகளுக்கு உள்நாட்டுமயமாக்கலுக்கான பாதுகாப்புப் துறை சார்ந்தப் பொருட்களை வழங்குவதற்காக பாதுகாப்புத் துறை சார் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கீட்டுத் தலைமையகங்களுக்கான (SHQs) ஒரு தளத்தை இது வழங்குகிறது.
- அவை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் (MSMEs) மற்றும் புத்தொழில் நிறுவனங்களை உள்ளடக்கியது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை, பாதுகாப்புத் துறை சார் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கீட்டுத் தலைமையகங்களால் சுமார் 36,000க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் பொருட்கள் உள்நாட்டுமயமாக்கலுக்காக தொழில்துறைக்கு வழங்கப் பட்டன.
- அவற்றில் கடந்த மூன்று ஆண்டுகளில் 12,300க்கும் மேற்பட்ட பொருட்கள் உள்நாட்டு மயமாக்கப் பட்டுள்ளன.




## எண்ணிம பாரத் நிதி

- தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது, கிராமப்புறங்களில் தொலைத்தொடர்பு இணைப்பினை அதிகரிப்பதற்காக, எண்ணிம பாரத் நிதியை பயன்படுத்துவதற்கான வரைவு விதிகளை வெளியிட்டுள்ளது.
- இது முந்தையப் பொதுச் சேவைக் கட்டுப்பாட்டு நிதிக்கு (USOF) பதிலாக கொண்டு வரப்பட்டுள்ளது.
- USOF என்பது அனைத்துத் தொலைத்தொடர்பு நிதிக் கட்டுப்பாட்டு அமைப்புகள் தங்களின் ஈடு செய்யப்பட்ட மொத்த வருவாயில் (AGR) வசூலிக்கும் 5 சதவீதப் பொது சேவை வரிவிதிப்பு மூலம் உருவாக்கப்பட்ட நிதிகளின் தொகுப்பாகும்.

- எண்ணிம பாரத் நிதிக்கு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் செய்யும் பங்களிப்புகள் முதலில் இந்தியாவின் ஒருங்கிணைந்த தொகுப்பு நிதியில் (CFI) வரவு வைக்கப்படும்.
- 2017 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், அரசாங்கம் ஆனது USOF நிதிக்காக 41,740 கோடி ரூபாயினை வசூலித்துள்ளது, அதில் சுமார் 72 சதவீதம் அதாவது 30,213 கோடி ரூபாயினைப் பயன்படுத்தியுள்ளது.
- குறிப்பாக, 2019-20 ஆம் ஆண்டில், இந்த வசூல் ஆனது 7,962 கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இதில் பயன்படுத்தப்பட்ட தொகை வெறும் 2,926 கோடி ரூபாயாகும்.




## PARI திட்டம்




- 46வது உலகப் பாரம்பரியக் குழுக் கூட்டத்தின் போது, கலாச்சாரத் துறை அமைச்சகம் ஆனது PARI (இந்தியாவின் பொது மக்கள் பார்வைக்கான கலை) என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்த திட்டத்தின் நோக்கமானது பேச்சுவார்த்தை, பிரதிபலிப்பு மற்றும் உத்வேகத்தை தூண்டுவது, தேசத்தின் மாறிவரும் கலாச்சார கட்டமைப்பிற்கு பங்களிப்பதாகும்.

- உலகப் பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வு ஆனது, இந்தியாவின் புது டெல்லியில் 2024 ஆம் ஆண்டு ஜூலை 21 முதல் 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பல்வேறு பாரம்பரிய கலை வடிவங்கள், சுவர் ஓவியங்கள், சுவர் சித்திரங்கள், சிற்பங்கள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்க நாடு முழுவதிலும் இருந்து 150க்கும் மேற்பட்ட காட்சி கலை கலைஞர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

## ஒருங்கிணைக்கப்படாத நிறுவனங்களின் வருடாந்திர கணக்கெடுப்பு 2022-23

- 2021-22 ஆம் ஆண்டில் இத்துறையில் 5.97 கோடியாக இருந்த மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கையானது, 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 6.50 கோடியாக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது 5.88% வருடாந்திர வளர்ச்சியைக் குறிக்கிறது.
- இந்தத் துறையின் பொருளாதாரச் செயல்திறனின் முக்கிய குறிகாட்டியான மொத்த மதிப்பு கூட்டலில் (GVA) 9.83% வருடாந்திர வளர்ச்சி பதிவானது.
- அக்டோபர் 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை, ஒருங்கிணைக்கப்படாத வேளாண் சாராத துறையில் சுமார் 11 கோடி தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்ற நிலையில் இது 2021-22 ஆம் ஆண்டிற்கான ASUSE கணக்கெடுப்பில் 9.8 கோடியாக இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டு ASUSE கணக்கெடுப்பில் சுமார் 2,81,013 ரூபாயாக இருந்த ஒருங்கிணைக்கப் படாத வேளாண் சாராத நிறுவனத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் ஆனது 2022-23 ஆம் ஆண்டு ASUSE கணக்கெடுப்பில் சராசரியாக 3,18,144 ரூபாயாக உயர்ந்தது.
- தொழில் முனைவோர் நோக்கத்திற்கான இணையத்தின் பயன்பாடு ஆனது 7.2% அதிகரித்துள்ளது என்பது இந்தத் துறையில் ஏற்பட்ட மிகவும் விரைவான எண்ணிம மயமாக்கத்தினை குறிக்கிறது.
- உற்பத்தித் துறையில் உள்ள தனியுரிம நிறுவனங்களில் சுமார் 54% ஆனது பெண் தொழில்முனைவோரால் நடத்தப்படுகிறது.

**Table1: Percentage share of establishments and workers in respect of top 3 activity categories**

| Activity Category | Number of Establishments | | Number of Workers | |
|---|---|---|---|---|
| | ASUSE 21-22 | ASUSE 22-23 | ASUSE 21-22 | ASUSE 22-23 |
| Other Retail Trade | 33.40 | 30.38 | 31.54 | 29.80 |
| Manufacture of Wearing Apparel | 10.74 | 11.27 | 8.26 | 8.39 |
| Other Community, Social and Personal Service Activities | 8.48 | 9.47 | 7.26 | 8.19 |

## நான்ஹே ஃபரிஷ்டே நடவடிக்கை

**The children rescued under 'Operation Nanhe Farishtey'**

**84,119** children. Operation Nanhe Faristey is a mission dedicated to rescuing children in need of care and protection across various Indian Railway zones.

- கடந்த ஏழு ஆண்டுகளில் "நன்ஹே ஃபரிஷ்டே நடவடிக்கையின்" கீழ் இரயில்வே பாதுகாப்புப் படையால் (RPF) மொத்தம் 84,119 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர்.
- பல்வேறு இந்திய இரயில்வே மண்டலங்களில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப் படும் குழந்தைகளை மீட்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும், 4,607 குழந்தைகளை RPF மீட்டு உள்ளது.

## அலுவல் ஆலோசனைக் குழு 2024

**Members of the Business Advisory Committee**

The Speaker has nominated following members to the Business Advisory Committee w.e.f. 18 July, 2024:-

1. Shri Sudip Bandyopadhyay
2. Shri P.P. Chaudhary
3. Shri Lavu Sri Krishna Devarayalu
4. Dr. Nishikant Dubey
5. Shri Gaurav Gogoi
6. Dr. Sanjay Jaiswal
7. Shri Dileshwar Kamait
8. Shri Bhartruhari Mahtab
9. Thiru Dayanidhi Maran
10. Shri Baijayant Panda
11. Shri Arvind Ganpat Sawant
12. Shri Kodikunnil Suresh
13. Shri Anurag Singh Thakur
14. Shri Lalji Verma

- பாராளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடரின் போது, பேரிடர் மேலாண்மை சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோதா உட்பட 6 புதிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா பாராளுமன்றச் செயல்பாட்டு நிரலைத் தீர்மானிக்கும் அலுவல் ஆலோசனைக் குழுவினையும் (PAC) அமைத்தார்.
- இந்தக் குழுவானது பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் அவையின் நேரத்தை நிர்ணயம் செய்து கட்டுப்படுத்தி, விவாத நடைமுறைகளைக் கையாளுகிறது.
- இது மொத்தம் 26 உறுப்பினர்களைக் கொண்டது என்பதோடு அதில் 15 உறுப்பினர்கள் மக்களவையினையும், மீதமுள்ள 11 உறுப்பினர்கள் "மாநிலங்களவையினையும்" சேர்ந்தவர்கள்.

## இயற்கை முறையில் உற்பத்திப் பொருட்களுக்கான ஒரு பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம்





- தேயிலை மற்றும் மருத்துவத் தாவரங்கள் உட்பட இயற்கை முறையில் உற்பத்தி செய்யப் படும் பொருட்களின் வர்த்தகத்தினை எளிதாக்குவதற்காக இந்தியா மற்றும் தைவான் ஆகிய நாடுகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு ஒப்பந்தம் ஆனது நடைமுறைக்கு வந்துள்ளது.
- பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் (MRA) எனப்படும் இது இரட்டைச் சான்றிதழ் வழங்கீட்டு முறைகளை தவிர்ப்பதன் மூலம் நன்கு இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் ஏற்றுமதியை எளிதாக்கும்.
- இந்தியாவின் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) மற்றும் தைவானின் வேளாண்மை மற்றும் உணவு முகமை ஆகியவை பரஸ்பர அங்கீகார ஒப்பந்தத்தினைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள முகமைகளாகும்.

## 4வது ICCPR மனித உரிமைகள் மதிப்பாய்வு

- குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவின் நான்காவது மதிப்பாய்வினை இந்தியா வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

- ❖ இந்தக் குழுவானது வருடாந்திர ரீதியாக அனைத்து நாடுகளின் அறிக்கைகளையும் மதிப்பாய்வு செய்து மதிப்பீடுகளையும் பரிந்துரைகளையும் வழங்குகிறது.
- ❖ இந்திய அரசானது 1979 ஆம் ஆண்டில் ICCPR உடன்படிக்கையில் ஒரு பங்குதாரராக இடம் பெற்றது என்பதோடு இந்திய அரசானது கடைசியாக 1997 ஆம் ஆண்டில் இத்தகைய மதிப்பாய்விற்கு உட்பட்டது என்ற வகையில் இது வரையில் இது போன்ற மூன்று மதிப்பாய்வுகளுக்கு உட்பட்டுள்ளது.

## பொருளாதார ஆய்வறிக்கை 2023-24




- ❖ பொருளாதார ஆய்வறிக்கை என்பது சமீபத்தில் நிறைவான நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் குறித்த விரிவான ஆய்வு அல்லது வருடாந்திர அறிக்கை ஆகும்.
- ❖ ஏற்றுமதியைப் பாதிக்கும் உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.5 முதல் 7 சதவீதமாக உயர வாய்ப்புள்ளது.
- ❖ 2024-25 ஆம் ஆண்டிற்கான கணிக்கப்பட்ட வளர்ச்சி மதிப்பானது, முந்தைய நிதி ஆண்டில் மதிப்பிடப்பட்ட 8.2 சதவீதப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை விட மிக குறைவாக உள்ளது.
- ❖ 2023 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.4 சதவீதமாக இருந்த நிதிப் பற்றாக்குறையானது 2024 ஆம் நிதியாண்டில் 5.6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- ❖ மூலதனச் செலவினமானது வருடாந்திர அடிப்படையில் 28.2 சதவீதம் அதிகரித்து 2020 ஆம் நிதியாண்டின் அளவை விட 2.8 மடங்கு அதிகமாக 2024 ஆம் ஆண்டில் 9.5 லட்சம் கோடியாக இருந்தது.
- ❖ 2023 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.9% (அல்லது 10.5 லட்சம் கோடிகள்) ஆக இருந்த பயனுள்ள மூலதனச் செலவினமானது, 2024 ஆம் நிதியாண்டில் 4.2% ஆக உயர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.5 லட்சம் கோடியாக இருந்தது.
- ❖ 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளி நாட்டுக் கடன் மதிப்பு 18.7 சதவீதமாக உள்ளது.
- ❖ 2023-24 ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கையின் படி, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி அந்நியச் செலாவணி கையிருப்பு மற்றும் மொத்த கடன் விகிதம் 97.4 சதவீதமாக உள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு அனுப்பப்படும் பண வரவானது, 3.7% அதிகரித்து 124 பில்லியன் டாலராகவும், 2025 ஆம் ஆண்டில் 4% அதிகரித்து 129 பில்லியன் டாலராகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் 3.8% ஆக இருந்த நுகர்வோர் உணவு விலைக் குறியீட்டின் (CFPI) அடிப்படையிலான உணவுப் பணவீக்கம் ஆனது 2023 ஆம் நிதியாண்டில் 6.6% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 7.5% ஆகவும் அதிகரித்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தியானது 329.7 மில்லியன் டன்கள் என்ற வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி சற்று குறைந்து சுமார் 328.8 மில்லியன் டன்னாக உள்ளது.
- மொத்தமுள்ள 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுள் 29 மாநிலங்களில் பண வீக்க விகிதம் 6 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது.

## தேசிய நிலச்சரிவு முன்னறிவிப்பு மையம்





- மத்திய அரசானது கொல்கத்தாவில் தேசிய நிலச்சரிவு முன்னறிவிப்பு மையத்தினை (NLFC) திறந்துள்ளது.
- இது நிலச்சரிவினால் பாதிக்கப்படக் கூடிய அனைத்து மாநிலங்களுக்கும் முன்கூட்டிய எச்சரிக்கை அறிவிப்புகளை வழங்கும்.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் நாடு முழுவதும் பிராந்திய நிலச்சரிவு முன் எச்சரிக்கை அமைப்பினை (LEWS) செயல்படுத்துகிறது.
- பனிப்படர்ந்தப் பகுதியைத் தவிர்த்து, தோராயமாக 0.42 மில்லியன் சதுர கி.மீ (நிலப் பரப்பில் 12.6%) பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது.
- இமயமலை மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளானது, குறிப்பாக மலைப்பாங்கான நிலப்பரப்பு மற்றும் அதிக மழைப் பொழிவு காரணமாக கடும் நிலச்சரிவுகளுக்கு உள்ளாகின்றன.

## 2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்

- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், தொடர்ந்து ஏழாவது முறையாக 2024-25 ஆம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையினை ஜூலை 23 ஆம் தேதியன்று தாக்கல் செய்தார்.
- இதனால், முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் சாதனையை அவர் முறியடித்து உள்ளார்.
- கடன்கள் தவிர்த்து மொத்த வரவுகள் மற்றும் மொத்தச் செலவினங்கள் முறையே 32.07 லட்சம் கோடி ரூபாய் மற்றும் 48.21 லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- நிகர வரி வரவுகள் 25.83 லட்சம் கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9% ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- மேலும், அரசாங்கம் அடுத்த ஆண்டு நிதிப் பற்றாக்குறையை 4.5 சதவீதத்திற்கும் கீழ் எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் தேதியிடப்பட்ட பத்திரங்கள் மூலம் மொத்த மற்றும் நிகரச் சந்தைக் கடன்கள் முறையே 14.01 லட்சம் கோடி ரூபாய் மற்றும் 11.63 லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- அவர் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் மூன்று புதிய ஊழியர்கள் சார்ந்த ஊக்கத் திட்டங்களை அறிவித்துள்ளார்.
- எந்தவொரு அரசாங்கத் திட்டங்களிலிருந்தும் இது வரை பயனடையாத மாணவர்கள் உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் கல்வி பெறுவதற்காக 10 லட்சம் ரூபாய் வரை நிதியுதவிக் கடன்களைப் பெறுவர்.
- 2025 ஆம் நிதியாண்டில் புதிய வருமான வரி வரம்புகளின் கீழ், சம்பளம் பெறும் ஊழியர்களுக்கான நிலையான வரி விலக்கு வரம்பானது 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- தங்கம் மற்றும் வெள்ளி மீதான அடிப்படை சுங்க வரியினை 6 சதவீதமாகவும், பிளாட்டினம் மீது 6.4 சதவீதமாகவும் குறைக்க இந்த நிதிநிலை அறிக்கையில் முன் மொழியப்பட்டது.
- நிதியமைச்சர் தனது நிதிநிலை அறிக்கை உரையில் பீகார் மாநிலத்திற்கான பல்வேறு திட்டங்களை அறிவித்தார் என்பதோடு இந்தத் திட்டங்கள் "பூர்வோதயா" என்ற பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட கிழக்கு மாநிலங்களின் அனைத்து மேம்பாடுகளையும் உள்ளடக்கியது.
- பீகாரில் மொத்தம் 26,000 கோடி ரூபாய் செலவில் அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்க அரசாங்கம் நிதியுதவி அளிக்கும்.
- பெண்கள் தலைமையிலான மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காக, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்குப் பயனளிக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக வேண்டிஇந்த நிதிநிலை அறிக்கையில் 3 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது.
- ஆரம்ப நிலை பூஜ்ஜியம் முதல் 3 லட்சம் ரூபாய் வரையிலான வரிவிகித வரம்பைத் தவிர்த்து, மற்ற ஒவ்வொரு வரி வரம்புகளின் அளவும் மாறாமல் இருப்பதையடுத்து வரி விதிப்பு விகிதம் மாறாமல் உள்ளது.


- முன்பு 3 லட்சம் ரூபாயிலிருந்து 6 லட்சம் ரூபாய் ஆக இருந்த வரம்பானது தற்போது 3 லட்சம் ரூபாயிலிருந்து 7 லட்சம் ரூபாயாக விரிவுபடுத்தப் படும்.
- இருப்பினும், 5% என்ற வரிவிதிப்பு விகிதம் ஆனது மாறாமல் உள்ளது.
- இதே போல், மற்ற அடுக்குகள், அதாவது 6 முதல் 9 லட்சம் ரூபாய், 9 முதல் 12 லட்சம் ரூபாய், 12 முதல் 15 லட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேல் என்ற வரம்பானது 7 முதல் 10 லட்சம் ரூபாய், 10 முதல் 12 லட்சம் ரூபாய், 12 முதல் ரூபாய் 15 லட்சம் மற்றும் அதற்கு மேல் என்ற வரம்புகளாகத் திருத்தியமைக்கப்படும்.





## நிதிநிலை அறிக்கையின் ஒன்பது முன்னுரிமை பகுதிகள்

- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், தொடர்ந்து ஏழாவது முறையாக 2024-25 ஆம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையினை ஜூலை 23 ஆம் தேதியன்று தாக்கல் செய்தார்.
- அதில் நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய ஒன்பது பிரிவுகளை வகுத்துள்ளார். அவை பின்வருமாறு
    - வேளாண்மையில் உற்பத்தித்திறன் மற்றும் நெகிழ்திறன்
    - வேலைவாய்ப்பு மற்றும் திறன் அளிப்பு
    - உள்ளடக்கிய முறையிலான மனித வள மேம்பாடு மற்றும் சமூக நீதி
    - உற்பத்தி மற்றும் சேவைகள்
    - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் மேம்பாட்டிற்கான ஆதரவு
    - நகர்ப்புற மேம்பாடு
    - ஆற்றல் பாதுகாப்பு
    - உள்கட்டமைப்பு

- புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு.




## பொருளாதார ஆய்வறிக்கையில் மனநலப் பாதுகாப்பு




- 2015-16 ஆம் ஆண்டு தேசிய மனநலக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 10.6% இளம் பருவத்தினர் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- வெவ்வேறு கோளாறுகளுக்கான சிகிச்சையில் நிலவும் இடைவெளி 70% முதல் 92% வரை இருந்தது.
- 2023-24 ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கையானது, முதல் முறையாக கொள்கை பரிந்துரைகளில் இந்த சுகாதாரப் பிரச்சினை குறித்தும் அதன் முக்கியத்துவம் மற்றும் தாக்கங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கிறது.

- மேலும், கிராமப்புறப் பகுதிகள் (6.9%) மற்றும் நகர்ப்புறப் பெருநகரம் (மெட்ரோ) அல்லாதப் பகுதிகளுடன் (4.3%) ஒப்பிடும் போது நகர்ப்புறப் பெருநகரப் பகுதிகளில் (13.5%) மனநல பாதிப்பு அதிகமாக இருந்தது.
- கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு, சுமார் 11% மாணவர்கள் பதட்ட உணர்வுடனும், 14% பேர் தீவிர உணர்ச்சிகளுடனும் மற்றும் 43% பேர் மனநிலை மாற்றங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஓய்வூதியத் திட்டம் 'VATSALYA'


- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்கால ஓய்வூதியத்திற்குப் பங்களிக்கும் வகையில், சிறார்களுக்கான ஒரு புதிய வகை ஓய்வூதியத் திட்டத்தினை நிதியமைச்சர் அறிமுகப்படுத்தினார்.
- சிறார்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் ஆனது NPS வத்சல்யா என அனுசரிக்கப் படுகிறது.
- இந்த வழக்கமான ஓய்வூதியத் திட்டத்தில் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் தங்கள் பங்களிப்பினை மேற்கொள்ளலாம்.
- குழந்தை 18 வயதை அடைந்தவுடன் இந்தத் திட்டம் வழக்கமான NPS திட்டமாக மாற்றப் படும்.
- தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) என்பது 18 முதல் 70 வயதிற்குட்பட்டக் குடிமக்கள் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் உட்பட அனைத்துக் குடிமக்களுக்குமான ஒரு தன்னார்வ ஓய்வூதிய அமைப்பாகும்.




## U-WIN இணைய தளம்

- 2030 ஆம் ஆண்டில் எந்தவொரு தடுப்பூசிகளையும் பெறாத குழந்தைகளின் எண்ணிக்கையை பாதியாகக் குறைப்பதற்கான முக்கியமான படிநிலைகளில் U-Win இணைய தளமும் ஒன்றாகும்.
- U-WIN என்பது குழந்தைப் பருவ தடுப்பூசிக்கான இயங்கலை தடுப்பூசி மேலாண்மை இணைய தளம் ஆகும். இது கோவிட்-19 பெருந்தொற்றின் போது பயன்படுத்தப்பட்ட CoWIN தளம் போன்றதாகும்.

- ஆறு வயது வரையிலான குழந்தைகள், மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆதார் போன்ற அரசாங்க அடையாள அட்டை மற்றும் அவர்களின் கைபேசி எண்களைப் பயன்படுத்தி U-WIN இணைய தளத்தில் பதிவு செய்யப்படுகிறார்கள்.
- பதிவு செய்தவுடன், ஒரு குழந்தைக்கு கொடுக்கப்பட்ட அனைத்து 25 தடுப்பூசிகளின் தவணைகள் பற்றிய பதிவுகளையும் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு கொடுக்கப் பட்ட இரண்டு தடுப்பூசிகள் பற்றிய தகவல்களும் சேர்க்கப் படும்.
- பெற்றோர்கள் தங்கள் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்களைப் பயன்படுத்தி எண்ணிம முறையிலான தடுப்பூசி சான்றிதழ்களைப் பதிவிறக்கம் செய்யலாம்.
- இது அனைத்துப் பிறப்புகளையும், பிறக்கும் போது கொடுக்கப்படும் போலியோ, ஹெபடைடிஸ் B மற்றும் காசநோய்க்கு எதிரான மூன்று தடுப்பூசிகள், குழந்தையின் பிறப்பு எடை மற்றும் பிறக்கும் போது காணப்பட்ட உடல் குறைபாடுகள் ஆகியவை குறித்த தகவல்களையும் பதிவு செய்கிறது.




## KIRTI திட்டம்

- கேலோ இந்தியா திறமைகளை அடையாளம் காணல் (KIRTI) திட்டம் ஆனது இந்த ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியன்று சண்டிகரில் தொடங்கப்பட்டது.
- நவீன தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உலகளாவியப் பல்வேறு சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்தத் திறமைகளை அடையாளம் காணும் கட்டமைப்பை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- KIRTI ஆனது விளையாட்டுகளை விளையாட விரும்பும் ஆனால் வழிகாட்டுதல் இல்லாத குழந்தைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி நாட்டின் ஒவ்வொரு தொகுதியையும் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது அடிமட்டத் திறமைகளை அடையாளம் காணும் செயல்முறையை ஒரே தளத்தில் நெறிப்படுத்த முயல்கிறது.
- முதல் கட்டத்தில், 70 மையங்களில் மேற்கொள்ளப்பட்ட 3,62,683 பதிவுகளில், 51,000 மதிப்பீடுகள் ஆனது 28 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மேற்கொள்ளப் பட்டன.
- 2036 ஆம் ஆண்டிற்குள் முன்னணி 10 விளையாட்டு நாடுகளில் ஒன்றாகவும், 2047 ஆம் ஆண்டில் முதல் ஐந்து இடங்களுக்குள் இடம் பெருவதற்குமான நாட்டின் இலக்குடன் இத்திட்டம் ஒன்றிணைந்துள்ளது.







## போஷான் டிராக்கர் செயலியின் 2024 ஜூன் மாதத் தரவு




- இந்திய நாட்டில் 0 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் சுமார் 17% எடை குறைந்த நபர்களாகவும், சுமார் 36% பேர் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 6% பேர் எடைக்கேற்ற வளர்ச்சி இல்லாதவர்களாகவும் உள்ளனர்.
- 6 வயதுக்குட்பட்ட சுமார் 8.57 கோடி குழந்தைகள் குறித்தத் தரவுகள் சேகரிக்கப் பட்டன.
- அவர்களில் சுமார் 35% பேர் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 17% பேர் மட்டுமே எடை குறைந்தவர்களாகவும், 5 வயதுக்குட்பட்ட 6% குழந்தைகள் எடைக்கேற்ற ஒரு வளர்ச்சி இல்லாதவர்களாகவும் காணப்பட்டனர்.

- இதில் உத்தரப் பிரதேசம் 46.36% வளர்ச்சி குன்றிய குழந்தைகள் விகிதத்துடன் முதல் இடத்திலும், அதைத் தொடர்ந்து 46.31% விகிதத்துடன் லட்சத்தீவுகளும் இடம் பெற்று உள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை முறையே 44.59% மற்றும் 41.61% என ஆபத்தான அளவிலான வளர்ச்சி குன்றிய குழந்தைகள் எண்ணிக்கை விகிதங்களைக் கொண்டுள்ளன.
- 13.22% குழந்தைகள் பாதிக்கப் பட்டுள்ளதையடுத்து, எடைக்கேற்ற வளர்ச்சி இல்லாத குழந்தைகள் விகிதமானது லட்சத்தீவில் மிக அதிக அளவில் பதிவாகியுள்ளது.
- இதில் பீகார் மற்றும் குஜராத் ஆகியவை முறையே 9.81% மற்றும் 9.16% வீதத்தில் அதிக எடைக்கேற்ற வளர்ச்சி இல்லாத குழந்தைகள் விகிதங்களைக் கொண்டுள்ளன.
- இதில் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், மத்தியப் பிரதேசம் 26.21% முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து 26.41% விகிதத்துடன் தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ இடம் பெற்றுள்ளன.
- லட்சத்தீவு இதிலும் 23.25% வீதத்தைக் கொண்டுள்ளது.
- கோவா மாநிலத்தில் குறைவாக 5.84% குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 0.85% குழந்தைகள் எடைக்கேற்ற வளர்ச்சி இல்லாதவர்களாகவும், 2.18% குழந்தைகள் எடை குறைந்தவர்களாகவும் உள்ளனர்.

## PM ஜன்ஜாதிய உன்னத் கிராம அபியான்

- பிரதான் மந்திரி ஜாதிய உன்னத் கிராம அபியான் திட்டமானது, பழங்குடியினச் சமூகங்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, பழங்குடியினர் பெரும்பான்மையான கிராமங்கள் மற்றும் இலட்சியமிகு மாவட்டங்களில் உள்ள பழங்குடியினக் குடும்பங்களுக்குத் திட்டத்தின் முழுப் பயனையும் அடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 63,000 கிராமங்களில் உள்ள 5 கோடி பழங்குடி மக்களுக்குப் பயனளிக்கிறது.



## மின்சார வாகனங்கள் ஊக்குவிப்புத் திட்டம் - 2024




- ❖ கனரகத் தொழில்துறை அமைச்சகம் ஆனது, 2024 ஆம் ஆண்டு மின்சார வாகனங்கள் ஊக்குவிப்பு திட்டத்தினை (EMPS 2024) மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிப்பதாக அறிவித்துள்ளது.
- ❖ இதற்கு கூடுதலாக 278 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.
- ❖ EMPS ஆனது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று 500 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது.
- ❖ மார்ச் மாதத்தில் FAME II திட்டம் காலாவதியானதைத் தொடர்ந்து, EMPS திட்டமானது ஆரம்பத்தில் நான்கு மாதங்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப் பட்டது.
- ❖ இந்தத் திட்டம் ஆனது தற்போது 5 லட்சத்துக்கும் அதிகமான மின்சார இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கும், சுமார் 61,000 மூன்று சக்கர மின்சார வாகன ஓட்டிகளுக்கும் மானிய உதவி வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.

## புதிய வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை

- ❖ மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில், வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் மூன்று முக்கியத் திட்டங்களை வெளியிடப் பட்டு உள்ளது.
- ❖ அடுத்த ஐந்தாண்டுகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு 2 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ திட்டம் A ஆனது ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் (EPFO) பதிவு செய்யப் பட்ட முதல் முறையாகப் பணியில் இணையும் ஊழியர்களுக்கு மூன்று தவணைகளில் 15,000 ரூபாய் வரையிலான ஒரு மாத ஊதியத்தின் நேரடிப் பலன் பரிமாற்றத்தை (DBT) வழங்கும்.
- ❖ திட்டம் B ஆனது உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

- பணிக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் EPFO பங்களிப்புகளின் அடிப்படையில் ஊழியர்கள் மற்றும் முதலாளிகள் இருவருக்கும் நேரடியாக ஊக்கத்தொகை வழங்கப் படும்.
- திட்டம் C ஆனது, இரண்டு ஆண்டுகளுக்கு என்று மாதம் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரை திருப்பி செலுத்துதலுடன் பெருநிறுவன முதலாளிகளுக்கான நிதி மானியத்தினையும் உள்ளடக்கியது.
- இது அங்கு பணியமர்த்தும் ஒவ்வொரு கூடுதல் பணியாளருக்கும் அவர்களின் EPFO பங்களிப்புகளைப் பொறுத்து வழங்குகிறது.




## NCB வருடாந்திர அறிக்கை 2023

- சர்வதேசப் போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் (INCB) ஆனது 2023 ஆம் ஆண்டின் வருடாந்திர அறிக்கையினை சமீபத்தில் வெளியிட்டது.
- இதன்படி, இளையோர்களிடையே போதைப்பொருள் நுகர்வு அதிகரித்து வருகிறது என்பதோடு சுமார் 10 கோடி இந்தியர்கள் போதைப் பொருள் பயன்படுத்துகிறார்கள்.
- இது 15 ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 2 கோடியாக இருந்தது.
- 2003 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தை விட மூன்று மடங்கு அதிகமான போதைப் பொருட்கள் ஆனது, 2014 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் கைப்பற்றப் பட்டுள்ளது.

**Major Narcotics Drugs & Controlled Substances Seized During 2018-2023**

| YEAR | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|
| Heroin | 1,258 | 3,231 | 3,838 | 7,197 | 5,410 | 2,986 |
| Opium | 4,307 | 4,488 | 5,212 | 5,161 | 3,805 | 8,533 |
| Morphine | 20 | 125 | 11 | 131 | 129 | 210 |
| Cannabis | 3,91,275 | 3,42,045 | 5,81,644 | 8,12,545 | 7,18,376 | 6,28,612 |
| Hashish | 3,911 | 3,572 | 6,643 | 4,197 | 3,495 | 3,320 |
| Cocaine | 35 | 66 | 19 | 364 | 218 | 292 |
| Ephedrine / Pseudo ephedrine | 337 | 686 | 841 | 325 | 1,001 | 969 |
| Acetic Anhydride | 9,717 | 214 | 121 | 24,265 | 333 | 40 |
| ATS | 431 | 1774 | 1,357 | 387 | 1,224 | 3,406 |

## ஷிக்சா சப்தா 2024




- ஷிக்சா சப்தா (கல்வி வாரம்) என்பது விழிப்புணர்வு மற்றும் இந்தியாவில் கல்வியின் முக்கியத்துவத்தை கொண்டாடுவதைப் பெரு நோக்கமாகக் கொண்ட ஒரு வருடாந்திர முன்னெடுப்பாகும்.
- இது அந்தந்த மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் சபையினால் (SCERT) மேற் கொள்ளப் படுகிறது.
- இந்த ஒரு வார அளவிலான நிகழ்வு ஆனது ஒத்துழைப்பை ஊக்குவிப்பதிலும், 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை அறிமுகப்படுத்திய கல்விச் சீர்திருத்தங்களை முன்னிலைப் படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது.

## நிதி ஆயோக் அமைப்பின் 9வது ஆளுகைக் குழுக் கூட்டம்

- நிதி ஆயோக் அமைப்பின் 9வது ஆளுகைக் குழு கூட்டத்திற்குப் பிரதமர் அவர்கள் தலைமை தாங்கினார்.
- 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றன ஆனால் 10 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தக் கூட்டத்தில் பங்கு பெற வில்லை.
- இந்த மாநாட்டின் போது, ஐந்து முக்கியப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்த பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அவை
    - **குடிநீர்**: அணுகல், அளவு மற்றும் தரம்;

- **மின்சாரம்**: தரம், செயல்திறன் மற்றும் நம்பகத் தன்மை;
- **சுகாதாரம்**: அணுகல், மலிவான விலை, மற்றும் மருத்துவ நலச் சேவையின் தரம்;
- **பள்ளிக் கல்வி**: அணுகல் மற்றும் தரம் மற்றும் பள்ளிகளுக்கான நிலம் மற்றும்
- **சொத்து**: அணுகல், எண்ணிமமயமாக்கல், பதிவு மற்றும் உரிம மாற்றம்.




## கனிம வளங்கள் நிறைந்த நிலங்களுக்கு வரி விதிக்கும் உரிமை

- 1957 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டச் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் சுரங்க நிலங்கள் மற்றும் கற் குவாரிகளுக்கு வரி விதிக்க மாநிலச் சட்டமன்றங்களின் அதிகாரம் கட்டுப்படுத்தப் பட வில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இது மத்திய அரசின் கட்டுப்பாடுகளில் இருந்து மாநில அரசுகளை விடுவித்து, கூட்டாட்சிக் கொள்கைகளுடன் ஒத்துப் போகிறது.
- அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் மாநிலப் பட்டியலில் உள்ளீடு 49 (நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மீதான வரி) மற்றும் 246வது சரத்து ஆகியவற்றின் கீழ் சுரங்கங்கள் மற்றும் குவாரிகளுக்கு வரி விதிக்க மாநிலச் சட்டமன்றங்கள் அந்த அதிகாரத்தைப் பெறுகின்றன.
- கனிம வளம் கொண்ட நிலங்கள் 49வது உள்ளீடில் உள்ள 'நிலங்கள்' என்ற ஒரு விளக்கத்திற்குள் அடங்கும்.
- ஆனால் மாநிலப் பட்டியலில் உள்ள உள்ளீடு 50 ஆனது, கனிம மேம்பாடு தொடர்பான சட்டங்கள் மூலம் கனிம உரிமைகள் மீதான வரிகளுக்கு "ஏதேனும் வரம்புகளை" விதிக்கப் பாராளுமன்றத்திற்கு அனுமதியளித்துள்ளது என்று மத்திய அரசு வாதிட்டது.
- சுரங்கங்களை அரசுக்கு குத்தகைக்கு விடுபவர்கள் செலுத்தும் ராயல்டி ஆனது (தனிச் சிறப்புரிமை கட்டணம்) ஒரு வரி அல்ல என்று உச்ச நீமன்றத்தின் தீர்ப்பானது மேலும் தெளிவு படுத்தியுள்ளது.
- இந்த வழக்கு 1989 ஆம் ஆண்டின் தமிழ்நாடு எதிர் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட ஒரு வழக்கின் மூலத்தில் இருந்து தோன்றியதாகும்.

> Royalty is not a tax. **Royalty is a contractual consideration paid by the mining lessee to lessor for enjoyment of mineral rights.** The liability to pay royalty arises out of the contractual conditions of the mining lease. **Payments made to the govt cannot be deemed to be a tax** merely because the statute provides for their recovery as arrears **—SC's majority order**
>
> The **state legislatures have legislative competence** under Article 246 read with Entry 49-List II **to tax lands and buildings but not lands which comprise of mines and quarries** or have mineral deposits as mineral bearing lands do not fall within the description of lands (under Entry 49-List II)
>
> **—Justice B V Nagarathna's dissenting order in 8:1 verdict**

## இந்தியாவின் அணுசக்தி திறன் 2031-32


- தற்போது 8180 மெகாவாட்டாக உள்ள நிறுவப்பட்ட அணுசக்தி திறன் ஆனது, 2031-32 ஆம் ஆண்டிற்குள் 22480 மெகாவாட்டாக அதிகரிக்கும்.
- கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் அணுசக்தி உற்பத்தி திறனில் அணு ஆற்றல் ஆனது 70 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டில் 4,780 மெகாவாட்டாக இருந்த இந்த அளவு ஆனது தற்போது 8,180 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.
- அணுமின் நிலையங்களில் ஆண்டுதோறும் பதிவாகும் மின் உற்பத்தியானது, 2013-14 ஆம் ஆண்டில் 34,228 மில்லியன் அலகுகளாக இருந்த நிலையில் இது 2023-24 ஆம் ஆண்டில் 47,971 மில்லியன் அலகுகளாக அதிகரித்துள்ளது.



# சர்வதேசச் செய்திகள்

## உலகில் முதல் முறையாக வாயுக்களை வெளியிடும் மாடுகள் மீது கார்பன் வரி

- டென்மார்க் கால்நடை விவசாயிகளின் பசுக்கள், செம்மறி ஆடுகள் மற்றும் பன்றிகள் வெளியிடும் பசுமை இல்ல வாயுக்களுக்கு 2030 ஆம் ஆண்டு முதல் வரி விதிக்க உள்ள முதல் நாடு ஆக மாறியுள்ளது.
- புவி வெப்பமடைதலுக்குப் பங்களிக்கும் சக்தி வாய்ந்த வாயுக்களில் ஒன்றான மீத்தேன் உமிழ்வின் முக்கிய ஆதாரத்தினை இந்த வரி இலக்காகக் கொண்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டில் இருந்த பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் 70% குறைக்க டென்மார்க் அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மீத்தேன் தாக்கம் ஆனது, கார்பன் டை ஆக்சைடின் தாக்கத்தினை விட குறைவாக விவாதிக்கப்பட்டாலும், 20 வருட காலப்பகுதியில் சுமார் 87 மடங்கு அதிக வெப்பத்தை உட்கிரகித்து வைக்கிறது.
- ஒரு மாடு ஆண்டிற்கு முதன்மையாக ஏப்பம் விடுதல் மூலம் 200 கிலோ மீத்தேன் வரை, உருவாக்குகிறது.
- டென்மார்க் நாட்டில் ஒரு பொதுவான பசு ஆண்டிற்கு 6 மெட்ரிக் டன் (6.6 டன்) கார்பன் டை ஆக்சைடிற்கு சமமான மீத்தேன் வாயுவினை உற்பத்தி செய்கிறது.
- நியூசிலாந்து 2025 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வரும் வகையில் இதே போன்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியது ஆனாலும் கடுமையான விமர்சனங்கள் மற்றும் அரசாங்க மாற்றத்திற்குப் பிறகு அது ரத்து செய்யப்பட்டது.




## விண்வெளி MAITRI திட்டம் - ஆஸ்திரேலியா

- இந்திய விண்வெளி நிறுவனம் ஆனது, ஆஸ்திரேலிய நிறுவனம் தயாரித்த செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தவுள்ளது.
- இந்த ஆய்வுத் திட்டத்திற்கு 'space MAITRI' (ஆஸ்திரேலியா-இந்தியாவின் தொழில் நுட்பம், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களுக்கான ஆய்வுத் திட்டம்) என்று பெயரிடப் பட்டுள்ளது.

- இது SSLV எனப்படும் இந்தியாவின் மிகச்சிறிய மற்றும் புதிய ஏவுகலம் மூலம் ஏவப் படும் என்பதோடு மேலும் அதில் 'ஆப்டிமஸ்' எனப்படும் 450 கிலோ எடை கொண்ட ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய செயற்கைக்கோளும் விண்ணில் ஏவப்படும்.
- இந்த ஏவுதலுக்கான வணிக ஒப்பந்தம் ஆனது, 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இது இஸ்ரோவின் வணிகப் பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) மற்றும் ஆஸ்திரேலிய நிறுவனமான விண்வெளி இயந்திரங்கள் உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டது.
- ஆப்டிமஸ் செயற்கைக்கோள் என்பது இதர மற்ற செயற்கைக் கோள்களின் சுற்றுப் பாதையில் ஆய்வு செய்வதற்கும் இதர சில வகையான பழுதுபார்ப்பு வேலைகளைச் செய்வதற்குமான ஒரு தனித்துவமான வன்பொருள் ஆகும்.

## சர்வதேச விண்வெளி நிலையத்தினை அழிப்பதற்கு ஒப்பந்தம்


- சர்வதேச விண்வெளி நிலையத்தினை (ISS) அழித்து அதைப் பூமியில் பாதுகாப்பாக தரையிறக்குவதற்கு 843 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தினை ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்திற்கு வழங்குவதாக நாசா அறிவித்துள்ளது.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் வடிவமைத்தச் சுற்றுப்பாதை விலக்க வாகனம் ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குப் பிறகு சர்வதேச விண்வெளி நிலையத்தின் செயல்பாட்டு சுழற்சி முடிவடையும் போது, அதனை அதன் சுற்றுப்பாதையில் இருந்து வெளியேற்ற வேண்டி பயன்படும்.
- ஒரு கால்பந்து மைதான அளவிலான இந்த விண்வெளி நிலையம் ஆனது, புவியின் வளிமண்டலத்தில் சுமார் 17000 mph (27500 km/h) வேகத்தில் பயணித்த பிறகு கடலில் விழச் செய்யப் படும்.
- சர்வதேச விண்வெளி நிலையமானது, முதன்முதலில் 1998 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டு, மற்றும் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஜப்பான் மற்றும் ரஷ்யாவில் உள்ள விண்வெளி நிறுவனங்களால் இயக்கப்படுகிறது.

## சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் 'ஐந்து கோட்பாடுகள்' - 70 ஆண்டுகள்

- தனது வெளியுறவுக் கொள்கை கருத்தாக்கமான அமைதியான சகவாழ்வின் ஐந்து கோட்பாடுகளின் 70வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் சீனா நினைவு நிகழ்வுகளை நடத்தி வருகிறது.
- இது முதன்முதலில் 1954 ஆம் ஆண்டில் இந்தியாவுடனான ஒரு ஒப்பந்தத்தில் வெளிப் படுத்தப் பட்டது.
- சீனாவின் ஐந்து கோட்பாடுகள் இந்தியாவில் பஞ்சசீலக் கொள்கை என்று அழைக்கப் படுகிறது.
- 1954 ஆம் ஆண்டில், திபெத் தொடர்பாக இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை தொடங்கி வைத்த போது, சீனப் பிரதமர் சூ என் லாய் அமைதியான சகவாழ்விற்கான ஐந்து கோட்பாடுகளை முன்மொழிந்தார்.

- திபெத் பிராந்தியத்துடனான வர்த்தகம் மற்றும் தொடர்புகளுக்கான ஒப்பந்தம் என அறியப்படும் பஞ்சசீல ஒப்பந்தம் ஆனது 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் தேதியன்று கையெழுத்தானது.
- சீன-இந்திய ஒப்பந்தத்திற்கு பிறகு ஓராண்டு கழித்து, இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் நடைபெற்ற முதல் ஆப்பிரிக்க-ஆசிய மாநாட்டில் இந்த ஐந்து கோட்பாடுகள் முக்கியமாக இடம் பெற்றது.

## INSTC - முதல் ஏற்றுமதி




- சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித்தடத்தின் (INSTC) வழியாக நிலக்கரி ஏற்றப் பட்ட முதல் இரண்டு இரயில்களை இந்தியாவிற்கு அனுப்பியுள்ளதாக ரஷ்யாவின் தேசிய இரயில்வே நிறுவனம் அறிவித்துள்ளது.
- முதல் முறையாக, குஸ்பாஸ் நிலக்கரி ஏற்றப்பட்ட முதல் இரண்டு இரயில்கள் சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித் தடத்தில் இந்தியாவை நோக்கிப் பயணிக்கின்றன.
- கெமரோவோ பகுதியில் இருந்து இந்த இரயில்கள் புறப்பட்டுள்ளன.
- அவை கஜகஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் வழியாக INSTC வழித்தடத்தின் கிழக்குக் கிளை வழியாக ஈரானியத் துறைமுகமான பந்தர் அப்பாஸ் வரையில் பயணித்தன.
- INSTC என்பது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்ற ஒரு பகுதியினை இந்தியாவின் மும்பை துறைமுகத்துடன் இணைக்கும் 7,200 கிலோமீட்டர்கள் (4,500 மைல்கள்) நீளம் கொண்ட பல் முனை வழித்தடம் ஆகும்.
- இது இரயில்வே, சாலை வலையமைப்பு மற்றும் துறைமுகங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியது.
- ஆரம்பத்தில் NSTC திட்டம் என்று அழைக்கப்பட்ட இந்த INSTC ஒப்பந்தமானது 2002 ஆம் ஆண்டில் ரஷ்யா, ஈரான் மற்றும் இந்தியாவினால் கையெழுத்திடப்பட்டதையடுத்து, அவை அதன் ஸ்தாபன உறுப்பினர்களாக உள்ளன.

## முப்பரிமான உருவம் கொண்ட ரூபாய் தாள்கள்

- நிதி, பெண்கள் கல்வி மற்றும் மருத்துவ அறிவியலில் முன்னோடிகளாக விளங்கும் நபர்களின் முப்பரிமாண உருவப்படங்களைக் கொண்ட தனது முதல் புதிய ரூபாய் தாள்களை ஜப்பான் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒருவர் பார்க்கும் கோணத்தைப் பொறுத்து வெவ்வேறு திசைகளை எதிர்கொள்ளும் வகையில் உருவப் படங்களின் முப்பரிமாணங்களை உருவாக்க ஒரு தனித்துவமானத் தொழில்நுட்பத்தினை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.
- 10,000-யென் மதிப்புக் கொண்ட தாளில் "ஜப்பானிய முதலாளித்துவத்தின் தந்தை" என்று அழைக்கப்படும் எய்ச்சி ஷிபுசாவா (1840-1931) அவர்களின் உருவம் அச்சிடப் பட்டுள்ளது.
- 5,000-யென் மதிப்புக் கொண்ட தாளில் பெண் கல்வியில் முன்னோடியான உமேகோ சுடா (1864-1929) சித்தரிக்கப்பட்டுள்ளார்.
- 1,000 யென் மதிப்பு கொண்ட தாளில் ஷிபாசபுரோ கிடாசாடோ (1853-1931) சித்தரிக்கப் பட்டுள்ளார்.





## ஸ்பெயின் நாட்டின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி

| | Country / dependency | % ren. | Ren. gen. (GWh) | % hydro | % wind | % solar | % bio. | % geo. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Ethiopia | 100% | 15,817 | 94.5% | 5.2% | 0.2% | 0.1% | 0% |
| 2 | Bhutan | 100% | 10,823 | 100% | 0% | 0% | 0% | 0% |
| 3 | Albania | 100% | 8,963 | 99.5% | 0% | 0.5% | 0% | 0% |
| 4 | South Georgia and the South Sandwich Islands | 100% | 0.8 | 98.7% | 1.3% | 0% | 0% | 0% |
| 5 | Nepal | 100% | 8,107 | 98.7% | 0% | 1.2% | 0.1% | 0% |
| 6 | Paraguay | 100% | 40,848 | 99.3% | 0% | 0% | 0.7% | 0% |
| 7 | Iceland | 100% | 19,617 | 70.4% | 0.03% | 0.03% | 0% | 29.6% |
| 8 | Costa Rica | 100% | 12,656 | 73.4% | 12.4% | 0.8% | 0.7% | 12.7% |

- ஸ்பெயின் நாடானது, 2024 ஆம் ஆண்டில் முதல் பாதியில் சுமார் 60 சதவீத மின்சார ஆற்றலினைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து உற்பத்தி செய்தது.
- ஓராண்டிற்கு முன்னதாக மொத்த ஆற்றல் உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு 51 சதவீதமாக இருந்தது.
- ஸ்பெயின் அரசாங்கத் திட்டத்தின் கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் தனது ஐந்தில் நான்கு பங்கு மின்சார ஆற்றலைப் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## GenAI காப்புரிமைகள்

- 2014 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 38,000க்கும் மேற்பட்ட காப்புரிமைகளைத் தாக்கல் செய்து தரவை உருவாக்கும் செயற்கை நுண்ணறிவுக்கான காப்புரிமைகளை பெறும் உலக நாடுகளில் சீனா ஆதிக்கம் செலுத்துகிறது.
- இது அமெரிக்காவைச் சொந்தமாகக் கொண்ட கண்டுபிடிப்பாளர்களால் தாக்கல் செய்யப் பட்டதை விட ஆறு மடங்கு அதிகம் ஆகும்.
- தரவை உருவாக்கும் AI என்பது ஒரு வகை செயற்கை நுண்ணறிவு ஆகும் என்ற நிலையில் இது பயனர்கள் உரை, படங்கள், இசை, ஆடியோ மற்றும் வீடியோக்கள் போன்ற உள்ளடக்கத்தை உருவாக்க அனுமதிக்கிறது.
- புவியியல் ரீதியாக, சீனா 38,210 கண்டுபிடிப்புகளுடன், அமெரிக்கா (6,276), கொரியா குடியரசு (4,155), ஜப்பான் (3,409) மற்றும் இந்தியாவை (1,350) விட மிக முன்னணியில் உள்ளது.




## பிரிட்டனின் புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர்

- பிரிட்டன் பிரதமராக ரிஷி சுனக்கிற்குப் பதிலாக தொழிலாளர் கட்சித் தலைவர் கெய்ர் ஸ்டார்மர் நியமிக்கப் பட்டுள்ளார்.

- 650 இடங்களைக் கொண்ட மக்கள் அவையில், பதவி விட்டு விலகும் பிரதமர் ரிஷி சுனக்கின் பழமைவாதக் கட்சியுடனான 121 (-250) போட்டியில் 412 (+211) இடங்களைப் பெற்று தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது.
- இதன் விளைவாக பழமைவாதக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தின் 14 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்தது.
- தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த பிரித்தானியத் தமிழர் உமா குமரன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## 24வது SCO உச்சி மாநாடு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) 2024 ஆம் ஆண்டு உச்சி மாநாடு கஜகஸ்தானின் அஸ்தானா நகரில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் அஸ்தானா பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதோடு மேலும், ஆற்றல், பாதுகாப்பு, வர்த்தகம், நிதி மற்றும் தகவல் பாதுகாப்பு தொடர்பான 25 உத்தி சார் ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 10வது உறுப்பினர் நாடாக பெலாரஸ் இடம் பெற்றுள்ளது.
- ஷாங்காய் 5 அமைப்பானது 1996 ஆம் ஆண்டில் 5 உறுப்பினர்களுடன் உருவானது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது 2001 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதியன்று ஷாங்காய் நகரில் நிறுவப் பட்டதோடு, உஸ்பெகிஸ்தானை அந்த அமைப்பின் ஆறாவது உறுப்பினராக இணைத்தது.
- ஆப்கானிஸ்தான் மற்றும் மங்கோலியா ஆகியவை பார்வையாளர் நாடுகள் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

## RIMPAC கடற்படைப் பயிற்சி



- ஹவாயில் நடைபெற்ற உலகின் மிகப்பெரிய கடற்படை இராணுவப் போர் பயிற்சியான பசிபிக் பெருங்கடலின் விளிம்பில் உள்ள நாடுகளின் பெரும் பயிற்சியில் (RIMPAC) இந்தியக் கடற்படை இணைந்துள்ளது.
- 29 நாடுகள், 40 மேற்பரப்பு தளக் கப்பல்கள், மூன்று நீர்மூழ்கிக் கப்பல்கள், 150க்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் சுமார் 25,000க்கும் மேற்பட்ட வீரர்கள் இப்பயிற்சியில் பங்கேற்கின்றனர்.
- இந்தியக் கடற்படையானது RIMPAC பயிற்சிக்காக INS ஷிவாலிக் எனப்படும் முன்னணி போர்க்கப்பலினை ஈடுபடுத்தியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு RIMPAC பயிற்சியின் கருத்துரு, "Partners: Integrated and Prepared" என்பது ஆகும்.

## இயங்கலையில் பரவும் தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதற்கான கட்டமைப்பு




- தகவல் ஒருமைப்பாட்டிற்கான உலகளாவிய கோட்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.
- இந்த விரிவான கட்டமைப்பானது எண்ணிம உலகில் பரவும் பல தவறான தகவல், தொடர்பற்ற தகவல் மற்றும் வெறுப்பினை உண்டாக்கும் கடும் பேச்சு ஆகியவற்றால் ஏற்படும் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மனித உரிமைகளை நிலைநிறுத்துகின்ற மற்றும் அமைதியான சமூகங்கள் மற்றும் நிலையான எதிர்காலத்தை மேம்படுத்துகின்ற வளமான மற்றும் பாதுகாப்பான தகவல் அளிப்பு சூழல்களை உருவாக்குவதை இந்தக் கொள்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## நேட்டோ உச்சி மாநாடு 2024

- அமெரிக்காவின் வாஷிங்டன் 2024 ஆம் ஆண்டிற்கான நேட்டோ உச்சி மாநாட்டினை நடத்துகிறது.

- இது புதிய உறுப்பினர்களான சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகியவை பங்கேற்கும் முதல் மாநாடாகும் என்பதோடு இதன் ஓய்வு பெறும் பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் பங்கேற்கும் கடைசி மாநாடாகும்.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு என்பது அமெரிக்கா மற்றும் கனடாவுடன் சேர்த்து பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளான 32 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு அரசியல் மற்றும் இராணுவக் கூட்டணியாகும்.
- 2024 ஆம் ஆண்டு என்பது இந்தக் கூட்டணியின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

## ரைசோடோப் திட்டம்

- தென்னாப்பிரிக்க நாட்டின் அறிவியலாளர்கள் எல்லைப் பறக் காவல் பகுதிகளில் காண்டாமிருங்கங்களை எளிதாக கண்டறிவதற்காக வேண்டி உயிரோடுள்ள காண்டா மிருகத்தின் கொம்புகளுக்குள் கதிரியக்கப் பொருளைச் செலுத்தியுள்ளனர்.
- அவர்கள் காண்டாமிருங்கங்களின் கொம்பில் ஒரு சிறிய துளையிட்டு, ரேடியோ கதிர் வெளியிடும் ஐசோடோப்பை உட்செலுத்தி, கொம்பின் மீது 11,000 நுண்குறிகளை பதித்துள்ளனர்.
- இந்த முன்னோடித் திட்டம் ஆனது, வேட்டையாடுதலைத் தடுப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்த நாடானது, உலகின் காண்டாமிருகங்களில் பெரும்பங்கு எண்ணிக்கையினைக் கொண்டுள்ளது.
- அந்தக் கதிரியக்கப் பொருள் ஆனது, "அவற்றின் கொம்புகளை அடிப்படையில் மனித நுகர்வுக்கு விஷத் தன்மை கொண்டதாக மாற்றிப் பயனற்றதாக மாற்றும்".


## ஈரானின் அடுத்த அதிபர்




- 69 வயதான முன்னாள் இதய அறுவை சிகிச்சை நிபுணரான மசௌத் பெஷெஸ்கியான் ஈரான் நாட்டின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

- அவர் குடிமையியல் உரிமைகள், அதிக பாலினச் சமத்துவம் மற்றும் சமூக-பொருளாதார மேம்பாடு, அத்துடன் சர்வதேச சமூகத்துடனான அதிக ஈடுபாடு ஆகியவற்றை வலியுறுத்துபவர் ஆவார்.
- பொருளாதாரத் தடைகள் மற்றும் பல ஆண்டுகளாக மோசமான நிர்வாகத்தால் மோசமடைந்து வந்த ஈரான் அதிக பணவீக்கம் மற்றும் வேலைவாய்ப்பின்மை நிலைகளை எதிர்கொண்டுள்ளது.
- ஈரான் 1979 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் இராணுவத் தடைகளை எதிர் கொண்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில், ஈரான் நாடானது P5+1 (அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, ரஷ்யா, பிரான்சு, சீனா மற்றும் ஜெர்மனி) மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் "ஈரான் அணு சக்தி ஒப்பந்தம்" என்று அறியப்படும் ஒரு விரிவான கூட்டுச் செயல் திட்டத்தில் (JCPOA) கையெழுத்திட்டது.

## ரஷ்ய விண்வெளி நிலையம்



- 2033 ஆம் ஆண்டிற்குள் ரஷ்ய நாட்டின் சுற்றுப்பாதை விண்வெளி நிலையத்தினை உருவாக்குவதற்கான திட்டத்திற்கு ரஷ்யா ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம் முதலில் அறிவியல் மற்றும் ஆற்றல் வழங்கீட்டுத் தொகுதிகள் 2027 ஆம் ஆண்டில் அனுப்பப்படும்.
- உலக முனையம், நுழைவாயில் மற்றும் விண்வெளித் தளப் பெட்டகம் ஆகிய மூன்று முக்கிய தொகுதிகள் 2030 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்படும்.
- மற்ற இரண்டு முக்கியத் தொகுதிகள் 2033 ஆம் ஆண்டிற்குள் விண்ணில் செலுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- தற்போது முழுமையாகச் செயல்பாட்டில் உள்ள இரண்டு விண்வெளி நிலையங்கள் உள்ளன - சர்வதேச விண்வெளி நிலையம் (ISS) மற்றும் சீனாவின் டியாங்காங் விண்வெளி நிலையம் (TSS) ஆகியவை ஆகும் .

## பிட்ச் பிளாக் நடவடிக்கை

- இந்திய விமானப்படையின் Su-30 MKI போர் விமானங்கள் ஆனது, ஆஸ்திரேலியாவில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பன்னாட்டு வான்வழிப் போர்ப் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.

- இந்த பிட்ச் பிளாக் நடவடிக்கையின் 43 ஆண்டுகால வரலாற்றில் இவ்வாண்டு பயிற்சி எனபது மிகப்பெரியதாக இருக்கும்.
- இப்பயிற்சியில் உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 20 நாடுகளும், பல்வேறு நாடுகளின் 140க்கும் மேற்பட்ட விமானங்களும் பங்கேற்க உள்ளன.
- இந்தப் பயிற்சி நிறைவடைந்ததும், மலேசியாவின் குவாந்தன் எனுமிடத்தில் நடைபெற உள்ள மலேசிய விமானப் படையின் உதார சக்தி 24 பயிற்சியில் இந்திய விமானப் படை பங்கேற்க உள்ளது.



## கொழும்பு பாதுகாப்பு மாநாடு அமைப்பு 2024



**Colombo Security Conclave**


- The 8th Deputy National Security Advisor level meeting of the Colombo Security Conclave was hosted virtually by Mauritius.
  - Bangladesh became the 5th full member country.
  - Seychelles participated as an observer country.
- The Colombo Security Conference is a regional security grouping.
  - It was formed in the year 2011.
  - Its founding members were India, Sri Lanka and Maldives.
  - Mauritius joined as the fourth member in the year 2022.

- வங்காளதேசமானது, கொழும்பு பாதுகாப்பு மாநாடு அமைப்பின் (CSC) ஐந்தாவது உறுப்பினர் நாடாக அதிகாரப் பூர்வமாக இணைந்தது.
- கொழும்பு பாதுகாப்பு மாநாட்டு அமைப்பு என்பது இந்தியா, இலங்கை, மொரிஷியஸ் மற்றும் மாலத்தீவு ஆகியவற்றினை உள்ளடக்கிய ஒரு குழுவாகும்.
- கொழும்பு பாதுகாப்பு மாநாட்டு அமைப்பானது 2020 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியா, இலங்கை மற்றும் மாலத்தீவுகள் கடல்சார் ஒத்துழைப்பு தொடர்பான முத்தரப்பு சந்திப்பின் நோக்கத்தினை விரிவுபடுத்த ஒப்புக் கொண்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மாலேயில் நடைபெற்ற ஐந்தாவது கூட்டத்தில் மொரீஷியஸ் நாடு இந்த அமைப்பில் இணைந்தது.

## MeDevIS தரவுத் தளம்

- உலக சுகாதார அமைப்பானது, 2301 வகையான மருத்துவச் சாதனங்கள் பற்றியத் தகவல்களை வழங்கும் ஒரு தடையற்ற அணுகல் வசதி கொண்ட MeDevIS என்ற தரவுத் தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சாதனத்தின் பெயரிடலை எளிதாக்குதல் மற்றும் பாரம்பரியக் காகித அடிப்படையில் அமைந்தத் தேடல்களை மாற்றுதல் ஆகியவற்றினை வழங்கும் ஒரு ஒருங்கிணைந்தத் தளத்தை வழங்கச் செய்வதன் மூலம் அரசாங்கங்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் பயனர்களுக்குத் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதில் உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூடுதலாக, இது பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்குப் பயன்படுத்தப்படும் 2301 வகையான மருத்துவச் சாதனங்களை உள்ளடக்கியது.
- இனப்பெருக்க ஆரோக்கியம், தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம், புற்றுநோய், இதயப் பிரச்சனைகள், நீரிழிவு நோய் போன்ற நோய்கள் மற்றும் COVID-19 போன்ற தொற்று நோய்கள் ஆகியவை இதில் அடங்கும்.

## இந்தியாவில் அந்நியத் தொகுப்பு முதலீடுகள் மேற்கொள்வதற்கான விருப்ப மிகு நாடுகள்





- முதலீட்டிற்கான ஆதாரங்களாக வைக்கப்படும் பல சொத்துகளின் அடிப்படையில் அயர்லாந்திற்கு அடுத்த நிலையில் மொரீஷியஸ் தற்போது ஐந்தாவது இடத்திற்குச் சரிந்துள்ளது.
- அந்நியத் தொகுப்பு முதலீட்டு நிறுவனங்கள் (FPIs) நிதிகளை இந்தியாவிற்கு அனுப்புவதற்கான முன்னணி இடங்களில் மொரீஷியஸ் நாடும் ஒன்றாகும்.
- நடப்பு ஆண்டின் முதல் பாதியில் அந்நியத் தொகுப்பு முதலீடுகளுக்கான ஆதாரங்களாக வைக்கப்படும் சொத்துகளில் 26 சதவீத அதிகரிப்பு அயர்லாந்து நாட்டில் பதிவாகியுள்ளது.
- ஒட்டு மொத்தமாக, மொரீஷியஸில் 595 அந்நியத் தொகுப்பு முதலீட்டு நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதை ஒப்பிடும் போது, அயர்லாந்தில் 780க்கும் அதிகமான அந்நியத் தொகுப்பு முதலீட்டு நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- மார்ச் மாதத்தில், மொரீஷியஸ் மற்றும் இந்திய அரசாங்கங்கள் இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தினை (DTAA) திருத்தியமைப்பதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

## உயர் செயல்திறன் திறன் கொண்ட மலேரியா தடுப்பூசி – ஆப்பிரிக்கா




- இந்திய சீரம் நிறுவனம் (SII) மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து உருவாக்கிய R21/Matrix-M மலேரியா தடுப்பூசியானது கோட் டி ஐவரி நாட்டில் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.
- மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கோட் டி ஐவரி அரசானது இந்த தடுப்பூசியை வழங்கத் தொடங்கிய முதல் நாடு ஆகும்.
- கோட் டி ஐவரி நாட்டில் 2017 ஆம் ஆண்டில் 3,222 ஆக இருந்த மலேரியா பாதிப்பினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 1,316 ஆகக் குறைந்து உள்ளது.

## புதிய நுண் கண்டம் கண்டுபிடிப்பு




- கிரீன்லாந்துக்கும் கனடாவுக்கும் இடையே புதிய நுண் கண்டம் ஒன்றினை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் கண்டம் ஆனது சுமார் 58 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவானது என்று அறிவியலாளர்கள் குழு கருதுகிறது.
- இதற்கு டேவிஸ் ஜலசந்தி தொல்-சிறு கண்டம் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- கிரீன்லாந்துக்கும் வட அமெரிக்காவிற்கும் இடையே ஏற்பட்ட பிளவுகள் மற்றும் கடல் பரப்பின் விரிவாக்கம் ஆகியவை இந்த நுண் கண்டத்தின் உருவாக்கத்திற்கு காரணம் ஆகும்.

- டேவிஸ் ஜலசந்தியானது லாப்ரடோர் கடல் மற்றும் பாஃபின் விரிகுடா ஆகிய இரண்டு நீர்நிலைகளை இணைக்கிறது.

## MV Sea Change பயணியர் படகு

- MV Sea Change எனப்படும் முழுவதும் ஹைட்ரஜன் எரிபொருளால் இயக்கப்படும் உலகின் முதல் வணிகப் பயன்பாட்டு பயணியர் படகானது, அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்த படகானது வெப்பம் மற்றும் நீராவியை மட்டுமே துணை விளை பொருட்களாக உருவாக்குகிறது.
- இந்தப் படகானது, ஒருமுறை நிரப்பிய எரிபொருளில் சுமார் 300 நாட்டிகல் மைல்கள் பயணித்து 16 மணி நேரத்திற்குச் செயல்படும் திறன் கொண்டது.
- ஹைட்ரஜன் எரிபொருள் கலங்கள் ஆனது ஒரு மின் வேதியியல் எதிர்வினையில் ஆக்ஸிஜன் மற்றும் ஹைட்ரஜனை இணைப்பதன் மூலம் மின்சாரத்தைப் பெருமளவில் உற்பத்தி செய்கின்றன.



## நேட்டோ அமைப்பின் கிழக்குப் பிரிவு இயக்கம்

- ருமேனியா, பல்கேரியா மற்றும் கிரீஸ் ஆகியவை நேட்டோ அமைப்பின் கிழக்குப் பிரிவு நாடுகளுக்கு படைப் பிரிவுகள் மற்றும் ஆயுதங்களை வெகுவிரைவாக அனுப்பச் செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- மூன்று மாநிலங்களும் தங்கள் துறைமுகங்களை ஏஜியன் மற்றும் கருங்கடல்களில் இணைக்க முடியும்.
- ருமேனியாவும் பல்கேரியாவும் கருங்கடலில் இலக்கில்லாத கண்ணிவெடி வகையான ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்யும் துருக்கி நாட்டின் ஒரு கூட்டு முயற்சியில் ஏற்கனவே ஓர் அங்கத்தினராக உள்ளன.

## ஐக்கிய நாடுகள் சபையின் நீர் உடன்படிக்கை 2024

- ஐவரி கோஸ்ட் நாடானது, ஐக்கிய நாடுகள் சபையின் நீர் உடன்படிக்கையில் தற்போது இணைந்ததையடுத்து, இந்த உடன்படிக்கையில் பங்கு பெற்ற 10வது ஆப்பிரிக்க நாடாக மாறியுள்ளது.

- இது தற்போது 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் நீர் உடன்படிக்கையின் 53வது பங்குதாரர் நாடாகும்.
- இந்த உடன்படிக்கை ஆனது, பன்னாட்டு நீர்வழிகள் மற்றும் சர்வதேச ஏரிகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு பற்றிய உடன்படிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த உடன்படிக்கையானது, ஆரம்பத்தில் ஐரோப்பியப் பிராந்தியம் முழுவதிற்குமான ஒரு பிராந்தியக் கட்டமைப்பாக நிறுவப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் இது ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் பங்கு பெற அனுமதிக்கப்பட்டது, ஆனாலும் இந்தியா இந்த உடன்படிக்கையில் ஒரு பங்குதாரராக இடம் பெறவில்லை.
- இந்த உடன்படிக்கையானது பகிரப்பட்ட நீர் ஆதாரங்களின் நிலையான மேலாண்மை, நிலையான மேம்பாட்டு இலக்குகளைச் செயல்படுத்துதல், மோதல்களைத் தடுத்தல் மற்றும் அமைதி மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் ஒரு தனித்துவமான சட்டப் பிணைப்பு செயற்கருவியாகும்.




## திட்டம் 2025

- 'தலைமைத்துவ மாற்றத் திட்டம்' என அழைக்கப்படுகின்ற திட்டம் 2025 ஆனது, அமெரிக்காவை எவ்வாறு மறுவடிவமைப்பது என்பதைப் பற்றி கூறுகிறது.
- இது ஒரு பழமைவாதக் கருத்துகள் கொண்ட செயல்பாட்டு நிரல், பணியாளர்கள், பயிற்சி மற்றும் அதிபர் பதவியின் முதல் 180 நாட்களுக்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டியவை குறித்த செயல் திட்டத்துடன் கூடிய ஆளுகை குறித்த கொள்கையாகும்.
- பாதுகாப்பு, கல்வி, வர்த்தகம், வணிகம், நீதி, உள்நாட்டுப் பாதுகாப்பு, சுகாதாரம், எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் அதிகாரத்துவம் போன்ற பல்வேறு அரசாங்கத் துறைகளுக்கான விரிவான திட்டங்களை இது கொண்டுள்ளது.

## கார்பன் இழைகளால் ஆன உலகின் முதல் அதிவேக இரயில்

- வரலாற்றிலேயே முதல் முறையாக கார்பன் இழையினால் மட்டுமே ஆன பயணிகள் இரயிலை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.
- எடை மற்றும் மாசுபாட்டினை வெகுவாகக் குறைத்து, முற்றிலும் கார்பன் இழையினால் கட்டமைக்கப்பட்ட வரலாற்றின் முதல் பயணிகள் இரயில் இதுவாகும்.
- கார்பன் இழையினால் ஆன இந்த இரயில் ஆனது, 87 மைல் வேகம் வரை பயணிக்க கூடியது என்பதோடு இது எஃகினால் ஆன வழக்கமான இரயில்களை விட சுமார் 7% குறைவான ஆற்றலைப் பயன்படுத்தும்.
- இது வாகனங்கள் அல்லது விமானங்களை விட ஒரு பயணிக்குக் குறைவான காற்று மாசுபாட்டையே உருவாக்குகிறது.





## அப்பல்லோ 11 ஆண்டு நிறைவு விழா 2024




- ஹூஸ்டன் விண்வெளி மையத்தில் அப்பல்லோ 11 நிலவில் தரையிறங்கியதன் 55வது ஆண்டு விழாவை அமெரிக்கா கொண்டாடியது.
- மனிதகுலம் ஆனது 1969 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதியன்று நிலவினை அடைந்தது.

- விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் விண்கலனில் இருந்து கீழே இறங்கி நிலவின் மேற்பரப்பில் கால் பதித்து வரலாறு படைத்தார் என்ற நிலையில் அவரைத் தொடர்ந்து விண்வெளி வீரர் புஷ் ஆல்டெரின் நிலவில் கால் பதித்தார்.
- இருவரும் அடுத்த சில மணி நேரங்களில் நிலவில் மாதிரிகளைச் சேகரித்து, நிலவின் மேற்பரப்பில் அமெரிக்கக் கொடியை நட்டனர்.


## UNAIDS உலகளாவிய எய்ட்ஸ் பாதிப்பு குறித்த தகவல் புதுப்பிப்பு 2024




- இன்று வரை 42.3 மில்லியன் உயிர்களைப் பலி வாங்கியுள்ள எச்.ஐ.வி தொற்றானது ஒரு பெரிய உலகளாவியப் பொது சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 39.9 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்ற நிலையில் அவர்களில் 65% பேர் உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் வாழ்கின்றனர்.
- 2023 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி தொடர்பான காரணங்களால் 6,30,000 பேர் உயிரிழந்து உள்ளனர் மற்றும் 1.3 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2025 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் அனைத்து மக்களில் 95% பேர் நோய் கண்டறிதலுக்கான வாய்ப்பினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு, அவர்களில் 95% பேர் உயிர் காக்கும் எச்.ஐ.வி எதிர்ப்பு மருந்து சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும், மேலும் சிகிச்சையில் எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் 95% பேர் வைரஸ் எண்ணிக்கையினை குறைக்கும் சிகிச்சையினைப் பெற்றிருக்க வேண்டும்.
- 2023 ஆம் ஆண்டில், இந்த சதவீதங்கள் முறையே 86%, 89% மற்றும் 93% ஆக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் அனைத்து மக்களில், 86% பேர் தங்கள் நோய்ப் பாதிப்பு நிலை குறித்து அறிந்திருந்தனர், 77% பேர் எச்.ஐ.வி எதிர்ப்பு மருந்து சிகிச்சையைப் பெற்றனர் மற்றும் 72% பேர் வைரஸ் எண்ணிக்கையினைக் குறைக்கும் சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி. நோய்த் தொற்று கொண்ட 1.3 மில்லியன் மக்கள் 2010 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 39% குறைவாக உள்ளனர்.

- இருப்பினும், 1.3 மில்லியன் புதிய எச்.ஐ.வி பாதிப்புகள் ஆனது 2025 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பட்ட 370,000 அல்லது குறைவான புதிய நோய்த்தொற்றுகள் என்ற இலக்கினை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- உலகளவில் எச்.ஐ.வி. எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான செலவினமானது, 9.5 பில்லியன் டாலர் குறைவாக உள்ளது என்பதோடு இந்த இடைவெளி தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது.

## கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலம்




- பசிபிக் பெருங்கடலில் ஆழ்கடல் கனிமங்களை ஆராய்வதற்கான உரிமங்களுக்கு இந்தியா விண்ணப்பிக்க உள்ளது.
- கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலத்தில் கவனம் செலுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இது ஹவாய் மற்றும் மெக்சிகோ இடையே உள்ள ஒரு பரந்த கடலடி சமவெளி ஆகும்.
- இது மாங்கனீசு, நிக்கல், தாமிரம் மற்றும் கோபால்ட் போன்ற சில கனிமங்களைக் கொண்ட ஒரு பெரிய அளவிலான பல்கனிம நிறைவு பகுதிகளைக் கொண்டிருப்பதாக அறியப் படுகிறது.
- சர்வதேச கடற்படுகை ஆணையம் (ISA) ஆனது, இந்தியப் பெருங்கடலில் இந்தியாவிற்கான இரண்டு உரிமங்களும் உட்பட 31 ஆழ்கடல் ஆய்வு உரிமங்களை வழங்கியுள்ளது.
- ஆனால், 36 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பு ஆனது சில விதிமுறைகளில் மேலும் மாற்றங்களை மேற்கொள்ள முயல்வதால் சுரங்கப் பணிகளை மேற்கொள்ள இது இன்னும் அனுமதிக்கவில்லை.
- சீனா, ரஷ்யா மற்றும் சில பசிபிக் தீவு நாடுகள் ஏற்கனவே பசிபிக் பெருங்கடலில் ஆய்வு மேற்கொள்வதற்கான உரிமங்களைப் பெற்றுள்ளன.

## KHAAN QUEST 2024 பயிற்சி





- இந்திய இராணுவக் குழுவானது மங்கோலியாவின் உலான்பாதரில் 'கான் குவெஸ்ட் 2024' எனப்படும் பன்னாட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்கிறது.
- இந்தப் பயிற்சியானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கும் மங்கோலிய நாட்டின் ஆயுதப் படைகளுக்கும் இடையிலான இருதரப்பு பயிற்சியாகத் தொடங்கியது.
- 2006 ஆம் ஆண்டு முதல், ஒரு பன்னாட்டு அமைதி காப்புப் பயிற்சியாகப் பரிணமித்தது என்பதோடு இந்த ஆண்டின் பயிற்சியானது அதன் 21வது பயிற்சியினைக் குறிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் குறுகிய காலக் கடன்களின் பங்கு

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 20.6 சதவீதமாக இருந்த மொத்த வெளிநாட்டுக் கடனில் ஓராண்டு வரை அசல் நிறைவு காலம் கொண்ட குறுகிய காலக்' கடனின் பங்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 18.5 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 22.2 சதவீதமாக இருந்த அந்நியச் செலாவணி இருப்பு மற்றும் குறுகிய காலக் கடனின் விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் 19.0 சதவீதமாக குறைந்தது.
- இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 663.8 பில்லியன் டாலராக இருந்தது.
- இது 2023 ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் இருந்த அளவை விட 39.7 பில்லியன் டாலர் அதிகமாகும்.
- மதிப்பீட்டு விளைவைத் தவிர்த்து, வெளிநாட்டுக் கடன் ஆனது 2023ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியை விட 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் சுமார் 39.7 பில்லியன் டாலருக்குப் பதிலாக 48.4 பில்லியன் டாலர் ஆக அதிகரித்திருக்கும்.

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 19.0 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 18.7 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் நீண்ட கால கடன் (ஒரு வருடத்திற்கு மேல் கால நிறைவு கொண்ட அசல்) 541.2 பில்லியன் டாலர் ஆகும்.
- இது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் இருந்த அளவை விட 45.6 பில்லியன் டாலர் அதிகமாகும்.
- வெளி நாட்டுக் கடனின் மிகப்பெரிய உட்கூறுகள்:
  - கடன்களின் பங்கு 33.4 சதவீதம்
  - நாணயம் மற்றும் வைப்புத் தொகை (23.3 சதவீதம்)
  - வர்த்தகக் கடன் மற்றும் முன்பணம் (17.9 சதவீதம்), மற்றும்
  - கடன் பத்திரங்கள் (17.3 சதவீதம்).




## 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் பண வரவு

- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 18.7 மில்லியன் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில் 7.5% ஆக வளர்ச்சியடைந்த இந்தியாவின் பண வரவு ஆனது, 2024 ஆம் ஆண்டில் 3.7% ஆக வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி மதிப்பீடு 4% ஆகும்.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியா 120 பில்லியன் டாலர் பண வரவினைப் பெற்றது.
- 2024 ஆம் ஆண்டிற்கான பண வரவு எதிர்பார்ப்பு ஆனது 124 பில்லியன் டாலர் மற்றும் 2025 ஆம் ஆண்டில் 129 பில்லியன் டாலர் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டில் அதிகப் பண வரவினைப் பெற்ற நாடு இந்தியாவாகும்.

- அதைத் தொடர்ந்து மெக்சிகோ 66 பில்லியன் டாலர், சீனா 50 பில்லியன் டாலர், பிலிப்பைன்ஸ் 39 பில்லியன் டாலர், பாகிஸ்தான் 27 பில்லியன் டாலர் பண வரவினைப் பெற்றுள்ளன.
- இந்தியாவின் பணப் பரிமாற்றத்தில் 18% ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து வருகிறது.
- சவுதி அரேபியா, குவைத், ஓமன் மற்றும் கத்தார் ஆகியவை இந்தியாவின் மொத்தப் பணப் பரிமாற்றத்தில் 11% பங்கைக் கொண்டுள்ளன.




Figure 1.2 Top Recipients of Remittances among Low- and Middle-Income Countries, 2023

## SAARC நாடுகளின் பண மதிப்பு மாற்றுக் கட்டமைப்பு 2024-2027





- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய அரசு இணைந்து 2024 முதல் 2027 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் SAARC நாடுகளுக்கான பண மதிப்பு மாற்றுச் செயல் முறையின் திருத்தப்பட்டக் கட்டமைப்பை அமைக்க முடிவு செய்துள்ளன.
- இந்த கட்டமைப்பின் கீழ், இந்திய ரிசர்வ் வங்கியானது பணப் பரிமாற்று வசதியைப் பெற விரும்பும் SAARC நாடுகளின் மத்திய வங்கிகளுடன் இந்த இருதரப்பு இடமாற்று ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்.


- SAARC பண மதிப்பு மாற்றுச் செயல்முறையானது 2012 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று செயல்பாட்டுக்கு வந்தது.
- 2024-27 ஆம் ஆண்டிற்கான கட்டமைப்பின் கீழ், இந்திய ரூபாய் மதிப்பில் பணப் பரிமாற்றம் செய்வதற்கு ஆதரவு அளிக்கும் விதமாக பல்வேறு சலுகைகளுடன் தனி இந்தியப் பணமதிப்பு பரிமாற்ற சாளர அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ரூபாய் மதிப்பிற்கான மொத்த நிதித் தொகை 250 பில்லியன் ரூபாயாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது அமெரிக்க டாலர் மற்றும் யூரோ மதிப்பில் ஒரு தனியான அமெரிக்க டாலர்/ யூரோ பரிமாற்றச் சாளர அமைப்பின் கீழ் 2 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பு கொண்ட நிதியுடன் பரிமாற்றச் செயல்முறையினை தொடர்ந்து வழங்கும்.
- இருதரப்புப் பரிமாற்ற ஒப்பந்தங்களில் அந்நாடுகள் கையெழுத்திடுவதற்கு உட்பட்டு, அனைத்து SAARC உறுப்பினர் நாடுகளுக்கும் பண மதிப்புப் பரிமாற்ற வசதி கிடைக்கப் பெறும்.

## மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கான நிதி வழங்கீடு

- மாநில அரசுகள்/ ஒன்றியப் பிரதேசங்களுக்கான (UTs) மொத்த வழிவகைக்கான முன்பண (WMA) வரம்பு 60,118 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- தற்போதைய வரம்பு 47,010 கோடி ரூபாயாகும்.
- திருத்தப்பட்ட WMA வரம்பு ஜூலை 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.
- WMA என்பது மாநிலங்களுக்கு அவற்றின் வருவாய் மற்றும் கொடுப்பனவுகளின் பணப் புழக்கத்தில் உள்ள தற்காலிகப் பொருத்தமின்மையைக் குறைக்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## இந்தியாவில் ஊதிய அறிக்கை: ஒரு வேலை வாய்ப்புக் கண்ணோட்டம்




- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) மொத்தப் புதிய சந்தா தாரர்களின் சேர்க்கையில் 4 சதவிகிதம் சரிவைக் கண்டது.
- முந்தைய ஆண்டை விட 2023-24 ஆம் ஆண்டில் மொத்த எண்ணிக்கை 1.09 கோடியாகக் குறைந்து உள்ளது.
- EPFO அமைப்பு 2022-23 ஆம் ஆண்டில் 1,14,98,453 ஆக இருந்த புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு குறைந்து 2023-24 ஆம் ஆண்டில் 1,09,93,119 உறுப்பினர்களை மட்டுமே சேர்த்து உள்ளது.
- 2023-24 வரையிலான கடந்த ஐந்து நிதியாண்டுகளில், புதிய EPFO உறுப்பினர்களின் மொத்தச் சேர்க்கையானது 2018-19 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்குத் திரும்பவில்லை.
- அந்த ஆண்டில், மொத்த புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,39,44,349 ஆகும்.
- ஆனால், தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (NPS) முந்தைய நிதியாண்டில் 8,24,735 ஆக இருந்த புதிய சந்தாதாரர்களின் எண்ணிக்கை 2023-24 ஆம் ஆண்டில் 9,37,020 ஆக உயர்ந்துள்ளது.


## இந்திய ரிசர்வ் வங்கியின் 29வது நிதி நிலைத்தன்மை அறிக்கை



- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில், பட்டியலியப்பட்ட வணிக வங்கிகளின் (SCBs) இடர் உண்டாக்கும் சொத்துக்கள் மீதான மூலதன விகிதம் (CRAR) மற்றும் பொதுப் பங்கு அடுக்கு 1 (CET1) விகிதம் ஆகியவை முறையே 16.8% மற்றும் 13.9% ஆக இருந்தது.
- பட்டியலியப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன்கள் (GNPA) விகிதம் ஆனது பல ஆண்டுகளில் இல்லாத வகையில் 2.8 சதவீதமாக குறைந்துள்ளது.
- அவற்றின் நிகர வாராக் கடன்கள் (NNPA) விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 0.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs) சரியான நிலையில் உள்ள நிலையில் CRAR 26.6 சதவீதமாகவும், GNPA விகிதம் 4.0% ஆகவும், சொத்துகள் மீதான வருமானம் - நிகர வருமானம் மற்றும் மொத்தச் சொத்துக்களுக்கு இடையிலான விகிதம் - (RoA) முறையே 3.3% ஆகவும் உள்ளது.
- CRAR என்பது வங்கியின் நிதி வலிமையின் அளவீடு ஆகும்.
- 16.8% CRAR என்பது ஒவ்வொரு 100 அலகு இடர் உண்டாக்கும் சொத்துக்களால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டுவதற்கும் 16.8 அலகு மூலதனத்தை வங்கி கொண்டுள்ளது.
- GNPA விகிதம் ஆனது, திருப்பிச் செலுத்தப்படாத வங்கியின் கடன்களின் சதவீதத்தை மதிப்பிடுகிறது.


## இந்திய ரிசர்வ் வங்கியின் நெக்சஸ் திட்டம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) நெக்சஸ் திட்டத்தில் இணைந்துள்ளது.
- இது உள்நாட்டு விரைவு பண வழங்கீட்டு அமைப்புகளை (FPSs) ஒன்றோடொன்று இணைப்பதன் மூலம் உடனடி பன்னாட்டு சில்லறைப் பண வழங்கீடுகளை செயல் படுத்துவதற்கான பலதரப்பு சர்வதேச முன்னெடுப்பாகும்.
- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) மற்றும் மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகியவற்றின் விரைவு பண வழங்கீட்டு அமைப்புகளின் நெக்ஸஸ் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்படும்.




## 2023-24 ஆம் நிதியாண்டில் வேலை வாய்ப்பு உருவாக்கம்

- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த நிதியாண்டில் இந்தியா தற்காலிகமாக 46.7 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதையடுத்து, நாட்டின் மொத்த வேலைவாய்ப்பு எண்ணிக்கை 643.3 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- அதே நிதியாண்டில் நாட்டின் வேலைவாய்ப்பு வளர்ச்சி விகிதம் 6 சதவீதமாக இருந்தது.
- இது முந்தைய நிதியாண்டில் 3.2 சதவீதமாக இருந்தது.
- ஆனால் 2022-23 ஆம் நிதியாண்டின் நிலவரப்படி இந்தியாவின் ஒட்டுமொத்தப் பணியாளர்களில் வெறும் 20.9 சதவீதம் பேர் மட்டுமே வழக்கமான ஊதியத்தைச் சம்பளமாக பெற்றுள்ளனர்.
- 7 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மட்டுமே, இந்தியாவில் 8 மில்லியனில் முதல் 9 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.
- 2017-18 முதல் 2021-22 ஆம் நிதியாண்டு வரை ஆண்டிற்கு என்று சராசரியாக சுமார் 20 மில்லியனுக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.




## நிதி உள்ளடக்கக் குறியீடு 2024




- இந்திய ரிசர்வ் வங்கியின் இந்த முதன்மை அறிக்கையானது நாடு முழுவதும் உள்ள நிதி உள்ளடக்கத்தின் பரவலை வெளிக்கொணர்கிறது.

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 60.1 ஆக இருந்த நிதி உள்ளடக்கமானது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 64.2 ஆக இருந்தது.
- நிதி உள்ளடக்கக் குறியீடானது எந்தவொரு 'அடிப்படை மதிப்பீட்டு ஆண்டு' இல்லாமல் கட்டமைக்கப் பட்டுள்ளது என்பதால் இது அனைத்துப் பங்குதாரர்களின் பெரும் நிதி உள்ளடக்கத்தினை நோக்கிய ஒட்டு மொத்த முயற்சிகளைப் பிரதிபலிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த காலக் கட்டத்திற்கான வருடாந்திர நிதி உள்ளடக்கக் குறியீடு 53.9 ஆக இருந்தது என்ற நிலையில் இது 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த காலக் கட்டத்தில் 43.4 ஆக இருந்தது.
- இந்த நிதி உள்ளடக்கக் குறியீடானது ஆண்டுதோறும் ஜூலை மாதம் வெளியிடப் படுகிறது.

## தாராளமயமாக்கப்பட்ட பணம் அனுப்புதல் திட்டம் - RBI

**RESERVE BANK OF INDIA ('RBI') WIDENS SCOPE OF REMITTANCES TO INTERNATIONAL FINANCIAL SERVICES CENTRES (IFSCs) UNDER THE LIBERALISED REMITTANCE SCHEME (LRS)**

RBI vide. a circular dated July 10, 2024 has allowed remittances to IFSCs under the LRS **for all permissible transactions** including:

- Financial services or financial products as per the International Financial Services Centres Authority Act, 2019 within IFSCs; and
- All current or capital account transactions, in any other foreign jurisdiction (other than IFSCs) through an FCA held in IFSCs

Earlier, the remittance under LRS to IFSC was allowed for limited transactions such as investments in IFSCs in securities and Payment of fees for education to foreign universities or foreign institutions in IFSCs


Accordingly, **the resident individuals can now open a Foreign Currency Account (FCA) in IFSCs** for all permissible transactions.

- பெரிய அளவிலான அந்நியச் செலாவணி வெளியேற்றத்தினைக் பெருமளவில் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி, மத்திய நிதிநிலை அறிக்கையில், 7 லட்சம் ரூபாய்க்கு மேலான வெளிநாட்டுக் கடன் அட்டை செலவினங்களைத் தாராள மயமாக்கப்பட்ட பணம் அனுப்பும் திட்டத்தின் (LRS) கீழ் கொண்டுவர உள்ளது.
- கடன் அட்டை செலவினமானது வருமான மூலத்தில் இருந்து வசூலிக்கப்படும் (TCS) 20 சதவீத வரி வரம்பின் கீழ் கொண்டு வரப்படும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் LRS திட்டத்தின் கீழ், ஓர் இந்தியக் குடிமகன் இந்தியாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் ஒரு நிதியாண்டில் 250,000 அமெரிக்க டாலர்கள் வரை தொகையினை பரிமாற்றம் செய்ய முடியும்.
- LRS திட்டத்தின் கீழ் அதிகப்படியான பணம் அனுப்புவதைத் தடுப்பதே இதன் நோக்கம் ஆகும்.


- தற்போது, பற்று அட்டைகள், அந்நியச் செலவாணி பரிமாற்ற அட்டைகள் அல்லது பிற கட்டண முறைகளைப் பயன்படுத்தும் செலவினங்கள் ஆனது ஒரு நிதியாண்டில் ஒரு நபருக்கு 7 லட்சம் ரூபாய் என்ற வரம்பைத் தாண்டியவுடன் 20 சதவீத TCS விதிக்கப் படுகிறது.
- இதற்கு மாறாக, கடன் அட்டை பரிவர்த்தனைகளுக்கு LRS விதிகளின் கீழ் TCS விதிக்கப் படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் LRS திட்டத்தின் கீழ், வெளிநாட்டிற்கு அனுப்பப் பட்ட பண மதிப்பு 31.73 பில்லியன் டாலர்களை எட்டியது.
- இது முந்தைய ஆண்டில் 27.14 பில்லியன் டாலராக இருந்த மதிப்பினை விட சுமார் 16.91 சதவீதம் அதிகமாகும்.

## இந்திய ரூபாயில் ரஷ்யாவுடனான வர்த்தகம்

- இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் கடந்த ஆண்டு முதல் தேசியப் பண மதிப்புகளில் (ரூபாய்-ரூபிள்) தங்கள் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்கியுள்ளன.
- ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, ரூபாய் மதிப்பில் பெரு நிறுவனங்களின் வைப்புத் தொகை ஆறு மடங்கு அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் இருதரப்பு வர்த்தகம் ஆனது ஏற்கனவே சுமார் 65 பில்லியன் டாலராக இருந்தது என்ற நிலையில் இதில் சுமார் 60 பில்லியன் டாலர்கள் மதிப்பானது இந்தியாவிற்கு மேற்கொள்ளப் பட்ட, முக்கியமாக எரிசக்தியில் மேற்கொள்ளப்பட்ட ரஷ்ய ஏற்றுமதியாகும்.



## இந்தியாவின் மின்னணு உற்பத்தி இலக்கு 2030





- 2030 ஆம் ஆண்டிற்குள் நாட்டில் 500 பில்லியன் டாலர் மதிப்பிலான மின்னணுப் பொருட்கள் உற்பத்தியை எட்டுவதற்கு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 500 பில்லியன் மதிப்பிலான மின்னணுப் பொருட்கள் உற்பத்தியானது 5 முதல் 6 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.
- இது மொத்தமாக 240 பில்லியன் டாலர் மதிப்பிலான மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதிக்கு வழி வகுக்கும்.
- இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் உற்பத்தியின் தற்போதைய மதிப்பு ஆனது 2023 ஆம் நிதியாண்டின் படி 101 பில்லியன் டாலராக உள்ளது.
- இதில் 86 பில்லியன் டாலர் மதிப்பிலான நிறைவு செய்யப்பட்டப் பொருட்களின் உற்பத்தியும், 15 பில்லியன் டாலர் மதிப்பிலான உதிரிபாகங்கள் தயாரிப்புகளும் அடங்கும்.
- இதே காலக் கட்டத்தில், ஏற்றுமதியின் மதிப்பு மொத்தமாக 25 பில்லியன் டாலராகும்.
- இத்துறையானது தற்போது 1.3 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## NOAA வானிலை செயற்கைக் கோள்

- நாசாவின் தேசியக் கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக (NOAA) திட்டத்திற்கான நான்காவது மற்றும் இறுதி செயற்கைக் கோளை ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் மிகவும் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- GOES-R என்பது (புவி நிலைச் செயல்பாட்டு சுற்றுச்சூழல் சார் செயற்கைக்கோள்) எனப்படும் மேம்பட்ட செயற்கைக்கோள்களின் தொடர் ஆகும்.
- "மேற்கு அரைக்கோளத்தின் பெரும்பகுதி முழுவதும் நிலவும் வானிலை மற்றும் அபாயகரமான சுற்றுச்சூழல் நிலைமைகள் பற்றிய தொடர்ச்சியான கண்காணிப்பு" மூலம் அவை உதவும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.





## ஸ்னோபிளைண்ட் தீநிரல்

- 'ஸ்னோபிளைண்ட்' எனும் தீநிரல் ஆனது ஆண்ட்ராய்டு கைபேசி பயனர்களைக் குறி வைத்து அவர்களின் வங்கித் தகவல்களை கைப்பற்றுகிறது.
- இந்தத் தீநிரல் ஆனது வங்கி உள்நுழைவு விவரங்களை எடுத்து அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளைச் செய்யக் கூடியது.
- இந்த ஸ்னோபிளைண்ட் தென்கிழக்கு ஆசியாவில் அதிகமாக ஊடுருவி உள்ளது.




## வலிப்பு நோய்க் கட்டுப்பாட்டுக்கான உலகின் முதல் மூளை உள்வைப்பு கூறு





- ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தனது வலிப்பு நோயின் தாக்கங்களைக் கட்டுக்குள் கொண்டு வர உதவும் வகையில் மூளை உள்வைப்பு சாதனம் பொருத்தப்பட்ட உலகின் முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- உள்ளார்ந்த மூளை செயல்பாடு தூண்டுதல் (DBS) சாதனம் ஆனது மின் சமிக்ஞைகளை மூளைக்குள் ஆழமாக அனுப்புகிறது என்பதோடு இது இவரின் பகல்நேர வலிப்புத் தாக்கங்களை 80% அளவிற்கு குறைக்கிறது.
- நியூரான் தூண்டுவிப்பானானது அசாதாரணமான வலிப்புத் தாக்கத்தை ஏற்படுத்தும் சமிக்ஞைகளைச் சீர்குலைக்க அல்லது தடுப்பதற்காக மூளைக்கு நிலையான மின் தூண்டுதல்களை வழங்குகிறது.
- இந்த நோயின் தன்மை மீண்டும் மீண்டும் வலிப்பு வரும் நிலையாகும்.
- இந்தியாவில், 1,000 பேருக்கு சுமார் 3 முதல் 11.9 பேர் வரை வலிப்பு நோயால் பாதிக்கப் படுகின்றனர்.

## CAR-T புற்றுநோய் சிகிச்சை



- CAR-T சிகிச்சை என்பது "வெவ்வேறு மரபுத்திரி எண்ணிக்கைக் கொண்ட நோய் எதிரணு உற்பத்தி ஊக்கி ஏற்பி T-செல்" என்பதன் சுருக்கமாகும்.
- இது நோயாளியின் புற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக நோயெதிர்ப்புச் செல்களை மறு சீரமைக்கும் ஓர் அதிநவீன சிகிச்சையாகும்.
- இந்தப் புதுமையான அணுகுமுறையானது, நோயெதிர்ப்பு மண்டலத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்ற ஒரு வகை வெள்ளை இரத்த அணுக்களான T-செல்களை ஏற்பதை உள்ளடக்கியது.
- ஒரு நோயாளியிடமிருந்து T-செல்கள் எடுக்கப்பட்டு, புற்றுநோய் செல்களை நன்கு கண்டறிந்து அவற்றைத் தாக்கும் வகையில் ஆய்வகத்தில் மாற்றியமைக்கும் செயல் முறையாகும்.
- இந்த மேம்படுத்தப்பட்ட T-செல்கள் பின்னர் பெருக்கப்பட்டு, மீண்டும் நோயாளியின் உடலுக்குள் செலுத்தப்பட்டு, அங்கு அவை புற்றுநோய் செல்களைத் தேடித் தேடி அழிக்கின்றன.
- சிகிச்சையளிப்பதற்கு மிகவும் கடினமான நிணநீர்க் குழியப் புற்றுநோய்களின் சிகிச்சையில், நோயாளிகள் இதன்மூலம் சிறப்பான முன்னேற்றத்தினை பெற முடியும் என்று பல தரவுகள் காட்டுகின்றன.
- தற்போது, இந்த சிகிச்சையினைப் பெற்ற சில நோயாளிகளுக்கு இது புதிய புற்று நோய்களை ஏற்படுத்தும் என்று கண்டறியப்பட்டுள்ளது.
- அரிதாக, நோயாளிகளின் உடலில், புதிய நோயெதிர்ப்பு உயிரணு புற்றுநோய்கள், அதாவது நிணநீர்க் குழியப் புற்றுநோய் அல்லது இரத்தப் புற்றுநோய் போன்ற இரத்த அணு புற்றுநோய் வகைகள் ஏற்பட்டுள்ளன.

## ஒலிம்பஸ் மோன்ஸ்





- செவ்வாய்க் கிரகத்தில் மிக நீண்ட காலமாக இயங்கும் நாசாவின் ஒடிஸி விண்கலம் ஆனது, 100,000வது முறையாக செந்நிறக் கிரகத்தைச் சுற்றி வந்துள்ளது.
- இந்த விண்வெளி நிறுவனம் ஒலிம்பஸ் மோன்ஸ் எனப்படுகின்ற சூரியக் குடும்பத்தில் உள்ள மிக உயரமான எரிமலையின் நுண்ணியத் தகவல் கொண்ட அகலப் பரப்புக் காட்சிப் படத்தினை வெளியிட்டுள்ளது.


- எரிமலையின் அடிப்பகுதியானது செவ்வாய்க் கிரகத்தின் மத்திய ரேகைக்கு அருகில் 373 மைல்கள் (600 கிலோமீட்டர்) வரை பரவியுள்ளது.
- இது கிரகத்தின் மெல்லிய காற்றில் 17 மைல்கள் (27 கிலோமீட்டர்) உயரம் வரை நீண்டு உள்ளது.

## டிஎன்ஏ-வின் பயனற்ற பகுதிகள்

- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, டிஎன்ஏவின் 'பயனற்ற' பகுதிகள் என்று அழைக்கப் படும் இடங்களில் மறைந்திருக்கும் புற்றுநோயினை உண்டாக்கும் பல சாத்தியங்களைக் கொண்ட காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது ஆரம்பகால நோயறிதலுக்கு வழிவகுக்கும் மற்றும் பல புற்றுநோய் வகைகளுக்குப் பயனுள்ள புதிய சிகிச்சைகள் உருவாக வழி வகுக்கும்.
- "பயனற்ற டிஎன்ஏ பகுதிகள்" என்றும் அழைக்கப்படும் குறிமுறையாக்கம் பெற்றிராத டிஎன்ஏ, மனித உடலில் உள்ள மரபணுவின் 98% புரதங்களை உருவாக்குவதற்கான வழி முறைகளைக் கொண்டிருக்கவில்லை.




## முதலாவது வணிக ரீதியான விண்வெளிப் பயணம்





- எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது, "போலரிஸ் டான்" என்ற ஒரு கலத்தினை விண்ணில் ஏவ உள்ளது.

- இது பூமியிலிருந்து 870 மைல் தொலைவில் உள்ள பகுதிக்கு நான்கு நபர்களைக் கொண்டுச் செல்லும்.
- சுற்றுப்பாதையில் உள்ள தகவல்தொடர்புகளைச் சோதிப்பதுடன், இந்தக் கலத்தின் குழுவினர் அதிக உயர நடவடிக்கைகள், முதலாவது வணிக ரீதியான விண்வெளிப் பயணம் மற்றும் உடல்நலம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்கள்.
- இந்தத் தொலைவானது 1966 ஜெமினி 11 ஆய்வுத் திட்டம் மற்றும் 1972 அப்பல்லோ 17 திட்டம் ஆகியவற்றிற்குப் பிறகு எந்த ஒரு குழுவினாலும் மேற்கொள்ளப்பட்ட அதிக தூர விண்வெளிப் பயணத்தையும் விட அதிகமாகும்.

## இஸ்ரோவின் ஆதித்யா-L1 ஆய்வுக் கலம் 2024


- ஆதித்யா-L1 ஆய்வுக் கலம் ஆனது சூரியன் மற்றும் பூமி இடையே உள்ள L1 புள்ளியைச் சுற்றிய அதன் சுற்றுவட்டப் பாதை பயணத்தை ஜூலை 02 ஆம் தேதியன்று நிறைவு செய்தது.
- ஆதித்யா-L1 விண்கலம் ஆனது சுற்றுவட்டப் பாதையில் உள்ள L1 புள்ளியை 178 நாட்களில் சுற்றி முடித்தது.
- L1 லக்ராஞ்சியன் புள்ளியில் உள்ள இந்திய சூரிய ஆய்வுக் கலமான ஆதித்யா- L1 ஆய்வுக் கலம் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று விண்ணில் செலுத்தப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று சுற்று வட்டப் பாதையில் இலக்கு நிர்ணயிக்கப் பட்ட இடத்தில் நுழைக்கப்பட்டது.




## வேல்மென்னி நிறுவனத்தின் Li-Fi தொழில்நுட்பம்

- தொலைதொடர்புச் சேவை சார்ந்த புத்தொழில் நிறுவனமான வேல்மென்னி அதன் புதுமையான Li-Fi (ஒளி மெய்நிலை) தொழில்நுட்பத்திற்காக வேண்டி பாதுகாப்பு அமைச்சகத்திடம் (MoD) மானியம் பெற்றுள்ளது.
- வேல்மென்னி நிறுவனத்தின் கூற்றுப்படி, அதன் Li-Fi தொழில்நுட்பம் ஆனது இந்தியக் கடற்படை மற்றும் பிற பாதுகாப்புப் பயன்பாடுகளுக்கான தரவுப் பரிமாற்றத்தை மேம்படுத்தும்.

- இது மேம்படுத்தப் பட்ட பாதுகாப்பு மற்றும் செயல்திறனை வழங்குவதோடு, இந்தியக் கடற்படையின் நிகழ்நேரத் தகவல் தொடர்பு தேவைகளுக்கு வேண்டி மிகவும் பொருத்தமானதாக அமையும்.
- Li-Fi நுட்பம் ஆனது சிறப்பு LED (ஒளி-உமிழும் இரு முனையங்கள்) குமிழ் விளக்குகளை திசைவிகளாகப் பயன்படுத்துகிறது என்பதோடு மேலும் ஒளியிழை கம்பிவடமாற்ற தகவல் தொடர்பு (OWC) தொழில்நுட்பத்தில் இயங்குகிறது.
- Li-Fi சாதனங்கள் புலப்படும், அகச்சிவப்பு அல்லது புற ஊதா ஒளி மூலம் தரவை வழங்குகின்றன.
- அதே சமயம், Wi-Fi வகை திசைவிகள் தரவை அனுப்ப ரேடியோ அலைவரிசைகளைப் பயன்படுத்துகின்றன.
- Li-Fi ஆனது வினாடிக்கு 224GB வரையிலான வேகத்தை வழங்கும்.




## தெளிவற்ற நுண்ணலை கவசத்தினை உருவாக்கும் வகையிலான நுண் உலோக இழைகளைக் கொண்ட ஏவுகணை


- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது நடுத்தர வீச்சு வரம்புடைய தெளிவற்ற நுண்ணலை கவசத்தினை உருவாக்கும் வகையிலான நுண் உலோக இழைகளைக் கொண்ட ஏவுகணையினை (MR-MOCR) இந்தியக் கடற்படையிடம் ஒப்படைத்துள்ளது.
- இது ரேடார் சமிஞ்சைகளை மறைத்து, இயங்குதளங்கள் மற்றும் அமைப்புகளைச் சுற்றி ஒரு நுண்ணலை கவசத்தினை உருவாக்கி, ரேடார் மூலம் கண்டறியப்படும் வாய்ப்பினைக் குறைக்கிறது.
- இந்த ஏவுகணையானது, ஏவப்படும் போது, போதிய நிலைப்பு நேரத்துடன், போதுமான பரப்பளவில் பரவி விண்வெளியில் நுண்ணலைகளால் ஆன தெளிவற்ற கவசத்தினை உருவாக்குகிறது.
- இது ரேடியோ அலைவரிசை ரீதியிலான ஈர்ப்புக் கருவிகளைக் கொண்ட எதிரி நாட்டு அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒரு பயனுள்ள கவசத்தை உருவாக்குகிறது.

## சின்ட்ரிச்சியா கேனினெர்விஸ்

- ❖ செவ்வாய்க் கிரகத்தின் கடுமையான பருவநிலையில் உயிர் வாழவும் வளரவும் கூடிய தாவர இனத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ அண்டார்டிகா மற்றும் மொஜாவே பாலைவனத்தில் உள்ளதைப் காணப்படும் இந்த பாலைவனப் பாசி, அந்த செந்நிறக் கோளில் உயிர்களை நிலை நிறுத்துவதற்கு ஒரு முக்கியமானதாக இருக்கலாம்.
- ❖ சின்ட்ரிச்சியா கேனினெர்விஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தத் தாவரமானது, மிகவும் கடுமையான குளிர், தீவிரக் கதிர்வீச்சு மற்றும் வறட்சியை எதிர்கொள்ளும் திறன் கொண்டது.



## வசிக்கத்தக்க உலகத்திற்கான ஆய்வகம்




- ❖ நாசா நிறுவனம் அதிநவீன நுட்பங்களைக் கொண்ட வசிக்கத்தக்க உலகத்திற்கான ஆய்வகத்தினை (HWO) தொடங்க தயாராகி வருகிறது.
- ❖ பல்வேறு உயிர் இனங்களை அடையாளம் காண்பதில் கவனம் செலுத்தி, 2050 ஆம் ஆண்டிற்குள் பூமி போன்ற கிரகங்களில் வேற்று கிரக வாழ்க்கையின் அறிகுறிகளைக் கண்டறிவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ நமது வாழ்நாளில் சூரியனைப் போன்ற நட்சத்திரங்களின் உயிரினங்கள் வாழக்கூடிய மண்டலங்களில் உள்ள கிரகங்களிலிருந்து வரும் சமிக்ஞைகளை HWO கண்டறியும்.


## பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் திறன் கொண்ட துணியிழை

- பெங்களூரில் உள்ள குருத்தணு அறிவியல் மற்றும் மீளுருவாக்க அறிவியல் கல்வி நிறுவனமானது (inStem) பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் திறன் கொண்ட துணியிழையினை உருவாக்கியுள்ளது.
- இது கரிம பாஸ்பரஸ் சேர்மங்கள் (ஆர்கனோபாஸ்பேட்) அடிப்படையிலான பூச்சிக் கொல்லிகளின் தாக்கத்தினைத் திறம் மிக்க முறையில் மட்டுப்படுத்துகிறது.
- இந்தத் துணியிழையானது, 150 முறை கழுவினாலும் பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மையை தக்க வைத்துக் கொள்ளும்.
- விவசாயிகள் பூச்சி க்கொல்லியை அடிக்கடி பயன்படுத்தி அதனை மீண்டும் மீண்டும் எதிர்கொள்வதால், இது நாள்பட்ட நச்சுத்தன்மையையும் மிக கடுமையான உடல்நலப் பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.
- இந்த சிறிய மூலக்கூறுகளைக் கொண்ட துணியானது விவசாயிகள் நாள்பட்ட நச்சுத் தன்மையை எதிர்கொள்வதைத் தடுக்கும்.




## அசாதாரணமான அயனிமண்டல வடிவங்கள்

- நாசாவின் GOLD செயற்கைக் கோளானது வியக்கத்தக்க X- மற்றும் C- வடிவ ரீதியிலான வடிவங்களைக் கண்டறிந்துள்ளது.
- இந்த வடிவங்கள் பொதுவாக புவிக் காந்த இடையூறுகளின் போது ஏற்படுகின்றன என்ற நிலையில் புவிக் காந்த இடையூறுகள் இல்லாத நிலையிலும் கூட இவை தோன்றுவது நிபுணர்களை குழப்பத்தில் ஆழத்தியுள்ளது.
- பூமியின் அயனி மண்டலம் என்பது நீண்ட தூர அளவிலான ரேடியோ பரிமாற்றத்திற்கு அவசியமான மின்னூட்டம் பெற்ற வாயுவின் அடுக்கு ஆகும்.
- GOLD என்பது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட்ட, வெப்ப நிலை மற்றும் அயனி மண்டல அடர்த்தியை அளவிடுவதற்காக என்று மேற்கு அரைக் கோளத்தில் சுற்றி வருகின்ற ஒரு செயற்கைக்கோள் ஆகும்.




## நீரேற்றம் பெற்ற முப்பரிமாண களிமம் - IISc




- இந்திய அறிவியல் கழகத்தின் அறிவியலாளர்கள் மனித நுரையீரலைப் பிரதிபலிக்கும் வகையிலான ஒரு புதிய நீரேற்றம் பெற்ற முப்பரிமாண களிம உருவாக்க அமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- காசநோய் பாக்டீரியா நுரையீரல் செல்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிந்து ஆய்வு செய்வதற்காகவும், நோய்த் தொற்றுக்கு என்று சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப் படும் சிகிச்சை முறைகளின் செயல்திறனை பரிசோதிக்கச் செய்வதற்காகவுமான தளத்தை வழங்குகிறது.
- இந்தப் புதிய நீரேற்றத்தினைப் பெற்ற களிம உருவாக்க அமைப்பானது நுரையீரல் திசுக்களின் முக்கிய அங்கமான கொலாஜனால் (தசை நார்களால்) ஆனது.
- இந்த முப்பரிமாணச் சூழல் ஆனது, காசநோய் பாக்டீரியா நீண்ட காலத்திற்கு - மூன்று வாரங்கள் வரை மனித நோயெதிர்ப்பு உயிரணுக்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதைக் கண்காணிக்க ஆராய்ச்சியாளர்களுக்கு வழி வகுக்கிறது.
- மைக்கோபாக்டீரிய டியுபர்குலோசிஸ் (Mtb) என்பது ஒரு ஆபத்தான நோய்க் கிருமி ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில், இது 10.6 மில்லியன் மக்களை பாதித்து, சுமார் 1.3 மில்லியன் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.

## ஐரோப்பாவின் ஏரியன் 6 ஏவுகலம்

- ஐரோப்பாவின் ஏரியன்-6 எனப்படும் மிகப்பெரிய புதியதொரு ஏவுகலமானது தனது முதல் விண்கலத் திட்டமாகப் பிரெஞ்சு கயானாவின் கௌரு என்ற இடத்தில் இருந்து விண்ணில் ஏவப் பட்டுள்ளது.
- ஏரியன்-6 ஆனது அதன் முன்னோடி ஏவுகலமான ஏரியன்-5 ஏவுகலத்திற்கு மாற்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது புவித் தாழ் மட்டச் சுற்றுப்பாதை மற்றும் விண்வெளியின் மிகவும் தொலைதூரப் பகுதிகளுக்கு ஆய்வுக் கலங்களை அனுப்பும் திறன் கொண்டது.

## நாசாவின் CHAPEA ஆய்வுத் திட்டம்

- நாசாவின் விண்வெளி வீரர்களின் சுகாதாரம் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுச் சுற்று (CHAPEA) திட்டம் ஆனது, விண்வெளி ஆய்வாளர்கள் செவ்வாய்க் கிரகத்தில் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து புரிந்து கொள்வதற்காக திட்டமிடப்பட்ட மூன்று மாதிரி அமைப்புகளில் முதலாவது அமைப்பாகும்.
- முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட காற்று புகாத வகையிலான செவ்வாய்க் கிரக மாதிரி அமைப்பு வாழ்விடம் ஆனது "மார்ஸ் டூன் ஆல்பா" என அழைக்கப்படுகிறது.
- முதல் CHAPEA ஆய்வுக் கல அமைப்பானது ஊட்டச்சத்து மீது கவனம் செலுத்துகிறது.
- அடுத்த இரண்டு ஆய்வுக் கலங்கள் ஆனது 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- நாசா நிறுவனமானது, 2030 ஆம் ஆண்டுகளில் செவ்வாய்க் கிரகத்திற்கு விண்வெளி வீரர்களை அனுப்ப உள்ளது.




## ஒமேகா சென்டாரியில் உள்ள மாபெரும் கருந்துளை

- நாசாவின் ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கியானது ஒமேகா சென்டாரியின் மையப் பகுதியில் ஓர் இடைநிலை நிறை கொண்ட மாபெரும் கருந்துளை இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- ஒமேகா சென்டாரி என்பது பால் வெளி அண்டத்தில் உள்ள, அடர்த்தியான விண்மீன் தொகுப்பிற்கு பெயர் பெற்ற மிகப்பெரிய கோளக விண்மீன் திரள் ஆகும்.
- இடைநிலை நிறை கொண்ட கருந்துளைகள் (IMBHs) என்பது நட்சத்திர அளவிலான நிறை கொண்ட கருந்துளைகள் (சூரிய நிறையில் சிறிய அளவு முதல் பத்து மடங்கு வரையிலான) மற்றும் மீப்பெரும் கருந்துளைகள் (சூரிய நிறையில் மில்லியன்கள் முதல் பில்லியன்

வரையிலான) ஆகியவற்றுக்கு இடைப்பட்ட ஒரு நிறையினைக் கொண்டதாக இருக்கும் கருந்துளைகள் ஆகும்.

- குறிப்பாக, இடைநிலை நிறை கொண்ட கருந்துளைகள் நமது சூரியனை விட 100 முதல் 100,000 மடங்கு நிறை கொண்டதாக கருதப்படுகிறது.




## வலுவான சூரிய துகள் வெளியீட்டு நிகழ்வு



- சமீபத்தில், செவ்வாய்க் கிரகமானது ஒரு மிகவும் வலுவான சூரிய துகள் நிகழ்வின் தாக்கத்திற்கு உட்பட்டது.
- செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பைத் தாக்கும் சூரியத் துகள்களால் வெளிப்படும் கதிர்வீச்சு, ஒரு மார்பக ஊடுகதிர் ஆய்வின் கதிர்வீச்சினை விட 30 மடங்கு அதிகமாக இருந்தது.
- சூரியன் தனது மேற்பரப்பில் இருந்து நேரடியாகப் புரோட்டான்களை வெளியிடும் நிகழ்வானது வலுவான சூரிய துகள் வெளியீட்டு நிகழ்வு ஆகும்.
- பூமியின் காந்தப்புலம் ஆனது, சூரியன் உமிழும் கதிர்வீச்சுகளைத் திசைதிருப்பும் வகையிலான ஒரு பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுகிறது.
- வலுவான சூரிய துகள் வெளியீட்டு நிகழ்வானது, ஓராண்டிற்கும் மேலான ஒரு காலக் கட்டத்தில் ஓசோன் அளவைக் குறைக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- ஒரு வலுவான சூரிய துகள் வெளியீட்டு நிகழ்வானது பொதுவாக 1,000 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும்.
- பதிவுகளின் படி, சமீபத்திய வலுவான சூரிய துகள் வெளியீட்டு நிகழ்வு ஆனது கி.பி 993 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்டது.

## திய வகை "டைம் கிரிஸ்டல்"

- இயற்பியலாளர்கள் அனுமானப் பொருளின் ஒரு சிறப்பு வடிவத்தினை உருவாக்கச் செய்வதற்காக அணுக்களை அவற்றின் வழக்கமான அளவை விட நூற்றுக்கணக்கான மடங்குக்குப் பெரிதாக்குவர்.
- ருபிடியம் அணுக்கள் ஒரு ஆற்றல் தூண்டப்பட்ட வடிவில் பெரிதாகும் வரை லேசர் ஒளிக்கதிர்களை வீசுவதன் மூலம் டைம் கிரிஸ்டல் எனப்படும் விசித்திரமான பொருள் வடிவமானது உருவாக்கப்பட்டது.
- இது எப்போதுமே நகர்ந்துக் கொண்டிருக்கும் மற்றும் எந்த ஆற்றலையும் இழக்காத இரண்டு கட்டங்களுக்கு இடையில் முடிவில்லாமல் அலைவுறும் ஒரு மர்மமான படிகம் ஆகும்.





## சூரியனைச் சுற்றும் பூமியின் சுழற்சி



- சூரியக் குடும்பத்தில் உள்ள பூமியின் இயக்கமானது தற்போது சூரியனை மையமாகக் கொண்டு சுற்றி வரும் வகையில் இல்லை.
- சூரியன் ஆனது சூரியக் குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய பொருள் மற்றும் வியாழன் கோளின் நிறையில் 1,048 மடங்கு நிறை கொண்டது.
- இருப்பினும், இந்த வானியல் அமைப்பின் மீது பூமி செலுத்தும் ஈர்ப்பு விசையானது கிரகத்தின் மீது அதே அளவு அல்லது சிறிய அளவில் செலுத்தப்படுகிறது.

- கெப்ளரின் மூன்றாவது விதியானது ஒன்றையொன்று சுற்றி வரும் இரண்டு வானியல் அமைப்புகளின் நிறைகளுக்கு இடையிலான ஒரு தொடர்பினையும், சுற்றுப்பாதை அளவுருக்களின் நிர்ணயத்தையும் விவரிக்கிறது.
- பூமியானது சூரியனை அல்லாமல், ஒரு பொது நிறை மையத்தைச் சுற்றி வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- பொதுவாக, சூரியக் குடும்பத்தில் உள்ள வானியல் அமைப்புகளின் பொது நிறை மையம் ஆனது சூரியனுக்கு அருகில் அமைந்துள்ளது.
- இருப்பினும், வாயுக் கோள்களான வியாழன், சனி நிறை ஆகியவற்றின் மற்றும் தாக்கம் மற்றும் சுற்றுப்பாதைகளின் தாக்கம் காரணமாக அந்த மையம் அரிதாகவே சூரியனுக்குள் அமைகிறது.
- தற்போது, பொது நிறை மையம் ஆனது சூரியனுக்கு உள்ளே இல்லாமல் வெளியே அமைந்துள்ளது எனவே, பூமி தற்போது சூரியனைச் சுற்றி வரவில்லை.
- எனவே, புவியானது விண்வெளியில் உள்ள ஒரு புள்ளியைச் சுற்றி வருகிறது, சூரியனை அல்ல.
- பூமியும் நிலவும் பூமியின் மையத்திலிருந்து சுமார் 5,000 கிலோமீட்டர்கள் (3,100 மைல்) தொலைவில் உள்ள ஒரு புள்ளியைச் சுற்றி வருகின்றன.
- இருப்பினும், நிலவானது மெதுவாகப் பூமியிலிருந்து விலகிச் செல்வதால் இது மாறிக் கொண்டே இருக்கிறது.

## குவாசரின் 'ஐன்ஸ்டீன் வளையம்'





- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது (JWST) ஐன்ஸ்டீன் வளையம் எனப்படும், துடிப்பு அண்டங்களால் (குவாசர்) உருவாக்கப்பட்ட ஒளியின் "சிறப்பு" ஒளி வளையத்தினைப் படம் பிடித்துள்ளது.
- RX J1131-1231 எனப்படும் இந்த துடிப்பண்டம் ஆனது, பூமியிலிருந்து தோராயமாக 6 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் கிரேட்டர் விண்மீன் மண்டலத்தில் அமைந்து உள்ளது.
- நான்கு பிரகாசமான பகுதிகளால் பிரகாசமாகப் புலப்படும் அதன் ஒளிரும் வளையத்தினைக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்ற ஐன்ஸ்டீன் வளையம் ஆனது ஈர்ப்புக் குவியம் எனப்படும் ஒரு நிகழ்வின் விளைவாக ஏற்படுகிறது.

- தொலைதூரப் பொருளிலிருந்து வரும் ஒளியானது, தொலைதூரப் பொருளுக்கும் பார்வையாளருக்கும் இடையில் அமைந்துள்ள மற்றொரு மாபெரும் பொருளின் ஈர்ப்பு விசையால் திசை திருப்பப்பட்ட விண்வெளி நேரத்தின் வழியாகப் பயணிக்கும்போது ஈர்ப்புக் குவிய நிகழ்வு ஏற்படுகிறது.
- ஈர்ப்புக் குவிய நிகழ்வு குறித்த கருத்து ஆனது முதன்முதலில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்களால் 1915 ஆம் ஆண்டில் அவரது பொது சார்பியல் கோட்பாட்டில் கணிக்கப் பட்டது.

## வோல்பேசியா பாக்டீரியா


- நூறு ஆண்டுகளுக்கு முன்பு, மார்ஷல் ஹெர்டிக் மற்றும் சிமியோன் பர்ட் வோல்பாக் என்ற இரண்டு அமெரிக்க அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கொசுக்கள் தங்கள் உயிரணுக்களுக்குள் பாக்டீரியாவைக் கொண்டிருப்பதைக் கண்டறிந்தனர்.
- இதர அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், பின்னர் பெரும்பாலான பூச்சிகள் மற்றும் பல கணுக்காலிகளின் செல்களில் இதே போன்ற பாக்டீரியா இருப்பதைக் கண்டறிந்தனர்.
- இந்தப் பாக்டீரியாவினை உள்ளடக்கிய இனத்திற்கு வோல்பேசியா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- வோல்பேசியா பாக்டீரியா பூச்சிகளின் கருமுட்டைகளிலும் உள்ளது ஆனால் அவை அதன் விந்தணுவில் காணப்படுவதில்லை.
- அதாவது பெண் பூச்சிகளால் வோல்பேசியாவை அவற்றின் சந்ததியினருக்கு நன்குப் பரிமாற்ற முடியும், ஆனால் ஆண் பூச்சிகளால் அவ்வாறு பரிமாற்ற முடியாது.
- என்கார்சியா ஃபார்மோசா குளவிகள், வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த ஒரு திறன் மிகு வழியை வழங்கச் செய்கின்றன என்பதால் அவை வேளாண் அறிவியலாளர்களின் கவனத்தினை ஈர்த்துள்ளன.




## முப்பது மீட்டர் தொலைநோக்கிக்கான பொதுப் பயன்பாட்டுக் கருவி

- இந்திய அறிவியலாளர்கள் குழுவானது, ஒரு அகச்சிவப்பு நட்சத்திரப் பட்டியலை உருவாக்கச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட பொதுப் பயன்பாட்டுக் கருவியை உருவாக்கியுள்ளது.

- இந்தக் கருவியானது குறிப்பாக மிகவும் எதிர்பார்க்கப் பட்டு வரும் முப்பது மீட்டர் தொலைநோக்கிக்காக (TMT) உருவாக்கப்பட்டது.
- TMT என்பது ஹவாய் தீவில் உள்ள மௌனா கியாவில் கட்டப்படுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ள தொலைநோக்கி ஆகும்.





## ஹைட்ரஜன் பெராக்சைடு நுண் திவலையாக்க மருந்து தெளிப்பு முறை

- குறிப்பாக வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களின் கரைசல்களில் (பொதுவாக 3% இருக்கும்) இருப்பதை விட அதிகமான செறிவுகளில் சுவாசக் குழாயில் செலுத்தப்படும் ஹைட்ரஜன் பெராக்சைடு ஆனது அதிக எரிச்சலை ஏற்படுத்தும்.
- ஹைட்ரஜன் பெராக்சைடை நுண் திவலையாக்க மருந்து தெளிப்பு முறையில் சுவாசிப்பது மூச்சுக் குழாய் அழற்சிக்கு வழி வகுத்து, இருமல், தொண்டை எரிச்சல் மற்றும் மிகவும் கடுமையான சுவாசக் கோளாறு ஆகியவற்றை ஏற்படுத்தும்.
- ஹைட்ரஜன் பெராக்சைட்டின் செறிவூட்டப்பட்ட கரைசலில் இருந்து வெளியே வரும் ஆவிகள், நுண் திவலைகள் அல்லது நீர்த்துளிகளை உள்ளிழுப்பது ஒரு குறிப்பிடத்தக்க நோயுற்ற தன்மையை ஏற்படுத்தும்.
- ஹைட்ரஜன் பெராக்சைடு மணமாற்ற வாயு என்பதால் இதற்கு எந்த அனுமதிக்கப் பட்ட சுவாச வரம்பு அளவும் (1ppm) இல்லை.




## ஈருலோக NiFe அமைப்புகள்

- ஈருலோக நிக்கல் இரும்பு அடுக்கு கொண்ட இரட்டை ஹைட்ராக்சைடு அமைப்பு ஆனது நீர் மூலக்கூறு பிரிப்பு மூலம் திறன் மிக்க முறையில் $O_2$ உற்பத்திக்குச் சரியான நுட்பமாக உள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டின் சமீபத்திய சகாப்தத்தில், நிலையான ஆற்றல் தீர்வுகளுக்கான தேடலில் ஒரு நம்பகரமான வாய்ப்பாக நீர் மூலக்கூறு பிரிப்பு செயல் முறை வெளிப்படுகிறது.
- தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு பெரும் தீங்கு எதுவும் விளைவிக்காமல், பசுமையான மற்றும் தூய்மையான $H_2$ மற்றும் $O_2$ மூலக்கூறுகளை அதிக அளவில் உருவாக்க, நீர் மூலக்கூறுப் பிரிப்பு ஒரு நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வழி என கூறலாம்.





## குறைந்த அதிர்வெண் தொகுப்பு

- குறைந்த அதிர்வெண் தொகுப்பைப் (LOFAR) நன்கு பயன்படுத்தி ஒரு புதிய ரேடியோ அண்டத்தினை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது J0011+3217 என குறிப்பிடப்படுகிறது.
- ரேடியோ அண்டங்களின் மத்திய மையங்களில் இருந்து அதிக அளவு ரேடியோ அலைகள் உமிழப் படுகின்றன.
- இந்த அண்டங்களின் மையப்பகுதியில், கருந்துளைகள் ஆனது வாயு மற்றும் தூசிப் படலங்களைத் திரட்டி, மின்னூட்டம் பெற்றத் துகள்களை மிகவும் அதிக வேகத்தில் செலுத்துகின்ற ரேடியோஅலை உணர்வியில் புலப்படும் வரம்பிலான உயர்-ஆற்றல் கற்றைக்களை உருவாக்குகின்றன.




## அறிவியல்பூர்வ ஆய்விற்கான ஆழ்துளையிடல் திட்டம்

- இந்தியாவின் ஒரேயொரு அறிவியல்பூர்வ ரீதியிலான ஆய்விற்கான ஆழ்துளையிடல் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஒரு பணியானது மகாராஷ்டிராவின் காரத் என்னுமிடத்தில் உள்ள ஆழ்துளைப் புவி இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்திடம் (BGRL) வழங்கப் பட்டுள்ளது.
- பூமியின் கண்ட மேலடுக்கினை சுமார் 6 கி.மீ ஆழத்திற்கு துளையிட்டு அறிவியல்பூர்வ ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.
- மகாராஷ்டிராவின் கொய்னா-வார்னா பகுதியில் செயலில் உள்ள நிலப்பிளவு மண்டலத்தில் நீர்த்தேக்கங்களால் தூண்டப்படும் நிலநடுக்கங்கள் பற்றிய புரிதலை மேம்படுத்த இது உதவும்.
- 1962 ஆம் ஆண்டில் சிவாஜி சாகர் ஏரி அல்லது கொய்னா அணை உருவாக்கப் பட்டதில் இருந்து இப்பகுதி அடிக்கடி மற்றும் அவ்வப்போது நிலநடுக்கங்களை எதிர் கொண்டு வருகிறது.




## எடை இழப்பு மருந்து – டிர்செபடைடு

- இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பின் (Central Drugs Standard Control Organisation - CDSCO) நிபுணர் குழுவானது, டிர்செபடைடு என்ற ஒரு மருந்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- டிர்செபடைடு என்பது யெலி லில்லி மற்றும் கம்பனி என்ற ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப் பட்ட முதன்மையாக இரண்டாம் வகை நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுகின்ற ஒரு மருந்தாகும்.
- இந்த மூலக்கூறுக் கலவையானது நீரிழிவு நோய்க்கான மௌஞ்சாரோ மற்றும் எடை இழப்புக்கான ஷெப்பௌண்ட் என்ற தயாரிப்புப் பெயர்களில் விற்கப்படுகிறது.
- இருப்பினும், டிர்செபடைடு மருந்தானது இந்தியாவில் எடை இழப்பு மருந்தாக அல்லாமல் நீரிழிவு நோய்க்கான ஒரு மருந்தாக இறக்குமதி செய்யப்பட்டுச் சந்தைப் படுத்தப் படும்.
- டிர்செபடைடு உணவுக்குப் பின்பு கணையத்தில் இருந்து இன்சுலின் சுரப்பினைத் தூண்டுகிறது.
- இது உணவு உண்ட பிறகு இரத்தத்தில் சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகிறது.
- இது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை அதிகரிக்கும் குளுகோகன் எனப்படும் ஹார்மோன் சுரப்பினைக் குறைக்கிறது.
- கடந்த ஆண்டு, இளம்பருவத்தினரின் உடல் பருமனை எதிர்க்கின்ற, ஊசி வழியாக செலுத்திக் கொள்ள பரிந்துரைக்கப்படும் ஷெப்பௌண்ட் மருந்து, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.





## OJ 287 மற்றும் இணை கருந்துளைகள்

- 10 நாடுகளைச் சேர்ந்த 32 அறிவியலாளர்கள் குழு நடத்திய ஒரு புதிய ஆய்வில், முதல் முறையாகச் சுற்றி வரும் கருந்துளை போன்ற 'தோற்றத்தினை' கொண்ட ஒரு சிறிய ஓரிணை கருந்துளைகளைக் கண்டறிந்துள்ளனர்.
- நான்கு பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள OJ 287 அண்டத்தின் மையத்தில் இந்த இணை கருந்துளைகள் உள்ளன என்ற ஒரு கோட்பாட்டை ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளனர்.
- OJ 287 எனப்படும் அண்டம் ஆனது பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், OJ 287 அண்டத்தில் உள்ள மிகப் பெரிய கருந்துளை அதன் அளவை விட 100 மடங்கு பெரிய கருந்துளையைச் சுற்றி வருகிறது என்பதற்கான மறைமுக ஆதாரங்களையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.




## நிலவில் குகை





- நிலவில் ஒரு குகை கண்டுபிடிக்கப்பட்டதை அறிவியலாளர்கள் சமீபத்தில் உறுதிப் படுத்தியுள்ளனர்.
- சீ ஆஃப் டிராங்குவிலிட்டி என்ற இருள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ள இந்தக் குகை, 1969 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க அப்பல்லோ 11 கலம் தரையிறங்கிய தளத்திலிருந்து சுமார் 250 மைல்கள் (400 கிலோமீட்டர்) தொலைவில் உள்ளது.
- சுமார் 100 மீட்டர் நீளம் கொண்டதாக மதிப்பிடப்பட்ட இந்தக் குகை, நிலவின் மேற் பரப்பை நோக்கியவாறு ஒரு மேல் தள சாளரம் அளவிலான திறப்பைக் கொண்டு உள்ளது என்பதோடு இது நிலவின் அடிப்பரப்பு வரை நீளக்கூடும் என்றும் கருதப் படுகிறது.

- இந்தக் குகையானது ஆழமானதாக இருந் தபோதிலும், அது சிறப்பு உபகரணங்கள் இல்லாமலேயே பூமியிலிருந்து காணும் வகையில் அமைந்துள்ளது.
- பூமியை விட 150 மடங்கு வலிமையான சூரியக் கதிர்வீச்சுக்கு நிலவு உட்படுகிறது.
- நிலவின் மேற்பரப்பு ஆனது பகலில் சுமார் 127 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அடைகிறது என்றும், இரவில் -173 டிகிரி செல்சியஸ் வரை குளிர்ச்சியடைகிறது என்றும் நாசா கூறுகிறது.
- ஆனால் இக்குகையின் நிலையான சராசரி வெப்பநிலை சுமார் 17 டிகிரி செல்சியஸ் ஆக உள்ளது.

## Blue Screen of Death


- கணினிகள் திடீரென தானாகவே இயக்க நிறுத்தம் அல்லது மீள்தொடக்கத்தினை மேற்கொள்ளும் வகையில் ஒரு பெரிய தொழில்நுட்பச் சிக்கல் உலகளவில் மில்லியன் கணக்கான விண்டோஸ் கணினி அமைப்புகளைப் பாதித்துள்ளது.
- இது Crowdstrike என்று அழைக்கப் படும் ஒரு நிறுவனத்தின் மென்பொருள் குறைபாடு ஆகும்.
- உலகெங்கிலும் உள்ள காவல்துறை, விமானப் போக்குவரத்து மற்றும் அரசாங்கம் போன்ற முக்கியமான சேவை வழங்கும் அமைப்புகள் உட்பட பல்வேறு சேவைகள் இதனால் பாதிக்கப் பட்டுள்ளன.
- கருப்புத் திரைப் பிழைகள் அல்லது STOP குறியீட்டுப் பிழைகள் என்றும் அழைக்கப் படும் ப்ளூ ஸ்கிரீன் இயக்கக் குறைபாடு ஆனது, ஒரு முக்கியமானச் சிக்கலானது விண்டோஸ் அமைப்புகளின் எதிர்பாராதவிதமான இயக்க நிறுத்தம் அல்லது மீள் தொடக்கத்தினை மேற்கொள்ளும் போது ஏற்படலாம்.




## ஆறு புதிய புறக்கோள்கள்

- ஆறு புதிய உலகங்களைக் கண்டுபிடித்துள்ளதாக நாசா அறிவித்துள்ளது.
- வியாழன் கோளினை விட மீப்பெரு அளவிலான HD 36384 b என்பது, நமது சூரியனை விட சுமார் 40 மடங்கு பெரிய M என்ற இராட்சத நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.


- TOI-198 b ஆனது அதன் நட்சத்திரத்தின் வாழக் கூடிய மண்டலத்தின் உள் விளிம்பில் காணப் படும் ஒரு சாத்தியமான வாழக் கூடிய வாய்ப்புள்ள பாறைக் கோள் ஆகும்.
- TOI-2095 b மற்றும் TOI-2095 c ஆகியவை ஒத்த M குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வரும் வெப்பமான மீப்புவி கோள் ஆகும்.
- TOI-4860 b என்பது M குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி 1.52 நாட்களுக்கு ஒருமுறை ஒரு சுற்றுப் பாதையை நிறைவு செய்கின்ற ஓர் அரிய "சூடான வியாழன் அளவுள்ள கோள்" ஆகும்.
- தற்போது, நமது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் காணப்படுவதாக உறுதிப்படுத்தப் பட்ட மொத்த கிரகங்களின் எண்ணிக்கை 5,502 ஆக அதிகரித்துள்ளது.
- தோராயமாக 31 ஆண்டுகளுக்கு முன்பு, 1992 ஆம் ஆண்டில், இரட்டைக் கோள்களான போல்டர்ஜிஸ்ட் மற்றும் ஃபோபெட்டர் ஆகியவற்றினை அறிவியலாளர்கள் கண்டறிந்த போது வெளிக்கோள்கள் கண்டறியப்பட்டுள்ளத்தை உறுதி செய்தனர்.
- அவை PSR B1257+12 என்ற துடிப்பு அண்டங்களைச் சுற்றி வருகின்றன.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், கண்டுபிடிக்கப்பட்ட புறக்கோள்களின் எண்ணிக்கையானது 5,000 அளவினைத் தாண்டியது.





## கனிம நுண் துகள்கள்

- மின்னூட்டம் பெற்ற சிறிய நீர்த்துளிகள் அல்லது நுண் துளிகளால் மில்லி விநாடிகளில் பொதுவான தாதுக்கள் நுண்ணிய அளவிலான துகள்களாக உடைக்கப் படுகின்றன என்று சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியானது காட்டுகிறது.
- ஆற்று மணல், ரூபி மற்றும் அலுமினா உள்ளிட்ட இந்தக் கனிமங்கள் என்பவை மிகவும் கடினமானவை.
- நுண்துளிகள் மீதான ரசாயன எதிர்வினைகளை மேம்படுத்துவதன் விளைவாக புதிய இரசாயனப் பிணைப்புகள் உருவாகின்றன.

- பாறைகளின் படிப்படியான தேய்மானத்தின் மூலம் மண் உருவாகிறது என்ற நிலையில் இந்தச் செயல்முறைக்கு வெவ்வேறு அளவிலான துகள்களை உள்ளடக்கிய ஒரு சென்டிமீட்டர் மண்ணை உற்பத்தி செய்ய 200 முதல் 400 ஆண்டுகள் வரை ஆகும்.
- இந்தப் புதிய கண்டுபிடிப்பு மூலம், வெறும் 10 மில்லி வினாடிகளில், கனிம நுண் துகள்கள் ஆனது நுண் துகள்களாக உடைக்கப் படுகின்றன.




## புதிய NOva தரவு




- NovA என்பது ‘NuMI Off-axis νe Appearence’ என்பதன் சுருக்கமாகும்.
- இது 800 கி.மீ தொலைவில் அமைந்துள்ள 14,000 டன் எடையுள்ள உணர்கருவிகளை நோக்கி பறக்கும் நியூட்ரினோக் கற்றைகளை உருவாக்குகிறது.
- இப்பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சியில் நியூட்ரினோக்களின் பெரும் பங்கை நன்கு தீர்மானிக்குவதற்காக NovA வடிவமைக்கப்பட்டுள்ளது.

- நியூட்ரினோக்கள் ஒரு வகை அணு சார் துகள்கள் ஆகும்.
- அவற்றிற்கு மின்னூட்டங்கள் இல்லை என்பதோடு மேலும் அவை குறைந்த நிறை மற்றும் இடது புற இயக்க நிலை கொண்டவையாகும்.
- அவை ஃபோட்டான்களுக்கு அடுத்தபடியாக மிகவும் அதிக எண்ணிக்கையில் காணப் படும் இரண்டாவது துகள்கள் ஆகும்.
- முதன்முதலில் 1987 ஆம் ஆண்டில் சுமார் 150,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு நட்சத்திரம் வெடித்த நிகழ்வின் போது ஒரு மீவொளிர் வீண்முகிளில் இருந்து வேற்றுக் கிரக நியூட்ரினோக்கள் வெளி வருவதை இயற்பியலாளர்கள் கண்டறிந்தனர்.

## தல்வார் ரகப் போர் கப்பல்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'INS திரிபுட்' எனப்படும் முதல் தல்வார் ரகப் போர்க் கப்பலானது கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஒரு வலிமை மிக்க அம்பினைக் குறிக்கும் வகையில் இந்தக் கப்பலுக்கு திரிபுட் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தப் போர்க்கப்பலில் பிரம்மோஸ் ஏவுகணைகள் மற்றும் ஷ்டில்-1 வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன.
- இந்த வரிசையில் தயாரிக்கப்பட உள்ள இரண்டாவது கப்பலான தமால் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் கட்டமைக்கப்படும்.
- இந்திய அரசானது, 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ரஷ்யாவிடம் இருந்து நான்கு போர்க் கப்பல்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டது என்ற நிலையில் அவற்றில் இரண்டு கப்பல்கள் ரஷ்யாவிலும் இரண்டு கப்பல்கள் கோவா கப்பல் கட்டும் தளத்திலும் கட்டமைக்கப் பட உள்ளன.



## இரண்டாம் கட்ட உந்துவிசை ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு 2024

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, இரண்டாம் நிலை உந்து விசை ஏவுகணைப் பாதுகாப்பு (BMD) அமைப்பின் வானியக்கச் சோதனையினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.


- இது 5,000 கி.மீ அளவிலான வரம்புடைய உந்துவிசை ஏவுகணைகளை எதிர்கொள்ளும் திறனைக் கொண்டுள்ள உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஆயுத அமைப்பாகும்.
- இரண்டாம் கட்ட மேம்பட்ட அமைப்பானது வளிமண்டலத்திற்குள்ளேயே இலக்குகளை எதிர்கொள்ளும் ஏவுகணையானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இரண்டு நிலை கொண்ட ஒரு திட எரிபொருள் மூலமான உந்து விசையுடன் நிலத்தில் இருந்து ஏவப் படுகின்ற ஏவுகணை ஆகும்.
- 2,000 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் உனது விசை ஏவுகணைகளை எதிர்கொள்ளக் கூடிய BMD பாதுகாப்பு அமைப்புகளின் முதல் கட்டம் ஆனது ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஓவிய அழகி வண்ணத்துப்பூச்சி

- முதன்முறையாக, அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக வண்ணத்துப் பூச்சிகள் பறப்பதை அறிவியலாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர்.
- அட்லாண்டிக் கடல்கடந்த வலசை நிகழ்வானது, மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து தென் அமெரிக்காவில் உள்ள பிரெஞ்சு கயானா வரை 2,600 மைல்களுக்கு மேல் மேற் கொள்ளப் படுகிறது.
- அட்லாண்டிக் பெருங்கடல் வழியான, இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக நீண்ட பூச்சி இடம்பெயர்வுகளில் ஒன்றை நிறைவு செய்ததன் மூலம் இந்த வண்ணத்துப்பூச்சி இனம் அந்தப் பகுதியினைச் சென்றடைந்தது.
- ஓவிய அழகி வண்ணத்துப்பூச்சி இனத்தின் இடம்பெயர்வு ஆனது நீண்ட தூரம் மட்டும் அல்லாமல், சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு மிகவும் ஏற்ற வகையிலானது.




## ஒற்றை மெயின்லேண்ட் செரோவ்



**Lone ranger:** A mainland serow at the Raimona National Park in western Assam. SPECIAL ARRANGEMENT


- தனது இயற்கையான தாயகமான பூட்டானுக்குப் பதிலாக வேறொரு இடத்தில் மிகக் குறைவான உயரத்தில் செரோவ் (இமயமலை வரையாடு) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது ஆடு மற்றும் மான்களுக்கு இடைப்பட்ட தோற்றம் கொண்ட பாலூட்டியாகும்.
- 200-3,000 மீட்டர் உயரத்தில் உள்ள நிலப்பகுதிகளில் செரோவ் வாழ்கிறது.
- இமயமலை பகுதியில் உள்ள இந்தியா-பூடான் எல்லையில் அமைந்துள்ள பிப்சூ வன விலங்குச் சரணாலயம் மற்றும் ராயல் மனாஸ் தேசியப் பூங்கா ஆகியவற்றில் இந்த விலங்குகளின் வாழ்விடம் உள்ளது.
- இந்த விலங்குகளில் மேலும் மூன்று இனங்கள் உள்ளன:
  - ஜப்பானிய செரோவ்,
  - சிவப்பு செரோவ் (கிழக்கு இந்தியா, வங்காளதேசம் மற்றும் மியான்மரில் காணப் படுகிறது), மற்றும்
  - தைவான் அல்லது ஃபார்மோசன் செரோவ்.

## டிடிமோகார்பஸ் ஜானகியே

- அருணாச்சலப் பிரதேசத்தில் டிடிமோகார்பஸ் ஜானகியே என்ற புதிய தாவர இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- இது ஆப்பிரிக்க ஊதா நிறத் தாவரக் குடும்பத்தின் (ஜெஸ்நெரியாசியே) அங்கமான கல் பாசி என பொதுவாக அறியப்படும் டிடிமோகார்பஸ் என்ற தாவர வகையைச் சேர்ந்தது.
- இந்தப் பேரினமானது, 111 இனங்களைக் கொண்டுள்ளது என்ற நிலையில் அவற்றில் தற்போது புதிதாக விவரிக்கப்பட்டுள்ள இந்த இனம் உட்பட 27 இனங்கள் இந்தியாவில் காணப் படுகின்றன.
- இதற்கு இந்தியத் தாவரவியல் முன்னோடியான டாக்டர் E.K.ஜானகி அம்மாள் அவர்கள் நினைவாக பெயரிடப்பட்டது.
- இவர் 1931 ஆம் ஆண்டில், அமெரிக்காவில் (மிச்சிகன் பல்கலைக்கழகம்) தாவரவியலில் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.




## கோம்ஃபோன்மாய்டு டயட்டம்




- கிழக்குத் தொடர்ச்சி மலையின் தூய்மையான நீர் கொண்ட நதிகளில் கோம்ஃபோன்மாய்டு டயட்டம் என்ற புதிய பாசி இனம் காணப்படுவதாக அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- சமச்சீரான வால்வுகள் மற்றும் பிற குறிப்பிட்ட வால்வு அம்சங்களின் அடிப்படையில் கோம்ஃபோன்மாய்டு குழுவில் உள்ள மற்ற இனங்களிடமிருந்து இது வேறுபட்டுக் காணப்படுகிறது.
- இது இந்தியாவில் மட்டுமே காணப்படுவதனை மதிப்பிடுவதற்காக இண்டிகோனெமா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- உலக ஆக்சிஜனில் 25 சதவீதத்தினை உற்பத்தி செய்வதன் மூலம் நமது அன்றாட வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கும் டயட்டம்கள் நுண்ணிய ஆல்கா ஆகும்.
- 1845 ஆம் ஆண்டில் எஹ்ரென்பெர்க் என்பவரால் டயட்டம்கள் இந்தியாவில் முதன் முதலில் பதிவு செய்யப்பட்டன.

## புதிய கொம்பு தவளை இனங்கள்

- அருணாச்சலப் பிரதேசத்தின் டேல் வனவிலங்கு சரணாலயத்தில் (WLS) ஜெனோஃப்ரிஸ் அபதானி என்ற புதிய வகை கொம்புத் தவளையை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- இந்த உயிரினத்திற்கு வனத் தாவரங்கள் மற்றும் வன விலங்கினங்களின் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பெயர் பெற்ற அபதானி பழங்குடியினரின் பெயரால் ஜெனோஃப்ரிஸ் அபதானி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தத் தவளை இனமானது முன்னதாக ஜெனோஃப்ரிஸ் மயோஷோநென்சிஸ் என்று கருதப்பட்டது.



## சென்னா ஸ்பெக்டபிலிஸ்

- வயநாடு வனவிலங்குச் சரணாலயத்தில் இருந்து நீலகிரி உயிர்க்கோளத்தில் உள்ள வன விலங்குகளின் வாழ்விடத்திற்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் சென்னா ஸ்பெக்டபிலிஸ், ஒரு அன்னிய ஆக்கிரமிப்புத் தாவரம் ஆகும்.
- விரைவாக வளரும் இது நச்சு உயிர் வேதியியல் குணங்களைக் கொண்டுள்ளதால் இது நாட்டுத் தாவரங்களை வளரவிடாமல் தடுக்கிறது.
- இது அப்பகுதியில் நிலவும் பன்முகத் தன்மையைக் குறைக்கிறது.
- இது வெப்பமண்டல தென் அமெரிக்காவில் இருந்து வந்த ஒரு இலையுதிர் மரம் ஆகும்.
- இம்மரத்தின் பிரகாசமான மஞ்சள் நிற மலர்கள் தேனீக்களுக்கு தேன் வழங்குகின்றன என்பதோடு மேலும் இது சீரழிந்த நிலங்களில் மீண்டும் மரம் வளர்க்கும் திட்டங்களில் பயன்படுத்தப் படுகிறது.



## வாகிடா - கடல் வாழ் பாலூட்டி


- உலகின் மிகவும் அருகி வரும் கடல் வாழ் பாலூட்டியான வாகிடா (கடல் பன்றிகள்), அழிவின் விளிம்பில் தத்தளிக்கிறது.
- ஓராண்டிற்கு முன்பு 8 முதல் 13 வாகிடாக்கள் காணப்பட்ட நிலையில் தற்போது 6 முதல் 8 வாகிடாக்கள் மட்டுமே காணப்படுகின்றன.
- எளிதில் காண முடியாத இவை மெக்சிகோ நாட்டில் மேல் மட்ட கலிபோர்னியா வளைகுடாவில் மட்டுமே காணப்படுகின்றன.
- அவற்றின் வாழ்விடம் வளைகுடாவின் ஆழமற்ற கரையோர நீர்ப் பகுதியாகும்.



## தேசிய அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட பல்லுயிர் குறித்த ஒப்பந்தம் – இந்தியா

- இந்திய அரசானது, விரைவில் தொலைதூரப் பெருங்கடல் பகுதி மீதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஒப்புதல் அளிக்க உள்ளது.
- இது பெருங்கடல்களின் சுற்றுச்சூழல் வளத்தினைப் பேணுவதற்கான ஒரு புதிய சர்வ தேச சட்டக் கட்டமைப்பாகும்.
- இது மாசுபாட்டைக் குறைப்பதற்காகவும், பெருங்கடல் நீரில் உள்ள பல்லுயிர் மற்றும் பிற கடல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றின் நீடித்த மற்றும் நிலையான பயன்பாட்டிற்காகவும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

- ❖ இந்த ஒப்பந்தமானது தேசிய அதிகார வரம்புகளுக்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப் பெருக்கம் (BBNJ) என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ இது தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் கடல் உயிரியல் பன்முகத் தன்மையின் வளங்காப்பு மற்றும் நிலையானப் பயன்பாடு குறித்த ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.
- ❖ 96 நாடுகள் ஏற்கனவே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன என்பதோடு அவற்றில் எட்டு நாடுகள் அதற்கு ஒப்புதலும் அளித்துள்ளன.




## 11 புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள்

- ❖ யுனெஸ்கோ அமைப்பானது, 11 நாடுகளில் 11 புதிய உயிர்க்கோளக் காப்பகங்களின் பெயரை அங்கீகரித்துள்ளது.
- ❖ பெல்ஜியம் மற்றும் காம்பியா ஆகியவை முதல் முறையாக இதில் பட்டியலிடப் பட்டு உள்ளன.
- ❖ இதில் இரண்டு எல்லை கடந்த உயிர்க்கோள காப்பகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
  - ○ கெம்பன்-ப்ரோக் எல்லை கடந்த உயிர்க்கோளக் காப்பகம் (பெல்ஜியம், நெதர்லாந்து இராச்சியம்)
  - ○ ஜூலியன் ஆல்ப்ஸ் எல்லை கடந்த உயிர்க்கோளக் காப்பகம் (இத்தாலி, ஸ்லோவேனியா)
- ❖ இந்தப் புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள் நெதர்லாந்தின் அளவுக்குச் சமமான 37, 400 கிமீ$^2$ பரப்பளவைக் கொண்டிருக்கின்றன.
- ❖ இந்தியாவில் மொத்தம் 12 உயிர்க்கோளக் காப்பகங்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

## IUCN செந்நிறப் பட்டியல் புதுப்பிப்பு 2024

- IUCN அமைப்பானது, சமீபத்தில் பல்வேறு பல்லி மற்றும் சில கள்ளிச் செடி வகைகளை பாதுகாப்பதற்காக தனது செந்நிறப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது.
- கிரான் கனரியா இராட்சத பல்லி (கலோட்டியா ஸ்டெஹ்லினி) குறைந்த அளவு பாதுகாப்பு நடவடிக்கைத் தேவைப்படும் இனம் என்பதில் இருந்து மிகவும் அருகி வரும் இனம் என்ற நிலைக்கு நகர்ந்துள்ளது.
- கிரான் கனரியா அரணை – நீல வால் அரணை (சால்சிடெ செக்ஸ்லினேயேட்டஸ்) - குறைந்த அளவு பாதுகாப்பு நடவடிக்கைத் தேவைப்படும் இனம் அருகி வரும் இனம் என்ற நிலைக்கு நகர்ந்துள்ளது.
- போர்னியன் யானை அருகி வரும் நிலையில் உள்ள இனம் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஐபீரிய சிவிங்கிப் பூனை இனமானது அருகி வரும் இனம் என்ற நிலையில் இருந்து எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம் என்ற நிலைக்கு மேம்பட்டுள்ளது.
- பெரிய இலை வகை மஹோகனி இனமானது, IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம் என்பதிலிருந்து அருகி வரும் இனம் என்ற ஒரு நிலைக்கு நகர்ந்துள்ளது.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் தற்போது 163,040 இனங்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் சுமார் 45,321 அழிந்துவிடும் அபாயத்தில் உள்ளன என்பதோடு இது 160,000 இனங்களை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் கருவி இலக்கை விஞ்சி உள்ளது.





## யூரோபெல்டிஸ் காடோமாகுலேட்டா

- மேற்குத் தொடர்ச்சி மலையின் மேகமலை – மூணார் நிலப்பரப்பில் புதிய கவச வால் பாம்பு இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவை சுமார் 3,000 முதல் 6,400 அடி உயரத்தில் உள்ள காடுகளிலும் தேயிலைத் தோட்டங்களுக்கு அருகிலும் காணப்படுகின்றன.
- யூரோபெல்டிஸ் காடோமகுலாட்டா தமிழ்நாட்டில் உள்ள மேகமலை புலிகள் வளங்காப்பகம், பெரியார் புலிகள் வளங்காப்பகம் மற்றும் கேரளாவின் மூணார் பகுதியில் உள்ள யெல்லப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே காணப் படுவதாக அறியப் படுகிறது.




## பருவநிலை மாற்ற நெகிழ் திறனில் துத்தநாகத்தின் பங்கு




- ❖ பயறு வகை பயிர்களின் ஆரோக்கியத்தில் துத்தநாகம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை பிரான்சில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ வளிமண்டல நைட்ரஜன் ஆனது தாவரங்களுக்கு ஒரு அத்தியாவசிய ஊட்டச்சத்தாக விளங்கும் அம்மோனியாவாக மாற்றப்படும் ஒரு செயல்முறையான தாவரத்தின் நைட்ரஜன் நிலைநிறுத்தலில் துத்தநாகம் உதவுகிறது.
- ❖ வேர் முடிச்சுகளில் வளிமண்டல நைட்ரஜனை நிலை நிறுத்தும் ஒரு பாக்டீரியமான ரைசோபியாவுடன் பயறு வகை பயிர்கள் ஒரு கூட்டு வாழ்க்கைத் தொடர்பினை நன்கு உருவாக்குகின்றன.
- ❖ இந்த வேர் முடிச்சுகள் வெப்பநிலை, வறட்சி, வெள்ளம், மண்ணின் உப்புத்தன்மை மற்றும் மண்ணில் அதிக நைட்ரஜன் அளவுகள் போன்ற சுற்றுச்சூழல் காரணிகளுக்கு அதிக உணர்திறன் கொண்டவையாகும்.

- பயிறு வகைகள் பல்வேறு சுற்றுச்சூழல் காரணிகளை ஒருங்கிணைக்கவும் நைட்ரஜன் நிலைப்படுத்தும் திறனைக் கட்டுப்படுத்தவும் ஒரு இரண்டாம் நிலை சமிக்ஞையாக துத்தநாகத்தைப் பயன்படுத்துகின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- நைட்ரேட் நிலைநிறுத்தம் (FUN) எனப்படும் படியெடுத்தல் கட்டுப்பாட்டக அமைப்பு காரணமாக இந்தச் செயல்முறை செயல்படுகிறது.

## சால்வினியா மொலஸ்டா




- சைர்டோபாகஷ் சால்வினியா என்ற அயல்நாட்டு வண்டு இனங்களானது, மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாத்புரா அணைப் பகுதியிலிருந்து 'சீன லார் வகை பாசிகளை' 18 மாதங்களில் முற்றிலுமாக அகற்ற உதவியுள்ளது.
- சால்வினியா மொலஸ்டா என்பது மிகவும் தீங்கு விளைவிக்கும் நீர்வாழ் சிற்றிலைப் படர்ச் செடியினம் (ஃபெர்ன்) ஆகும்.
- பிரேசிலிய உயிரித் தடுப்புக் காரணியாக விளங்கும் சைர்டோபாகஷ் சால்வினியா எனப்படுகின்ற இந்த வண்டு இனமானது குறிப்பாக சால்வினியா மொலஸ்டாவை குறி வைத்து அழிப்பதற்காக வேண்டி இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டது.
- சால்வினியா மொலஸ்டாவை மட்டுமே உண்ணும் இந்தப் பூச்சியானது, உணவு மூலம் தீர்ந்தவுடன் இயற்கையாக இறந்து விடும் என்பதால் சுற்றுச்சூழலுக்கு இது எந்த வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது.

## ஸ்குவாலஸ் ஹிமா

- கேரளாவில் உள்ள சக்திகுளங்கரா மீன்பிடி துறைமுகத்தில் ஸ்குவாலஸ் ஹீமா எனப்படும் ஒரு புதிய வகை ஆழ்கடல் சிறு சுறாமீன் வகையினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பொதுவாக ஸ்பர்டாக்ஸ் என்று அழைக்கப்படுகின்ற ஸ்குவாலஸ் என்பது ஸ்குவாலிடே பேரினத்தில் உள்ள சிறு சுறாமீன் இனமாகும்.
- இந்தியக் கடற்கரையில், இரண்டு வகையான ஸ்குவாலஸ் இனங்களும், ஸ்குவாலஸ் லாலானே இனத்தினை ஒத்த, ஆனால் பல பண்புகளில் வேறுபடுகின்ற ஸ்குவாலஸ் ஹிமா n.sp. என்றப் புதிய இனமும் இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரையில் காணப் படுகிறது.




**உலக மக்கள்தொகை வளங்கள் 2024**




- 2024 ஆம் ஆண்டு உலக மக்கள்தொகை வளங்கள் என்பது ஐக்கிய நாடுகளின் 28வது அதிகாரப் பூர்வ மக்கள்தொகை மதிப்பீடுகள் மற்றும் கணிப்பு அறிக்கையாகும்.
- உலக மக்கள்தொகையானது வரவிருக்கும் சுமார் 50-60 ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு 2024 ஆம் ஆண்டில் 8.2 பில்லியனாக உள்ள மக்கள் தொகையானது 2080 ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதியில் சுமார் 10.3 பில்லியன் ஆக உயரும்.
- உச்ச எண்ணிக்கையினை அடைந்த பிறகு, உலக மக்கள்தொகை படிப்படியாகக் குறையத் தொடங்கி, நூற்றாண்டின் இறுதியில் 10.2 பில்லியன் மக்களாகக் குறையும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 1.45 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது என்ற நிலையில் இது 2054 ஆம் ஆண்டில் 1.69 பில்லியனாக உயரும்.
- இந்தியாவின் மக்கள் தொகையானது 2060 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் 1.7 பில்லியனாக உயரும் என்றும் பின்னர் அது 12% குறையும் என்றும் கணிக்கப் பட்டு உள்ளது.
- ஆனால் இந்த நூற்றாண்டு முழுவதும் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா விளங்கும்.
- கடந்த ஆண்டு உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக விளங்கிய சீனாவைப் பின்னுக்குத் தள்ளிய இந்தியா, 2100 ஆம் ஆண்டு வரை அந்த இடத்தைத் தக்க வைத்து இருக்கும்.

- தற்போது 2024 ஆம் ஆண்டில் 1.41 பில்லியனாக இருக்கும் சீனாவின் மக்கள் தொகை ஆனது 2054 ஆம் ஆண்டில் 1.21 பில்லியனாக குறையும் என்றும், 2100 ஆம் ஆண்டில் 633 மில்லியனாகக் குறையும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.
- இது 2024 மற்றும் 2054 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே மிகப்பெரிய அளவில் சீனா முழுமையான மக்கள்தொகை இழப்பினை (204 மில்லியன்) எதிர்கொள்ளும் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஜப்பான் (21 மில்லியன்) மற்றும் ரஷ்யா (10 மில்லியன்) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

## மெக்கென்சி நதியில் வரலாறு காணாத அளவிற்கு நீர்மட்ட வீழ்ச்சி




- கனடாவின் மிக நீளமான நதியான மெக்கென்சி நதியின் நீர் மட்டம் வரலாறு காணாத அளவிற்குக் குறைந்து வருகிறது.
- கிரேட் ஸ்லேவ் ஏரியிலிருந்து தொடங்கி பியூஃபோர்ட் கடல் வரை பாயும் மெக்கன்சி நதி 1,738 கிலோமீட்டர் நீளம் கொண்டது.
- இதன் நீர்ப்பிடிப்புப் பகுதியானது சுமார் ஐந்து மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் பகுதிகளை உள்ளடக்கியது.
- மெக்கென்சியும் அதன் துணை நதிகளும் சேர்ந்து சுமார் 1.8 மில்லியன் சதுர கி.மீ பரப்பளவிற்கான பகுதிகளுக்கு நீர்ப்பாசனத்தினை வழங்குகின்றன என்ற நிலையில் இது கனடாவின் மொத்த நிலப்பரப்பில் 20% ஆகும்.
- அதாபாஸ்கா ஏரி, கிரேட் ஸ்லேவ் ஏரி மற்றும் கிரேட் பியர் ஏரி ஆகியவை மெக்கென்சி நதி அமைப்பின் முக்கியப் பகுதிகளாகும்.

## Planet on the move: Reimagining conservation அறிக்கை

- IUCN அமைப்பின் Planet on the move: Reimagining conservation at the intersection of migration, environmental change, and conflict என்ற தலைப்பிலான ஒரு பகுப்பாய்வு அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் பருவநிலை மாற்றம் உட்பட நிலத் தரமிழப்புகளால் 50 முதல் 700 மில்லியன் மக்கள் இடம் பெயர்வார்கள் என அறிக்கைகள் மதிப்பிடுகின்றன.

- சுற்றுச்சூழல் மாற்றங்கள் மனிதர்களையும் பிற உயிரினங்களையும் இடம் பெயரச் செய்வதால் இது மோதலுக்கு வழிவகுக்கும்.
- புவியில் இரு இனங்களும் ஒருமித்து வாழ்ந்தாலும், உலக நாடுகளின் இடம் பெயர்வு கொள்கைகள் பெரும்பாலும் மனிதர்கள் மற்றும் வனவிலங்குகளின் இடம் பெயர்வினை தனித்தனியாகவே கருதுகின்றன.




Figure 1 The conflict cycle

## செம்மரம் பற்றிய CITES அமைப்பின் அறிக்கை

- இந்த அறிக்கை CITES என்ற அமைப்பினால் பட்டியலிடப்பட்ட செம்மர இனங்களின் பண்புகள், சுற்றுச்சூழல் அமைப்பில் அதன் பங்குகள், மீளுருவாக்க விகிதங்கள் மற்றும் அவற்றிற்கான அச்சுறுத்தல்கள் ஆகியவை குறித்த பல்வேறு தகவல்களை வழங்குகிறது.
- இந்தத் தகவல் ஆனது, CITES ஒப்பந்த அமைப்பின் அங்கத்தினராக விளங்கும் நாடுகளுக்குத் தகவலறிந்த தீங்கற்ற கண்டுபிடிப்புகளை (NDFs) மேற்கொள்ள உதவும்.
- "பாலிசாண்டர்" என்றும் அழைக்கப்படும் 'செம்மரம்' ஃபேபேசியே (லெகுமினோசே) பேரினத்தினைச் சேர்ந்த பரந்த அளவிலான வெப்பமண்டல வன்மரங்களை உள்ளடக்கியது.
- CITES நிறுவனமானது, செம்மரங்களை நிலையான முறையில் வெட்டுதல் மற்றும் வர்த்தகத்திற்கான வழிகாட்டுதல்களையும் வெளியிட்டுள்ளது.
- CITES அமைப்பின் IIவது பின்னிணைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:
    - டால்பெர்ஜியா லடிஃப்போலியா (மலபார் கருங்காலி) மற்றும் டால்பெர்ஜியா சிஷோ (சிஷம்) ஆகியவை இந்தியாவில் காணப்படுகின்றன என்பதோடு அவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த பட்ச பாதுகாப்பு கவனம் அவசியம் கொண்ட இனம் எனவும் பட்டியலிடப் பட்டுள்ளது.

- ஆப்பிரிக்க செம்மரம் ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.

**13 'high priority' species**

- Five species are native to Africa
- Four to Central and South America and the Caribbean
- Three to North America
- Four to Asia

| Species (Appendix) | Region |
|---|---|
| Dalbergia cochinchinensis (II) | Asia |
| Dalbergia oliveri (II) | Asia |
| Dalbergia granadillo (II) | North America and Central and South America and the Caribbean |
| Dalbergia latifolia (II) | Asia |
| Dalbergia melanoxylon (II) | Africa |
| Dalbergia retusa (II) | Central and South America and the Caribbean |
| Dalbergia stevensonii (II) | North America and Central and South America and the Caribbean |
| Dalbergia tucurensis (II) | North America and Central and South America and the Caribbean |
| Guibourtia pellegriniana (II) | Africa |
| Guibourtia tessmannii (II) | Africa |
| Pterocarpus erinaceus (II) | Africa |
| Pterocarpus santalinus (II) | Asia |
| Pterocarpus tinctorius (II) | Africa |

## உலகளாவிய வனப் பகுதியில் பதிவாகியுள்ள உயர்வு

- உணவு மற்றும் வேளாண் அமைப்பின் மூலம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கைக்கு 'உலக வன அறிக்கை 2024' எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- அதிகபட்சமாக 19,37,000 ஹெக்டேர் காடுகளின் பரப்பளவைக் கொண்டு சீனாவானது இதில் உலகளவில் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 4,46,000 ஹெக்டேர் பரப்பளவுடன் ஆஸ்திரேலியாவும், அதனை அடுத்து இந்தியாவும் இதில் இடம் பெற்றுள்ளன.
- இந்தியா, 2010 முதல் 2020 வரை ஆண்டுதோறும் 2,66,000 ஹெக்டேர் காடுகளின் பரப்பு உயர்வினைப் பெற்றுள்ளது.
- இந்த காலக் கட்டத்தில் மிக அதிக வனப் பரப்பளவைக் கொண்ட முதல் 10 நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- சிலி, வியட்நாம், துருக்கி, அமெரிக்கா, பிரான்சு, இத்தாலி மற்றும் ருமேனியா ஆகியவை முதல் 10 இடங்களில் உள்ள மற்ற நாடுகளில் அடங்கும்.
- 2000 முதல் 2010 வரையில் மற்றும் 2010 முதல் 2020 வரையிலான காலக் கட்டங்களில் மொத்த உலகளாவியச் சதுப்புநில இழப்பு விகிதம் 23% குறைந்துள்ளதாகவும் இந்த அறிக்கை கூறியுள்ளது.

TABLE 8. Top ten countries for average annual net gain in forest area, 2010–2020

| Ranking | Country | Annual net change | |
|---|---|---|---|
| | | 1 000 ha/yr | % |
| 1 | China | 1 937 | 0.93 |
| 2 | Australia | 446 | 0.34 |
| 3 | India | 266 | 0.38 |
| 4 | Chile | 149 | 0.85 |
| 5 | Viet Nam | 126 | 0.90 |
| 6 | Turkey | 114 | 0.53 |
| 7 | United States of America | 108 | 0.03 |
| 8 | France | 83 | 0.50 |
| 9 | Italy | 54 | 0.58 |
| 10 | Romania | 41 | 0.62 |

*Note:* The rate of change (%) is calculated as the compound annual change rate.


## இந்தியாவில் புதிய பூ வண்டு இனம்



- கேரளாவில் முதல் முறையாக இரண்டு வகையான பூ வண்டுகள் (மலர் ஈக்கள்) இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- திருச்சூர் மாவட்டத்தில் உள்ள கோலே சதுப்பு நிலம் மற்றும் விளகன் குன்னு மலைப் பகுதிகளில் *மெசெம்பிரியஸ் பெங்கலென்சிஸ்* மற்றும் *M.குவாட்ரிவிட்டடஸ்* ஆகிய புதிய இரண்டு இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- மலர் ஈக்கள் டிப்டெரா வரிசையின் சிர்பிடே குடும்பத்தைச் சேர்ந்தவை மற்றும் அவை பொதுவாக பூ வண்டுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- இந்தப் புதிய பதிவுகள் மூலம், ஏற்கனவே உள்ள பட்டியலில் மேலும் இரண்டு புதிய இனங்களைச் சேர்க்கின்றன.

## உலகளவில் முன் எப்போதும் பதிவாகாத வெப்பமான நாள்


- கோப்பர்நிகஸ் பருவநிலை மாற்ற சேவை நிறுவனத்தின் (C3S) படி, ஜூலை 21 ஆம் தேதியானது பூமியின் அதி வெப்பமான நாளாகும்.
- அன்று, தினசரி உலக சராசரி வெப்பநிலையானது 17.09 டிகிரி செல்சியஸ் என்ற ஒரு அளவைத் தொட்டது.
- இது 2023 ஆம் ஆண்டு ஜூலை 06 ஆம் தேதியன்று பதிவான 17.08 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை என்ற முந்தைய அதிக அளவினைத் தாண்டியது.
- தினசரி உலக சராசரி வெப்பநிலையானது 17 டிகிரி செல்சியஸ் என்ற ஒரு அளவினை தாண்டியது கடந்த ஆண்டு தான் முதல் முறையாகும்.




## Ecozen – ஆசியாவின் முதலாவது குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட பசுமை துத்த நாகம் தயாரிப்பு

- இந்துஸ்தான் சிங்க் நிறுவனமானது குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட EcoZen எனப்படும் ஆசியாவின் முதல் பசுமை துத்தநாக தயாரிப்பு நிறுவனத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்துஸ்தான் சிங்க் நிறுவனமானது ஒருங்கிணைந்த துத்தநாக உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய உற்பத்தி நிறுவனமாகும்.
- இந்நிறுவனம் ஆனது புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி இதனை உற்பத்தி செய்கிறது.
- EcoZen நிறுவனத்தின் கார்பன் உமிழ்வானது உலக சராசரியை விட சுமார் 75 சதவீதம் குறைவாக உள்ளது.
- EcoZen ஒவ்வொரு டன் துத்தநாகத்திற்கும் என்று ஒரு டன்னுக்கும் குறைவான கார்பன் உமிழ்வினையே வெளியிடுகிறது.
- ஒரு டன் எஃகு உருக்க செயல்முறையில் ஈகோசென் பயன்படுத்துவதால், சுமார் 400 கிலோ கிராம் கார்பன் வெளியேற்றம் தவிர்க்கப்படும்.

## குடிநீரில் யுரேனியம் இருப்பு





- கதிரியக்கப் பொருளான யுரேனியத்தின் செறிவு, குடிநீரில் லிட்டருக்கு 60 மைக்ரோ கிராம்கள் (லிட்டருக்கு ஒரு கிராமின் மில்லியனில் ஒரு பங்கு அல்லது µg/l) வரை இருப்பது முற்றிலும் பாதுகாப்பானது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியத் தரநிலைகள் வாரியம் ஆனது (BIS) உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளின் படி, 30 µg/l என்ற புதிய வரம்பை அறிவித்தது.
- கணிசமான அளவு யுரேனியம் நுகர்வு கொண்ட பின்லாந்து மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய இரண்டு நாடுகள் முறையே 100 மற்றும் 350 µg/l என்ற அளவில் பாதுகாப்பான வரம்புகளை நிர்ணயித்துள்ளன.
- மற்றொரு யுரேனியம் கலப்பு அதிகம் பதிவாகியுள்ள நாடான தென்னாப்பிரிக்கா, 70 µg/l என்ற வரம்பைக் கொண்டுள்ளது.
- கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற மிகப்பெரிய அளவில் யுரேனிய இருப்புகளைக் கொண்டுள்ள நாடுகளில் இதன் வரம்புகள் முறையே 20 மற்றும் 15 µg/l ஆக உள்ளது.
- யுரேனிய இருப்பு இல்லாத ஜெர்மனி மேலும் குறைவான வரம்புகளைக் கொண்டு உள்ளது.

## இந்தியாவிற்கான ஆண்டிடை காற்றுத் தர மதிப்பீடு

- ஆற்றல் மற்றும் தூய்மையான காற்று குறித்த ஆராய்ச்சி மையம் (CREA) ஆனது சமீபத்தில், இந்தியாவிற்கான ஆண்டிடை காற்றுத் தர மதிப்பீட்டினை வெளியிட்டு உள்ளது.
- அசாம்-மேகாலயா எல்லையில் அமைந்துள்ள மேகாலயாவின் பைர்னிஹாட் நகரம், இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரமாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மாசுபட்ட முதல் 10 நகரங்களில், ஹரியானாவில் மூன்று நகரங்களும், ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் தலா இரண்டு நகரங்களும், டெல்லி, அசாம் மற்றும் பீகார் ஆகியவற்றில் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன.

- 163 நகரங்கள் ஆனது, இந்தியாவின் வருடாந்திரத் தேசியக் சுற்றுப்புறக் காற்றுத் தர நிலைகளை (NAAQS) (40 μg/m³) மீறியுள்ளன.
- அனைத்து 256 நகரங்களும் உலக சுகாதார அமைப்பின் (WHO) இந்த வருடாந்திரத் தர நிலையை (5 μg/m³) மீறியுள்ளன.
- கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவில் முறையே 16 மற்றும் 30 நகரங்களுடன் 'தரமான' மற்றும் 'திருப்திகரமான நிலை' ஆகிய பிரிவுகளின் கீழ் அதிக எண்ணிக்கையிலான நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- 'நடுத்தர நிலை' என்ற பிரிவின் கீழ் பீகாரில் அதிக எண்ணிக்கையிலான நகரங்களும் (10), மோசமான நிலை' என்ற பிரிவில் ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தலா மூன்று நகரங்களும் இடம் பெற்றுள்ளன.
- அசாமில் அமைந்துள்ள ஒரே ஒரு நகரம் மட்டுமே 'தீவிரமான நிலை' என்ற பிரிவின் கீழ் இடம் பெற்றுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## செயற்கை நுண்ணறிவுத் தயார்நிலைக் குறியீடு 2024

- சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆனது, 2024 ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவுத் தயார் நிலைக் குறியீட்டினை (AIPI) வெளியிட்டுள்ளது.
- இது உலகில் சுமார் 174 நாடுகளின் செயற்கை நுண்ணறிவுத் தயார்நிலைகளை நன்கு கண்காணிக்கிறது.
- சிங்கப்பூர் (0.80), டென்மார்க் (0.78), அமெரிக்கா (0.77) ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் அதிக மதிப்பீடு பெற்றவையாகும்.
- மொத்தம் உள்ள 174 நாடுகளில் வங்காளதேசம் (0.38) 113, இலங்கை (0.43) 92, சீனா (0.63) 31வது இடங்களிலும் இந்தியா 72வது இடத்திலும் உள்ளது.

**Countries Most Prepared for AI**


| Rank | Top Countries | Index |
|---|---|---|
| 1 | Singapore | [illegible] |
| 2 | Denmark | 0.779 |
| 3 | United States | [illegible] |
| 4 | Netherlands | [illegible] |
| 5 | Estonia | [illegible] |
| 6 | Finland | [illegible] |
| 7 | Switzerland | [illegible] |
| 8 | New Zealand | [illegible] |
| 9 | Germany | [illegible] |
| 10 | Sweden | [illegible] |
| 72 | India | [illegible] |

**Countries Least Prepared for AI**

| Rank | Bottom Countries | Index |
|---|---|---|
| 164 | Yemen | [illegible] |
| 165 | Sao Tome | [illegible] |
| 166 | Congo | 0.247 |
| 167 | Libya | 0.244 |
| 168 | Chad | [illegible] |
| 169 | Sudan | [illegible] |
| 170 | Mauritania | [illegible] |
| 171 | Somalia | [illegible] |
| 172 | C.A.R | [illegible] |
| 173 | Afghanistan | [illegible] |
| 174 | South Sudan | [illegible] |

## உலக வாயு எரிப்பு கண்காணிப்பு அறிக்கை 2023

Figure 3 Flare volumes for the top 30 flaring countries from 2018 to 2022 (sorted by 2022 flare volume)




- உலக வங்கியின் சமீபத்திய உலக வாயு எரிப்பு கண்காணிப்பு அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் நைஜீரியா முதல் ஒன்பது வாயு எரிப்பு நாடுகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 139 bcm ஆக இருந்த உலகளாவிய வாயு எரிப்பு அளவு ஆனது 2023 ஆம் ஆண்டில் 7% அதிகரித்து 148 bcm ஆக உயர்ந்துள்ளது.
- எண்ணெய் உற்பத்தியானது ஒப்பீட்டளவில் நிலையானதாக இருந்ததால், உலகளாவிய சராசரி வாயு எரிப்புகளின் செறிவு அதிகரித்தது.
- வாயு எரிப்பு ஆனது மொத்தமாக 9 bcm அதிகரிப்பதால் கூடுதலாக 23 மில்லியன் டன்கள் $CO_2e$ வெளியேற்றம் பதிவானது.
- வாயு எரிப்பு செய்யும் முதல் ஒன்பது நாடுகள் அனைத்து வாயு எரிப்புகளில் 75% பங்கைக் கொண்டுள்ளன ஆனால் அவை உலகளாவிய எண்ணெய் உற்பத்தியில் 46% பங்கினை மட்டுமே கொண்டுள்ளன.
- 60 க்கும் மேற்பட்ட நாடுகளில் மீதமுள்ள 25 சதவீத உலகளாவிய வாயு எரிப்பு அளவுகள் பதிவாகியுள்ளன.
- உலகின் எரிம வாயுவில் 75% ஆனது நைஜீரியா, ரஷ்யா, ஈரான், ஈராக், அமெரிக்கா, வெனிசுலா, அல்ஜீரியா மற்றும் லிபியாவில் இருந்து பெறப்படுகிறது.

## உலகின் வாழ்வதற்கு உகந்த நகரக் குறியீடு 2024


- பொருளாதாரப் புலனாய்வு அமைப்பின் ஒரு குறியீட்டின் படி, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா, உலகின் வாழ்வதற்கு உகந்தச் சிறந்த நகரமாக உள்ளது.
- டென்மார்க்கின் கோபன்ஹேகன் இரண்டாம் இடத்தையும், சுவிட்சர்லாந்தின் சூரிச் மூன்றாம் இடத்தையும் இதில் பெற்றுள்ளன.
- இதில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரமானது (உலகளவில் 4வது) ஆசியாவின் வாழ்வதற்கு உகந்த நகரங்களில் முதலிடம் வகிக்கிறது.
- ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதி மற்றும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா பகுதிகளில் உள்ள நகரங்கள் கடைசி 10 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- சிரியாவின் டமாஸ்கஸ் மற்றும் லிபியாவின் திரிபோலி ஆகியவை வாழ்வதற்கு உகந்த நகரங்கள் குறியீட்டில் மிகக் குறைந்த மதிப்பினைப் பெற்ற இரண்டு நகரங்கள் ஆகும்.

| City | Location | Rank | Index | Stability | Healthcare | Culture & Environment | Education | Infrastructure |
|---|---|---|---|---|---|---|---|---|
| Vienna | Austria | 1 | 98.4 | 100.0 | 100.0 | 93.5 | 100.0 | 100.0 |
| Copenhagen | Denmark | 2 | 98.0 | 100.0 | 95.8 | 95.4 | 100.0 | 100.0 |
| Zurich | Switzerland | 3 | 97.1 | 95.0 | 100.0 | 96.3 | 100.0 | 96.4 |
| Melbourne | Australia | 4 | 97.0 | 95.0 | 100.0 | 95.8 | 100.0 | 96.4 |
| Calgary | Canada | 5 | 96.8 | 100.0 | 100.0 | 90.0 | 100.0 | 96.4 |
| Geneva | Switzerland | 5 | 96.8 | 95.0 | 100.0 | 94.9 | 100.0 | 96.4 |
| Sydney | Australia | 7 | 96.6 | 95.0 | 100.0 | 94.4 | 100.0 | 96.4 |
| Vancouver | Canada | 7 | 96.6 | 95.0 | 100.0 | 97.2 | 100.0 | 92.9 |
| Osaka | Japan | 9 | 96.0 | 100.0 | 100.0 | 86.8 | 100.0 | 96.4 |
| Auckland | New Zealand | 9 | 96.0 | 95.0 | 95.8 | 97.9 | 100.0 | 92.9 |

## வருடாந்திர உலகப் போதைப்பொருள் அறிக்கை 2024

- ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம் (UNODC), உலக போதைப்பொருள் தினத்தன்று இந்த அறிக்கையை வெளியிட்டது.
- 2022 ஆம் ஆண்டு வரையிலான கடந்த பத்தாண்டுகளில், சட்டவிரோத போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 292 மில்லியனாக அதிகரித்து உள்ளது.
- உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான மக்கள் - 228 மில்லியன் மக்கள் - கஞ்சாவை உட்கொள்கிறார்கள் என்ற நிலைமையில் அதைத் தொடர்ந்து ஓபியாய்டுகள், ஆம்பெடமைன்கள், கொகைன் மற்றும் எக்ஸ்டஸி போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.
- நிட்டாசீன்களின் பயன்பாடு அதிகரித்ததைத் தொடர்ந்து அதிகப்படியான போதைப் பொருள் பயன்பாடு காரணமான உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

- 2022 ஆம் ஆண்டில், கோக்கைன் உற்பத்தியானது 2,757 டன்கள் பதிவாகி சாதனை உச்சத்தைத் தொட்ட நிலையில், இது 2021 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 20 சதவீதம் அதிகரித்துள்ளது.
- கனடா, உருகுவே மற்றும் அமெரிக்காவில் உள்ள 27 நிர்வாக அதிகார வரம்புகள் முழுவதும் கஞ்சா பயன்பாடு சட்டப்பூர்வமாக்கப் பட்டுள்ளது.




## புதிய உலக மண் சுகாதார குறியீடு

- மண் பற்றிய யுனெஸ்கோ சர்வதேச மாநாடு மொராக்கோவில் நடைபெற்றது.
- 2050 ஆம் ஆண்டுக்குள் பூமியின் சுமார் 90 சதவீத நிலப்பரப்பு சிதைந்துவிடும் என்று யுனெஸ்கோ எச்சரித்துள்ளது.



- உலக பாலைவனமாதல் வரைபடத்தின் படி , 75 சதவீத மண் ஏற்கனவே சீரழிந்துள்ளது என்ற நிலையில் இது நேரடியாக 3.2 பில்லியன் மக்களையும் பாதிக்கிறது.
- தற்போதைய நிலை வழக்கம் போல் இனியும் தொடர்ந்தால் இதன் போக்கு 2050 ஆம் ஆண்டுக்குள் தாக்கத்தை 90 சதவீதமாக அதிகரிக்கக்கூடும்.
- இந்தியாவில், சுமார் 32% நிலம் சீரழிந்தும், 25% நிலம் பாலைவனமாகியும் வருகிறது.

## அதிக செலவினம் மிக்க நகரங்கள் 2024

2024 Cost of Living City Ranking

| Ranking | City | Location |
|---|---|---|
| 1 | Hong Kong | Hong Kong SAR |
| 2 | Singapore | Singapore |
| 3 | Zurich | Switzerland |
| 4 | Geneva | Switzerland |
| 5 | Basel | Switzerland |
| 6 | Bern | Switzerland |
| 7 | New York | United States |
| 8 | London | United Kingdom |
| 9 | Nassau | Bahamas |
| 10 | Los Angeles | United States |

- மெர்சர் நிறுவனம் ஆனது, சமீபத்தில் 'வாழ்க்கைச் செலவினம் மிக்க நகரங்களின் தரவரிசை 2024' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஹாங்காங் நகரம் ஐந்தாவது முறையாக உலகின் அதிக செலவினம் மிக்க நகரமாக இடம் பெற்றுள்ளது.
- மற்றொரு ஆசிய பொருளாதார மையமான சிங்கப்பூர் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ஐரோப்பா, இலண்டன் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள நகரங்கள், நியூயார்க் நகரம் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் போன்ற அமெரிக்க நகரங்களுடன் இணைந்து முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன.
- உலகத் தரவரிசையில் மும்பை 136வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இதில் புது டெல்லி 165வது இடத்திலும், பெங்களூரு 195வது இடத்திலும் உள்ளது.
- அபுஜா, நைஜீரியா (226), லாகோஸ், நைஜீரியா (225) மற்றும் இஸ்லாமாபாத், பாகிஸ்தான் (224) ஆகியவை குறைந்த செலவினம் மிக்க நகரங்களாகும்.

## புலம்பெயர்ந்தோருக்கான உலகின் செலவு குறைந்த நாடுகள்


- 2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் தனிநபர் நிதிக் குறியீட்டில் இடம் பெற்ற 53 இடங்களுக்குள் தொடர்ந்து நான்காவது ஆண்டாக வியட்நாம் முதலிடம் பிடித்துள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் தனிநபர் நிதிக் குறியீட்டுப் பிரிவில் புலம்பெயர்ந்தோருக்கான செலவு குறைந்த முதல் 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- முதல் 10 இடங்களில் உள்ள மற்ற ஐந்து ஆசிய நாடுகளில் இந்தோனேசியா (3வது), பிலிப்பைன்ஸ் (5வது), இந்தியா (6வது), தாய்லாந்து (8வது), மற்றும் சீனா (10வது) ஆகியவை அடங்கும்.
- அதில் மற்ற நான்கு நாடுகள் என்பவை இலத்தீன் அமெரிக்காவில் அமைந்துள்ளன; அதில் கொலம்பியா (2வது), பனாமா (4வது), மெக்சிகோ (7வது) மற்றும் பிரேசில் (9வது) ஆகிய இடங்களில் இடத்தில் உள்ளன.




## எண்ணிமப் பொருளாதார அறிக்கை 2024 – UNCTAD (UN வர்த்தகம் மற்றும் மேம்பாடு மீதான அமைப்பு)

- 2024 ஆம் ஆண்டு எண்ணிமப் பொருளாதார அறிக்கையானது, சுற்றுச்சூழலுக்குப் பாதகம் விளைவிக்காத மற்றும் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய எண்ணிம மயமாக்கல் உத்திகளை உருவாக்க வேண்டியதன் அவசரத் தேவையை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- தகவல் மற்றும் தொலைதொடர்புத் தொழில்நுட்ப (ICT) வலையமைப்புகள் ஆனது உலகளாவிய மின்சாரப் பயன்பாட்டில் சுமார் 6% முதல் 12% வரையிலானப் பங்கினை கொண்டுள்ளன.
- 2010 ஆம் ஆண்டிலிருந்து திறன்பேசிகளின் வருடாந்திர ஏற்றுமதிகள் இரட்டிப்பாகி உள்ளது என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் 1.2 பில்லியனை எட்டியுள்ளது.
- இணைய உலக இணைப்பு (IoT) சாதனங்களின் பயன்பாடானது, 2023 ஆம் ஆண்டில் இருந்த அளவினை விட 2.5 மடங்கு அதிகரித்து 2029 ஆம் ஆண்டில் 39 பில்லியனாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 43 நாடுகளின் புதிய தரவு ஆனது, 2016 முதல் 2022 ஆம் ஆண்டு வரை இணைய வணிகப் பொருட்களின் விற்பனையானது சுமார் 60% அதிகரித்து 27 டிரில்லியன் டாலரினை எட்டியுள்ளது.




- ❖ சாதனங்களின் திரைகள் மற்றும் சிறிய தகவல் தொழில்நுட்ப உபகரணங்களிலிருந்து வரும் கழிவு ஆனது 2010 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 30% உயர்ந்து 10.5 மில்லியன் டன்களை எட்டியது.
- ❖ தகவல் தொடர்பு துறையானது 2020 ஆம் ஆண்டில் சுமார் 0.69 முதல் 1.6 ஜிகாடன்கள் வரையிலான கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான கழிவுகளை வெளியிட்டுள்ளது என்ற நிலையில் இது உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் 1.5% முதல் 3.2% பங்கு ஆகும்.
- ❖ தொலைபேசிகள் உற்பத்தியில் 1960 ஆம் ஆண்டில் தனிம வரிசை அட்டவணையில் உள்ள 10 தனிமங்களும், 1990 ஆம் ஆண்டில் 27 தனிமங்களும் மற்றும் 2021 ஆம் ஆண்டில் 63 தனிமங்களும் பயன்படுத்தப்படுகின்றன.
- ❖ கோபால்ட், கிராஃபைட் மற்றும் லித்தியம் ஆகியவற்றின் தேவையானது 2050 ஆம் ஆண்டிற்குள் 500% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டின் ஆற்றல் நுகர்வினைப் போல உலகளாவியத் தரவு மையங்கள் அதிக ஆற்றலைப் பயன்படுத்தியதாக - 460 டெராவாட் மணி நேர (TWh) மின்சாரம்- மதிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ உலகளவில் பிட்காயின் உருவாக்கத்தின் ஆற்றல் நுகர்வு ஆனது 2015 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 34 மடங்கு உயர்ந்துள்ளது.
- ❖ வளர்ச்சியடைந்த நாடுகள் ஒரு நபருக்கு 3.25 கிலோகிராம் என்ற வீதத்தில் எண்ணிம மயமாக்கல் தொடர்பான கழிவுகளை உருவாக்குகின்றன என்ற நிலையில் வளர்ந்து வரும் நாடுகளில் இந்த வீதம் 1 கிலோவிற்கும் குறைவான அளவிலேயே பதிவாகி உள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் 37 பில்லியனாக இருந்த உலக மின்னணுப் பொருட்களின் மறு சுழற்சிச் சந்தையானது 2030 ஆம் ஆண்டிற்குள் 108 பில்லியனாக உயரும் என எதிர் பார்க்கப் படுகிறது.

## காந்தர் நிறுவனத்தின் தயாரிப்பு நிறுவன உள்ளடக்கக் குறியீடு 2024





- கூகுள் நிறுவனமானது, இந்தியாவிலும் உலக அளவிலுமான மிகவும் உள்ளடக்கிய ஒரு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- கூகுள் நிறுவனத்துடன், டாடா மோட்டார்ஸ், அமேசான், ஜியோ மற்றும் ஆப்பிள் ஆகியவை இந்தியாவில் முதல் ஐந்து இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- பிரிவு வாரியாக, இந்தியாவின் சிறந்த நிறுவன உள்ளடக்கக் குறியீட்டு மதிப்பெண் பெற்ற நிறுவனங்கள் - கூகுள் (தொழில்நுட்பம்), டாடா மோட்டார்ஸ் (வாகன தயாரிப்பு), SBI (வங்கி), டவ் (தோல் பராமரிப்பு) ஆகியனவாகும்.

## UNEP தொலைநோக்கு அறிக்கை 2024

- சமீபத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது, "Navigating New Horizons: A Global Foresight Report on Planetary Health and Human Wellbeing, 2024" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளில் நிர்ணயிக்கப்பட்ட 169 இலக்குகளில் 85% ஆனது அதனைப் பூர்த்தி செய்வதற்கான பாதையில் இல்லை மற்றும் 37% இலக்குகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.
- மனித நடவடிக்கைகள் என்பவை 2050 ஆம் ஆண்டிற்குள் 90 சதவிகித அளவிற்கு நிலப் பரப்பினைப் பாதிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 46% இனங்கள் வரை அழிவைச் சந்திக்க நேரிடும்.
- 2100 ஆம் ஆண்டில் உலக வெப்பநிலை 2.1-3.9 டிகிரி செல்சியஸ் உயரும் என கணிக்கப் பட்டுள்ளது.
- சுமார் 5.6 பில்லியன் பயனர்கள் கைபேசிச் சாதனங்களை வைத்திருப்பத்தோடு, 8.89 பில்லியனுக்கும் அதிகமான கைபேசி இணைப்புகள் உள்ளன.
- உலக மக்கள் தொகையில் 1.5% பேர் வலுக்கட்டாயமாக இடம் பெயர்ந்துள்ளனர் என்ற நிலையில் இது ஒரு தசாப்தத்திற்கு முன்பு இருந்த எண்ணிக்கையை விட சுமார் இரு மடங்காகும்.

- சுற்றுச்சூழல் காரணமாக புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையானது 2050 ஆம் ஆண்டில் 25 மில்லியன் முதல் 1 பில்லியனாக இருக்கக் கூடும்.
- உலகின் முன்னணிப் பணக்காரர்களில் 10% பேர் 75% செல்வத்தை கொண்டுள்ளனர் மற்றும் கடைநிலையில் உள்ள 50% பேர் வெறும் 2% செல்வத்தினை மட்டுமே கொண்டு உள்ளதையடுத்து உலகச் சமத்துவமின்மை மிகவும் மோசமடைந்து வருகிறது.




## உலகின் சக்தி வாய்ந்த கடவுச் சீட்டுகள் 2024


- ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் வெளியிடப்பட்டுள்ள சமீபத்தியத் தரவரிசையில் இந்தியாவின் கடவுச்சீட்டு 82வது இடத்தில் உள்ளது.
- இது 58 நாடுகளுக்கு இந்தியர்கள் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணிக்க அனுமதிக்கிறது.
- சிங்கப்பூர் நாட்டின் கடவுச்சீட்டு ஆனது உலகின் சக்தி வாய்ந்த (அதிக பயண அணுகல் கொண்டது) கடவுச் சீட்டு என்று குறிப்பிடப் பட்டுள்ளது என்பதோடு இதனைப் பயன்படுத்தி 195 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணிக்க இயலும்.
- பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் 192 நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கான அணுகலை வழங்குவதன் மூலம் அவை ஜப்பானுடன் இரண்டாவது இடத்தினைப் பகிர்ந்து கொள்கின்றன.
- இத்தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள ஆஸ்திரியா, பின்லாந்து, அயர்லாந்து, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, தென் கொரியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் அனைத்தும் 191 இடங்களுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத அணுகலைப் பெற்று உள்ளன.

- நியூசிலாந்து, நார்வே, பெல்ஜியம், டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவற்றுடன் ஐக்கியப் பேரரசு நான்காவது இடத்தில் உள்ளது.
- ஆஸ்திரேலியாவும் போர்ச்சுகலும் 5வது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ள அதே நேரத்தில் 186 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயண அணுகலுடன் அமெரிக்கா எட்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.
- 33 நாடுகளுக்கான அணுகலுடன் பாகிஸ்தான் இந்தத் தரவரிசையில் 100வது இடத்தில் உள்ளது.
- 26 இடங்களுக்கு எளிதாக பயணிக்கக் கூடிய ஆப்கானிஸ்தான் நாட்டின் கடவுச்சீட்டு இந்தப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.

**MOST POWERFUL PASSPORTS IN 2024**

| Rank | Country | Destinations |
|---|---|---|
| 1 | Singapore | 195 |
| 2 | France, Germany, Italy, Japan, Spain | 192 |
| 3 | Austria, Finland, Ireland, Luxembourg, Netherlands, South Korea, Sweden | 191 |
| 4 | Belgium, Denmark, New Zealand, Norway, Switzerland, United Kingdom | 190 |
| 5 | Australia, Portugal | 189 |
| 6 | Greece, Poland | 188 |
| 7 | Canada, Czechia, Hungary, Malta | 187 |
| 8 | United States | 186 |
| 9 | Estonia, Lithuania, United Arab Emirates | 185 |
| 10 | Iceland, Latvia, Slovakia, Slovenia | 184 |
| 82 | India | 58 |

## உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை 2024



- 2023 ஆம் ஆண்டில் உலகளவில் 733 மில்லியன் மக்கள் அல்லது 11 பேரில் ஒருவர் பட்டினி நிலையினை எதிர்கொண்டுள்ளனர்.
- பட்டினி நிலையில்லாத உலக நாடுகள் என்ற இரண்டாவது நிலையான மேம்பாட்டு இலக்கினை (SDG) அடைவதற்கு உலக நாடுகள் வெகு தொலைவில் உள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் 713 முதல் 757 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டை விட சுமார் 152 மில்லியன் அதிகமாகும்.
- 2023 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 28.9 சதவீதம் பேர் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையில் இருந்தனர்.
- பட்டினி நிலையினை எதிர்கொள்ளும் மக்கள்தொகை சதவீதமானது ஆப்பிரிக்காவில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது (20.4 சதவீதம்) என்ற நிலையில் இது ஆசியாவில் (8.1 சதவீதம்) நிலையானதாக உள்ளது என்பதோடு லத்தீன் அமெரிக்காவில் (6.2 சதவீதம்) முன்னேற்றத்தினையும் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், உலகளவில் சுமார் 2.33 பில்லியன் மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டனர்.
- கடந்த பத்தாண்டுகளில் 12.1 சதவீதமாக (2012) இருந்த இளம் வயதினரில் காணப்படும் அதிக உடல் பருமன் மதிப்பீடுகள் ஆனது 15.8 சதவீதமாக (2022) அதிகரித்திருப்பது ஒரு நிலையான உயர்வைக் காட்டுகின்றது.


# மாநிலச் செய்திகள்

## ULLAS திட்டத்தின் கீழ் முழு பயன்நிலைக் கல்வியறிவு

- ULLAS - நவ் பாரத் சாக்சார்தா கார்யக்ரம் (புதிய இந்தியா கல்வியறிவுத் திட்டம் - NILP) திட்டத்தின் கீழ் முழு பயன்நிலைக் கல்வியறிவு பெற்ற முதல் நிர்வாக அலகு ஆக லடாக் மாறியுள்ளது.
- இந்த ஒன்றியப் பிரதேசம் ஆனது 97% கல்வியறிவு நிலையைத் தாண்டியுள்ளதை அடுத்து, அங்கு மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின் ஒரு மாபெரும் வெற்றியை இது குறிக்கிறது.
- இந்தத் திட்டம் ஆனது, 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய இளம் பருவத்தினருக்கு அடிப்படைக் கல்வியறிவு, எண்ணறிவு மற்றும் முக்கிய வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- NILP என்பது 2022-2027 ஆம் காலக் கட்டத்தில் செயல்படுத்தப்படும் மத்திய நிதியுதவி பெறும் திட்டமாகும்.

## ஷியோக் நதி

- லடாக்கில் இராணுவப் பயிற்சியின் போது ஷியோக் நதியில் ஏற்பட்ட பலத்த நீர்ப் போக்கு காரணமாக பீரங்கி அடித்துச் செல்லப்பட்டதில் ஐந்து வீரர்கள் உயிரிழந்தனர்.
- சியாச்சின் பனிப்பாறையின் ஒரு பகுதியான ரிமோ பனிப்பாறையிலிருந்து 550 கி.மீ நீளமுள்ள ஷியோக் நதி உருவாகிறது.
- இது சிந்து நதியின் கிளை நதியாகும்.
- இது ஜம்மு மற்றும் காஷ்மீரில் வடக்கு லடாக் வழியாக பாய்ந்து, பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள கில்கிட்-பால்டிஸ்தான் பகுதியில் நுழைந்து, அங்கு சிந்து நதியுடன் இணைகிறது.





## ஸ்ரீசைலம் புலிகள் வளங்காப்பகத்தில் இந்தியக் காட்டெருது

- ஆந்திரப் பிரதேசத்தின் நந்தியால் மாவட்டத்தில் உள்ள நல்லமலை வனப்பகுதியின் அத்மகூர் பகுதியில் இந்தியக் காட்டெருது (போஸ் கௌரஸ்) கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தக் காட்டில் முன்னொரு காலத்தில் இந்தியக் காட்டெருது (தெலுங்கு மொழியில் அடவி துன்னா) காணப்பட்டது என்பதோடு இது விசித்திரமாக நீண்ட காலமாக அந்தப் பகுதியில் தென்படாமல் இருந்தது.
- இந்தியக் காட்டெருது ஆனது கடைசியாக 1870 ஆம் ஆண்டுகளில் இங்கு கண்டறியப் பட்டது எனவே இது 150 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தென்பட்டுள்ளது.
- இந்தியக் காட்டெருது என்றும் அழைக்கப்படும் கௌர், தெற்காசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட மிகப் பெரிய மாடு இனமாகும்.
- நாகார்ஜுனசாகர்-ஸ்ரீசைலம் புலிகள் வளங்காப்பகமானது இந்தியாவின் மிகப்பெரிய புலிகள் வளங்காப்பகமாகும்.



## பர்பதி-காலிசிந்த்-சம்பல் நதிகள் இணைப்பு திட்டம்

- மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் அரசுகள் போபாலில் பர்பதி-கலிசிந்த்-சம்பல் நதிகளை இணைக்கும் திட்டத்தினை (PKC) செயல்படுத்துவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இத்திட்டம் ஆனது ராஜஸ்தானில் உள்ள 13 மாவட்டங்களுக்கும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள மால்வா மற்றும் சம்பல் பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்கும்.
- 1980 ஆம் ஆண்டில் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய நீர் ஆணையத்தால் உருவாக்கப்பட்ட தேசியத் தொலைநோக்கு திட்டத்தில் சேர்க்கப்பட்ட 30 நதிநீர் இணைப்புகளில் PKC நதிநீர் இணைப்புத் திட்டமும் ஒன்றாகும்.





## 2023-24 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தின் அந்நிய நேரடி முதலீடு

- குஜராத் மாநிலமானது, 2023-24 ஆம் நிதியாண்டில் சுமார் 55 சதவீத வளர்ச்சியுடன் 7.3 பில்லியன் அளவிற்கு அமெரிக்க டாலர் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்துள்ளது.
- அந்நிய நேரடி முதலீட்டு வரவில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இதில் குஜராத் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- 6.6 பில்லியன் டாலர்கள், 6.5 பில்லியன் டாலர்கள் மற்றும் 3 பில்லியன் டாலர்கள் என்ற அந்நிய நேரடி முதலீடுகளுடன் முறையே கர்நாடகா மூன்றாவது இடத்திலும், டெல்லி நான்காவது இடத்திலும், தெலுங்கானா ஐந்தாவது இடத்திலும் உள்ளன.




## உத்தரப் பிரதேசத்தில் உயிர்ம நெகிழிப் பூங்கா




- ❖ உத்தரப் பிரதேச மாநில அரசானது உயிர்ம நெகிழிப் பூங்காவினை அமைக்க அனுமதி அளித்துள்ளது.
- ❖ லக்கிம்பூர் கெரி மாவட்டத்தில் உள்ள கோலா கோகரநாத் தாலுக்காவில் உள்ள கும்பி கிராமத்தில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் இந்தப் பூங்கா உருவாக்கப்பட உள்ளது.
- ❖ இயற்கை முறை நெகிழி என்றும் அழைக்கப்படுகின்ற இந்த உயிர்ம நெகிழிப் பூங்காவானது, சோளம், சூரியகாந்தி அல்லது சர்க்கரை வள்ளிக் கிழங்கு போன்ற இயற்கைப் பொருட்களிலிருந்துத் தயாரிக்கப்படும் ஒரு வகை நெகிழி ஆகும்.

## காட்டுத் தீயைக் கண்டறிவதற்கான செயற்கை நுண்ணறிவு அமைப்பு




- ❖ மகாராஷ்டிராவில் உள்ள பென்ச் புலிகள் வளங்காப்பகம் ஆனது, காட்டுத் தீயை முன் கூட்டியே கண்டறிவதற்காக ஒரு மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இந்த அதிநவீன அமைப்பு ஆனது 15 கிலோமீட்டர் தொலைவு வரையிலான காட்சித் திறனுடன் கூடிய, உயர் தெளிவுத் திறன் கொண்ட ஒளிப்படக் கருவியினைக் கொண்டு உள்ளது.
- ❖ அதாவது புலிகள் வளங்காப்பகத்தின் 350 சதுர கி.மீ பரப்பளவு முழுவதிலும் இது கண்காணிக்கும் திறன் கொண்டதாகும்.

## மக்களின் பல்லுயிர்ப்பெருக்கப் பதிவேடு – தழகரை



- ஆலப்புழாவின் தழகரை பஞ்சாயத்தானது, விரிவான மக்களின் பல்லுயிர்ப்பெருக்கப் பதிவேட்டைப் புதுப்பித்து வெளியிடும் கேரளாவில் முதன்மையான மற்றும் முதல் கிராமப் பஞ்சாயத்து என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- இந்த உள்ளாட்சி அமைப்பு ஆனது 38 புனித தோப்புகள், 10 நெல் வயல்கள் மற்றும் 35 குளங்களைக் கொண்டுள்ளது.
- PBR பதிவேட்டின் முதல் தொகுதியானது, 10 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டது எனினும் அதில் சில முக்கியத் தகவல்கள் இடம் பெறவில்லை.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட இரண்டாம் தொகுதியானது அனைத்து 21 வார்டுகளிலும் உள்ள பல்லுயிர்ப் பெருக்கம் பற்றிய விரிவான அறிக்கையாக உள்ளது.
- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் PBR பதிவேட்டின் முதல் தொகுதியை வெளியிட்ட இந்தியாவின் முதல் மாநிலம் கேரளாவாகும்.

## கர்நாடக சமூகப் பாதுகாப்பு மற்றும் நல மசோதா

- கர்நாடகா அரசானது, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) மசோதாவின் வரைவினை வெளியிட்டுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, இது போன்றதொரு நடவடிக்கையைத் தொடங்கிய இரண்டாவது இந்திய மாநிலமாக இது அமைந்தது.
- அந்த மாநிலத்தில் இயங்குதள அடிப்படையிலான இணையம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனை ஒழுங்குபடுத்த இந்த மசோதா முயல்கிறது.
- இந்தப் புதிய வரைவு ஆனது, ஒரு நல வாரியம் மற்றும் இணையம் சார்ந்தத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியை நிறுவ முயல்கிறது.
- நிதி ஆயோக் அமைப்பின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையானது, 2029-30 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் 23.5 மில்லியன் கிக் தொழிலாளர்கள் இருப்பார்கள் என்று மதிப்பிடுகிறது.

- பெங்களூரில் மட்டும் சுமார் 2 லட்சம் இணையம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள் ஸ்விகி, சோமாட்டோ, ஊபர், ஓலா போன்ற பல தளங்களில் பணி புரிகின்றனர்.

**Karnataka** publishes the **draft Karnataka Platform Based Gig Workers (Social Security and Welfare) Bill 2024**

**Karnataka** publishes the **draft Karnataka Platform Based Gig Workers (Social Security and Welfare) Bill 2024** to regulate the social security and welfare of platform-based gig economy workers in the state through the creation of a board, welfare fund, and grievance cell among the mechanisms.

## விழிஞ்சம் துறைமுகம்




- கேரளாவில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் பிரத்தியேகக் கப்பல் மாற்றுச் சரக்கேற்றல் (டிரான்ஸ்-ஷிப்மென்ட்) துறைமுகத்தின் முதல் கட்டப் பகுதியானது அதன் முதல் கப்பலினை ஜூலை 12 ஆம் தேதியன்று வரவேற்க உள்ளது.
- இது நாட்டின் முதல் பகுதியளவு தானியங்கி கொள்கலன் முனையம் என்றதொரு வரலாற்றினைப் படைக்கிறது.
- இந்த விழிஞ்சம் துறைமுகத்தில் உலகின் மிகப் பெரிய கொள்கலன் கப்பல்கள் சில விரைவில் வந்து முகாமிடவுள்ளன.
- ஐரோப்பா, பாரசீக வளைகுடா மற்றும் தொலைதூரக் கிழக்கு நாடுகளை இணைக்கும் சர்வதேசக் கப்பல் பாதையில் இருந்து வெறும் 10 கடல் மைல் தொலைவில் உள்ளதால் இந்தத் துறைமுகம் உத்தி சார் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

## மேல் மட்ட சியாங் நதி நீர்மின் ஆற்றல் உற்பத்தி நிலையம்




- மேல் மட்ட சியாங் நதி நீர்மின் ஆற்றல் உற்பத்தி நிலையமானது, அருணாச்சலப் பிரதேசத்தின் மேல் மட்ட சியாங் மாவட்டத்தில் சியாங் நதியின் மீது அமைக்கப்பட உள்ள 11,000 மெகாவாட் திறன் கொண்ட நீர்மின் ஆற்றல் உற்பத்தி நிலையமாகும்.
- திபெத்தில் உள்ள கைலாஷ் மலைக்கு அருகில் சியாங் நதி உருவாகிறது என்ற நிலையில் அங்கு இது சாங்போ என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- சியாங் நதிப் படுகையில் மொத்தம் 29 நீர்மின் ஆற்றல் உற்பத்தி நிலையங்கள் (25 மெகா வாட்டிற்கும் மேலான நிறுவப்பட்ட திறன் கொண்டவை) உள்ள நிலையில் இவற்றின் ஒருங்கிணைந்த நிறுவல் திறன் 18,326 மெகாவாட் ஆகும்.
- தற்போது முன்மொழியப்பட்ட மேல் மட்ட சியாங் நதி நீர்மின் ஆற்றல் உற்பத்தி நிலையத்தின் நிறுவப்பட்ட திறனானது இந்த மதிப்பில் தோராயமாக 60% பங்கினைக் கொண்டிருக்கும்.
- இது அதி பழங்குடியினத்தைச் சேர்ந்த மக்கள் வாழும் சுமார் 300க்கும் மேற்பட்ட கிராமங்களை மூழ்கடிக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வருத்தம் தெரிவித்து உள்ளனர்.

## மஞ்சீரா வனவிலங்கு சரணாலயம் - தெலுங்கானா



- சங்காரெட்டியில் உள்ள சுமார் 5,000 ஏக்கர் பரப்பளவிலான மஞ்சீரா வனவிலங்கு சரணாலயமானது விரைவில் தெலுங்கானாவின் முதல் ராம்சர் தளமாக மாற உள்ளது.
- இந்த சரணாலயத்தில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பறவைகள் மற்றும் 500க்கும் மேற் பட்ட முதலைகள் காணப்படுகின்றன.
- இந்த அங்கீகாரமானது, இந்தச் சதுப்பு நிலம் சுற்றுலா ஈரப்பினைப் பெறவும், அதன் வளங்காப்பிற்கான தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறவும் உதவும்.

## ரத்ன பந்தர் – ஒடிஸா

- ஒடிசாவின் 12 ஆம் நூற்றாண்டு காலத்திய பூரி ஜெகநாதர் கோவிலின் உள் கருவூலம் சமீபத்தில் திறக்கப்பட்டது.
- 46 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கருவூலம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.
- 'ரத்ன பந்தர்' ஆனது முதன்முதலில் 1905 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் நிர்வாகத்தினால் ஒரு ஆய்விற்காகத் திறக்கப்பட்டது.
- பின்னர் அவர்கள் 1926 ஆம் ஆண்டில் பொருட்கள்/நகைகள் பற்றிய ஆவணங்களைப் பதிவு செய்தனர்.
- அதன் பிறகு 1978 ஆம் ஆண்டில் அப்போதைய ஒடிசா ஆளுநர் பகபத் தயாள் சர்மா அவர்களால் அது திறக்கப்பட்டது.


## குழந்தை தொழிலாளர் முறை இல்லாத மைக்கா சுரங்கம்

- மிக உயர் நிலை குழந்தை உரிமைகள் அமைப்பான தேசிய குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) ஆனது, ஜார்க்கண்டில் உள்ள மைக்கா சுரங்கங்களை 'குழந்தைத் தொழிலாளர் அற்றவை' என்று அறிவித்துள்ளது.
- இந்தச் சுரங்கங்களில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் முன்பு குழந்தைத் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டனர்.
- கைலாஷ் சத்யார்த்தியின் லாப நோக்கற்ற அமைப்பான பச்பன் பச்சாவ் அந்தோலன் (BBA) அமைப்பானது, 'குழந்தைத் தொழிலாளர் முறை இல்லாத மைக்கா சுரங்கங்கள்' என்ற பிரச்சாரத்தினை முன்னெடுத்தது.

## சண்டிபுரா வைரஸ்

- குஜராத்தின் ஆரவல்லி மாவட்டத்தில் 6 குழந்தைகள் சண்டிபுரா வைரஸால் உயிர் இழந்திருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது.
- சண்டிபுரா வெசிகுலோவைரஸ் (CHPV) எனப்படும் சண்டிபுரா வைரஸ், ராப்டோவிரிடே குடும்பத்தைச் சேர்ந்த ஆர்என்ஏ வைரஸ் ஆகும்.
- இது முதன்முதலில் 1965 ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவில் உள்ள சண்டிபுரா என்ற கிராமத்தில் கண்டறியப் பட்டது.
- இந்த வைரஸ் முதன்மையாக குழந்தைகளைப் பாதிக்கிறது மற்றும் இந்தியாவில் கடுமையான மூளையழற்சிப் பாதிப்புகளுடன் தொடர்புடையதாகும்.

- இந்த வைரஸ் முதன்மையாக பாதிக்கப்பட்ட மணல் ஈக்கள் (பிளெபோடோமஸ் வகை) கடிப்பதன் மூலம் பரவுகிறது.
- சண்டிபுரா வைரஸ் தொற்றுக்கு என்று குறிப்பிட்ட வைரஸ் தடுப்பு சிகிச்சை அல்லது தடுப்பூசி எதுவும் இல்லை.




## டிசு மற்றும் சுங்கி நதி – நாகாலாந்து

- மத்தியக் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் ஆனது, சரக்கு மற்றும் பயணிகளின் போக்குவரத்திற்காக டிசு சுங்கி நதியின் மீதான 101வது தேசிய நீர்வழித் தடத்தினைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.
- டிசு-சுங்கி என்பது நாகாலாந்தின் கிஃபிர் மாவட்டத்தில் தொடங்கி சிண்ட்வினில் முடிவடையும் ஒரு முக்கியமான நீர்வழியாகும்.
- நாகாலாந்தில், தேசிய நீர்வழி 101 ஆனது லாங்மாத்ராவிலிருந்து (நாகாலாந்து) அவங்கு பகுதி வரை பாய்கிறது.
- நாகாலாந்தில் டோயாங், தன்சிரி, திகு மற்றும் டிசு ஆகிய நான்கு முக்கிய ஆறுகள் உள்ளன.
- டிசு நதியின் முக்கியத் துணை நதிகள் சுங்கி, லான்யே மற்றும் லிகிம்ரோ ஆகிய ஆறுகள் ஆகும்.




## ஹரேலா திருவிழா – உத்தரகாண்ட்

- உத்தரகாண்டில் ஹரேலா திருவிழாவில் அனுசரிக்கப்படும் சவான் நிகழ்வு தொடங்கி உள்ளது.
- இந்தப் பாரம்பரிய இந்துப் பண்டிகையானது, இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் சில பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.
- ஹரேலா திருவிழாவானது அமைதி, செழிப்பு மற்றும் இயற்கையின் பெரும் கொண்டாட்டத்தினைக் குறிக்கிறது.
- "பசுமையின் தினம்" என்று பொருள்படும் ஹரேலா சந்திர நாட்காட்டியின் ஐந்தாவது மாதத்தில் வருகிறது.

## மகாராஷ்டிரா சிறப்புப் பொதுப் பாதுகாப்பு (MSPS) சட்டம், 2024

- நகர்ப்புறங்களில் 'நக்சலிசத்தின் அச்சுறுத்தலை' தடுப்பதை இந்தச் சட்டம் ஒரு பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின் விதிகள் ஆனது, பிடியாணை அற்ற மற்றும் பிணை ஆணையைப் பெற முடியாத சில குற்றப் பதிவுகளைக் கொண்ட எந்தவொரு அமைப்பையும் ‘சட்ட விரோதமானது’ என அறிவிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.
- முன்மொழியப்பட்ட இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், மாநில காவல்துறை மற்றும் பாதுகாப்பு முகமைகள் ஆனது பெரும்பாலும் குற்றச்சாட்டுகள் குறித்தத் தகவல்களை தெரிவிக்காமலேயே தனிநபர்களைப் பிடியாணை இன்றி கைது செய்ய வழி வகுக்கும்.
- மாவோயிஸ்டு அமைப்புகளால் பாதிக்கப்பட்ட ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் ஏற்கனவே பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக பொதுப் பாதுகாப்புச் சட்டங்களை அமல்படுத்தி

உள்ளன.

- 1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (UAPA) ஆனது நக்சலிசம் மற்றும் தீவிரவாதம் தொடர்பான வழக்குகளில் செயல்படுத்தப்படுகிறது.
- இந்தச் சட்டம் ஆனது குறிப்பிட்ட அமைப்புகளை 'சட்டவிரோத அமைப்புகள்' என வகைப் படுத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இரண்டு சட்டங்களும் சற்று ஏறக்குறைய ஒரே மாதிரியானவையாகும்.
- இருப்பினும், MSPS சட்டத்தில், உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்படும் அல்லது அவ்வாறு நியமிக்கப்பட தகுதி பெற்ற மூன்று நபர்கள் கொண்ட ஆலோசனைக் குழு ஆனது இந்த உறுதிப்படுத்தல் செயல்முறையை மேற்பார்வையிடும்.
- ஆனால் UAPA சட்டத்தின் கீழ், உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான தீர்ப்பாயம் அரசின் அறிவிப்பைச் சரிபார்க்கிறது.

'Draconian law'

Activists claim the Maharashtra Special Public Security Bill loosely defines 'unlawful activity', and will be prone to 'malicious misuse' by the police

| Section | Offence |
| --- | --- |
| Section 8 (1) | Up to three-year jail term, ₹3 lakh fine for members of 'unlawful organisations' |
| Section 8 (2) | Up to two-year jail term, ₹2 lakh fine for contributing to or harbouring any member of 'unlawful organisations' |
| Section 8 (3) | Up to three-year jail term, ₹3 lakh fine for managing or assisting the management of 'unlawful organisations' |
| Section 8 (4) | Up to seven-year jail term, ₹5 lakh fine for committing or attempting to commit unlawful activity of 'unlawful organisations' |
| Section 9 (2) | If declared unlawful, officials may take possession of the notified place and evict any person found within |
| Section 10 (1) | If declared unlawful, officials may take possession of all money, securities or assets found in the notified place |
| Section 16 (1) | All offences are cognisable and non-bailable |

## கோண்டுவானா மீப்பெருக் கண்டத்துடனான புவியியல் தொடர்புகள்

- இந்தியத் துணைக்கண்டத்திற்கும் அண்டார்டிகாவிற்கும் இடையே உள்ள பழங்காலத் தொடர்பை வெளிக் கொணரும் சில புதிய கண்டுபிடிப்புகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கும் கிழக்கு அண்டார்டிகாவிற்கும் இடையே மோதல் ஏற்பட்டதற்கான வலுவான ஆதாரங்களை அவர்களின் ஆராய்ச்சி வழங்குகிறது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் தர்சி மற்றும் அதங்கி என்ற பகுதிகளுக்கு அடியில் மறைந்திருந்த மேடு ஒன்றை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

- வரலாற்று மோதலுக்குக் காரணமான இந்த மலைமுகடு ஆனது கடப்பா படுகை தெற்கு நோக்கிச் சாய்வதைக் குறிக்கிறது.




## ஒடிசாவில் நிழல் அமைச்சரவை

- நவீன் பட்நாயக், ஆளும் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதன் முதல்வர் மோகன் மாஜி குறித்த ஒரு மதிப்பாய்வினை மேற்கொண்டு, அவரை எதிர்கொள்வதற்காக 50 பேர் கொண்ட நிழல் அமைச்சரவையை உருவாக்கியுள்ளார்.
- நிழல் அமைச்சரவையின் உறுப்பினர்கள் பெரும்பாலும் அவரது அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்கள் ஆகப் பணியாற்றியவர்கள் ஆவர்.
- அவர்கள் ஒவ்வொரு அமைச்சரையும் அவரது துறையையும் கண்காணித்து, மாநில அரசாங்கம் சரியான தீர்வுகளை கொண்டு வராத பிரிவுகளில் அதற்கான மாற்றுத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- எதிர்க் கட்சியானது மக்கள் நலன்களின் பாதுகாவலர் என்று கருதப்படுகிறது.
- ஒரு மாநிலச் சட்டசபையில் எதிர்க்கட்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்கப் பங்கு உள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் செயல்பாடுகளை மிக உன்னிப்பாகக் கண்காணித்து, மாநிலச் சட்டசபையில் அந்தத் துறைகள் குறித்த விவாதத்தின் போது திறன் மிக்க முறையில் ஈடுபடுவர்.

## தெலுங்கானா பயிர்க் கடன் தள்ளுபடி திட்டம் 2024

- தெலுங்கானா அரசானது வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தின் முதல் கட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- 11 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளின் கணக்கில் 6,098 கோடி ரூபாய் வரவு வைக்கப் பட்டு, 1 லட்சம் ரூபாய் வரையிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட உள்ளது.
- இது இந்தியாவின் மிகப்பெரிய கடன் வசூலைக் குறிக்கிறது.
- கடன் தள்ளுபடி திட்டம் ஆனது மேலும் இரண்டு கட்டங்களில் நிறைவு செய்யப்படும்.

- மொத்தம் 31,000 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் கடன் தள்ளுபடி மூலம் தெலுங்கானாவில் உள்ள 50 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.
- ஆகஸ்ட் மாதத்தில், 2 லட்சம் ரூபாய் வரை கடன் பெற்றுள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு மாநில அரசு நிதி வழங்கும்.




## லட்கா பாஹு யோஜனா – மகாராஷ்டிரா




- மகாராஷ்டிரா மாநில அரசானது, பெண்களுக்காக 'மஜ்ஹி லட்கி பஹின் யோஜனா' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இளையோர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி மற்றும் உதவித் தொகை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய திட்டத்தையும் அதன் முதலமைச்சர் அறிமுகப் படுத்தி உள்ளார்.
- தற்காலிகமாக 'லட்கா பாவ்' யோஜனா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த முன்னெடுப்பு என்பது, 'முக்கிய மந்திரி யுவ காரிய-பிரஷிக்ஷன் யோஜனா' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- இந்தத் திட்டம் ஆனது தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையுடன் கூடிய வேலைவாய்ப்புப் பயிற்சியினை அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பின்மையை நிவர்த்தி செய்ய முயல்கிறது.
- கல்வித் தகுதிகளின் அடிப்படையில் பின்வரும் அளவில் மாதாந்திர உதவித்தொகை வழங்குவது என்ற அமைப்புடன், 12 ஆம் வகுப்பு கல்வியை முடித்தவர்களை இந்த திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது:
    - 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.6,000,
    - பட்டயப் படிப்பு (டிப்ளமோ) பெற்றவர்களுக்கு ரூ.8,000, மற்றும்
    - இளங்கலை பட்டம் பெற்றவர்களுக்கு ரூ.10,000.

## பஞ்சமசாலி லிங்காயத்துகள்

- கர்நாடகாவில் பெரும்பான்மையில் உள்ள வேளாண் சாதியினரான பஞ்சமசாலி லிங்காயத்துகள், இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் 2A என்ற பிரிவில் இட ஒதுக்கீடு கோருகின்றனர்.
- சமூகத்தின் சமூக ரீதியிலான பின்தங்கிய நிலையைக் காரணம் காட்டி, ஏறத்தாழப் பத்தாண்டுகளாக இப்பிரிவினர் சிறப்பு இட ஒதுக்கீடு கோரி வருகின்றனர்.
- அவர்கள் 80% அளவிற்கு அரசியல் ரீதியாக சக்தி வாய்ந்த லிங்காயத் சாதிக் குழுவின் அங்கத்தினராக உள்ளனர்.


*Table 1: Karnataka's current quota matrix*

| CATEGORY | | QUOTA |
|---|---|---|
| Other Backward Classes (OBC) | | 32 |
| Category 1 | Backward Castes | 4 |
| Category 2A | Other Backward Classes | 15 |
| Category 2B | Muslims | 4 |
| Category 3A | Vokkaliga, etc. | 4 |
| Category 3B | Lingayat, etc. | 5 |
| Scheduled Castes (SC) | | 15 |
| Scheduled Tribes (ST) | | 3 |
| Economically Weaker Sections (EWS) | | 10 |
| TOTAL RESERVATIONS | | 60 |

## பில் பிரதேசம்

- ராஜஸ்தானில் பில் பழங்குடியினச் சமூகத்தினரின் தனி மாநிலக் கோரிக்கை வலுத்து வருகிறது.
- நான்கு மாநிலங்களில் இருந்து 49 மாவட்டங்களைப் பிரித்து "பில் பிரதேசம்" என்ற தனி மாநிலம் வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, நாடு முழுவதும் 1.7 கோடி பில் சமூகத்தினர் உள்ளனர்.
- அவர்களின் மிகவும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் தொகையானது மத்தியப் பிரதேசத்தில் சுமார் 60 லட்சம் ஆகும்.
- அதைத் தொடர்ந்து குஜராத்தில் 42 லட்சம் பேரும், ராஜஸ்தானில் 41 லட்சம் பேரும், மகாராஷ்டிராவில் 26 லட்சம் பேரும் உள்ளனர்.
- பில் பிரதேசத்திற்கான கோரிக்கையானது 1913 ஆம் ஆண்டிலிருந்து முன்வைக்கப் பட்டு வருகிறது.




## கர்ச்சி பூஜை – திரிபுரா

- கர்ச்சி பூஜை ஆண்டுதோறும் சுக்ல அஷ்டமி நாளில் அனுசரிக்கப்படுகிறது என்ற நிலையில் இது சந்திர மாதமான ஆஷாட மாதத்தின் எட்டாவது நாளில் அனுசரிக்கப் படுகிறது.
- இது 14 கடவுள்களின் திருவிழா என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒரு வாரம் அளவிலான இந்தத் திருவிழாவின் போது, திரிபுரா மாநில மக்களின் குல தெய்வமான சதுர்தச தேவதையை அந்த மக்கள் வழிபடுகின்றனர்.

## சுற்றுச்சூழலுக்கான GEP குறியீடு – உத்தரகாண்ட்


- மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தி (GEP) எனப்படும் நான்கு இயற்கை வளங்களுக்கு மதிப்பீடுகளை ஒதுக்கும் நாட்டின் முதல் மாநிலமாக உத்தரகாண்ட் மாறியுள்ளது.
- GEP குறியீடு ஆனது நான்கு முக்கிய கூறுகளின் அடிப்படையில் சுற்றுச்சூழல் தரத்தை மதிப்பிடுகிறது. அவை
  - **நீர்**: மாநிலத்தில் உள்ள நீர் வளங்களின் தரம் மற்றும் இருப்பை மதிப்பிடுகிறது.

- **காற்று**: காற்றின் தரம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதாரத்தில் மாசுபாட்டின் தாக்கத்தை மதிப்பிடுகிறது.
- **காடு**: காடுகளின் பரவல், பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளின் வளம் ஆகியவற்றை மதிப்பிடுகிறது.
- **மண்**: வளம் மற்றும் அரிப்பு மற்றும் சிதைவின் தாக்கம் உள்ளிட்ட மண் வளத்தினை ஆய்வு செய்கிறது.

❖ GEP குறியீடானது 2020 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான ஒரு ஒப்பீட்டுத் தரவைப் பிரதிபலிப்பதோடு, ஜிடிபியில் இதன் மதிப்புகள் 0.9% அதிகரிப்பையும் காட்டுகிறது.





## சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டம் – பானி புல்வெளிகள்




❖ சிவிங்கிப் புலி வளங்காப்புத் திட்டத்தின் அடுத்த கட்டத்தின் ஒரு பகுதியாக, ஆப்பிரிக்காவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிறுத்தைகளில் சில, குஜராத்தில் உள்ள ரான் ஆஃப் கட்ச் பகுதியில் உள்ள பானி புல்வெளியில் உள்ள சிவிங்கிப் புலி வளர்ப்பு மற்றும் வளங்காப்பு மையத்திற்கு அனுப்பப்பட உள்ளன.

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள காந்தி சாகர் சரணாலயம் ஆனது, அடுத்த காட்டுப் பூனை இனங்களின் வளங்காப்பிற்கான விருப்பத் தேர்வாக உள்ளது என்பதோடு பானி புல்வெளிகளானது பத்தாண்டுகளுக்கும் மேலாக இவற்றிற்கான மிகச் சாத்தியமான ஒரு வாழ்விடமாக கருதப்படுகிறது.
- பானி புல்வெளிகள் ஆனது கட்ச் பகுதியின் வடக்குப் பகுதியில் உள்ள சுமார் 3,500 சதுர கிலோமீட்டர் வரை பரவி காணப்படும் ஒரு பரந்தப் புல்வெளியாகும்.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் குனோ பூங்காவிற்கு கொண்டு வரப்பட்ட 20 பதின்பருவ வயது சிவிங்கிப் புலிகளில் 13 இந்தியப் பருவநிலைச் சூழல்களில் உயிர் பிழைத்துள்ளன.
- கூடுதலாக, 13 குட்டிகள் ஈனப் பட்டுள்ளதால் தற்போது மொத்தமாக 26 சிவிங்கிப் புலிகள் உள்ளன.
- இருப்பினும், குனோ வளங்காப்பகத்தின் அதிகபட்ச வாழ்வாதாரத் திறன் (கிடைக்கப் பெறும் இரையின் அடிப்படையில்) ஆனது 21 வயது வந்த விலங்குகளுக்கானது மட்டும் ஆகும்.

## லித்தியம் வளங்களின் கண்டுபிடிப்பு – கர்நாடகா




- கர்நாடகாவின் மாண்டியா மற்றும் யாத்கிரி மாவட்டங்களில் சுமார் 1,600 டன் லித்தியம் வளங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது ஆரம்ப கட்ட ஆய்வுகள் மற்றும் சில நிலத்தடி ஆய்வுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தனிம வரிசை அட்டவணையில் உள்ள லித்தியம் என்ற தனிமம் உலகளவில் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும்.
- இது 1817 ஆம் ஆண்டில் ஜோஹன் ஆகஸ்ட் அர்ஃப்வெட்சன் என்பவரால் கண்டு பிடிக்கப் பட்ட நிலையில் இதன் பெயரானது கல் என பொருள்படும் லித்தோஸ் எனப் படும் கிரேக்க வார்த்தையிலிருந்துப் பெறப்பட்டது.
- லித்தியம் என்பது தண்ணீருடன் மிகவும் தீவிரமாக வினைபுரியக் கூடிய மற்றும் நச்சுத் தன்மையுடைய மிக இலகுவான உலோகமாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வெங்கையா நாயுடு அவர்களின் வாழ்க்கைப் பயணம் மீதான புத்தகம்

- இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர் M. வெங்கையா நாயுடு அவர்களின் வாழ்க்கை மற்றும் பயணம் குறித்த பின்வரும் மூன்று புத்தகங்களைப் பிரதமர் அவர்கள் வெளியிட்டார்.
- "Venkaiah Naidu: Life in Service" என்ற தலைப்பிலான முன்னாள் துணைக் குடியரசுத் தலைவரின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகமானது S. நாகேஷ் குமார் என்பவரால் எழுதப் பட்டதாகும்.
- "Celebrating Bharat: The Mission and Message of M Venkaiah Naidu as 13th Vice–President of India" என்ற டாக்டர் I.V. சுப்பா ராவ் என்பவரால் தொகுக்கப்பட்ட ஒரு புகைப்படக் குறிப்பு புத்தகமாகும்.
- தெலுங்கு மொழியில் சஞ்சய் கிஷோர் எழுதிய "Mahaneta: Life and Journey of M. Venkaiah Naidu" என்ற தலைப்பிலான புத்தகமானது நாயுடு அவர்களின் சித்திர வடிவ வாழ்க்கை வரலாற்றுப் புத்தகமாகும்.

## ப்ளூ பிளானட் பரிசு 2024




- பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் பெரும் சுற்றுச்சூழல் சேவைகளுக்கான அரசுகளுக்கு இடையேயான அமைப்பானது (IPBES) 2024 ஆம் ஆண்டு ப்ளூ பிளானட் பரிசைப் பெற்ற இரு அமைப்புகளுள் ஒன்றாகும்.
- இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியின் உலகளாவிய செழுமைக்கான கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த இராபர்ட் கோஸ்டான்சா விருதினைப் பெற்ற மற்றொரு நபர் ஆவார்.
- IPBES என்பது 2012 ஆம் ஆண்டில் பனாமா நகரில் நிறுவப்பட்ட அரசுகளுக்கு இடையே ஆன ஒரு அமைப்பாகும்.
- இது பல்லுயிர்களின் வளங்காப்பு மற்றும் அவற்றின் நிலையான பயன்பாட்டிற்காகப் பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகளுக்கான அறிவியல்-கொள்கை இடைமுகத்தை வலுப்படுத்துவதற்கான ஒரு அமைப்பாகும்.

- ப்ளூ பிளானட் பரிசு ஆனது ஜப்பானின் அசாஹி கிளாஸ் அறக்கட்டளையால் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.
- உலகளாவிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க உதவிய அறிவியல் ஆராய்ச்சி மற்றும் அதன் பயன்பாட்டில் மேற்கொள்ளப்படும் சிறந்தச் சாதனைகளை அங்கீகரிக்க தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இது வழங்கப்படுகிறது.

## சர்வதேசப் பொம்மைகள் கண்காட்சி 2024




- புதுதில்லியில் நடைபெறும் நான்கு நாள் சர்வதேசப் பொம்மை கண்காட்சியில் சுமார் 300க்கும் மேற்பட்ட உள்நாட்டு நிறுவனங்களும், சுமார் 100க்கும் மேற்பட்ட வெளிநாட்டு வாங்குபவர்களும் அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்கின்றனர்.
- இந்த 15வது சர்வதேசப் பொம்மைகள் கண்காட்சி 2024 தெற்காசியாவின் மிகப்பெரிய கண்காட்சியாகும்.
- நாட்டின் பொம்மை ஏற்றுமதி, முந்தைய நிதியாண்டில் 153.89 மில்லியன் டாலரில் இருந்து 2023-24ல் 152.34 மில்லியன் டாலராக குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய சந்தை சுமார் 60.3 பில்லியன் டாலர் மதிப்புள்ளப் பொம்மைகளை இறக்குமதி செய்தது.
- இந்தச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தி வரும், சீனா 48.3 பில்லியன் டாலர் மதிப்புள்ளப் பொம்மைகளை ஏற்றுமதி செய்து, உலக ஏற்றுமதியில் 80 சதவீத பங்கைக் கொண்டு உள்ளது.
- உலகப் பொம்மை ஏற்றுமதிச் சந்தையில் இந்தியாவின் பங்கு என்பது சுமார் 0.3 சதவீதம் மட்டுமே ஆகும் என்பதோடு மேலும் இந்தியா ஏற்றுமதியில் 27வது இடத்தில் உள்ளது.
- பொம்மை இறக்குமதியில் 60 மில்லியன் அமெரிக்க டாலர்களுடன் இந்தியா 61வது இடத்தில் உள்ளது.

## தேசிய இலக்கிய விருது 2024

- தமிழ் எழுத்தாளர் சிவசங்கரி டாக்டர் C.நாராயண ரெட்டி தேசிய இலக்கிய விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- சென்னையைச் சேர்ந்த இந்த எழுத்தாளர் தமிழில் 36 புதினங்கள், 48 சிறு புதினங்கள் (நவலிகாக்கள்), 150 கதைகள், 15 பயணக் கட்டுரைகள், ஏழு கட்டுரைத் தொகுதிகள், நான்கு ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இரண்டு சுயசரிதைகளை எழுதியுள்ளார்.
- அவர் சூர்ய வம்சம் என்ற நினைவுப் புத்தகத்திற்காக 2022 ஆம் ஆண்டு 'சரஸ்வதி சம்மான்' விருதினையும் வென்றுள்ளார்.

## ஃபிராங்க் டக்வொர்த்

- இங்கிலாந்து நாட்டுப் புள்ளியியல் நிபுணரும், டக்வொர்த் லூயிஸ்-ஸ்டெர்ன் (DLS) முறையைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவருமான பிராங்க் டக்வொர்த் சமீபத்தில் காலமானார்.
- டக்வொர்த்-லூயிஸ் முறையானது, டக்வொர்த் மற்றும் அவரது சகப் புள்ளியியல் வல்லுனர் டோனி லூயிஸ் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டது.
- மழையால் பாதிக்கப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் முடிவுகளைத் தீர்மானிக்க இது அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த முறை முதன்முதலில் 1997 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பயன்படுத்தப்பட்டது.
- 2001 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் மாற்றியமைக்கப்பட்ட இலக்குகளை நிர்ணயிப்பதற்கான நிலையான முறையாக இது சர்வதேச கிரிக்கெட் சபையினால் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பின்னர், ஆஸ்திரேலிய புள்ளியியல் நிபுணர் ஸ்டீவன் ஸ்டெர்ன் இதில் மேலும் சில மாற்றங்களைச் செய்தார்.

## தேசிய காசநோய் திட்டத்திற்கான முதன்மை ஆலோசகர்




- உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை அறிவியலாளர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NTEP) முதன்மை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- உலகின் காசநோய் பாதிப்பில் இந்தியா 25% பங்கினை கொண்டுள்ளது என்பதோடு இந்தியாவில் 2024 ஆம் ஆண்டில் 25 லட்சத்திற்கும் அதிகமான காசநோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- 1929 ஆம் ஆண்டில், காசநோய்க்கு எதிரான சர்வதேச ஒன்றியத்தில் இந்தியாவானது இணைந்தது.
- 1959 ஆம் ஆண்டில், இந்திய அரசானது உலக சுகாதார அமைப்பின் உதவியுடன், பெங்களூருவில் தேசிய காசநோய் நிறுவனத்தை நிறுவியது.
- தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம் (NTP) ஆனது 1962 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- காசநோய் ஒழிப்பிற்கான தேசிய உத்தி சார் திட்டம் (2017-2025) ஆனது 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை அகற்றுவதற்காக உருவாக்கப் பட்டது.
- பின்னர், காசநோயை முடிவுக்குக் கொண்டு வர காசநோய் ஒழிப்பிற்கான தேசிய உத்தி சார் திட்டம் (2020-2025) ஆனது வெளிவந்தது.
- இந்தியா 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் காசநோய் பாதிப்பை சுமார் 16% குறைத்துள்ளது என்பதோடு அதே காலக் கட்டத்தில் காசநோய் பாதிப்பின் காரணமான உயிரிழப்புகளையும் 18% குறைந்துள்ளது.

## 9வது IASRM வருடாந்திர உலக காங்கிரஸ்





- IASRM மற்றும் Anti-Anging Foundation (India) ஆகியவை இணைந்து, நீண்ட ஆயுள் புரட்சி 2024: மறுவரையறை செய்யப்பட்ட 11 ஆண்டு கால மீளுருவாக்கம் மிக்க மருத்துவம் எனப்படும் 9வது வருடாந்திர உலக மாநாட்டினை நடத்தின.
- சர்வதேசக் குருத்தணு மற்றும் மீளுருவாக்கம் மருத்துவச் சங்கம் (IASRM) ஆனது, குருத்தணு மற்றும் மீளுருவாக்க மருத்துவ மாநாடுகள் மற்றும் பயிலரங்கங்களை நடத்தி அதன் 9வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.
- நீண்ட ஆயுள் புரட்சி 2024 என்பது மீளுருவாக்கம் செய்யும் மருத்துவத் துறையில் தாக்கம் நிறைந்த விவாதங்கள், செயல்பாடுகள் மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான ஒரு முதன்மையான தளமாகும்.

## எஃகு உருக்குக் கசட்டினைப் பயன்படுத்திச் சாலையமைக்கும் தொழில்நுட்பம் குறித்த முதலாவது சர்வதேச மாநாடு

- CSIR-CRRI மற்றும் PHDCCI ஆகியவை இணைந்து எஃகு உருக்குக் கசட்டினை நன்கு பயன்படுத்திச் சாலையமைக்கும் ஒரு தொழில்நுட்பம் குறித்த முதலாவது சர்வதேச மாநாட்டினை புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த நிகழ்வின் போது, சாலைக் கட்டுமானத்தில் எஃகு உருக்குக் கசடுகளை நன்கு பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டது.
- இந்தத் தொழில்நுட்பமானது, எஃகு உற்பத்திக் கழிவுகளை மறு பயன்பாட்டிற்கு நன்கு உட்படுத்தி, வலுவான, நீடித்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்த வகையிலான சாலைகளை உருவாக்குகிறது.
- செயல்முறைக்கு உட்படுத்தப்பட்ட எஃகு உருக்குக் கசடு அதிக வலிமை, கடினத் தன்மை, தேய்மான எதிர்ப்புத் திறன் மற்றும் வடிகால் திறன் ஆகியவற்றை கொண்டு உள்ளது.
- இதன் மூலம் சுமார் 1.8 பில்லியன் டன்கள் இயற்கையான சாலை அமைப்பு மூலப் பொருட்களுக்கான இந்தியாவின் வருடாந்திரத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும்.
- இந்தியாவில் முதல் முறையாக எஃகு உருக்குக் கசட்டினைப் பயன்படுத்தி சூரத்தில் சாலை அமைக்கப்பட்டது.

## மிஸ்ஸி எலியட்டின் "The Rain" பாடல்

- நாசா நிறுவனமானது 1997 ஆம் ஆண்டில் பிரபலமான "The Rain" (Supa Dupa Fly)" மிஸ்ஸி எலியட்டின் பாடலினை ஒரு கிரகங்களுக்கு இடையேயான பயணத்தில் வெள்ளிக் கோளிற்கு அனுப்பியதையடுத்து, இத்தகைய வரலாற்று சிறப்பினைப் பெற்ற முதல் ஹிப் ஹாப் பாடல் என்ற பெருமையினைப் பெற்றுள்ளது.
- ஒளியின் வேகத்தில் 158 மில்லியன் மைல்கள் பயணித்து, இந்தப் பாடல் வெறும் 14 நிமிடங்களில் வெள்ளிக் கோளினை அடைந்தது.
- இதற்கு முன்பாக நாசா, பீட்டில்ஸின் "Across the Universe" என்ற பாடலை அதன் 40வது ஆண்டு நிறைவினை அனுசரிப்பதற்காக வேண்டி 2008 ஆம் ஆண்டில் விண்வெளியின் உள்ளார்ந்தப் பகுதிக்கு அனுப்பியது.



## SVANidhi திட்ட விருதுகள் 2024

- PM SVANidhi திட்டத்தில் 'சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம்' பிரிவின் கீழ் மத்தியப் பிரதேசம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- நகர்ப்புறத் தெருவோர வியாபாரிகளுக்கான இந்த நுண்கடன் திட்டம் ஆனது 50,000 ரூபாய் வரையிலான பிணையில்லா கடன்களை வழங்குகிறது.
- 'சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள் - புத்தாக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகள் விருது' பிரிவில் அசாம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- 'சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள் - பெருநகரம் மற்றும் மில்லியன் பிளஸ் நகரங்களில் கடன் வழங்கீட்டுச் செயல்திறன்' பிரிவில், டெல்லி மாநகராட்சி (MCD) முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- இதைத் தொடர்ந்து ப்ருஹத் பெங்களூரு மகாநகர பலிகே (BBMP) மற்றும் அகமதாபாத் மாநகராட்சிக் கழகம் ஆகியவை உள்ளன.
- தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தில் (DAY-NULM) சிறந்த செயல் திறனுக்கான விருதுகளும் அறிவிக்கப்பட்டன.
- முறை சார் முற்போக்கு குறித்தப் பகுப்பாய்வு சார்ந்த நிகழ் நேர தரவரிசையில் (SPARK) கேரளா முதலிடத்தில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் இடம் பெற்றுள்ளன.

## UPSC தலைவர் ராஜினாமா – மனோஜ் சோனி

| | PROVISION |
|---|---|
| Article 315 | PSCs for the Union and for the States. |
| Article 316 | Appointment and term of office of members. |
| Article 317 | Removal/Suspension of a member of a Public Service Commission. |
| Article 318 | Powers to make regulations regarding conditions of service of members and staff of Commissions. |
| Article 319 | Prohibition on holding of offices by members on end of tenure. |
| Article 320 | Functions of PSCs. |
| Article 321 | Power to extend functions of PSCs. |
| Article 322 | Expenses of PSCs. |
| Article 323 | Reports of PSCs. |

- மத்தியக் குடிமைப் பணிகள் தேர்வாணயத்தின் (UPSC) தலைவர் டாக்டர் மனோஜ் சோனி அந்த உயர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளார்.
- அவரது பதவிக் காலம் 2029 ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதியன்று முடிவடைய இருந்தது.
- அவர் 2017 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் தேதியன்று ஆணையத்தின் உறுப்பினராகப் பொறுப்பேற்றார் மற்றும் 2023 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதியன்று அந்த ஆணையத்தின் தலைவராகப் பதவியேற்றார்.
- 2005 ஆம் ஆண்டில், சோனி இந்தியாவின் இளம் துணைவேந்தராகப் பதவியேற்றார்.
- UPSC என்பது ஒரு சுதந்திரமான அரசியலமைப்பு சார் அமைப்பாகும்.

- UPSC ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் என்பது இந்திய அரசியலமைப்பின் XIV என்ற பகுதியின் 315 முதல் 323வது பிரிவு வரை வழங்கப் பட்டு உள்ளன.
- UPSC ஆணையத்தின் எந்தவொரு உறுப்பினரும் ஆறு ஆண்டுகள் அல்லது 65 வயது வரையில், இவற்றுள் எது முந்தையதோ அதுவரை அந்தப் பதவியில் இருப்பார்.
- இந்த ஆணையத்தின் உறுப்பினர்கள் அதன் தலைவர் பதவியைத் தவிர அந்தப் ஆணையத்தின் மற்ற பதவிகளுக்கு மறு நியமனம் செய்யத் தகுதியற்றவர்கள் ஆவர்.
- UPSC உறுப்பினர் ஒருவர் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் எழுத்துப்பூர்வ ராஜினாமா கடிதத்தினைச் சமர்ப்பித்து விட்டு தனது பதவியை ராஜினாமா செய்யலாம்.

## சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டி 2024

- 2024 ஆம் ஆண்டு சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் ஆறு இந்திய மாணவர்கள் அடங்கிய குழுவானது இந்தியா சார்பாக பங்கேற்றது.
- ஐக்கியப் பேரரசின் பாத் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா அணி நான்கு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றது.
- இப்போட்டியில் பங்கேற்ற 108 நாடுகளில் இந்தியா அணி 4வது இடத்தில் உள்ளது.

## இராஜ்பாஷா கௌரவ் சம்மான் 2023-24 விருது

- நகர அலுவல் மொழி அமலாக்கக் குழு - TOLIC (PSU), விசாகப்பட்டினம் என்ற கூட்டம் ஆனது தேசிய அனல் மின் கழகத்தினால் (NTPC) நடத்தப்பட்டது.
- TOLIC இந்தி மொழியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள செயல்திறன் அடிப்படையில் மூன்று பிரிவுகளில் பரிசுகளை வழங்கியது:
  - HPCL-Visakha Refinery நிறுவனமானது முதல் பிரிவில் முதல் பரிசை வென்றது
  - HPCL நிறுவனத்தின் பல்வேறுக் குழுக்கள், பிரிவு II மற்றும் III ஆகியவற்றில் 2வது பரிசை வென்றன
  - GAIL நிறுவனம் பிரிவு II-இல் முதல் பரிசை வென்றது.

## 10வது தேசியச் சமூக வானொலி விருதுகள்

- மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் (I&B) ஆனது, 10வது தேசியச் சமூக வானொலி விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- இந்திய மக்கள் தொடர்பு நிறுவனத்தினால் இயக்கப்படுகிற இந்தியாவின் 500வது சமூக வானொலி நிலையமான 'அப்னா ரேடியோ 90.0 FM' என்ற FM ஆனது மிசோரமின் ஐஸ்வாலில் திறக்கப் பட்டது.
- இந்த விருதுகள் ஆனது பின்வரும் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டன:

| Category | Radio | Program |
| --- | --- | --- |
| Thematic Award | Radio Mayur, Bihar | Tech Sakhi |
| | Radio Kochi, Kerala | Nirangal |
| | Hello Doon, Uttarakhand | Meri Baat |
| Most Innovative Community Engagement Award | Yerlawani Sangli, Maharashtra | Kahani Sunandachi |
| | Vaylaga Vanoli, Tamil Nadu | Let's Build a New Norm |
| | Salaam Namaste, Uttar Pradesh | Maid Didi |
| Promoting Local Culture Award | Radio BrahmaputraRadio Brahmaputra, Assam | Igarekun |
| | Radio Kotagiri, Tamil Nadu | En Makkaludan Oru Payanam |
| | Radio Active, Bihar | Ang Pradesh ki Adbut Dharohar' |
| Sustainability Model Award | Radio Benziger, Kerala | |
| | Radio Namaskar, Odisha | |
| | Radio Antarwani, Karnataka | |

# விளையாட்டுச் செய்திகள்

## வில்வித்தை உலகக் கோப்பை போட்டி 2024

- 2024 ஆம் ஆண்டு வில்வித்தை உலகக் கோப்பைப் போட்டியானது உலகெங்கிலும் வெவ்வேறு இடங்களில் நடத்தப் படும் நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது.
    - முதல் போட்டி சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்றது
    - இரண்டாம் போட்டி தென் கொரியாவின் யெச்சியோனில் நடைபெற்றது
    - மூன்றாம் போட்டி துருக்கியின் அண்டலியாவில் நடைபெற்றது
    - இறுதிப் போட்டி மெக்சிகோவின் ட்லாக்ஸ்கலாவில் நடைபெற உள்ளது.
- அதிதி சுவாமி, ஜோதி சுரேகா வென்னம் மற்றும் பர்னீத் கவுர் ஆகிய மூவரும் இந்த போட்டித் தொடரில் தொடர்ந்து மூன்றாவது தங்கப் பதக்கத்தை வென்றனர்.
- இந்திய அணியானது இரண்டாம் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, மற்றும் இரண்டு வெண்கலம் என நான்கு பதக்கங்களைப் பெற்று அசத்தியது.




## ரோஹித் சர்மா மற்றும் விராட் கோலி ஓய்வு

- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான T20 உலகக் கோப்பைப் போட்டியில் பெற்ற வெற்றி தான் இந்த வடிவப் போட்டியில் தங்களது கடைசி வெற்றி என்று இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் ரோஹித் சர்மாவும், விராட் கோலியும் அறிவித்துள்ளனர்.
- கபில்தேவ் (1983) மற்றும் M.S. தோனி (2007 மற்றும் 2011) ஆகியோருக்குப் பிறகு உலகக் கோப்பையை வென்ற மூன்றாவது இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் என்றதொரு பெருமையை ரோஹித் பெற்றுள்ளார்.
- 50 T20 போட்டிகளில் அணித் தலைவராகப் பங்காற்றிய முதல் அணித் தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.
- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான உலகக் கோப்பை இறுதிப் போட்டி அவர் பெற்ற 50வது வெற்றியாகும்.
- அவர் ஐந்து T20I சதங்களையும் அடித்துள்ளார் என்ற வகையில் ஆஸ்திரேலியாவின் கிளென் மேக்ஸ்வெல்லுக்கு இணையான வகையில் இந்த வடிவப் போட்டியில் அதிக சதம் அடித்துள்ளார்.
- கோஹ்லி தனது வாழ்க்கையில் 125 T20I போட்டிகளில் விளையாடி, சராசரியாக 48.69 மற்றும் 137.04 ஸ்ட்ரைக் வீதத்தில் (ஒரு ஓவருக்கு குறிப்பிட்ட ரன்களை எடுத்தல்) 4188 ரன்கள் எடுத்துள்ளார்.
- அவர் இந்த வடிவப் போட்டியில் இரண்டாவது அதிக ரன்களை எடுத்துள்ளார்.
- T20 உலகக் கோப்பைப் போட்டிகளில் ரன் குவித்தவர்களின் தரவரிசையில் முன்னணி இடத்தினைப் பெற்றதுடன் அவர் தனது பங்கேற்பினை நிறைவு செய்து கொண்டார்.
- இரண்டு வெவ்வேறு T20 உலகக் கோப்பைப் போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்த ஒரே வீரர் இவரே ஆவார்.
- 2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளின் சிறந்த ICC ஆடவர் T20I அணியிலும் ஒருவராக அவர் இடம் பெற்றுள்ளார்.




## ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டி 2024

- சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ஆசிய பில்லியர்ட்ஸ் (மேசைக்கோற் பந்தாட்டம்) சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கஜ் அத்வானியை தோற்கடித்து துருவ் சித்வாலா வெற்றி பெற்றுள்ளார்.
- துருவ் இதற்கு முன்பு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஆசிய பில்லியர்ட்ஸ் பட்டத்தை வென்றிருந்தார்.
- மற்றொரு இந்திய வீரரான த்வாஜ் ஹரியா வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.
- சீனாவில் ஷாங்கராவ் நகரில் உள்ள உலக பில்லியர்ட்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ள புகழ் மன்றத்தில் பங்கஜ் அத்வானி சேர்க்கப்பட்ள்ளார்.
- மற்றொரு இந்திய வீராங்கனையான அனுபாமா இராமச்சந்திரன், தாய்லாந்தின் பஞ்சயா சன்னோயை தோற்கடித்து தனது முதல் சர்வதேசப் பட்டத்தை வென்றார்.



## 2024 ஆம் ஆண்டு விம்பிள்டன் டென்னிஸ் போட்டி

- 2024 ஆம் ஆண்டு விம்பிள்டன் இறுதிப் போட்டி இங்கிலாந்தின் லண்டனில் நடத்தப் பட்டது.
- செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சை வீழ்த்தி ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் விம்பிள்டன் ஆடவர் ஒற்றையர் போட்டியில் பட்டம் வென்றார்.
- மகளிர் ஒற்றையர் பிரிவில், இத்தாலியின் ஜாஸ்மின் பௌலினியை வீழ்த்தி செக் குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவா பட்டம் வென்றார்.

- மற்ற வெற்றியாளர்கள்:
  - மகளிர் இரட்டையர் - டெய்லர் டவுன்சென்ட் & கேடரினா சினியாகோவா.
  - ஆடவர் இரட்டையர் - பாட்டன் & ஹீலியோவாரா.
  - கலப்பு இரட்டையர் - ஹ்சீஹ் சு-வீ & ஜான் ஜீலின்ஸ்கி.



## ஒலிம்பிக் போட்டிகள் 2024


- 2024 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் இந்த ஆண்டு ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 ஆம் தேதி வரை பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெறுகின்றன.
- தற்பொழுது பாரீஸ் நகரில் மூன்றாவது முறையாகவும், கடந்த 1924 ஆம் ஆண்டு நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் போட்டிகளுக்கு சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, முதன்முறையாகவும் ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படுகிறது.
- இந்த விளையாட்டுப் போட்டிகளின் போது சுமார் 5804 பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.
- மூன்று முறை (1908, 1948 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்) ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை நடத்திய மற்றொரு நகரம் இலண்டன் மட்டுமே ஆகும்.
- இந்த ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 32 விளையாட்டுப் பிரிவுகளில் 329 போட்டிகள் நடத்தப்பட உள்ளன.
- 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட 28 "முக்கிய" ஒலிம்பிக் விளையாட்டுகள் மற்றும் பாரீஸ் ஏற்பாட்டுக் குழுவினால் முன்மொழியப்பட்ட புதிய நான்கு விருப்பத் தேர்வு விளையாட்டுகள் இதில் அடங்கும்.
- இந்த ஆண்டு முதன்முறையாக கோடைகால ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவானது, பாரம்பரிய ஒலிம்பிக் மைதானத்திற்குப் பதிலாக வேறொரு இடத்தில் நடத்தப் பட்டது.
- ஒலிம்பிக் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பதக்கங்கள் ஆனது, ஈபிள் கோபுரத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட சில புதுப்பிப்பு நடவடிக்கைகளின் போது எடுக்கப் பட்ட ஒரு இரும்புத் துண்டை கொண்டிருக்கும்.
- நடந்து வரும் உக்ரைன் போரில் பங்கு கொண்டுள்ளதால் 2024 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

- ஆனால் ரஷ்யாவிலிருந்து 15 தடகள வீரர்களும் பெலாரஸிலிருந்து 18 வீரர்களும் "தனிப்பட்ட நடுநிலை விளையாட்டு வீரர்கள்" அல்லது AINகளாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.
- AIN பிரிவின் கீழ் போட்டியிடும் போது ரஷ்ய மற்றும் பெலாரஸ் நாட்டின் கொடிகள், தேசிய கீதங்கள் மற்றும் சீருடைகள் ஆகியவை பாரீஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளில் அனுமதிக்கப் படாது.




## 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பாலினச் சமத்துவம்

- 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பாலினச் சமத்துவத்தினைத் தொடர்ந்து, சரியாக 50 சதவீதம் ஆண் மற்றும் பெண் பங்கேற்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியானது ஒட்டு மொத்தமாக 48.8 சதவீத பெண் வீராங்கனைகள் கொண்டு நடந்தது.
- தற்போது, 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பதிவான பங்கேற்பு விகிதத்துடன் ஒப்பிடச் செய்யும் போது, கலப்பு பாலினப் பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளின் எண்ணிக்கை 18 என்ற அளவில் இருந்து 22 ஆக அதிகரித்துள்ளது.
- தடகளம், குத்துச்சண்டை மற்றும் சைக்கிள் பந்தயம் ஆகியவை 2024 ஆம் ஆண்டு பாரிசு ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முறையாக முழு பாலினச் சமத்துவத்தை எட்டி உயுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெறும் 32 விளையாட்டுகளில் 28 போட்டிகளில் முழு பாலினச் சமத்துவம் பேணப்பட்டுள்ளது.




# முக்கிய தினங்கள்

## உலக ஒவ்வாமை வாரம் 2024 - ஜூன் 23 முதல் 29 வரை

- இது ஒவ்வாமை நோய்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற மருத்துவ நிலைமைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2005 ஆம் ஆண்டு முதல் உலக ஒவ்வாமை தினம் கொண்டாடப்பட்டது.
- 2011 ஆம் ஆண்டில் உலக ஒவ்வாமை விழிப்புணர்வு வாரம் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு ‘குழந்தைப் பருவ உணவு’ ஒவ்வாமை என்பதாகும்.

## தேசிய மருத்துவர் தினம் - ஜூலை 01




- சமூகத்திற்கு மருத்துவர்கள் ஆற்றும் விலைமதிப்பற்றப் பங்களிப்பினை வெகுவாக அங்கீகரிப்பதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இது புகழ்பெற்ற மருத்துவர் பிதான் சந்திர ராய் அவர்களின் பிறந்த நாள் மற்றும் இறப்பு நாளினை அனுசரிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டாக்டர் ராய் மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதலமைச்சராகவும் முக்கியப் பணியாற்றினார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Healing Hands, Caring Hearts” என்பது ஆகும்.

## தேசியப் பட்டயக் கணக்காளர் தினம் - ஜூலை 01

- இந்த நாள் 1949 ஆம் ஆண்டில் இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) நிறுவப் பட்டதைக் கொண்டாடுகிறது.
- பொருளாதார மற்றும் நிதிச் சூழலை வடிவமைப்பதில் பட்டயக் கணக்காளர்கள் வகிக்கும் முக்கியப் பங்கை இது அங்கீகரிக்கிறது.
- இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) ஆனது 1949 ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது.
- பட்டயக் கணக்காளர்களுக்கான உலகின் இரண்டாவது பெரிய தொழில்முறை அமைப்பு என்ற பெருமையை ICAI பெற்றுள்ளது.

## சரக்கு மற்றும் சேவை வரி தினம் 2024 - ஜூலை 01




- முதன் முதலில் 2018 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது என்ற வகையில் இந்தத் தினம் சரக்கு மற்றும் சேவை வரி முறை ஏற்றுக் கொள்ளப் பட்ட முதல் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- பாராளுமன்றம் ஆனது சரக்கு மற்றும் சேவை வரியினை விதித்து வசூலிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், அரசியலமைப்பு (101வது திருத்தம்) சட்டத்தினை இயற்றியது.
- சரக்கு மற்றும் சேவை வரி என்பது, மத்திய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்படும் பல சிக்கலான வரிகளை நீக்கியதன் மூலம் இந்தியாவின் வரி கட்டமைப்பினை மாற்றியமைத்த ஒரு விரிவான மறைமுக வரியாகும்.
- சரக்கு மற்றும் சேவை வரியானது, விதிப்பு இலக்குகளை மையமாகக் கொண்டு, வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தச் செய்வதன் மூலம் வரி கட்டமைப்பை எளிதாக்கியது.

## உலக அடையாளம் காண இயலாத பறக்கும் பொருட்கள் தினம் - ஜூலை 02

- இந்த நாள் அடையாளம் காண இயலாத பறக்கும் பொருட்களை விரும்பும் மக்களை ஒன்று சேர்ப்பது மற்றும் இந்த அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது 1947 ஆம் ஆண்டில் ரோஸ்வெல் சம்பவத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 1947 ஆம் ஆண்டில் விமானி கென்னத் அர்னால்ட் அடையாளம் காண இயலா பறக்கும் பொருட்களைப் பார்த்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து இத்தினம் முன்மொழியப் பட்டது ஆனால் இறுதியில் இந்தத் தினத்திற்கான தேதி ஜூலை 02 ஆம் தேதிக்கு மாற்றப் பட்டது.




## உலக விளையாட்டுத் துறைப் பத்திரிகையாளர்கள் தினம் - ஜூலை 02

- சர்வதேச விளையாட்டுத் துறைப் பத்திரிகையாளர்கள் சங்கம் (AIPS) ஆனது இந்நாளை நிறுவியது.
- இது 1994 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகளின் போது AIPS ஓர் அமைப்பாக உருவான தினத்தை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- விளையாட்டுத் துறைப் பத்திரிகையியல் என்பது விளையாட்டு தொடர்பான எந்த ஒரு பிரிவு அல்லது தலைப்பு தொடர்பான விவகாரங்களில் கவனம் செலுத்துகின்ற ஒரு வகையான அறிக்கையிடல் ஆகும்.
- அவர்கள் அச்சு, ஒளிபரப்பு மற்றும் இணையம் உள்ளிட்ட பல்வேறு ஊடகத் தளங்களில் பணியாற்றுகின்றனர்.


## ஹல் திவாஸ் - ஜூன் 30

- பழங்குடித் தலைவர்களான சித்து மற்றும் கனு முர்மு ஆகியோரின் நினைவாக ஆண்டுதோறும் ஹல் திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.

- அவர்கள் 1855 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியன்று சாஹேப்கஞ்ச் மாவட்டத்தில் (தற்போது ஜார்க்கண்ட்) போக்னாதியில் சந்தால் ஹல்-ஐ (கிளர்ச்சி) வழி நடத்தினர்.
- இது பெரும்பாலும் "இந்தியச் சுதந்திரத்திற்கான முதல் போர்" என்று குறிப்பிடப் படுகிறது.
- செழிப்பான மலைகளின் ஓரப் பகுதியில் இந்தக் கிளர்ச்சி நடைபெற்றது.
- சந்தால் மக்கள் அல்லது சந்தாலிகள் - நவீன கால சந்தால் பர்கானாவில் முதலில் குடியேறிய குடிமக்கள் அல்ல.
- அவர்கள் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி பிர்பூம் மற்றும் மன்பூம் ஆகிய பகுதிகளிலிருந்து (இன்றைய வங்காளத்தில்) இடம்பெயர்ந்தனர்.




## புதுச்சேரி உருவாக்க தினம் - ஜூலை 01




- இந்நாளில் 1963 ஆம் ஆண்டு ஒன்றியப் பிரதேசங்கள் அரசு சட்டம் அமலுக்கு வந்தது.
- இது புதுச்சேரிக்கு சட்டமன்றம் மற்றும் அமைச்சர்கள் குழுவினை நிறுவுவதற்கான விதிமுறைகளை வழங்குகிறது.

- 1693 ஆம் ஆண்டில் புதுச்சேரி டச்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்ட புதுச்சேரி, 1699 ஆம் ஆண்டில் ரைஸ்விக் என்ற உடன்படிக்கையின் மூலம் பிரெஞ்சு நிறுவனத்திடம் திரும்ப வழங்கப் பட்டது.
- 1674 ஆம் ஆண்டில் பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் முதல் ஆளுநராக ஃபிராங்கோயிஸ் மார்ட்டின் நியமிக்கப்பட்டார்.
- புதுச்சேரி அதிகாரப்பூர்வமாக பிரெஞ்சு இந்தியாவிலிருந்து இந்தியக் குடியரசிற்கு மாற்றப் பட்டு 1954 ஆம் ஆண்டில் ஒன்றியப் பிரதேசமாக மாறியது.

## சர்வதேச நெகிழிப் பை பயன்பாடு இல்லாத தினம் - ஜூலை 03




- இது ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பைகளை ஒழிப்பதற்கும் அதற்கான நிலையான மாற்றுகளை மேம்படுத்துவதற்குமான ஒரு தினமாகும்.
- ஜீரோ வேஸ்ட் ஐரோப்பா (ZWE) என்ற அமைப்பின் உறுப்பினரான ரெஷேரோ, 2008 ஆம் ஆண்டில் இந்த நாளைத் தொடங்கினார்.
- நெகிழிப் பைகள் புதுப்பிக்க இயலாத புதைபடிவ எரிபொருட்களிலிருந்து தயாரிக்கப் படுகின்றன என்ற நிலையில் அவற்றின் உற்பத்தி மற்றும் அகற்றலின் போது வளக் குறைப்பு மற்றும் பசுமை இல்ல` வாயு வெளியேற்றத்திற்குப் பங்களிக்கின்றன.
- தனிநபர்கள் மற்றும் அரசுகள் இந்தத் தாக்கத்தினை உணர்ந்து நெகிழிப் பயன்பாடு மற்றும் மாசுபாட்டைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெருமளவில் வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும்.

## சர்வதேச கூட்டுறவு தினம் - ஜூலை 06


- இந்த நாள் ஜூலை மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச கூட்டுறவுக் கூட்டணியானது, ஒத்துழைப்பின் கருத்துக்கள் மற்றும் அதன் கொள்கைகளை கௌரவிப்பதற்காக 1923 ஆம் ஆண்டில் முதல் சர்வதேச கூட்டுறவு தினத்தை நிறுவியது.
- இந்த ஆண்டு என்பது ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட 102வது சர்வதேச கூட்டுறவு தினம் மற்றும் 30வது சர்வதேச கூட்டுறவு தினத்தைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Cooperatives Building a Better Future for All” என்பதாகும்.

## உலக விலங்கு வழிப் பரவும் நோய்கள் தினம் - ஜூலை 06

- 1885 ஆம் ஆண்டு ஜூலை 06 ஆம் தேதியன்று, பிரெஞ்சு உயிரியலாளர் லூயிஸ் பாஸ்டர் வெறிநாய் கடித்த சிறுவனுக்கு வெறிநாய்க்கடி நோய்க்கான ஒரு தடுப்பூசியினைப் போட்டார்.
- விலங்கு வழிப் பரவும் நோய்கள் (Zoonosis அல்லது Zoonotic) விலங்குகளில் இருந்து உருவாகும் தொற்றுகள் அல்லது தொற்று நோய்களைக் குறிக்கும்.
- இன்று வரை நிலவும் அனைத்து நோய்களில் 60 சதவிகிதம் ஆனது விலங்கு வழிப் பரவும் இயல்புடையவையாகும்.
- புதிதாக உருவாகும் நோய்த் தொற்றுகளில் சுமார் 70 சதவீதம் ஆனது விலங்குகளில் இருந்து தோன்றிபவையாகும்.




## உலக கிஸ்வாஹிலி மொழி தினம் - ஜூலை 07




- மூன்றாவது உலக கிஸ்வாஹிலி மொழி தினமானது இந்த ஆண்டு கொண்டாடப் பட்டது.

- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Kiswahili: Education and Culture of Peace" என்பதாகும்.
- 230 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த மொழியைப் பேசுவதால், உலகில் மிக அதிகம் பேசப்படும் பத்து மொழிகளில் இதுவும் ஒன்றாக உள்ளது.
- கிஸ்வாஹிலி மொழி என்பது ஆப்பிரிக்க மொழிக் குடும்பத்தில் பரவலாகப் பயன்படுத்தப் படும் மொழிகளில் ஒன்றாகும் என்பதோடு இது ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் மிகவும் பரவலாகப் பேசப்படுகிறது.
- தான்சானியர்களின் முதல் மொழி கிஸ்வாஹிலி ஆகும்.

## தேசிய மீன் பண்ணையாளர்கள் தினம் - ஜூலை 10

- இந்த நாள் பேராசிரியர் டாக்டர் ஹிராலால் சௌத்ரி மற்றும் அவரது சகாவான டாக்டர் K.H. அலிகுன்ஹி ஆகியோரின் பங்களிப்பைக் கௌரவிக்கும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- மீன் பண்ணையாளர்கள், மீன்வளர்ப்புத் தொழில் துறை வல்லுநர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் விலை மதிப்பற்ற ஒரு பங்களிப்பை அங்கீகரித்துப் பாராட்டுவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டானது இந்தத் தினத்தைக் குறிக்கும் வகையில், மீன்வளத் துறையானது தமிழகத்தின் மதுரையில் 'மீன்பிடித் துறையின் கோடைகாலச் சந்திப்பு 2024' என்ற ஒரு நிகழ்வினை ஏற்பாடு செய்தது.

## முதலாவது ஸ்ரெப்ரெனிகாவின் 1995 ஆம் ஆண்டு இனப்படுகொலையின் சர்வதேசப் பிரதிபலிப்பு மற்றும் நினைவு தினம் - ஜூலை 11




- 2024 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்த நாளை நியமித்தது.
- இரண்டாம் உலகப் போரின் போது நடைபெற்ற இன அழிப்புக் கொடுமைக்குப் பிறகு ஐரோப்பாவில் நடந்த மிகப்பெரிய படுகொலைச் சம்பவம் இதுவாகும்.
- 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், போஸ்னியா மற்றும் செர்பிய இராணுவம் ஆனது ஸ்ரெப்ரெனிகாவைக் கைப்பற்றி அங்கு இருந்த ஆயிரக்கணக்கான ஆண்களையும் இளைஞர்களையும் கொடூரமாகக் கொன்று 20,000 பேரை அந்த நகரத்திலிருந்து வெளியேற்றியது.

## உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11

- உலகில் அதிகரித்து வரும் மக்கள் தொகை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- 1987 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதியன்று, உலக மக்கள் தொகை ஐந்து பில்லியனை எட்டியது.
- ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்ட இந்த நாள் முதன்முதலில் 1989 ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "தரவுச் சேகரிப்பில் முதலீடு செய்வது பல சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கும், பல்வேறு தீர்வுகளை உருவாக்குவதற்கும், பெரும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் முக்கியம் ஆகும்" என்பதாகும்.




## உலகளாவிய ஆற்றலுக்கான சாரா நிலை தினம் - ஜூலை 10

- இது ஆற்றலுக்கான சாரா நிலையின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுவதோடு, பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் நீடித்த நிலையான ஆற்றல் மூலங்களின் தேவையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்த நாள் புதைபடிவ எரிபொருட்களிலிருந்து விலகி, தூய்மையான ஒரு மாற்றுகளை ஏற்பதற்கான அவசர நிலையினை நினைவூட்டுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Energy Transition Now: Embrace the Future" என்பதாகும்.


## மணல் மற்றும் தூசிப் புயல்களை எதிர்கொள்வதற்கான சர்வதேச தினம் - ஜூலை 12

- மணல் மற்றும் தூசிப் புயல்களால் (SDS) அதிகரித்து வரும் உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் சவால்கள் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

- SDS ஆனது வரலாற்று ரீதியாக பூமியின் உயிர் வேதியியல் சுழற்சிகளில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.
- ஆனால் மனித நடவடிக்கைகள் தற்போது அவற்றின் அதிகரிப்பிற்குக் குறிப்பிடத்த க்கப் பங்களிப்பினை கொண்டுள்ளன.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2025-2034 ஆம் காலக் கட்டத்தினை மணல் மற்றும் தூசி புயல்களை எதிர்கொள்வதற்கான ஐக்கிய நாடுகளின் ஒரு தசாப்தமாக அறிவித்துள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2 பில்லியன் டன் மணல் மற்றும் தூசிகள் வளிமண்டலத்தில் நுழைகின்றன.

## மலாலா தினம் - ஜூலை 12

- பெண் கல்விக்காக அயராது போராடிய பாகிஸ்தான் ஆர்வலர் மலாலா யூசுப்சாயைக் கௌரவிக்கும் விதமாக இத்தினம் கொண்டாடப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையானது இந்த நாளை 2013 ஆம் ஆண்டில் மலாலா தினமாக அறிவித்தது.
- பாகிஸ்தானில் பெண் கல்வி மீதான அந்த நாட்டின் கட்டுப்பாடுகளை எதிர்த்ததற்காக தாலிபான்கள் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் 09 ஆம் தேதியன்று அவரைத் தாக்கினர்.




## பாஸ்டில் தினம் - ஜூலை 14

- இது 1789 ஆம் ஆண்டில் பாரீஸில் உள்ள பாஸ்டில் சிறை கோட்டம் மீதான தாக்குதலின் ஆண்டு நிறைவு தினமாகும்.
- புதிய வரிகளை அறிமுகப் படுத்த வேண்டி, பதினாறாம் லூயிஸ், 1614 ஆம் ஆண்டில் கடைசியாக கூடியப் பெயரளவில் பிரதிநிதித்துவம் பெற்ற அமைப்பான அரசுப் பொது மன்றத்தினை 1788 ஆம் ஆண்டில் கூட்டினார்.
- 1789 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் தேதியன்று தேசியச் சட்டமன்றத்தினை நிறுவுமாறு பொது மக்கள் கிளர்ந்து எழுந்தனர்.

- ஜூன் 20 ஆம் தேதியன்று இந்த அமைப்பானது வெர்செய்ஸில் உள்ள ராயல் டென்னிஸ் மைதானத்தில் பதவியேற்றது.
- இந்த இயக்கத்தை ஒடுக்குவதற்காக வேண்டி பதினாறாம் லூயிஸ் பாரீஸ் நகரத்திற்கு அதிக எண்ணிக்கையிலான படை வீரர்களைத் திரட்ட தொடங்கினார்.
- ஜூலை 14 ஆம் தேதியன்று பாரீஸில் உள்ள 14 ஆம் நூற்றாண்டின் கோட்டைச் சிறை ஆன பாஸ்டில் நோக்கி ஒரு பெரிய, ஆயுதமேந்திய குழுவினர் அணி வகுத்துச் சென்று தாக்கினர்.

## உலக இளையோர் திறன்கள் தினம் - ஜூலை 15

- 2015 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதியன்று முதல் அனுசரிக்கப் படுகிறது.
- இளையோர் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Youth Skills for Peace and Development" என்பதாகும்.

## ICAR ஸ்தாபன மற்றும் தொழில்நுட்பத் தினம் - ஜூலை 16





- இந்த ஆண்டு என்பது இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) 96வது ஸ்தாபன தினத்தைக் குறிக்கிறது.
- ICAR ஆனது முதலில் 1929 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் தேதியன்று பேரரச வேளாண் ஆராய்ச்சி சபையாக டெல்லியில் நிறுவப்பட்டது.
- 2023-24 ஆம் ஆண்டில், தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், தீவனப் பயிர்கள் மற்றும் கரும்பு உட்பட 56 பயிர்களில் மொத்தம் 323 வகைகள் ICAR சபையினால் அறிமுகப் படுத்தப் பட்டன.

## சர்வதேச நீதிக்கான உலக தினம் - ஜூலை 17

- இந்த நாள் ஆனது சர்வதேசக் குற்றவியல் நீதியை ஊக்குவிப்பதற்காகவும், சர்வதேசச் சமூகத்தைப் பாதிக்கும் மிகவும் கடுமையான குற்றங்களுக்காக குற்றவாளிகளுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதற்கு எதிரான பெரும் போராட்டத்தைக் கௌரவிப்பதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 1998 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் ரோம் சாசனம் என்பது ஏற்றுக் கொள்ளப் பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) நிறுவப்பட்டது.
- இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்புக் குற்றங்களில் ஈடுபட்ட தனிநபர்கள் மீதான குற்ற விசாரணையினை மேற்கொள்ளும் முதல் நிரந்தர சர்வதேச நீதிமன்றம் ICC ஆகும்.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) நிறுவுவதற்கான சட்ட அடித்தளம் ஆனது 2002 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமையகம் ஆனது, நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக இயங்குகிறது.

## சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் - ஜூலை 18




- அவரது பிறந்த நாளில், இந்த நாள் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கை மற்றும் மரபினைக் கொண்டாடுகிறது.
- 1994 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியன்று ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் முதல் அதிபர் என்ற பெருமையினை மண்டேலா அவர்கள் பெற்றார்.
- தென்னாப்பிரிக்காவில் அவர் 'தேசத் தந்தை' என்று குறிப்பிடப்படுகிறார்.
- மண்டேலா அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும், சுதந்திரம் மற்றும் நீதிக்காகப் போராடியதால், அவர் தனது வாழ்நாளில் 27 ஆண்டுகளை சிறையில் கழிக்க நேர்ந்தது.

- அவரது பங்களிப்புகளுக்காக வேண்டி 1993 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.
- 1990 ஆம் ஆண்டில் இந்திய அரசு இவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கியது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Combating poverty and inequality is in our hands' என்பதாகும்.

## CSIR - CRRI ஸ்தாபன தினம் - ஜூலை 16

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம் (CRRI) அதன் 73வது ஸ்தாபன தினத்தினைக் கொண்டாடுகிறது.
- 1943 ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற தலைமைப் பொறியாளர்கள் மாநாட்டில் CRRI நிறுவனத்தினை உருவாக்குவதற்கான கருத்தாக்கம் என்பது முதன் முதலில் விவாதிக்கப்பட்டது.
- இது பின்னர் 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், சர் சாந்தி ஸ்வரூப் பட்நாகரின் வழிகாட்டுதலின் கீழ், 1952 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் தேதியன்று CSIR பொதுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

## சர்வதேச நிலவு தினம் - ஜூலை 20

- இந்தத் தினமானது 1969 ஆம் ஆண்டில் நிலவின் மேற்பரப்பில் முதல் மனிதன் தரை இறங்கியதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் 'பஸ்' ஆல்ட்ரின் ஆகியோர் நிலவின் மேற்பரப்பில் கால் பதித்த அப்பல்லோ 11 விண்வெளித் திட்டத்தின் மூலம் இந்தச் சாதனையானது மேற்கொள்ளப் பட்டது.
- இந்த நாள் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.



## சர்வதேச சதுரங்க தினம் - ஜூலை 20

- ❖ இந்தத் தினமானது சதுரங்க விளையாட்டின் நீண்ட மற்றும் சுவாரஸ்யமான வரலாறு மற்றும் உலகளாவியக் கலாச்சாரங்களில் அதன் நீடித்த தாக்கம் ஆகியவற்றிற்குக் கௌரவமளிக்கிறது.
- ❖ இந்தத் தேதியானது 1924 ஆம் ஆண்டில் சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பு (FIDE) நிறுவப் பட்டதுடன் ஒன்றி வருகிறது.
- ❖ FIDE அமைப்பின் ஸ்தாபனம் ஆனது போட்டிகள் நிறைந்த சதுரங்க விளையாட்டில் ஒரு திருப்புமுனையைக் குறித்தது.
- ❖ இது அதன் விதிகளை நன்கு தரநிலைப்படுத்தி, சர்வதேசப் போட்டிகளை ஏற்பாடு செய்து, அந்த விளையாட்டின் மேம்பாட்டினை ஊக்குவித்தது.

## தேசியக் கொடி தினம் - ஜூலை 22




- ❖ அரசியலமைப்புச் சபையானது, 1947 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் தேதியன்று இந்திய தேசியக் கொடியை ஏற்றுக் கொண்டதை இது நினைவு கூருகிறது.
- ❖ இது அந்த வரலாற்று சாதனையைக் கொண்டாடுவதோடு, இந்திய மக்களின் லட்சியம், பன்முகத் தன்மை மற்றும் ஒற்றுமையினைக் குறிப்பிடுகிறது.
- ❖ இராட்டைச் சக்கரம் அல்லது 'சர்க்கா'விற்கு ஒரு மாற்றாக கொடியில் இடம் பெற்றுள்ள அசோகச் சக்கரம், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போது உண்டாகி இருந்த தன்னம்பிக்கை மற்றும் எதிர்ப்பைக் குறிக்கிறது.
- ❖ இந்த மாறுதலானது பத்ருத்-தின் தியாப்ஜியால் முன்மொழியப்பட்டு, மகாத்மா காந்தி அவர்களால் ஆதரிக்கப்பட்டது.
- ❖ 2002 ஆம் ஆண்டில், இந்தியக் கொடிக் குறியீட்டின் திருத்தங்கள் தேசியக் கொடி தொடர்பான குடிமக்களின் உரிமைகளை விரிவுபடுத்தியது.

## தேசிய மாம்பழ தினம் - ஜூலை 22

- 1987 ஆம் ஆண்டில், இந்திய தேசிய தோட்டக்கலை வாரியம் ஆனது மாம்பழங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் சர்வதேச மாம்பழ விழா என்ற ஒரு கருத்தாக்கத்தினை அறிமுகப் படுத்தியது.
- மாம்பழங்கள் மற்றும் இந்தியக் கலாச்சாரத்துடனான அதன் தொடர்பு ஆனது 5000 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதோடு இது இந்திய நாட்டுப்புறக் கதைகளில் ஒரு குறிப்பாகப் பயன்படுத்தப் பட்டது.
- 15 ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியர்கள் கேரளாவிற்கு வந்தபோது மாங்கா என்று பொருள் கொண்ட மலாய் மன்னா என்ற சொல்லிலிருந்து இப்பழம் அதன் பெயரைப் பெற்றது.

## பை மதிப்பின் தோராய மதிப்பு தினம் - ஜூலை 22

**Pi gets celebrated twice a year!**

**March 14 (3/14):** This is International Pi Day, a play on the first digits of pi (3.14). People celebrate with pie (baked goods) or explore the mathematical side of pi.

**July 22 (22/7):** This is Pi Approximation Day. The date (22/7) is a common approximation of pi. It's a lesser-known celebration but honors pi in a different way.

- இந்தத் தேதியானது (22/7) பொதுவாக கணித மாறிலி π (pi) மதிப்பின் தோராய மதிப்பை குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த அடிப்படை மாறிலியானது ஒரு வட்டத்தின் சுற்றளவிற்கும் அதன் விட்டத்திற்கும் உள்ள விகிதத்தைக் குறிக்கிறது.
- மேலும், பை மாறிலியின் 3.14 (22/7) என்ற உண்மையான மதிப்பை இந்தத் தேதியானது குறிக்கும் வகையில் உள்ளதால் மார்ச் 14 ஆம் தேதியன்று பை தினம் கொண்டாடப் படுகிறது.
- கிரேக்க எழுத்து π ஆனது 1706 ஆம் ஆண்டில் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் முதன் முதலில் பயன்படுத்தப் பட்டது ஆனால் பின்னர் 1737 ஆம் ஆண்டில் லியோன்ஹார்ட் யூலர் என்பவரால் அது பிரபலப்படுத்தப் பட்டது.


## உலக மூளை தினம் - ஜூலை 22

- இது ஆரோக்கியமான மூளையைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக நரம்பியல் கூட்டமைப்பு ஆனது 1957 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Brain Health and Prevention" என்பதாகும்.

- கடந்த முப்பது ஆண்டுகளிலிருந்து (1990-2019), இந்தியாவின் ஒட்டுமொத்த நோய்ப் பாதிப்பு சுமைகளில் தொற்றாத மற்றும் காயம் தொடர்பான நரம்பியல் நோய்களின் சதவீதம் இரட்டிப்பாகியுள்ளது.




## தேசிய ஒலிபரப்பு தினம் - ஜூலை 23




- 1923 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், மும்பை ரேடியோ கிளப் இந்தியாவின் முதன்முதல் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது.
- இந்திய ஒலிபரப்பு நிறுவனம் (IBC) ஆனது நாட்டின் முதல் வானொலி நிறுவனமாக 1927 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.

- IBC ஆனது பின்னர் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டு, 1936 ஆம் ஆண்டில் அது அகில இந்திய வானொலி (AIR) என மறுபெயரிடப்பட்டது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்த நேரத்தில், நாட்டில் டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, லக்னோ மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஆறு AIR வானொலி ஒலிபரப்பு நிலையங்கள் இருந்தன.
- AIR நிறுவனத்தின் பெயர் பின்னர் 1956 ஆம் ஆண்டில் ஆகாசவானி என மாற்றப்பட்டது.
- 90 மொழிகளில் சுமார் 650 செய்தித் துளிகளானவை AIR நிறுவனம் ஆக ஒன்றியுள்ள 262 வானொலி நிலையங்களால் ஒலிபரப்பப்படுகின்றன.

## தேசிய வருமான வரி தினம் - ஜூலை 24





- 1860 ஆம் ஆண்டில் சர் ஜேம்ஸ் வில்சன் வருமான வரியை நிறுவியதனை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்த முதல் வரியானது வருமான வரிச் சட்டத்தின் 2(24) பிரிவில் கூறப்பட்டுள்ளபடி, பல்வேறு ஆதாரங்களில் இருந்து வரும் வருமானத்திற்கு வரி விதிப்பதனை முதன்மை நோக்கமாகக் கொண்டது.
- ஆனால் நாட்டின் வரி விதிப்பு முறையில், 1922 ஆம் ஆண்டின் விரிவான வருமான வரிச் சட்டத்தினால் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது.
- 1924 ஆம் ஆண்டில், மத்திய வருவாய் வாரியச் சட்டம் ஆனது, வாரியத்தினை ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அமைப்பதன் மூலம் இந்தக் கட்டமைப்பை மேலும் நன்கு வலுப்படுத்தியது.
- குரூப் A அதிகாரிகள் 1946 ஆம் ஆண்டில் இந்தப் பணிப் பிரிவில் பணியமர்த்தப் பட்ட நிலையில், அவர்களுக்கு மும்பை மற்றும் கொல்கத்தாவில் ஆரம்பக் கட்டப் பயிற்சி வழங்கப் பட்டது.

## உலக நீரில் மூழ்கி உயிரிழப்பதனைத் தடுக்கும் தினம் - ஜூலை 25

- உலகளவில் நீரில் மூழ்கி உயிரிழப்பதனைத் தடுப்பது குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அந்த நடவடிக்கையினை நன்கு துரிதப்படுத்துவதையும் இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Anyone can drown, no one should" என்பது ஆகும்.
- உலக சுகாதார அமைப்பானது, "Seconds can save a life" என்ற ஒரு முழக்கத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- உலகளவில், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 236,000 பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர் என்பதோடு சராசரியாக ஒவ்வொரு நாளும் 650 அல்லது ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 26 பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.

## உலக கருவியலாளர் தினம் - ஜூலை 25




- கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் உள்ள கருவியலாளர்கள் செய்த அற்புதமானப் பணியை இத்தினம் அங்கீகரிக்கிறது.
- இது இனப்பெருக்க மருத்துவத் துறையில், குறிப்பாக செயற்கை முறை கருத்தரித்தல் (IVF) துறையில் அவர்களின் பங்களிப்பைக் கௌரவிக்கிறது.
- செயற்கை முறை கருத்தரித்தல் (IVF) மூலம் பிறந்த முதல் குழந்தையான லூயிஸ் ப்ரௌனின் பிறந்த நாளான ஜூலை 25 ஆம் தேதியானது உலகச் செயற்கை முறை கருத்தரித்தல் தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- லூயிஸ் 1978 ஆம் ஆண்டு இதே நாளில் தான் ஐக்கியப் பேரரசின் ஓல்ட்ஹாம் நகரில் பிறந்தார்.
- அன்றிலிருந்து இதுவரை 8 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் IVF மூலம் பிறந்து உள்ளனர்.

## கார்கில் விஜய் திவாஸ் - ஜூலை 26

- 1999 ஆம் ஆண்டு கார்கில் போரின் போது நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த இந்திய வீரர்களின் வீரத்திற்கு கௌரவமளிக்கும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்ற 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- எதிரி நாட்டுப் படையினரின் ஊடுருவல் 1999 ஆம் ஆண்டு மே மாதத்தில் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, இந்திய இராணுவம் ஆபரேஷன் விஜய் என்ற ராணுவ நடவடிக்கையினைத் தொடங்கலாயிற்று.

- இந்தியப் படை வீரர்கள் 1999 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் தேதியன்று, மூன்று மாத மோதலுக்குப் பிறகு இதில் வெற்றி பெற்றனர்.




## உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் - ஜூலை 28




- ஹெபடைடிஸ் (கல்லீரல் அழற்சி நோய்) பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காகவும், தடுப்பு, பரிசோதனை மற்றும் சிகிச்சையை நன்கு ஊக்குவிக்கச் செய்வதற்காகவும், நோயை எதிர்த்துப் போராடுவதற்கான சிறந்தப் பொது சுகாதாரக் கொள்கைகளை பரிந்துரைப்பதற்காகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ஹெபடைடிஸ் என்பது கல்லீரல் அழற்சி நோய் ஆகும் என்ற நிலையில் இது மிகப் பெரும்பாலும் வைரஸ் தொற்றுகளால் ஏற்படுகிறது.
- இது மது அருந்துதல், சில மருந்துகள் மற்றும் தன்னுடல் தாக்க நோய்கள் போன்ற பிற காரணிகளாலும் ஏற்படுகின்றது.
- வைரஸ் தொற்றினால் ஏற்படும் ஹெபடைடிஸ் நோய்த் தொற்றின் முக்கிய வகைகள் ஹெபடைடிஸ் A, B, C, D மற்றும் E ஆகியவையாகும் என்ற நிலையில் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான பரிமாற்ற முறைகள் மற்றும் சாத்தியமான உடல் நலப் பாதிப்புகளை விளைவிக்கின்றன.

- உலகளவில் 304 மில்லியன் மக்கள் ஹெபடைடிஸ் B அல்லது C வகை வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "It's time for action" என்பதாகும்.

## சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் வளங்காப்பிற்கான சர்வதேச தினம் - ஜூலை 26

- இது ஒரு தனித்துவமான, சிறப்பு மற்றும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய சுற்றுச்சூழல் அமைப்பாக நிலவும் சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சதுப்புநிலத்தின் மீதான நிலையான மேலாண்மை, வளங்காப்பு மற்றும் பல்வேறு பயன்பாடுகளுக்கான தீர்வுகளையும் ஊக்குவிக்கிறது.
- இது ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் (யுனெஸ்கோ) 2015 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவில் 1987 ஆம் ஆண்டில் 4,046 சதுர கிலோ மீட்டராக இருந்த சதுப்புநிலங்களின் பரவல் ஆனது 2019 ஆம் ஆண்டில் 4,992 சதுர கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது.
- 2006 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், சுமார் 3.69 மில்லியன் ஹெக்டேராக இருந்த இயற்கையான கடலோர ஈரநிலங்களின் பரவல் ஆனது சுமார் 3.62 மில்லியன் ஹெக்டேராக குறைந்துள்ளது.
- ஓதங்களுக்கு இடைப்பட்ட சேற்றுப் பரப்பு ஆனது 116,897 ஹெக்டேர் ஆகவும், உவர்நீர் சதுப்பு நிலங்கள் 5,647 ஹெக்டேர் ஆகவும் குறைந்துள்ளது.

## மத்திய சேமக் காவல் படை ஸ்தாபன தினம் - ஜூலை 27





- மத்திய சேமக் காவல் படையானது முதன் முதலில் 1939 ஆம் ஆண்டில் அரசப் பிரதிநிதி காவல்துறையாக அமைக்கப்பட்டது.

- மத்திய சேமக் காவல் படை என்பது இந்தியாவின் உள்நாட்டுப் போர்ப் படையாக இருந்தது.
- 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்டப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இந்த படை CRPF என மறுபெயரிடப்பட்டது.
- இந்தப் படையானது தலைமை இயக்குனர் தலைமையில் இயங்குகிறது என்பதோடு இது ஜம்மு, கொல்கத்தா, ஐதராபாத் மற்றும் கௌஹாத்தியில் அமைந்துள்ள வகையில் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச புலிகள் தினம் - ஜூலை 29

- புலிகள் வளங்காப்பு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் புலிகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற புலிகள் வளங்காப்பு உச்சி மாநாட்டில் அறிவிக்கப் பட்டது.
- இந்த நிகழ்வில், 2022 ஆம் ஆண்டிற்குள் காட்டில் வாழும் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான Tx2 எனப்படும் ஒரு உலகளாவிய இலக்கினை உருவாக்கச் செய்வதற்காக புலிகள் காணப்படும் 13 நாடுகள் ஒன்றிணைந்தன.
- உலகப் புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமான புலிகள் இந்தியாவிலேயே காணப்படுகின்றன.
- புலிகள் வளங்காப்புத் திட்டம் ஆனது 1973 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1) தொடங்கப்பட்ட மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.




## உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் - ஜூலை 28

- நிகழ்கால மற்றும் வருங்கால சந்ததியினருக்காக வேண்டி பல்லுயிர் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல ஆபத்துக்களுக்கு எதிராக சூழலியல் அமைப்புகளைப் பாதுகாக்க கூட்டுப் பணியை ஊக்குவிக்கிறது என்பதோடு இது இனிமேல் வரும் தலைமுறையினருக்குப் பாதுகாப்பானச் சூழலை வழங்கவும் உத்தரவாதம் அளிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், "மக்கள் மற்றும் தாவரங்களை இணைத்தல், வன விலங்குப் பாதுகாப்பில் டிஜிட்டல் புத்தாக்கங்களைக் கொணர்தல்" என்பதாகும்.




## ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம் - ஜூலை 30




- போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் (UNODC) ஆனது அடையாளம் கண்டுள்ள மனித கடத்தல் போக்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் சிறுமிகள் முறையே 42 மற்றும் 18 சதவீதம் ஆகும்.
- உலகளவில் மனித கடத்தலால் பாதிக்கப்பட்ட 3 பேரில் ஒரு நபர் குழந்தையாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Leave No Child Behind in the Fight Against Human Trafficking” என்பதாகும்.

## உலக வனச்சரகர் தினம் - ஜூலை 31

- இந்த நாள், பணியின் போது கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த வனச் சரகர்களை நினைவு கூரும் விதமாகவும் மற்றும் கிரகத்தின் இயற்கைப் பொக்கிஷங்கள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்க வனச்சரகர்கள் ஆற்றும் பணியை நன்கு கொண்டாடும் விதமாகவும் அனுசரிக்கப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு உலக வனச்சரகர் தினத்தின் கருத்துரு, '30 by 30' என்பதாகும்.
- அதாவது, 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்சம் 30 சதவிகித கிரகம் ஆனது திறம்பட்ட முறையில் பாதுகாக்கப்பட்டு மேலாண்மை செய்யப்பட வேண்டும்.




# இதரச் செய்திகள்

## 41,000 ஆண்டுகள் பழமையான நெருப்புக் கோழி கூடு

- ஆந்திரப் பிரதேசத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுமார் 41,000 ஆண்டுகள் பழமையான நெருப்புக் கோழி கூடு ஒன்றைக் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில், இது உலகிலேயே மிகவும் பழமையானதாகும்.
- உலகம் முழுவதிலும் இருந்து சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போன பெரு விலங்கு இனங்களில் இதுவும் ஒன்றாகும்.
- 40 கிலோவுக்கு மேல் எடையுள்ள விலங்குகள் - அதாவது குதிரைகள், யானைகள், கால் நடைகள் மற்றும் நீர்யானைகள் போன்ற பெரிய விலங்குகள் - பெருவிலங்கினம் என்று அழைக்கப்படுகின்றன.
- முன்பு பழமையான நெருப்புக்கோழி முட்டை ஓடு ஆனது இமயமலையின் இந்தியப் பகுதியில் உள்ள சிவாலிக் மலைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.
- அவை 20 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கருதப்படுகிறது.




## சத்ரபதி சிவாஜியின் முடிசூட்டு விழாவின் 350வது ஆண்டு விழா





- இந்த ஆண்டானது சத்ரபதி சிவாஜியின் முடிசூட்டு விழாவின் 350வது ஆண்டைக் குறிக்கிறது.
- மராட்டிய மன்னராக சிவாஜியின் முடிசூட்டு விழா 1674 ஆம் ஆண்டு ஜூன் 6 அன்று ராய்காட் கோட்டையில் நடைபெற்றது.
- சிவாஜி மகாராஜாவைச் சித்தரிக்கும் சுமார் 115 எண்ணெய் வண்ண ஓவியங்களின் கண்காட்சியை இந்திரா காந்தி தேசிய கலை மையம் (IGNCA) மற்றும் தேசிய நவீனக் கலைக் கூடம் (NGMA) இணைந்து சமீபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

## உலகின் பழமையான குகை ஓவியம்

- இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் உருவப்படங்கள் கொண்ட குகை ஓவியத்தின் பழமையான உதாரணம் கண்டறியப்பட்டுள்ளது.
- இங்குக் காணப்படும் ஒரு காட்டுப் பன்றி மற்றும் மூன்று மனித உருவங்களின் ஓவியம் ஆனது குறைந்தது 51,200 ஆண்டுகள் பழமையானதாகும்.
- மேலும், இதுவரையில் இருந்த பழமையான குகைக் ஓவியத்தை விட 5,000 ஆண்டுகள் இது பழமையானதாகும்.




## பேய்சியன் பிணைய ஒருங்கிணைப்பு வலையமைப்பு





- பேய்சியன் பிணைய ஒருங்கிணைப்பு வலையமைப்பு (BCNN) என்பது ENSO நிகழ்வின் கட்டங்கள் தொடர்பான முன்னறிவிப்புகளை மேம்படுத்துவதற்காக என்று செயற்கை நுண்ணறிவு (AI), படிநிலை கற்றல் மற்றும் இயந்திர கற்றல் (ML) போன்ற சமீபத்தியத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் புதிய தயாரிப்பு ஆகும்.
- BCNN என்பது செயற்கை நுண்ணறிவுடனான இயக்கவியல் மாதிரியின் கலவை ஆகும்.

- இது எல் நினோ மற்றும் லா நினா சூழ்நிலைகளின் தோற்றத்தை 15 மாத காலத்திற்கு முன்னதாகவே அறிவிக்க உதவுகிறது.
- பிற மாதிரிகள் அவற்றை ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு முன்பு மட்டுமே நன்கு கணிக்கக் கூடியவையாகும்.

## மூளையை உண்ணும் அமீபா தொற்று


- அரிய, ஆனால் அபாயகரமான அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் (PAM) அமீபா தொற்றினால் நான்கு பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கேரளா அறிவித்துள்ளது.
- அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் அல்லது PAM ஆனது நெக்லேரியா ஃபோலரால் ஏற்படுகிறது.
- இந்த அமீபா வெதுவெதுப்பான நன்னீர் ஏரிகள், குளங்கள் மற்றும் ஆறுகளில் செழித்து வளரும்.
- இது அரிதான சந்தர்ப்பங்களில் மோசமாக பராமரிக்கப்படும் நீச்சல் குளங்களிலும் உயிர் வாழக் கூடியது.
- அமீபா மூக்கு வழியாக உடலுக்குள் சென்று மூளையை அடைகிறது.
- இது மூளையைப் பாதித்து அங்குள்ள திசுக்களை அழிக்கக் கூடியது என்பதால், இந்த ஒரு செல் உயிரினம் ‘மூளையை உண்ணும் அமீபா’ என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த நோய்த்தொற்றுகள், அரிதாக இருந்தாலும், ஆபத்தானவை என்பதோடு இந்தத் தொற்று ஏற்பட்ட 97% நோயாளிகள் உயிர் பிழைக்க இயலாது.




## மூளை மின்னலை வரைவு நுட்பத்தின் 100 ஆண்டுகள் நிறைவு (EEG)

- மனித மூளை பற்றிய தகவல்களை அறிய உதவுகிற EEG (மூளை மின்னலை வரைவு) என்பது இயற்பியல் மற்றும் நரம்பணுவியலின் ஒரு சிறந்த அம்சமாகும்.

- 1875 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் மருத்துவர் ரிச்சர்ட் கேட்டன் குரங்குகள் மற்றும் முயல்களின் மூளையில் மின்சாரம் செயல்படுவதற்கான பல்வேறு ஆதாரங்களை வெளியிட்டார்.
- 1912 ஆம் ஆண்டில், விளாடிமிர் பிராவ்டிச்-நெமின்ஸ்கி ஒரு நாயின் மூளையின் மூளை மின்னலை வரைவினை எடுத்ததன் மூலம் பாலூட்டி இனத்தில் எடுக்கப்பட்ட ஒரு EEG வரைவினை உருவாக்கினார்.
- அவருக்குப் பிறகு 1924 ஆம் ஆண்டில் ஹான்ஸ் பெர்கர் என்பவர் மனிதர்களில் இந்த வரைவினை எடுத்தார்.
- EEG என்பது மூளை மின்னலை வரைவினைக் குறிக்கிறது என்ற நிலையில் இதில் 'எலக்ட்ரோ' என்பது மின்சாரம் தொடர்பானது.
- EEG ஆனது மூளையில் நியூரான்களால் உருவாகும் மின்னியல் செயல்பாட்டை அளவிடுகிறது.
- மூளையில் விரைவான மின் செயல்பாட்டை மில்லி விநாடிகளின் அளவில் கண்காணிப்பதில் மற்ற கண்டறியும் சாதனங்களை விட இது சிறந்ததாக உள்ளது.




## மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் – இந்தியா

- சத்தீஸ்கரில் அமைந்துள்ள தென் கிழக்கு நிலக்கரி சுரங்கங்கள் லிமிடெட் (SECL) என்ற நிறுவனத்தின் கெவ்ரா மற்றும் குஸ்முண்டா நிலக்கரிச் சுரங்கங்கள் உலகின் 10 மிகப் பெரிய நிலக்கரிச் சுரங்கங்களின் பட்டியலில் முறையே 2வது மற்றும் 4வது இடத்தைப் பெற்றுள்ளன.
- இந்த இரண்டு சுரங்கங்களும் ஆண்டுதோறும் சுமார் 100 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்கின்றன என்பதோடு இது இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 10 சதவீதமாகும்.
- அமெரிக்காவின் பிளாக் தண்டர் சுரங்கமானது இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.




## போஜ்ஷாலா-கமல் மௌலா மசூதி வளாகம் – மத்தியப் பிரதேசம்

- சர்ச்சைக்குரிய போஜ்ஷாலா-கமல் மௌலா மசூதி வளாகம் குறித்த அறிவியல் ஆய்வு அறிக்கையை இந்தியத் தொல்லியல் துறை சமர்ப்பித்துள்ளது.
- இந்தியத் தொல்லியல் துறையின் அறிக்கை போஜ்ஷாலா முன்னொரு காலத்தில் போஜ அரசரால் நிறுவப்பட்ட ஒரு முக்கிய கல்வி மையமாக இருந்தது என கருதுகிறது.
- இந்து சமூகம் ஆனது 11 ஆம் நூற்றாண்டின் நினைவுச் சின்னமான போஜ்ஷாலாவை வாக்தேவியின் (சரஸ்வதி தேவி) கோயிலாகக் கருதுகிறது.
- முஸ்லிம் தரப்பினர் அதனை கமால் மௌலா மசூதி என்று அழைக்கின்றனர்.
- கடந்த 21 ஆண்டுகளாக, இந்துக்கள் போஜ்சாலாவில் வழிபட அனுமதிக்கப் படுகின்ற அதே நேரத்தில் முஸ்லிம்கள் அந்த இடத்தில் தொழுகை நடத்தவும் அனுமதிக்கப் படச் செய்கிறார்கள்.
- சூஃபி துறவி மௌலா கமாலுதீன் சிஷ்தி, நிஜாமுதீன் அவுலியாவின் சீடர் ஆவார்.
- இவர் 1291 ஆம் ஆண்டளவில் சுமார் 40 ஆண்டுகள் வரை இங்கு உபதேசம் செய்தார்.


## பெரு - மாஷ்கோ பைரோ பழங்குடியினர்



- ஒரு பழங்குடியின உரிமைகள் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆன சர்வைவல் இன்டர்நேஷனல், உலகின் 100க்கும் மேற்பட்ட தொடர்பில்லாதப் பழங்குடியினரில் ஒன்றான மாஷ்கோ பைரோ பழங்குடியினரின் அரிய படங்களை வெளியிட்டுள்ளது.
- 750க்கும் அதிகமான எண்ணிக்கையில் காணப்படும் மாஷ்கோ பைரோ, அத்தகைய பழங்குடியினரில் மிகப்பெரியக் குழுவினராக நம்பப் படுகிறது.
- இந்த நாடோடி வேட்டைக் குழுவினர், பிரேசில் மற்றும் பொலிவியாவுடனான பெருவின் எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள மாட்ரே டி டியோஸ் பிராந்தியத்தின் அமேசான் காடுகளில் வாழ்கின்றனர்.
- மிகவும் தனிமையில் உள்ள இந்தப் பழங்குடியினர் எப்போதாவது தான் பூர்வீக இனங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள், ஆனால் இவர்கள் யின் இன மக்களுடன் தொடர்பில் உள்ளனர்.
- மாஷ்கோ பைரோ பற்றி அறியப்பட்டவற்றில் பெரும்பாலானவை யின் இனத்தவரின் குறிப்புகளில் இருந்து பெறப் படுகின்றன.

## தேசிய கடல்சார் கள விழிப்புணர்வு மையம்

- இந்திய நாடானது, தேசிய கடல்சார் கள விழிப்புணர்வு மையத்தினை (NMDAC) திறக்க உள்ளது.
- இது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நிலவும் பல்வேறு புதிய ஆபத்துக்களை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- NMDAC தீவிரவாதம், கடற்கொள்ளையர், கடத்தல் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- மும்பையில் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்கள் ஆனது, 2014 ஆம் ஆண்டில் தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு மையம் (IMAC) உருவாக வழி வகுத்தது.
- தகவல் இணைவு மையம்-இந்தியப் பெருங்கடல் பகுதி (IFC-IOR) ஆனது 2018 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது.



## களரிப் பயிற்று கூட்டமைப்பு

- இந்தியாவில் களரிப் பயிற்று (களரிப் பயட்டு) எனப்படுகின்ற ஒரு கலை வடிவத்தினை மேம்படுத்துவதற்காக என்று இந்தியக் களரிப் பயிற்று கூட்டமைப்பானது மண்டல விளையாட்டு கூட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- கேரளாவில் தோன்றிய இந்தப் பாரம்பரிய தற்காப்புக் கலையானது, போர் வீரரான பரசுராமரால் நிறுவப் பட்டதாக நம்பப்படுகிறது.
- "களரிப் பயிற்று" என்ற சொல் மலையாளத்தில் "களரி" (போர் நடைபெறும் இடம்) மற்றும் "பயிற்று" (சண்டை) ஆகிய சொற்களின் இணைவாகும்.




## எண்ணிம முறையிலான அஞ்சல் குறியீட்டு எண்

- அஞ்சல் துறையானது, எண்ணிம முறையிலான அஞ்சல் குறியீட்டு எண் (DIGIPIN) என்று குறிப்பிடப்படும் தேசிய முகவரி உருவாக்கக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்துள்ளது.
- இந்த அமைப்பானது, புவியிடம் சார் மேலாண்மையின் வலுவான மற்றும் உறுதியான தூணாக செயல்படும்.
- இது பொதுச் சேவை வழங்கல், விரைவான அவசரகால எதிர் நடவடிக்கை மற்றும் தளவாட செயல்திறனுக்கான குறிப்பிடத்தக்க ஊக்கம் ஆகியவற்றினை மிகவும் நன்கு மேம்படுத்துகிறது.
- இது அனைவரும் எளிதாக அணுகக் கூடிய வகையில் பொது களத்தில் முழுமையாகக் கிடைக்கப் பெறும்.



## சிவிங்கிப் புலிகளின் பராமரிப்பு குறித்த தகவல் அறியும் உரிமைச் சட்ட கோரிக்கை

- ஆப்பிரிக்காவில் இருந்து கொண்டு வரப்பட்ட சிவிங்கிப் புலிகள் மற்றும் இந்தியாவில் பிறந்த குட்டிகளின் பராமரிப்பு குறித்த தகவலுக்கான கோரிக்கையை அளிப்பதற்கு மத்தியப் பிரதேச வனத்துறை மறுத்துள்ளது.
- வனவிலங்கு ஆர்வலர் அஜய் துபே, குனோ மற்றும் மண்ட்சூரில் உள்ள சிவிங்கிப் புலிகள் பற்றிய ஆவணப் பதிவுகளைக் கோரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஒரு கோரிக்கையைத் தாக்கல் செய்தார்.
- இருப்பினும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8(1)(a) பிரிவினைப் பயன்படுத்தி, அந்தத் தகவலை வெளியிட வனத்துறை மறுத்துவிட்டது.
- 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து சிவிங்கிப் புலிகள் வளங்காப்பு திட்டம் பற்றிய தகவல்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதற்கு மறுக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- தற்போது, சிவிங்கிப் புலிகள் வளங்காப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, குனோவில் 26 சிறுத்தைகள் மற்றும் குட்டிகள் உள்ளன.

**EXEMPTIONS FROM DISCLOSURE**

**SECTION (8) :**

8(1)

(a) Which affect the sovereignty and integrity of India. Security, strategic, scientific or economic interests of the state, relation with foreign state, leadd to incitement of offence.

(b) expressly forbidden to be published by any court of law/ disclosure of which may constitute contempt of court.

(c) cause a breach of privilege of Parliament or state legislative.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★